7 AUG 2009
20 SEP 2009
29 SEP 2009
5 OCT 2009
7 DEC 2009
18 JAN 2010
16 FEB 2010
8 MAR 2010
3 APR 2010
21 APR 2010
5 JUN 2010
7 JUN 2010
5 AUG 2010
8 SEP 2010
7 JAN 2011
15 FEB 2011
5 MAR 2011
14 MAR 2011
19.4.2011
16-7-2011
26-01-12

# வஜ்ர கவசம்

13637

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசிலா கனகதுர்கா

பூங்கொடி பதிப்பகம்

14. சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர் : சென்னை - 600 004

முதற்பதிப்பு : மே 1992

விலை ரூ 42 00

13037
3055915

தேவிராஜன் பிரிண்டர்ஸ், 71, வன்னியர் தெரு,
சென்னை 600 094

# வஜ்ர கவசம்

Bore

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசிலா கனகதுர்கா

13037

பூங்கொடி பதிப்பகம்

13037
3055915

13037

# வஜ்ர கவசம்

பாண்டுரங்கனுக்கு நள்ளிரவு இரண்டு மணிக்கு விழிப்பு வந்து எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

இப்பொழுது அவனுக்கு நிமிஷங்கள் கழியவில்லை. எவ்வளவு சீக்கிரமாய் பொழுது விடியுமோ என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

பத்து வருஷங்கள் எப்படித்தான் கழிந்துபோயிற்றோ அவனுக்கு வியப்பாய்தான் இருந்தது.

டங்... டங்... டங்... மூன்று மணி அடித்தது.

''தூங்கலையா?''

பாண்டுரங்கன் மங்கலான வெளிச்சத்தில் பார்த்தான். தாதா எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''ஊஹூம்.''

தாதா சிரித்தான்.

''வெளியே போகிறாய் அல்லவா? அந்த மகிழ்ச்சியில் இருந்திருப்பாய்?''

பாண்டுரங்கனின் கண்கள் மின்னின.

''ஆமாம் தாதா. இவ்வளவு நாள் பொறுமையாய் கழித்தேன். ஆனால் இந்த கடைசி சமயம் ஒரு நிமிஷம் ஒரு யுகமாய் தோணுது. ஏதோ டென்ஷன். இந்தக் கம்பிகளை விட்டு வெளியே போய்டணும்னு துடிப்பாய் இருக்கு.''

தாதா அவன் தோளில் தட்டினான்.

''அதான் தம்பி மனுஷனின் பலவீனமே. இந்தப் பலவீனந்தான் சில சமயம் மனுஷனை மிருகமாக்கி விடுகிறது. பலவீனத்திற்கு நம் மனதில் இடம் கொடுத்துடக் கூடாது. அதற்கு ஒருநாளும் அடிமையாகி விடக்கூடாது. இப்ப நான் உனக்குச் சில வார்த்தைகள் சொல்றேன். கேட்டுக்கொள். மனுஷன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் சரி, நம்ப கேடுகெட்ட சமூகம் இருக்கு பாரு, அதன் பிரபாவத்திலிருந்து தப்பித்துக் கொண்டுவிட முடியாது. உண்மையில் நீ தப்புச் செய்தாயா இல்லையான்னு அந்த அல்லாவுக்குத்தான் தெரியும். நீ ஜெயிலிலிருந்து வந்தவன்னு தெரிஞ்சால் உன்னை ஒரு புழுவைப் பார்ப்பது போல பார்க்கும் இந்தச் சமூகம். நீ திரும்பி எந்தத் தப்பும் செய்யாமல் இருந்தாலும், நீ இதற்கு முன்னால் செய்த குற்றத்தைப் போன்றது எங்கே நடந்தாலும் போலீசார் உன்னைச் சுற்றிச் சுற்றி வந்துட்டேயிருப்பாங்க. நீ எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியையும் பார்த்துப் பார்த்து வை. நல்லவன் என்று ருசு செய்துகொள்.''

''ஜெயில் தண்டனை கிடைத்துவிட்டதுன்னு எல்லோரையும் குற்றவாளியாய் சொல்லிட முடியுமா தாதா? சிலர் கையாலாகாத தனத்தாலும், வேறு சிலர் பயத்தாலும் குற்றமற்றவங்கன்னு தம்மை நிரூபித்துக்கொள்ள முடியாமல் போயிடலாம்'' பாண்டுரங்கன் சொன்னான்.

''உண்மைதான் தம்பீ. நூற்றுக்கணக்கான குற்றவாளிங்க தப்பித்துக்கிட்டாலும் பரவாயில்லை. ஆனால் ஒரு நிரபராதிக்குத் தண்டனை கிடைத்துவிடக் கூடாது என்ற கொள்கையைச் சொல்லுகிறது நம் இந்தியக் குற்றச்சட்டம். ஆனால் உண்மையில் சாட்சிங்க இல்லாமல் நிரபராதிகள் பலியாகி விடுகிறார்கள். ரௌடிகள், குண்டர்கள் கொலையாளிகளின் செல்வாக்கோடு நம் அரசியல் தலைவர்களின் ஆட்சி நடந்து வருகிறது. அதனால் அந்தக் கயவர்களைக் காப்பாற்றுகிற முயற்சியில்தான் நிரபராதிங்க ஜெயில் தண்டனைக்கு ஆளாகிவிடுகிறார்கள். குற்றம்



நிகழாமல் பார்த்துக் கொள்கிற பொறுப்பு போலீசாருடையது. ஆனால் குற்றம் நடந்தப்புறந்தான் அவங்களே வருவாங்க. நீதிமன்றம் அந்தக் குற்றம் எப்படி நடந்ததுன்னு பார்க்காது. குற்றவாளிங்க அவங்க தோலைக் காப்பாற்றுவதற்காக பொய் சாட்சிங்களைத் தர வைப்பாங்க. கேசு போய்விடும். உண்மையில் நான் குற்றம் செய்தேனா? செய்தாலும் அது என் கண்ணோட்டத்தில் குற்றம் இல்லை. சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் அமுலாக்க முடியாத தண்டனையை நான் அமுலாக்கினேன். அது குற்றம். அதனால்தான் இந்த நான்கு சுவர்களுக்கு நடுவே மங்கிப் போயிட்டிருக்கேன்.''

''தாதா! அப்படீன்னால் நீ உண்மையில் கொலையாளி இல்லையா?'' கேட்டான் பாண்டுரங்கன்.

''செய்தது கொலையாய் இருக்கலாம். ஆனால் என் கண்ணோட்டத்தில் அது கொலை இல்லை தண்டனை. என் பெற்றக் குழந்தையை மிக கொடுமையாய் வெட்டிக் கொன்று போட்டுவிட்டான் ஒரு அரசியல் குண்டன். போலீசார் கேசை நிரூபிக்க சாட்சிங்களை அழைக்கவில்லை. நீதிமன்றத்தில் அவனுக்கு அனுகூலமாய் சாட்சிங்களை வரவழைச்சுக்கிட்டாங்க. அவனை விட்டுவிட்டாங்க.

குரூரமான மிருகமானாலும் புலியைக் கொல்வது குற்றம். ஆனால் அது மனித மாமிசத்தைப் புசித்துக் கொண்டு நாலு பேருக்கு நடுவே சுற்றிக்கொண்டிருந்தால் என்ன செய்யணும்? இன்னொரு தந்தையின் புத்திர சோகத்துக்குக் காரணமாயிடக் கூடாதுன்னு தான் நான் அவனைக் கொன்றேன்''— தாதா ஆவேசத்துடன் சொன்னான்.

''ஆனால் நான் குற்றவாளி தாதா.''

தாதா சிரித்தான்.

''தம்பீ! வாழ்க்கையில் நான் எவ்வளவோ அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன். உன் கண்களைப் பார்த்தே

என்னால் சொல்லிவிட முடியும். நீ கோழை. அந்தக் கோழைத்தனத்தால்தான் நீ இன்னும் குற்றவாளின்னு நினைச்சிட்டிருக்கிறாய்'' பாண்டுரங்கன் பதில் பேச வில்லை.

''தம்பீ! மனுஷன் அடையக்கூடிய தெய்வீகத் தன்மை ஒன்று இருக்கு. மனுஷனிடமுள்ள நல்லதை வெளிக்கொண்டு வருவதுதான் அது. அதை நாம்ப பெறக்கூடிய அளவுக்கு உயரணும். அதற்கு நீ செய்யக்கூடியது ஒன்றுதான். மனுஷனை நேசி. அவன் இரக்கத்தைப் பெற்றுக்கொள்.''

பாண்டுரங்கன் தாதாவைத் தழுவிக் கொண்டான்.

''தாதா! உன்னை நான் ஒருநாளும் மறக்க மாட்டேன் ''

''என்னை உனக்கு ஞாபகம் இருக்குமா?'' தாதாவின் கண்களில் கிர்ரென்று நீர் சுரந்தது. அழுத்தமாய் கட்டிக் கொண்டான் பாண்டுரங்கனை.

காலையில் எழுந்ததும் எப்பொழுதும் போல உடற் பயிற்சியையும், சவரத்தையும் செய்து முடித்துக்கொண் டான். பாண்டுரங்கன் விடுதலைக்கு ஏற்பாடாயிற்று.

சிலர் அதற்கு மகிழ்ந்தார்கள். வேறு சிலர் அந்த நாள் தமக்கும் வராதா என்று ஏங்கினார்கள்.

ஆயுள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த சித்து சொன்னான் பாண்டுரங்கனிடம்.

''பையா! தோல்வியை ஒருநாளும் ஏற்றுக்கொண்டு விடாதே. நல்ல குணம் நம்ப தலையை சீவிடும். உன்னோடு எந்த முட்டாளாவது ஆட்டங் காட்டினானானால் உடனே வெட்டித் தள்ளிவிடு'' அதைக் கேட்டுவிட்டு தாதா கிட்டே வந்தான்.

''இந்த வார்த்தையையா சொல்றது? தம்பீ! நூறாண்டு வாழ்க்கையில் நீ இழந்தது பத்து வருஷங்களை. இன்னும்



வாழப்போகிற விலைமதிப்பிட முடியாத வாழ்க்கை எஞ்சி யிருக்கிறது உனக்கு. ஜாக்கிரதை!'' தாதா எச்சரித்தார். பாண்டுரங்கன் சிரித்தான்.

''தெரியும் தாதா! இலையுதிர்ந்து போன இந்த வாழ்க்கையில் திரும்பவும் வசந்தத்தை ஏற்படுத்திக்கிறேன்'' அவ்வார்த்தைகளை நம்பிக்கையோடு சொன்னான் பாண்டுரங்கன்.

ஆனால் குரூர மிருகங்களைப் போன்ற எதிரிகள் தன்னை வேட்டையாடுவதற்குத் தயாராய் இருக்கிறார்கள் என்ற விஷயம் அவனுக்கு அந்தச் சமயத்தில் தெரியாது.

அவனுக்குத் தரவேண்டிய சாமான்களை அவனிடம் ஒப்படைத்தார்கள்.

பாண்டுரங்கன் எல்லாவற்றையும் பரபரப்புடன் ஒதுக்கி விட்டு ஒரு லாக்கெட்டை மட்டும் கையிலெடுத்துக் கொண் டான். தங்கச் சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்தது லாக்கெட். மெய்மறந்துபோய் அதைப் பார்த்துக் கொண்டேயிருந்தான் அவன்.

ஜெயில் சூபரிண்டெண்ட் அவனை கவனமாய் பார்த்துக் கொண்டிருந்தார்.

துணிகள், ரிஸ்ட் வாட்ச், மோதிரம், லாக்கெட்... தண்டனை காலத்தில் வேலை செய்து அவன் சம்பாதித் திருக்கிற பணம் எல்லாம் மேஜை மேல் இருந்தன.

லாக்கெட்டைக் கையிலெடுத்தான். அவன் கண்கள் பளபளத்தன—

''அந்த லாக்கெட்டை உனக்கு ரொம்பப் பிடிக்குமா?'' கேட்டார் ஜெயில் சூபரின்டெண்ட்.

பாண்டுரங்கன் ஆமாம் என்று தலையாட்டினான்.

''எங்கே, இப்படிக் கொடு அதை'' கேட்டார் சூபரின்டெண்ட்.''

''எதுக்கு?'' அவர் அதைப் பிடுங்கிக்கொண்டு விடுவாரோ என்ற பயம் அவன் கண்களில் தெரிந்தது.

''பார்த்துட்டுத் தரேன்'' என்று அவன் கையிலிருந்து அதை எடுத்துக் கொண்டார். ஒருமுறை சங்கிலியையும் லாக்கெட்டையும் கூர்ந்து பார்த்தார்.

லாக்கெட்டைத் திறந்து பார்த்தார். அதற்குள் ஒரு அழகான பெண்ணின் படம் இருந்தது. இந்தப் படத்தைப் பார்த்ததுமே ஜெயில் சூபரின்டென்டின் முகத்தில் நிறம் மாறிற்று—எதையோ நினைவு படுத்திக்கொள்ள முயன்றாற்போல.

''இவள்... யார்?''

பாண்டுரங்கன் பதில் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டான்.

''உன்னைத்தான் கேட்கிறேன், இந்தப் போட்டோவில் இருக்கிறப் பெண் யார்?'' அவர் குரல் கொஞ்சம் கடுமையாய் மாறிற்று.

''அவள்... அவளைக் கொன்றதால்தான் நான் தண்டனையை அனுபவித்ததே.''

''எக்ஸாட்லி கரெக்ட். இந்த போட்டோவில் இருக்கிற பெண் தான் சகுந்தலா. எங்கேயோ பார்த்தாற்போல இருக்கேன்னுதான் கேட்டேன்'' அவனிடமே போட்டோவைத் திருப்பித் தந்துவிட்டார்.

''அவளைக் கற்பழித்துக் கொன்று போட்டுவிட்ட நீ இப்பொழுது அவள் லாக்கெட்டை அவ்வளவு விரும்புகிறாயா? என்னால் புரிஞ்சுக்க முடியவில்லை'' என்றார் ஜெயில் சூபரின்டென்ட்.

அவன் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது.

''குற்றம் நிகழ்ந்துவிட்டது. தண்டனை கிடைத்துவிட்டது. அனுபவித்து விட்டேன். இப்ப என்னால் ஒன்றும்



சொல்ல முடியாது. தயவு செய்து என்னை வெளியே அனுப்பி வைத்துடுங்க.''

சந்தோஷத்தோடு விடுதலையாகிப் போய்க் கொண்டிருக்கும் அவனை வதைக்கப் பிடிக்கவில்லை அவருக்கு.

''இட்ஸ் ஆல்ரைட் மிஸ்டர் பாண்டுரங்கன். விடுதலை செய்றதுக்கு முன்னாடி உனக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். செய்த குற்றத்தை நினைவில் வைத்துக் கொண்டு நீதிமன்றம் தண்டனை விதிக்கிறது. அந்த தண்டனையை அனுபவிப்பதன் மூலமாய் குற்றவாளியிடம் மாறுதல் ஏற்படவேண்டும் என்றும், திரும்பவும் இன்னொரு குற்றத்தைச் செய்யத் துணியக்கூடாது என்றும் நீதிமன்றம் எதிர்பார்க்கிறது.

தண்டனை காலத்தில் உன் நடத்தை எனக்குப் பரிபூரண திருப்தியைத் தந்துவிட்டது. உண்மையில் நீ குற்றவாளி என்றால் என்னால் நம்பவும் முடியவில்லை, எது எப்படியிருந்தாலும் உனக்கு இரண்டாண்டு காலம் தண்டனையைக் குறைக்கச் சொல்லி அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து அனுமதி கிடைத்ததும் இப்பொழுது உன்னை விடுதலை செய்கிறேன். நல்லவனாய் வாழ முயற்சி செய். திரும்பவும் இந்தச் ஜெயிலுக்கு வராதே'' என்றார் ஜெயில் சூபரின்டென்ட்.

''தாங்க்யூ சார்.''

''விஷ் யூ குட் லக். கோ அஹெட்'' என்று அவன் தோளில் தட்டினார். தன் சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு இரண்டு சென்ட்ரிகள் பின்தொடர்ந்து வர முன்நோக்கி நடந்தான் பாண்டுரங்கன்.

மேற்கொண்டு ஒரு நிமிஷம் கூட அவ்விடத்தில் இருக்க அவன் விரும்பவில்லை.

கூண்டிற்குள்ளிருந்து விடுதலையாகி வெளியே வரும் பறவையைப் போல கற்பனை ஏணியில் ஏறி பயணம் செய்துகொண்டே ஜெயிலை விட்டு வெளியே அடியெடுத்து

வைத்தான் பாண்டுரங்கன். பத்தாண்டு காலமாய் அனுபவித்து வந்த ஜெயில் தண்டனையால் வாழ்க்கையையே மறந்து போய் விட்டிருந்த அந்தச் சமயத்தில் சுதந்திரப் பறவையாய் வானத்தில் எம்பிப் பறக்கவேண்டும் என்ற மகிழ்ச்சியோடு வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

புறாவின் கழுத்தைப் போல மினுக் மினுக்கென்று மின்னிக் கொண்டிருந்தது கலர் கலரான மேகத் திட்டுக்களுடன் ஆகாயம்.

சுதந்திரம் எல்லாம் சுதந்திரம்!

கிரகணத்திற்குப் பிறகு வெளியே வந்து ஒளிவிடும் சந்திரனைப் போல மலர்ந்து கொண்டிருந்தது அவன் முகம்,

ஓரடி முன்நோக்கி வைக்கப் போனவன் ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

பகீரென்றது இதயம்!

அந்தச் சமயத்தில் ஒரு வினாடி நேரம் அவன் இதயமே லயம் தப்பி துடித்தது.

அனுபவித்த தண்டனை நினைவுக்கு வரவே, காற்றில் அலைப்புண்ட சருகைப் போல நடுங்கிப் போனான் அவன்.

'வாழ்க்கையில் தப்பு செய்துவிட்டு இனி ஒருநாளும் திரும்பி அந்த ஜெயில் சுவற்றுகளுக்கிடையே போய் இருக்கக்கூடாது' என்றெண்ணிக் கொண்டான் மனதிற்குள்.

விடுவிடென்று நடந்தான். தான் அன்று விடுதலையான விஷயம் தாய்க்கும், அக்காவுக்கும், தம்பிக்கும் தெரியாது. திடீரென்று அவர்களுக்கு முன்னால் போய் நின்று ஆச்சரியத்தில் திளைக்கச் செய்யவேண்டும்.

பாண்டுரங்கனுக்குப் பரபரப்பு ஏற்பட்டது. தன் மனிதர்கள் எப்படியிருக்கிறார்களோ? அக்காவுக்குத் திருமணம் ஆகியிருக்கும். கணவன் குழந்தைகளோடு



சுகமாய் குடுத்தனம் நடத்திக் கொண்டிருப்பாள். எவ்வளவு குழந்தைகள் பிறந்திருப்பார்களோ? தம்பிக்கு இதற்குள் உத்யோகம் கிடைத்திருக்கும். அம்மாவை அவன் மிக நன்றாய் கவனித்து வருவான்.

தன்னையறியாமல் நின்றுவிட்டான் அவன். அவன் முகத்தில் நிறம் மாறிற்று.

ஜெயிலிலிருந்து விடுதலையான மகிழ்ச்சியில், யோசனைகள் திணறடித்ததால் அவ்வாறு எண்ணிவிட்டானே தவிர, தன்னைப் பார்த்ததுமே எவ்வளவு இளப்பமாய் பார்ப்பார்கள் என்று அவன் ஊகித்துப் பார்க்காமலில்லை. அருவருப்படைவார்கள். ஒரு மனிதனாய் பார்க்கமாட்டார்கள். மிருகத்தைக் காட்டிலும் கீழ்த்தரமாய் பார்ப்பார்கள். அவன் தண்டனையை அனுபவித்து வந்த இந்தப் பத்தாண்டுகளில் ஒரு தடவைகூட ஜெயில் பக்கம் வந்து அவனை விசாரித்ததில்லை. ஆனாலும் அவன் மட்டும் எப்பொழுது தண்டனை முடிந்து தன் மனிதர்களைச் சந்திப்போம் என்று தவித்துப்போய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அம்மா அவனை விசாரிப்பாளா?

அக்கா ஆதரவோடு பார்ப்பாளா?

தம்பி அன்பாய் ஓடிவந்து கட்டிக்கொள்வானா?

யோசனைகள் நெருப்பாய் சுட்டன. உண்மையில் ஜெயில் சுவற்றுக்கிடையே நலிந்துபோய்க் கொண்டிருந்த வாழ்க்கையை அவன் பொறுமையாய் கழித்து வந்து கொண்டிருந்தது கூட தன் மனிதர்களுக்காகவேதான். ஒரு தீய கனவைப்போல தன் மனிதர்களை விட்டு தொலைவிற்குப் பிரிக்கப்பட்டு விட்டான். எல்லோரும் வெறுத்து ஒதுக்கினார்கள். போலீசார் அடித்தார்கள். கோர்ட்டுக்கு கூட்டிச் சென்று கொண்டிருக்கையில் முகத்தில் காரி உமிழ்ந்தார்கள்.

''அதோ அவன்தான் கொலைகாரன்.''

"காமாந்தகன்."

"இந்தக் கிராதகன்தான் அவளை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டான்."

"இவனுக்குத் தூக்கு தண்டனைதான் தகுந்தது."

"அந்தத் தண்டனை போதாது. கல்லால் அடித்து நசுக்கிக் கொல்லணும்."

காதுகளைப் பிளந்தன அந்த வார்த்தைகள். அதையெல்லாம் நினைத்து பார்த்துக் கொண்டதுமே அவன் நடை தளர்ந்துவிட்டது. மெதுவாய் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தான். தம் மனிதர்களின் முகத்தில் விழிக்கத்தான் முடியுமா?... விதி ஆடிய நாடகத்தில் மிகக் கொடுமையாய் தோற்றுப் போய்விட்ட பாண்டுரங்கனுக்கு இப்பொழுது திரும்பவும் தனிமை வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற விஷயம் நினைவிற்கு வரத்தொடங்கியதுமே அழுகை வந்துவிட்டது.

ஆனாலும் பெற்ற தாயை ஒரு தடவையாவது பார்க்க வேண்டும் என்ற தவிப்பால் பரிதவித்துப் போய் கொண்டிருந்தான் அவன்.

உடன்பிறந்த அக்காவையும் தங்கையையும் ஒரு ஒரு முறையாவது பார்க்கவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தது அவன் மனம்.

ஆனால் போலீசார் அரெஸ்ட் செய்த அன்றைக்கே அவன் செத்துவிட்டான் என்று ஒதுக்கி வைத்துவிட்டார்கள் அவர்கள். அதனால்தான் அவர்கள் யாருமே அவனுக்காக வரவில்லை. மனதைப் பிசைந்தெடுத்தது அந்த வருத்தம். தன் உடன்பிறந்தவர்களுக்கே அவனால் இனி பயனில்லையென்றால் பிறகு சமூகத்தைப் பற்றிக் கேட்கவேண்டுமா?

அவனுக்குத் தெரியும் தன்னைத் தெரிந்தவர்கள் யாருமே இனி தன்னைக் கிட்டே நெருங்கவும் விடமாட்டார்கள்.



ஒரு பெண்ணைக் கற்பழித்துக் கொன்றுவிட்டு ஜெயிலுக்குப் போன கயவனாய் முத்திரையிடப்பட்டு விட்டவன் பாண்டுரங்கன். அவனை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டால் இளப்பமாய் துரத்தியடித்து விடுவார்கள்.

இவ்வளவு நாளாய் அவன் இதைப்பற்றி யோசித்துப் பார்க்கவில்லை. இப்பொழுதுதான் அவனுக்குத் தோன்றிற்று—ஜெயிலிலிருந்து விடுதலையேயாகாமல் எஞ்சிய வாழ்க்கையையும் ஜெயிலிலேயே கழித்துவிட்டால் நன்றாயிருக்குமே என்று! உணர்ச்சி வசத்தால் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

எதிர்காலத்தைப் பற்றி யோசித்து இவ்வாறு கலங்கிப் போய்க் கொண்டிருந்த அவனுக்கு இன்னும் கொஞ்ச நேரத்தில் தன்னைக் கொல்வதற்கு எதிரிகள் முயற்சி செய்யப் போகிறார்கள் என்று தெரிந்திருக்கவில்லை.

உண்மையில் தனக்கு எதிரிகள் உள்ளார்கள் என்றோ அவர்கள் தன்னைக் கொல்வதற்காகத் தீட்டியிருக்கும் சதியைப் பற்றியோ அவனுக்குத் தெரியாது.

பெட்டிக்கடைக்கருகில் நின்று சிகரெட் பெட்டியையும் நெருப்புப் பெட்டியையும் வாங்கிக் கொண்டான் பாண்டுரங்கன்.

## 2

இப்பொழுது எங்கே போவது என்றும் புரியவில்லை அவனுக்கு. ஆளரவமில்லாத அந்தக் குன்றுப் பகுதிகளைக் கொண்ட குடியிருப்புக் காலனியில் நடந்து கொண்டிருந்தான்.

ஒருமுறை கழுத்திலிருந்து சங்கிலியை எடுத்து லாக்கெட்டிலிருந்த போட்டோவைப் பார்த்தான்.

அவன் கண்கள் குளமாகி விட்டன.

பாரமான பெருமூச்சு.

சரியாய் அதே சமயத்தில் கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு ஜீப் மரணதேவன் துரத்திக்கொண்டு வந்தாற்போல வேகமாய் அவனை நோக்கி வந்துக் கொண்டிருந்தது. தப்பித்துக் கொள்வதற்கு வினாடி நேரந்தான் பாக்கி இருந்தது அவனுக்கு.

எந்த ஆறாவது அறிவுதான் உணர்த்திற்றோ தெரியாது. பாண்டுரங்கன் மின்னலாய் துள்ளி நகர்ந்து கொண்டான்.

ஜீப் போய்விட்டது. நடக்கவிருந்த ஆபத்தை உணர்ந்து மார்பு வேகமாய் படபடத்தது.

அது எதேச்சையாய் நடந்தது என்று நினைத்துக் கொண்டானே தவிர, எதிரி தன்னைக் கொல்ல முயன்ற முயற்சி என்று உணர்ந்து கொள்ளவில்லை பாண்டுரங்கன்.

ஜீப் ரிவர்ஸ் ஆகிக் கொண்டிருந்தது. பாண்டுரங்கன் பார்த்தான். அதில் பலசாலிகளான நான்கு ஆட்கள் உட்கார்ந்துக் கொண்டிருந்தார்கள். குண்டர்களைப் போல தோன்றினார்கள். ஜீப் திரும்பவும் வேகமாய் வந்து கொண்டிருந்தது.

பாண்டுரங்கன் விக்கித்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தான். இவர்களுக்குத் தன்னோடு என்ன வேலை? ஏன் இவ்வாறு பண்ணுகிறார்கள்? தன்னை அழவைக்க எண்ணி இவ்வாறு பண்ணுகிற குடிகாரர்களா?

ஜீப் திரும்பவும் வேகமாய் வந்து கொண்டிருந்தது. துள்ளி நகர்ந்துகொண்டவன் ஒரு பக்கமாய் இருந்த வேலியின் மேல் போய் விழுந்தான். கைகளும் கால்களும் கீறி காயம் ஏற்பட்டன. விழுந்தபோது சின்னக் கல் தலையில் பட்டதால் ரத்தம் வழிந்தது. அவனுக்கு இப்பொழுதுதான்



புரிந்தது—அவர்கள் தன்னைக் கொல்வதற்காகத்தான் வருகிறார்கள் என்று!

என்றுமில்லாத பயம் வந்து சூழ்ந்துக்கொண்டது அவனை. அந்நால்வரும் மட்டும் ஜீப்பை விட்டுக் கீழே இறங்கிவிட்டால் அவர்களைத் தோற்றோடிப் போகும்படிச் செய்யக்கூடிய திறமை அவனிடம் இருந்தது என்றுகூட அந்த நேரத்தில் அவனுக்குத் தெரியவில்லை.

சரேலென்று எழுந்து ஓடினான். ஜீப் பின்தொடந்து வந்து கொண்டிருந்தது. அக்கிராதகர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அது விளையாட்டாய் இருந்தது. அவன் பக்கமாய் வேகமாய் உராய்ந்துகொண்டு போயிற்று ஜீப்.

தெருவில் யாருமே இல்லை. தான் சாகப்போவது உறுதி என்று தெரிந்து விட்டது அவனுக்கு.

ஜீப் பின்னுக்குத் திரும்பிற்று—பாண்டுரங்கன் ஓடிக் கொண்டிருந்தான். பத்து நிமிஷமாய் பீதிக்கு ஆளாகிக் கொண்டிருந்த பாண்டுரங்கனிடம் இப்பொழுது பொறுமை தளர்ந்து கொண்டிருந்தது. வியர்த்துக் கொட்டிற்று. சோர்ந்து போய் ஓடமுடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தான்.

அது குன்றுப் பகுதியாயிருந்ததால் கொஞ்சம் பள்ளமாய் இருந்த தெருவிலிருந்து இரண்டாய் பிரிந்து நூறடிகள் தாழ்வாயிருந்த வழியில் ஓடினான் பாண்டுரங்கன்.

வேகமாய் வந்த ஜீப் பெருத்த சப்தத்துடன் வீதியின் பேராபெட் சுவற்றில் தாக்கி, நூறடி கீழே பல்ட்டி அடித்து விழுந்து, புஸ்ஸென்று தீப்பிடித்துக் கொண்டு எரிந்து போகத் தொடங்கிற்று. பாண்டுரங்கன் சிலையாய் நின்று விட்டான்.

தீக்கொழுந்துகள் காற்றில் எம்பிக் கொண்டிருந்தன. ஜீப்போடு சேர்ந்து அவனைத் துரத்திக்கொண்டு வந்த

ரௌடிகளும் கூட வெந்து சாம்பலாகிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

அதுவரை மிகக் கொடுமையாய் எத்தனையோ உயிர்களை எடுத்திருந்த அந்த ரௌடிகள் தம் கிராதகச் செயலுக்கு பலியாகிக் கதறிக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு உடம்பு சிலிர்த்தது. படபடக்கும் இதயத்தோடு மற்றொரு முறை கீழே பள்ளத்தைப் பார்த்தான். கட்டைகளாய் வெந்துபோய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் யார்? ஏன் தன்னைக் கொல்ல நினைத்தார்கள்? அதனால் அவர்களுக்கு என்ன லாபம்? அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஏதோ பலமான காரணம் இருந்தாலேயொழிய அவர்கள் தன்னைக் கொல்ல துணிந்திருக்க மாட்டார்கள் என்று மட்டும் புரிந்தது.

அவனுக்கு வேதனையாயிருந்தது. பத்து வருட சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு சுதந்திர உலகத்திற்குள் காலடி எடுத்து வைத்ததுமே இவ்வாறு நிகழ்ந்தது ஏதோ தீய சகுனமாய் தோன்றிற்று அவனுக்கு.

நிசப்தத்தைச் சிதறடித்தபடி கத்திக் கூச்சலிட்டுக் கொண்டு எல்லா திசைகளிலிருந்தும் ஜனங்கள் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். மேற்கொண்டு அவ்விடத்தில் நின்று கொண்டிருப்பது முட்டாள்தனம் என்று தோன்றிற்று அவனுக்கு. மெல்ல எழுந்து நடக்கத் தொடங்கினான். அவன் மூளைமட்டும் குடைந்தெடுத்துக் கொண்டிருந்தது—எதற்காக இவ்வாறு செய்தார்கள்? தன்னைக் கொல்ல வேண்டிய காரணம் என்ன? அந்தக் கயவர்களுக்குப் பின்னால் மறைந்திருக்கும் ஆள்?... அவ்வளவு தூரந்தான் அவனால் யோசித்துப் பார்க்க முடிந்ததே தவிர, இன்னும் கொஞ்சம் மூளையைத் நீட்டி ஆலோசித்துப் பார்த்திருந்தால் அவன் அதைத் தெரிந்து கொண்டிருக்கலாமோ



என்னவோ அவ்வாறு யோசித்துப் பாராததுதான் அவன் செய்த தப்பு.

இப்பொழுது அதன் விளைவு எதாயிருந்தாலும் சரி, எதிர்த்து நிற்கத் தயாராகிவிட்டான். வீட்டிற்குப் போவதற்குத் தீர்மானித்துக் கொண்டுவிட்டான்.

தன்னை ஏலென்று கேட்காமல் போனாலும் சரி, ஆதரிக்காமல் போனாலும் சரி, ஒருமுறை தன் மனிதர்களையெல்லாம் கண்ணாரக்காண வேண்டும்.

மரணத்தின் வாயிலிருந்து மயிரிழையில் தப்பிக் கொண்டுவிட்ட அவனை ஏதோ ஆசை முன்னுக்கு இழுத்துக் கொண்டிருந்தது. தன்னைச் சேர்ந்தவர்களையெல்லாம் பார்த்த பிறகுதான் தன் எதிர்காலத் திட்டத்தைப் பற்றி முடிவெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டான். எங்கே வாழ்க்கையில் தனியனாகிவிட நேருமோ என்ற பயம்—எஞ்சிய வாழ்க்கையைத் தனியனாய் கழிக்க வேண்டியிருக்குமோ என்ற அச்சம் அவனுக்கு.

தாய் தன்னை ஓடிவந்து கட்டிக்கொண்டு அழுது தீர்க்கவேண்டும். அக்கா தன்னைத் தேற்றவேண்டும். தம்பி 'உனக்கு நாங்கள் இருக்கிறோம்' என்று தைரியம் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு மனநிம்மதி கிட்டும்.

அவனுக்கு திடீரென்று ஞாபகத்திற்கு வரத்தொடங்கிற்று. கோர்ட்டில் தனக்குப் பன்னிரெண்டு ஆண்டுகள் தண்டனை கிடைத்தபோது கைகளில் விலங்குகளை மாட்டிப் போலீசார் கூட்டிச் சென்றுகொண்டிருந்தபோது கோர்ட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த தாய் மார்பில் அடித்துக்கொண்டே அழுது சாபமிட்டுக் கொண்டிருந்தாள்—

‘‘சீ! சண்டாளா! என் வயிற்றில் வந்து பிறந்தாயேடா! இதைவிட நீ பிறந்தபோதே உன் மென்னியைத்

திருகிக் கொன்று போட்டிருந்தால் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க மாட்டேனேடா! எந்த மூஞ்சியை வெச்சுக்கிட்டு நாலு பேருக்கு முன்னால் வளையவருவோம்டா நாங்க?''

''அம்மா!'' பாசத்தால் துடிதுடித்தபடி ஏதோ சொல்ல நினைத்த அவன் முயற்சியைத் தகர்த்தெறிந்து விட்டாள் தாய்— ''சீ! என்னை அப்படிக் கூப்பிடாதே! உனக்கு ஜெயில் தண்டனை இல்லைடா, தூக்குதண்டனை கிடைக்காமல் போனதற்கு அழுகிறேன்'' என்றாள்.

''அக்கா' கூப்பிட்டான்.

அக்கா சாந்தா புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு அழுது கொண்டேயிருந்தாள்.

''தம்பீ! பாண்டு, உண்மையைச் சொல்லுடா. நீ இந்தக் குற்றத்தைச் செய்யலைன்னு உண்மையைச் சொல்லி விடுடா. நீ இந்தக் காரியத்தைச் செய்தாய்னு சொன்னால் நம்ப முடியலைடா! நீ எப்படிப்பட்டவன் என்றும் உன் மனம் எப்படிப்பட்டதுன்னும் எனக்குத் தெரியுண்டா! சொல்லு. உலகத்தாரின் பார்வையிலும் சட்டத்தின் பார்வையிலும் நீ குற்றவாளியானாலும் என் மனசாட்சிக்கு நீ குற்றம் செய்யவில்லைன்னு சொல்விட்டால்போதுண்டா! நான் உன் அக்காடா, உன்னை நம்புவேன்டா தம்பீ''— இதயமே வெடித்து விடும்போல அக்கா அழுதபோது நழுவிக் கொண்டிருந்த மனதை உறுதியாய் மாற்றிக்கொண்டு அவன் சொன்னான்—

''அவளைக் கொன்றதால்தான் நான் இந்த தண்டனையை அனுபவிக்கப் போகிறேன்.''

அந்த வார்த்தைகளிலிருந்த அர்த்தத்தை அவளால் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

''தம்பீ, போயிட்டு வரேண்டா'' இளப்பமாய் பார்த்தான் ராஜன்.



சென்ட்ரல் ஜெயிலில் போட்டுவிட்டார்கள். தனக்காகத் தன் மனிதர்கள் என்றாவது ஒருநாள் வராமல் போய் விடுவார்களா என்று ஆசையாய் ஒவ்வொரு நாளும் எதிர் பார்த்தான். வரவில்லை. பிறகு நீண்ட தண்டனைக் காலத்தை முடித்துக்கொண்டு அவர்களிடம் போய்ச் சேர்ந்து விடவேண்டும் என்ற துடிப்போடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கத் தொடங்கினான்.

தாதாவுக்கும் அவனுக்கும் சிநேகம் ஏற்பட்டது.

''நூறாண்டு வாழவேண்டியவன் நீ. எதுக்குப்பா குற்றம் செய்தாய்? இந்த ஜெயிலுக்கு ஏன் வந்தாயப்பா?'' கேட்டான் தாதா அவன் தலையைத் தடவித் தந்தபடி— முதல் முதலில் பரிச்சயம் ஏற்பட்டபொழுது.

பாண்டுரங்கனின் இதயத்திலிருந்து லேசான சிரிப்பு கோடி வேதனையோடு வெளியே பீறிட்டுக்கொண்டு வந்தது.

''வேடன் விட்ட அம்பு நேராய் வந்து மார்பில் தைத்துக்கொண்டாற் போலிருக்கிறது தாதா உன் கேள்வி! நான் நடந்த பாதையில் விஷக்காற்று வீசிகொண்டிருந்த விஷயத்தை நான் உணராமல் போனதுதான் தாதா இதற்குக் காரணம்'' என்றான்.

''உன் கதையை என்னிடம் சொல்லுப்பா.''

''இப்ப இல்லை தாதா.''

''உன் வருத்தம் கொஞ்சமாவது குறையும் பிறரிடம் சொல்லிக் கொண்டால்.''

அவன் சரேலென்று நிமிர்ந்து தாதாவைப் பார்த்தான்.

''என் வீட்டார் வந்து ஒருதடவை கூட பார்க்கலையேங்கிற வருத்தத்தைத் தவிர வேறெந்த வருத்தமும் இல்லை தாதா எனக்கு'' என்றான் வேதனையோடு.

அதற்குப் பிறகு அவன் நன்னடத்தையைப் பார்த்துவிட்டு தண்டனையைக் குறைத்து விடுதலை செய்துவிட்டார்கள்.

பாண்டுரங்கனின் கைவிரல் சுரீரென்றது. சிகரெட் நுனி வரைக்கும் எரிந்து போய்விட்டது. அதை விட்டெறிந்து விட்டு மற்றொரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான். அப்போதைக்கும் இப்போதைக்கும் நகரத்தில் ஏற்பட்டிருந்த மாறுபாட்டைக் கவனித்தான் அவன். ஆயிரக் கணக்கான வீடுகள் முளைத்திருந்தன. தெருக்கள் எல்லாம் அகலமாக்கப்பட்டிருந்தன. அவன் வீட்டை நோக்கி அடியெடுத்து வைக்க வைக்க அவனுக்கு டென்ஷன் அதிகரித்தது. அவ்விடமெல்லாம் பத்தாண்டுகளுக்கு முன்னால் சாக்கடையும் சகதியுமாய் இருந்தன. அப்படிப் பட்ட இடத்தில் இப்பொழுது கம்பீரமாய் வீடுகள் நின்று கொண்டிருந்தன.

பாண்டுரங்கன் வியப்படைந்தவனாய் நின்றுவிட்டான்.

தன் வீடு இருந்த இடத்தில் இப்பொழுது பெரிய மாடிவீடு இருந்தது. அவனுக்குச் சோர்வு வந்து சூழ்ந்து கொண்டது.

ஆனால் மனதில் லேசாய் ஆசை இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தது.

அன்றைக்கு அவனிடம் சொன்னது போலவே மதன், நாகராஜ், பாலாஜி மூவரும் தன் குடும்பத்திற்கு உதவி செய்த பணத்தால் அம் மாடி வீட்டைக் கட்டிக்கொண்டிருப் பார்களோ என்றெண்ணிக் கொண்டான் பாண்டுரங்கன். அதற்கு அண்மையிலேயே நின்றுவிட்டான்.

அவ்விடத்திற்குப் பக்கத்தில் பொதுக் குழாய் இருந்த தால் பெரிய சின்னப் பெண்கள் எல்லோரும் வரிசையில் நின்றபடி குடங்களிலும் தவலைகளிலும் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சிகரெட்டைப் புகைத்துக்கொண்டே நின்றுகொண்டிருந்த பாண்டுரங்கனை அவர்கள் விநோத மாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



எல்லோருமே புதுமுகந்தான். பரிச்சயமானவர்கள் யாருமே தென்படவில்லை. அதுவும் ஒருவிதத்தில் நல்லது தான் என்று தோன்றிற்று அவனுக்கு.

''யார் வேணும் தம்பி?'' கேட்டான் அங்கே நின்று கொண்டிருந்த ஒருவன். தன் தடுமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் சொன்னான் பாண்டுரங்கன்—

''சரளா அம்மா வீடு இங்கே இருக்கணுமே, அந்த இடத்தில் இந்த மாடி பங்களா...''

அவன் ஏறயிறங்கப் பார்த்தான். ''சரளா அம்மாவா?'' என்று கூர்ந்து பார்த்தான்.

''நீ சரளா அம்மாவோட பெரிய மகன்தானே?'' என்று கேட்டான்.

நடுங்கும் குரலோடு ''ஆமாம்'' என்றான்.

''நீ ஜெயிலிலிருந்து தானே வருகிறாய்?''

''உம்'' முணுமுணுத்தான். அவ்வளவுதான்!

அந்த ஆள் ''சி, நீயா?'' என்றவன் ''அடேய் யாதய்யா, அசோகன் வாங்கடா, வாங்க. பொம் பிள்ளையைக் கொல்ற திருட்டுக் கழுதை வந்துட்டான்டா'' என்று கூப்பாடு போடத் தொடங்கினான். எதிர்பாராத அச்சூழ்நிலைக்கு பாண்டுரங்கன் அதிர்ந்துப்போய் விட்டான்.

அவன் அந்நிலையிலிருந்து தேறிக் கொள்வதற்குள் ளாகவே ஜனங்கள் ஓட்டமாய் ஓடிவந்து கொண்டிருந்தது தென்பட்டது.

''திருட்டுக் கழுதையை அடியுங்கள்.''

''பிடித்துக் கொள்ளுங்கள்.''

''விட்டுவிடாதீங்க.''

கத்தல்கள்—கூச்சல்கள்—

நிலைமை விஷமாகிவிட்டது. இன்னும் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தால் தன்னை உயிரோடு விட்டு வைக்கமாட்டார்கள். தான் சொல்லப்போகும் வார்த்தைகளைக் கூட காதில் போட்டுக்கொள்ள மாட்டார்கள். அப்பகுதியில் வாழும் ஜனங்கள் எல்லோருமாய் தன்னைச் சித்திரவதைச் செய்யக்கூடியச் சூழ்நிலை தோன்றிக் கொண்டிருந்தது. கட்டைகளையும் கழிகளையும் எடுத்து வந்து கொண்டிருந்தார்கள் அவர்கள். பெண்கள் புடவைத் தலைப்பை இழுத்துச் சொருகிக் கொண்டு வந்தார்கள். பாண்டுரங்கன் மின்னலாய்த் திரும்பினான். வில்லிலிருந்து விடுபட்ட அம்பாய் ஓடத்தொடங்கினான். கத்திக் கூச்சலிட்டுக் கொண்டே கற்களை விசிக்கொண்டிருந்தார்கள். ஒன்றிரண்டு வந்து அவன்மேல் பட்டன. தெருவில் போவோர் வருவோர் நின்று வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினார்கள் ஒன்றும் புரியாதவர்களாய்.

ஏறக்குறைய இரண்டு கிலோ மீட்டர் தூரம் ஓடியிருப்பான் பாண்டுரங்கன். களைப்பும், சோர்வும் வந்து சேர்ந்துக் கொண்டன அவனுக்கு. திரும்பிப் பார்த்தான் ஒரு முறை. தன்னைத் துரத்தி வந்துகொண்டிருந்த ஜனங்களைக் காணோம். அதற்குமேல் ஓரடிகூட எடுத்து வைக்க முடியவில்லை அவனால். கால்கள் கடுகடுத்தன. அது வீதி என்றுகூட பார்க்காமல் நடைப்பாதையில் அப்படியே சரிந்துவிட்டான் பாண்டுரங்கன்.

அப்பொழுது அவனுக்கு தாதா சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. உண்மையே! சமூகத்தில் தனக்கு எப்படிப்பட்ட நிலைமை இருக்கும் என்பது ருசுவாகிவிட்டது. அவன் இதயத்தை வேதனை பிழிந்தெடுத்தது.

இனி என்ன செய்வது? மெதுவாய் எழுந்து நடக்கத் தொடங்கினான். ஆனால் நடை தளர்ந்தது. கால்கள் நடக்க ஒத்துழைக்கவில்லை.

அவ்விடத்தில் சந்தடியாய் இருந்ததைப் பார்த்தான்.



''காளியம்மாள் டீக்கடை'' அவன் மெதுவாய் அங்கே போய்ச் சேர்ந்தான்.

ஒரு கோப்பை தேநீரை வாங்கிக்கொண்டு பக்கத்தில் உட்கார்ந்து குடிக்கத் தொடங்கினான். தகதகவென்று பற்றி எரிந்துக்கொண்டிருந்தது இதயம். அந்தத் தீயை இன்னும் அதிகரித்துக் கொண்டே தொண்டைக் குழியில் இறங்கிக் கொண்டிருந்தது தேநீர்.

சரியாய் அந்தச் சமயத்தில் தான் ஒரு இடிமுழக்கம் கேட்டது. திடுக்கிட்டான் பாண்டுரங்கன்.

''அடேய் பாவி! உன் கை உடைஞ்சுப் போக!'' கத்திக் கொண்டிருந்தாள் அவள். ஒரு ரௌடி கோப்பைகளைத் தரையில் ஓங்கி அடித்து உடைத்துக் கொண்டிருந்தான். மேஜைகளை உடைத்தெறிந்து கொண்டிருந்தான்.

அதுவரை நன்றாய் வம்புப் பேசிக்கொண்டே தேநீர் குடித்துக் கொண்டிருந்தவர்களுக்கிடையே சலசலப்பு தோன்றத் தொடங்கிற்று.

''என்னமே, தலைக்கனம் அதிகமாயிடுத்து? போய் சொல்லிக்கோ உன் பிள்ளையிடம்!''

''பாண்டுரங்கன் பார்த்தான் ஆஜானுபாகுவான அந்த ரௌடி செய்து கொண்டிருந்த அக்கிரமத்தை தடுத்து நிறுத்தக் கூடியவர்கள் அங்கே யாருமில்லை என்று புரிந்துவிட்டது. அதனால்தான் அவன் அப்படி துள்ளுகிறான்.

ஒரு பெண்மணி வேறு வழியில்லாமல் செய்து கொண்டிருந்த வியாபாரத்தை அந்த ரௌடி நாசமாக்கிக் கொண்டிருந்ததைக் காணச் சகிக்கவில்லை அவனுக்கு. ஆவேசத்தால் அவன் மார்பு அகன்றது.

கையிலிருந்த கோப்பையை அப்படியே பிடித்துக் கொண்டு அந்த ரௌடியை நோக்கிப் போனபொழுது ஒருத்தன் கையை நீட்டித் தடுத்து நிறுத்தினான்—

''அவனோடு வம்பு வெச்சுக்காதே தம்பி, எம்.எல்.ஏ. வின் பெர்சனல் ரௌடி அவன்'' என்றான்.

பாண்டுரங்கன் அலட்சியமாய் அவன் கையைத் தள்ளி விட்டான்.

ரௌடி நரசிம்மன் குரூரமாய்ப் பார்த்தான் அவனை.

தோளைத் தட்டிக்கொண்டு— ''எவனோ இளைஞன் பாவம் இந்த நரசிம்மனோடு வம்பு வெச்சுக்கிட்டால் ஆபத்துன்னு தெரியாமல் வாலையாட்ட வந்துட்டான் போலிருக்கு'' ஏளனமாய்ப் பழித்தான்.

அந்தப் பெண்மணி லபோதிபோ என்று அடித்துக் கொண்டாள்.

பாண்டுரங்கன் கையிலிருந்த கோப்பைத் தேநீரை நரசிம்மனின் முகத்தில் வீசியெறிந்தான்.

அவன் நடவடிக்கைக்கு நரசிம்மன் வினாடி நேரம் விக்கித்துப் போய்விட்டான். தன்னையே எதிர்த்து நிற்கக் கூடிய தைரியம் இந்த ஆளுக்கு எப்படி வந்தது என்பது போல. அவன் சற்றும் எதிர்பாராதபடி சரேலென்று அவனைத் தூக்கி கிர்ரென்று சுழற்றிவிட்டு தொலைவில் வீசினான்.

பாண்டுரங்கன் போய் மூலையிலிருந்த பழைய மேஜை ஒன்றின்மேல் விழுந்தான். மேஜை பெருத்த சப்தத்துடன் விரிசல் கண்டு உடைந்தது. பாண்டுரங்கனுக்கு இடுப்பு எலும்பு முறிந்துவிட்டாற் போல இருந்தது. மெதுவாய் எழுந்து கொண்டிருந்த அவனைப் பார்த்து நரசிம்மன் தோளைத் தட்டிக்கொண்டான்.

''அடேய், என்னோடு வாலாட்டினவன் கிடையாதுடா. எம்.எல்.ஏ. நாராயணனின் பெர்சனல் ரௌடிடா நான்! இந்தத் தடவை விட்டுவிடுகிறேன் போ'' என்றான் நரசிம்மன்.

பாண்டுரங்கன் சிறுத்தைப் புலியைப் போல பாய்ந்தான் சக்தியைத் திரட்டிக்கொண்டு நாலடி பின்வாங்கி—காற்றில்



வேகமாய் எம்பினான். நரசிம்மன் அதைப் பார்த்து உணருவதற்குள்ளாகவே பாண்டுரங்கனின் பாதம் அவன் கன்னத்தை வந்து தாக்கிற்று.

''பட்'' என்ற சப்தத்தோடு பற்கள் உடைந்து நரசிம்ம னின் வாயிலிருந்து ரத்தம் வழியத் தொடங்கிற்று. இன்னொரு முறை காற்றில் எம்பி அவன் மார்பில் ஓர் உதை உதைத்தான். நரசிம்மன் பின்னால் போய் விழுந்தான். அவன் சாகசத்தை அசந்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள் ஜனங்கள்.

எம்பி அவன் இரு கைகளுக்கிடையே நின்று கொண் டான். அழுத்தமாய் மிதித்தான். வலியால் திணறிக் கொண்டிருந்தான் நரசிம்மன்.

''என்பெயர் பாண்டுரங்கன். உன்னைப் போன்ற அயோக்கியத்தனம் பண்ணுகிற ரௌடிங்களை அந்த பாண்டுரங்கனிடமே அனுப்பி வைத்து விடுவது என் தொழில்'' — என்று நரசிம்மனின் கைகளைத் திருகி எலும்பை உடைத்துவிட்டான்.

''அம்மா'' வலியால் வீரிட்டு அலறினான் நரசிம்மன். இன்னொரு தடவை இந்த ஜோலிக்கு வந்தாயானால் உன் எலும்பெல்லாம் தவிடு பொடியாயிடும்'' என்று அவன் கையிலிருந்த இரண்டு மோதிரங்களைக் கழற்றி அந்தப் பெண்மணியிடம் தந்துவிட்டு—

''உனக்கு நேர்ந்த நஷ்டத்தை ஈடுகட்டிக்கோம்மா'' என்றான்—அங்கிருந்த ரிக்ஷாவில் நரசிம்மனைத் தூக்கிப் போட்டுவிட்டு.

''இவனை எம். எல். ஏ. நாராயணனின் வீட்டு வாசலில் இறக்கிப் போட்டுட்டு பணத்தை வாங்கிக்கோ''— என்றான் ரிக்ஷாக்காரனிடம்.

அவன் நகரப் போனான்.

''தம்பீ! சமயத்துக்குப் பெத்த பிள்ளையாய் வந்து காப்பாற்றினாய் அப்பா. அவ்வப்போது வந்துட்டிருப்பா'' என்றாள் காளியம்மாள்.

பாண்டுரங்கன் முறுவலுடன் அங்கிருந்து நகரப் போனான். ஒரு கை அவன் தோளில் பட்டது. பாண்டு ரங்கன் நின்றான். திரும்பிப் பார்க்கப் போனான். ஆனால் அவனுக்கு அந்த அவகாசத்தைக் கொடுக்கவில்லை அந்த ஆள்.

''நீ பாண்டுரங்கன்தானே?'' அவன் தோளில் கை வைத்து அவன் கேட்டான்.

''உம்'' என்றான் பாண்டுரங்கன்.

''அப்படியே முன்னுக்கு நட'' உத்தரவிட்டாற்போல வந்தது அக்குரல்.

அக்குரல்...அக்குரலை எங்கேயோ கேட்டாற்போலிருந் தது பாண்டுரங்கனுக்கு.

பாண்டுரங்கன் யோசித்தான். தன்னை அதிகாரம் பண்ணுகிற இவன் யார்? திரும்பிப் பார்க்க வேண்டும். ஆனால் அந்த அவகாசத்தை அந்த ஆள் தரவில்லை.

''என் கையில் கத்தி இருக்கிறது. திரும்பிப் பார்க்க முயன்றால் சதக்கென்று உன் கழுத்தில் இறங்கிவிடும். ஜாக்கிரதை'' எச்சரித்தான் அந்த ஆள்.

அவன் சொன்னது போல இரண்டடிகள் எடுத்து வைத்தான் பாண்டுரங்கன். அவ்வளவுதான்.

பாண்டுரங்கனுக்கு நினைவிற்கு வந்துவிட்டது. அவன் மனதில் ஒரு ஆள் நிழலாடினான்.

''டேய்'' என்று பெரிதாய் இரைந்தவன் சரேலென்று திரும்பித் தன்னை அதுவரைக்கும் சஸ்பென்சில் ஆழ்த்திக் கொண்டிருந்த ஆளைக் கட்டிக் கொண்டான் பாண்டு ரங்கன் மகிழ்ச்சி தாங்க முடியாமல்.



''எப்படி அடையாளம் புரிந்துகொண்டாயடா?'' கேட் டான் அவன்.

''அடேய், சிறுவயதிலேயே கூட பின்னாலிருந்து வந்து பயமுறுத்துவாயே! அது உனக்குச் சிறு வயதிலிருந்தே உள்ள பழக்கந்தானே! எப்படி மறந்து போவேன்?'' என்றான் பாண்டுரங்கன்.

ஆம், சிம்மாத்ரி பாண்டுரங்கனின் பாலிய சிநேகிதன். நண்பனைச் சந்தித்த மகிழ்ச்சியோடு அங்கிருந்து நகர்ந் தான் பாண்டுரங்கன்.

''இது என் சொந்த காரேஜதான்'' சொன்னான் சிம்மாத்ரி.

ஒரு கார் ஷெட்டிற்கருகில் கூட்டி வந்து, பாண்டுரங் கன் சுற்றும்முற்றும் பார்த்தான். சில மெக்கானிக்குகள் வேலை செய்துகொண்டிருந்தார்கள்.

சோர்வுடன் மரபெஞ்சியில் வந்து உட்கார்ந்துகொண் டான் பாண்டுரங்கன்.

''இப்பச் சொல்லுடா, நீ எப்பொழுது வெளியே வந்தாய்?'' நண்பனின் கேள்வியைக் கேட்டு வேதனையாய் சிரித்தான் பாண்டுரங்கன். ''இன்றைக்குத்தான்...ஆனால் ஏன்தான் விடுதலையானோமோன்னு இருக்கு.''

''நடந்ததை நினைத்து வருத்தப்பட்டுக்கிட்டே உட் கார்ந்திருப்பது புத்திசாலிகளின் லட்சணமில்லை.''

''வெளியே அடியெடுத்து வைத்த ஒருமணி நேரத்திற் குள் நான் பெற்ற அனுபவத்தால் இப்படி நினைக்கத் தோன்றுகிறதுடா எனக்கு. யாரோ என்னைக் கொலை செய்ய முயன்றார்கள். அதிர்ஷ்டவசமாய் தப்பித்துக் கிட்டேன். பிறகு என் தாய் முதலியவர்களைப் பார்ப்பதற் காகப் போயிட்டிருந்தபோது—அந்தச் சுற்று வட்டாரத்து ஜனங்கள் எல்லோருமாய் சேர்ந்து என்னைத் துரத்தியடித் தாங்க. கொலைகாரன் என்று முத்திரை குத்திக் கொண்

டுள்ள எனக்குச் சமூகத்தில் என் இருப்பிடம் என்னவென்று புரிந்துபோய் விட்டது. அதனால்தான் எனக்குத் திரும்பவும் ஜெயிலுக்கே போயிடணும் போலிருக்கு.''

சிம்மாத்ரி இரக்கத்தோடு பார்த்தான்.

''டேய் சிம்மாத்ரி, அம்மா எப்படி இருக்காங்க? அக்காவுக்குக் கல்யாணம் ஆயிடுத்தா? தம்பிக்கு உத்யோகம் கிடைத்து விட்டதா?'' அவன் மூச்சுவிடாமல் கேள்வி கேட்கவே சிம்மாத்ரி வாயடைத்துப் போய் விட்டான்.

''அப்படீன்னால் நடந்த விஷயமெல்லாம் உனக்குத் தெரியாதுன்னு சொல்லு?''

''என்னடா? என்ன எனக்குத் தெரியாத விஷயம்?''

''அதான்...அதான்...'' சிம்மாத்ரியால் சொல்ல முடியவில்லை. தயக்கத்துடன் நிறுத்திக் கொண்டான்.

ஏதோ நடந்திருக்கிறது. சிம்மாத்ரியால் சொல்ல முடியவில்லை. பாண்டுரங்கனின் ரத்த ஓட்டம் அதிகரித்தது. ஏதோ கெட்ட செய்தியை அவனால் சொல்ல முடியாமல் தயங்குகிறான் என்று புரிந்துவிட்டது. அவன் உடம்பு சிலிர்த்தது. அவ்வளவுதான். சிம்மாத்ரியின் தோள்களை அழுத்திப் பிடித்துக்கொண்டான் பாண்டுரங்கன்.

''ப்ளீஸ், என்னைக் கொல்லாதே. தயவுசெய்து என்ன நடந்ததுன்னு சீக்கிரமாய்ச் சொல்லு'' உலுக்கிக் கொண்டிருந்தான் அவனை.

''கடைசியில் உனக்கு இந்தச் செய்தியை என் வாயாலேயே சொல்ல வேண்டியிருக்கேன்னுதான் வருத்தமாயிருக்கு எனக்கு...அம்மா செத்துட்டாங்க'' குரல் கம்மச் சொன்னான் சிம்மாத்ரி.

''அம்மா?'' அவன் உடம்பு கட்டையாய் விறைப்பாகி விட்டது. இதைக் கனவிலும் ஊகித்திருக்கவில்லை அவன்.

''ஆமாண்டா. நீ ஜெயிலுக்குப் போன கொஞ்ச நாளிலேயே நடந்தது இது. அக்கா சாந்தாவுக்கு கண்முன்



னாடியே நடந்த அநியாயத்தைப் பார்த்துச் சகித்துக்க முடியாமல் போய் கடைசியில் உயிரைவிட்டுவிட்டாள்.

பாண்டுரங்கனின் கண்கள் நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன.

''யார் இதற்குக் காரணம்? யாருக்கு அநியாயம் நடந்தது?'' அவன் காலடியில் பூமி நழுவினாற் போலிருந்தது. வானமே இடிந்து தலைமேல்விழுந்துவிட்டாற்போலத் தளர்ந்துபோன அவன் மனதை ஒரு நிலைக்குக் கொண்டு வர அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

சிம்மாத்ரி நண்பனின் தோளில் பரிவோடு தட்டினான்.

''நீ ஜெயிலுக்குப் போனபிறகு நான் தினந்தோறும் இரவில் காரேஜை மூடிய பிறகு அம்மாவை விசாரிப்பதற்காகப் போவேன்.'' அன்றிரவு...

## 3

வேலைத் தொந்தரவால் அன்றைக்கு காரேஜை மூடுவதற்குத் தாமதமாகிவிட்டது சிம்மாத்ரிக்கு. ஆனாலும் ஒரு முறைபோய் சரளா அம்மாவைப் பார்த்து விட்டு வரக் கிளம்பினான்.

சிம்மாத்ரி சரளாவின் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தான். வீதி ஆளரவமில்லாமல் இருந்தது. இரவு பத்தடித்துச் சில நிமிஷங்கள் ஆகியிருந்தன.

அதற்குள் சிம்மாத்ரியின் சைக்கிளைத் தாண்டிக் கொண்டு ஒரு அம்பாஸிடர் கார் வேகமாய் வந்து சரளாவின் வீட்டிற்கு முன்னால் நின்றது.

அந்தச் சமயத்தில் சரளா அம்மாவின் வீட்டிற்கு யாரோ காரில் வந்தது சிம்மாத்ரிக்கு ஆச்சரியமாயிருந்தது. யாராயிருக்கும் என்று புரியவில்லை அவனுக்கு.

காரிலிருந்து மூன்று பேர்கள் இறங்கினார்கள். அவர்களின் தோற்றத்தைப் பார்த்தால் மிகச் செல்வந்தர்களைப் போல இருந்தது. அம்மூவரும் காரை விட்டிறங்கி ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மளமளவென்று படியேறி கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்து கொண்டதும் அம்மூவரும் உள்ளே போய் கதவைச் சாத்திக்கொண்டதும் கண்மூடித் திறப்பதற்குள் நடந்துவிட்டது.

அதனால் சிம்மாத்ரிக்கு சந்தேகம் வந்தது. ஆனால் உடனே என்ன செய்யவேண்டுமென்று புரியவில்லை. உள்ளே ராஜன்தான் இருக்கிறானே என்று சமாதானப் படுத்திக் கொண்டான் முதலில். ஆனால் இரண்டு நிமிஷங்கள் ஆனதும் உள்ளே என்ன நடந்துக் கொண்டிருக்கிறது பார்ப்போம் என்று மளமளவென்று வீட்டிற்குப் பின் பக்கமாய் போய், தண்ணீர்ப் பைப்பைப் பிடித்துக்கொண்டு ஏறி, வெண்டிலேட்டர் வழியாய் உள்ளே எட்டிப் பார்த்தான் சிம்மாத்ரி.

சரளா அம்மூவரையும் கலவரத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள்.

''யார் நீங்கள்?'' என்று.

''உன் நன்மையைக் கருதுபவன்'' என்றான் ஒருவன்.

''அப்படீன்னால் கதவை ஏன் சாத்தினீங்க?'' அக்குரலில் பயம் நன்றாய்த் தெரிந்தது.

''எங்க விவகாரத்தில் எங்கே போனாலும் நாங்கள் கதவைச் சாத்துவது வழக்கம்'' என்றான் இரண்டாவது ஆள்.

''அதென்ன விவகாரம்? நீங்க யாருன்னு கூட தெரியாதே எனக்கு'' கோபம் தென்பட்டது சரளாவின் குரலில்.



''எங்களை உனக்குத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் உன்னை எங்களுக்கு நன்றாய்த் தெரியும். என் பெயர் பாலாஜி. இவன் மதன். எங்களிருவருக்கும் நெருங்கிய நண்பன் இவன். பெயர் நாகராஜ். மூவரும் வியாபாரத்தில் பங்காளிகள். நாங்க எது செய்தாலும் எங்க மூவருக்கும் சமமானப் பங்கு உண்டு'' சொன்னான் பாலாஜி.

''அப்படீன்னால் வந்த காரியத்தைச் சொல்லுங்க'' அவன் சிரித்தான்.

''நன்மையைக் கருதுபவர்கள் எதற்காக வருவாங்க? உதவி செய்றதுக்குதானே?''

''அப்படீன்னால்?''

''உன் மகன் ஜெயிலுக்குப் போனதற்கு நஷ்டஈட்டைத் தருவதற்காக.''

''குற்றம் செய்ததால் ஜெயிலுக்குப் போனான். அதற்கு நீங்கள் நஷ்டஈட்டை ஏன் வழங்கணும்?' மூவரும் அவ்வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்தார்கள்.

''எங்கள் மானத்தையும் மரியாதையையும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆடிய சதுரங்க ஆட்டத்தில் ஒரு பகடைக் காயாய் உன் மகனைப் பயன்படுத்திக் கொண்டு ஜெயிலுக்கு அனுப்பி வெச்சுட்டோம்'' என்றான் பாலாஜி.

அதைக் கேட்ட சரளாவின் காலடியில் பூமி நழுவத் தொடங்கிற்று. தன் மகன் குற்றவாளியல்ல என்ற உண்மையைக் காட்டிலும், அநியாயமாய் ஜெயிலுக்குப் போக நேர்ந்ததே என்ற வருத்தந்தான் அதிகமாய் வாட்டிற்று.

''பாவிகளே! கள்ளங்கபடமறியாத என் மகனை அநியாயமாய் ஜெயிலுக்கு அனுப்பிட்டீங்களே! உங்களைத் தூக்கிலேற்றணும்'' ஆத்திரந்தாங்காமல் கதறிவிட்டாள் சரளா.

''ஏய், வீணாய் அழாதே. சொன்னதைக் கேளு. உன் குடும்பத்துக்கு உதவி செய்ய வந்தோம், அந்தப் பணத்தால் உன் மகளின் திருமணத்தைச் செய்துவிடு. உன் மகனைப் படிக்க வை.''

''உன் பாவப்பணம் எங்களுக்குத் தேவையில்லைடா அயோக்கியனே! என் மகன் குற்றவாளிதான்னு நினைச்சுட்டேனே தவிர, அதற்குப் பின்னால் உங்கள் தியகரங்கள் இருப்பதைத் தெரிந்துக்காமல் போயிட்டேன். என் மகனைக் கண்டபடி திட்டிட்டேன். டேய், நீங்க மனுஷங்க இல்லைடா, உங்களை என்ன செய்தாலும் தகும்.''

''உஷ். வாயைத் திறக்காதே. பைத்தியக்கார வேஷம் போட்டாயானால் உன் குடும்பத்தை நாசம் செய்துடுவோம்'' கோபமாய் சொன்னான் பாலாஜி.

அதுவரை உள்ளே கதவிற்கருகில் நின்றபடி இச்சம்பாஷணைகளைக் கேட்டுக் கொண்டிருந்த சாந்தா வெளியே வந்தாள்.

''அம்மா! இந்தப் பாவிங்களை மொதல்ல வெளியே போகச் சொல்லு'' என்றாள் சாந்தா, அவர்களைப் பார்த்து அருவருப்படைந்தவளாய்.

மூவரும் சாந்தாவை நோக்கினார்கள். அவள் அழகைப் பார்த்து மயங்கியவர்களாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். கண்களால் சைகைக் காட்டிக்கொண்டார்கள்.

மதன் கேலியாய் சொன்னான்—

''எங்களை வெளியே போகச்சொல்லி யாரும் சொல்லத் தேவையில்லை. நாங்கள் மூவரும் பார்ட்னர்கள். எங்கள் வேலை முடிவடைந்ததுமே ஒரேயடியாய் போய் விடுவோம்.''

''மொதல்ல இங்கேயிருந்து போயிடுங்க'' ஆவேசத்தோடு சொன்னாள் சாந்தா கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.



நாகராஜ் கடகடவென்று சிரித்தான்,

''உன் கல்யாணத்துக்குப் பணம் உதவி செய்யத்தான் வந்தோம்... ஆனால்.''

''ஆனால்... இப்ப உனக்குக் கல்யாணம் ஆறதை நாங்க விரும்பவில்லை'' பாலாஜி ஓரடி எடுத்துவைத்தான் அவளை நோக்கி.

''மரியாதையாய் வெளியே போயிடுங்க. இல்லாவிட்டால் கூச்சல் போடுவேன். ஜனங்களைக் கொண்டு செருப்பால் அடிக்க வைப்பேன்'' கத்தினாள் சரளா.

பாலாஜி ஏளனமாய்ச் சிரித்தான்.

''இங்கேயிருந்து நீ கத்தினாலும் யாருக்கும் கேட்காது பைத்தியக்காரக் கிழவி? வெளியே என் ஆளுங்க காவல் காத்துட்டிருக்காங்க. அக்ரீமென்டை முடித்துக்கிட்டுப் போய்ச் சேருகிறோம்.''

''அப்படீன்னால்?''

''அவசரப்படாதே. உங்களுக்காகத் தன் பொன்னான வாழ்க்கையைக் கைதியாய் மாற்றிக்கொண்டு விட்டான் உன் பெரிய மகன். எங்களோடு ராஜியாகிவிட்டால் சாந்தாவை வாழ்நாளெல்லாம் பூவில் வைத்துப் பாதுகாப்போம். உன் சின்னப் பையனின் எதிர்காலத்திற்கு ராஜபாட்டைப் போடுவோம்'' என்றான் பாலாஜி சமாதான உடன்படிக்கைக்கு வரச் சொன்னபடி.

''உங்க முகங்களைப் பார்த்தாலே பஞ்சமகா பாதகங்கள் வந்துச் சூழ்ந்துக்கொள்ளும். போய்விடுங்கள். எங்களை வதைக்காமல் போய்விடுங்கள் மரியாதையாய்'' சரளா கைகளைக் கூப்பினாள்.

''கண்ணில் பட்டுவிட்ட அழகை சொந்தமாக்கிக் கொள்ளாமல் போவது எங்கள் சரித்திரத்திலேயே நடந்ததில்லையே கிழவி! உன் மகளின் அழகு எங்களைக் கவர்ந்து

விட்டது. அந்த அழகை எங்கள் பணத்தைச் செலவழி எவன் கையிலாவது தாரை வார்ப்பது விவேகம் இல்லை. பாலாஜி சொன்ன வார்த்தைகளைக் காதால் கேட முடியாதவளாய் செவிகளைப் பொத்திக் கொண்டாள் சரளா.

"நாங்கள் மூவரும் பார்ட்னர்கள். சாந்தா எங்க மூவரையுமே கணவர்களாய் ஏற்றுக்கணும்" என்றான் பாலாஜி.

"சீ... அயோக்கியனே... இப்படிப் பேச வெட்கமில்லை உங்களுக்கு? உங்கப் பணமோ உதவியோ எங்களுக்குத் தேவையில்லை. இன்னும் ஒரு நிமிஷம் இங்கே நின்னுட்டிருந்தாலும் உங்க உயிரை எடுத்துடுவேன்" சாந்தா கத்தினாள்.

"உன் அழகைப் பார்த்தும் ஒண்ணும் செய்யாமல் உன்னை அடையாமல் முகத்தைத் தொங்கப் போட்டுக்கிட்டுப் போவதற்கு நாங்கள் காதில் பூ வெச்சிருக்கவில்லை."

அவர்கள் தன்னைக் கற்பழிக்கத் துணிந்துவிட்டார்கள் என்று உணர்ந்ததுமே காற்றில் ஆடும் காய்ந்த சருகைப் போல நடுநடுங்கினாள் சாந்தா.

சிம்மாத்ரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. குறைந்தபட்சம் கீழே போய் நாலு பேரைக் கூட்டிக் கொண்டு வருவதற்குக் கூட முடியாத சங்கடமான நிலைமை.

பாலாஜி சொன்னது போல தெருவில் அவன் ஆட்கள் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கண்களில் பட்டுவிட்டால் அதன் விளைவு என்னவென்று அறிவான் அவன். ஆவேசத்தை அடக்கிக்கொண்டே, வரும் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டே, வெண்டிலேட்டரோடு பல்லியாய் ஒட்டிக்கொண்டிருந்தான் அவன்.



தம்பி ராஜன் வீட்டில் இல்லை. அவர்கள் கதவைத் தட்டியதுமே ராஜன் தான் போலும் என்று நினைத்துக் கதவைத் திறந்திருக்கிறாள் சரளா.

"கடைசி தடவையாய் எச்சரிக்கிறேன். நாங்கள் மூவரும் ஒரேயடியாய் உன் மகளுக்கு கணவர்களாய் இருக்கமாட்டோம். மாதத்துக்கு ஒருத்தர் சாந்தாவை மனைவியாய் வெச்சுக்கறோம்" பாலாஜி கடைசி வார்னிங் கொடுத்தான்.

"பெற்ற தாயான எனக்கு முன்பாகவே என் மகளைப் பற்றி வாய்க்கு வந்தபடி உளறினால் கேட்டுக்கொண்டு வாயை மூடிக்கிட்டிருக்கிற மிருகம் இல்லைடா நான். உங்களை என்ன செய்றேன் பாருங்கள். உங்கள் ரத்தத்தைக் குடிக்கிறேன்" என்று பாலாஜியின் மேல் பாய்ந்து அவனை அடிக்கத் தொடங்கினாள் சரளா.

பாலாஜி அவளை தொலைவில் பிடித்துத் தள்ளினான். அந்தத் தள்ளலுக்கு அவள் போய் வாசலில் விழுந்தாள்.

"அம்மா" அழுதுகொண்டே தாயிடம் ஓடிவந்தாள் சாந்தா.

"இதைக் கட்டிப்போட்டு விடுவோம்" கத்தினான் பாலாஜி.

சாந்தாவைப் பிடித்து ஒரு பக்கமாய் இழுத்தான் மதன். சரளாவின் கைகளை ஸ்கார்ஃப் மூலமாய் கட்டிப்போட்டுவிட்டு வாயில் கைக்குட்டையைத் திணித்தான் பாலாஜி.

பாலாஜி தன் பார்ட்னர்களைப் பார்த்து— "இம்முறை ஃபஸ்ட் டர்ன் மதனுடையதுன்னு நினைக்கிறேன்" என்றான்.

"எக்ஸாட்லி" என்றான் நாகராஜ்.

"உம்... அப்படீன்னால் சீக்கிரமாய் ஆகட்டும்."

சாந்தாவை இரு கைகளாலும் தூக்கிக் கட்டிலில் விசியெறிந்தான் மதன்.

அவள் திமிறிக்கொண்டிருந்தாள். அவன் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாதவளாய் போராடிக் கொண்டிருந்தாள். அவள் கத்தலைக் கேட்பாரில்லை. திமிறிய அவள் கன்னங்கள் அதிருமாறு சுள் சுள்ளென்று அடித்தான் மதன்.

அவள் சக்தியை இழந்தாள். எதிர்க்கும் பலம் கூட இல்லாத நிலையில் ''தூ'' என்று காரி உமிழ்ந்தாள் அவன் முகத்தின் மீது.

''ப்ளடிபிச்'' என்று அவள் வாயில் முழங்கையால் குத்துவிட்டான் மதன்.

''அம்மா'' என்று அலறினாள் சாந்தா.

பெற்ற மகளுக்கு நேர்ந்த துர்பாக்கியத்தைக் கண்ணாரக் காண சகிக்காத அந்த வயோதிகத் தாயின் இதயம் அதற்குள் வெடித்துவிட்டது.

அவளை முழுவதுமாய் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான் மதன்.

''அம்மா'' என்ற இன்னொரு அலறல்... சிம்மாத்ரி கண்களை மூடிக்கொண்டான்.

முடிந்து விட்டது.

அக்கிரமம் நடந்து முடிந்துவிட்டது.

ஒரு அப்பாவிப் பெண்ணை ராட்சசத்தனமாய் கற்பழித்துக் கொண்டிருந்த அந்த மதனைக் கண்டந்துண்டமாய் வெட்டிப் போட்டுவிட வேண்டும் போல ஆத்திரம் ஏற்பட்டது சிம்மாத்ரிக்கு.

ஆனால்... செய்வதறியாத தன்மையானது கைகளைக் கட்டிப்போட்டு விட்டதால் சக்தியை இழந்தவனாய் கண்களை மூடிக்கொண்டான்.



ஒரு பெண்ணின் வாழ்க்கை எரிந்து சாம்பலாக்கப்பட்டு விட்டது.

சாந்தாவின் தலை சாய்ந்துவிட்டது.

மதன் கர்வத்தோடு எழுந்தான்.

''நாகராஜ ப்ரொசீட்'' என்றான் பாலாஜி.

மதன் மெதுவாய் சொன்னான்.

''சாரி, அது செத்துப்போயிடுத்துன்னு நினைக்கிறேன்'' அதைக்கேட்டு இருவரும் திடுக்கிட்டு விட்டார்கள்

சரளாவைத் திரும்பிப் பார்த்தார்கள்.

அவள் சலனமில்லாமல் கட்டையாய் கிடந்தாள்.

''கிழவி கூட போயிட்டாள் போலிருக்கு'' என்றான் மதன்.

''வாங்க, போயிடுவோம்'' பாலாஜி அவசரப்படுத்தினான். அவர்கள் மளமளவென்று கதவைத் திறந்து கொண்டு வெளியே போய்விட்டார்கள்.

அவர்கள் கார் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது ராஜன் வந்தான். பாலாஜி கூட்டத்தார் வெளியே போகும் பரபரப்பில் இருந்ததால் அவனை கவனிக்கவில்லை.

யாரோ முன்பின் அறியாதவர்கள் தன் வீட்டிற்குள்ளிலிருந்து வெளியேறி பரபரப்புடன் காரில் ஏறி போவதைப் பார்த்து ராஜன் கலக்கமடைந்தான்.

தெருவோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் ஒன்று காரைப் பின்தொடர்ந்து போய்விட்டது.

சிம்மாத்ரி மெதுவாய் வந்து ராஜனின் தோளில் கையை வைத்தான். அவனுக்கு அழுகை வந்தது. நடந்ததைக் கண்ணாரக் கண்டவன் அவன்.

''இதெல்லாம் என்ன?'' என்று குழப்பத்தோடு கேட்டான் ராஜன் பயந்து பயந்து நின்றுக்கொண்டிருந்த சிம்மாத்ரியைப் பார்த்து.

சிம்மாத்ரிக்கு எப்படிச் சொல்வதென்று புரியவில்லை.

''அநியாயம் நடந்துவிட்டது ராஜா. அவங்க... அவங்க...'' சிம்மாத்ரியின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டான் ராஜன்.

''உள்ளே போகலாம் வா'' அவன் கையை அழுத்தமாய் பிடித்துக்கொண்டு உள்ளே நடத்தி அழைத்துச் சென்றான் சிம்மாத்ரி.

கைகள் கட்டப்பட்டு, வாயில் துணி அடைக்கப்பட்டு இறந்து தரையில் விழுந்து கிடந்தாள் தாய். கட்டிலில் ஆதரவில்லாமல் மல்லாந்து விழுந்து கிடந்தாள் சாந்தா. சற்றும் எதிர்பாராத ரீதியில் தன்மேல் நிகழ்ந்த இந்த முற்றுகைக்கு அவள் ஊமையாய் விசும்பிக் கொண்டிருந்தாள்.

அவள் சலனமில்லாமல் சூனியத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் அவள் அழுது கொண்டிருந்தது குரல் அதிர்ந்ததைக் கொண்டு தெரிந்தது.

சிம்மாத்ரி அரைகுறை ஆடையோடிருந்த அவள் உடம்பின் மீது போர்வையைப் போர்த்தினான்.

ராஜன் நடுங்கும் கைகளோடு அக்காவை மடியில் போட்டுக் கொண்டான்.

அவனை எப்படித் தேற்றுவது என்று தெரியாத துர்பாக்கிய நிலையில் இருந்தான் சிம்மாத்ரி.

சாந்தா ஹீனஸ்வரத்தோடு அழுதுகொண்டேயிருந்தாள்.

''தம்பீ, என் வாழ்வே எரிந்து சாம்பலாய் போயிடுத்துடா. அநியாயம் நேர்ந்துடுத்துடா தம்பீ.''

அக்காவை எவ்வாறு தேற்றுவது என்று புரியவில்லை தம்பிக்கு.



தாயின் சவத்தைப் பார்த்தான். துக்கத்தை அடக்கிக் கொள்ள முடியாதவனாய் ''அக்கா'' என்று அலறி விட்டான்.

''அம்மா, செத்துட்டாள் சாந்தா'' சொன்னான் சிம்மாத்ரி. சாந்தா வேதனையாய் சிரித்தாள்.

''அம்மா இன்னமும் உயிரோடு இருப்பாங்கன்னு எப்படி தம்பீ எதிர்பார்ப்பேன்? ஆனால் எனக்கே புரியலை, என் இதயம் ஏன் வெடித்துப் போகலைன்னு? நான் இன்னும் எப்படி உயிரோடு இருக்கேன்? நானும் செத்திருந்தால் எனக்கு எந்த நரகவேதனையும் இருந்திருக்காதே!' எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து வந்தாற் போலிருந்தது அவள் குரல்.

அவளுக்கு நிகழ்ந்த அநியாயத்திற்கு ஆறுதல் சொன்னால் குறைந்துவிடாது துக்கம்.

தேற்றினாலும் சாந்தமடையாது.

ஆறுதலால் அவள் இதயத்தில் எரியும் தீயை அணைத்து விடமுடியாது.

துக்கம் அலை அலையாய் இதயத்தின் அடிவாரத்திலிருந்து பொங்கிக் கொண்டு வெளியே வரத்தொடங்கிற்று. தலைமுடியை இரு கைகளாலும் பற்றி இழுத்துக்கொண்டு ஓவென்று அலறினாள் சாந்தா. இரு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டாள்.

''இன்னும் எதுக்கு நான் வாழணும். ப்ளீஸ், என்னைக் கொன்றுவிடுங்கள். அம்மாவோடு நானும் சாம்பலாயிடறேன். என்னால் இனி உயிரோடு வாழமுடியாது. கடவுளே நாங்கள் என்ன பாவம் செய்தோம் என்று எங்களுக்கு இந்த தண்டனையை விதித்தாய்? குற்றமில்லாத என் தம்பியை ஜெயிலுக்கு அனுப்பினாய். என் தாய் இதயமே வெடித்துச் செத்துவிட்டாள். இவ்வளவு அநியாயம் நிகழ்ந்தும் எப்படிப் பார்த்துக் கொண்டே

யிருக்கிறாய்?'' அவளிடம் ஆவேசமும் ஆத்திரமும் அதிகரித்தன. ஹிஸ்டீரியா வந்தவளைப் போல ஆடத் தொடங்கினாள்.

சரேலென்று எழுந்தாள். வெளியே ஓடப்போனாள்.

அவள் உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சிக்கிறாள் என்பதைப் புரிந்துக்கொண்டு விட்டார்கள் ராஜனும் சிம்மாத்ரியும். அவ்வளவுதான்.

சிம்மாத்ரி அவளை சட்டென்று பிடித்துக்கொண்டான்.

''அக்கா இதென்னது?''

''என்னை விடு... நான் போகிறேன், என்னால் இனி வாழமுடியாது, என்னை சாக விடுங்கள்.''

''அக்கா! செத்து எதைச் சாதிக்கப் போகிறாய்? நடந்த அநியாயத்துக்குப் பழிவாங்கிக்க நாம் முயற்சி செய்யணுமே தவிர, செத்துவிட்டால் அதற்குப் பரிகாரமாயிடாது.''

''வேண்டாம். அந்தக் கிராதகர்களை ஜெயிப்பது கஷ்டம். தம்பீ, அவங்களை நம்மால் எதுவும் செய்ய முடியாது. அவங்க எதற்கும் துணிந்தவங்க. எல்லாம் இருக்கிறவங்க. ராஜா, நீ ஓடிப்போயிடுடா! உன் அண்ணனின் வாழ்க்கை நாசமாகிவிட்டது. உன் அக்காவின் வாழ்க்கையும் அநியாயமாயிடுத்து. அம்மா ஒருவிதத்தில் கொல்லப்பட்டு விட்டாள். நீயாவது சுகமாய் இருக்கணும். இந்தக் கயவர்களின் கையில் அகப்பட்டுக்காமல் நீயாவது தொலைவிற்குப் போய்விடுடா! நீ கண்ணில்பட்டால் உன்னை நாசமாக்கி விடுவாங்கடா! போயிடு!''

ராஜன் நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களிலிருந்து பொல பொலவென்று நீர் விடாமல் கொட்டிக் கொண்டேயிருந்தது. அவன் பிஞ்சு இதயம் வெடித்துவிடும் போலிருந்தது.



''உன்னை விட்டு என்னால் எங்கேயுமே போகமுடியாது அக்கா. உன்னை என் கண்ணின் மணியைப்போல நான் காப்பாற்றுவேன். நீ இல்லாமல் என்னால் வாழமுடியாது, நீ எனக்கு வேணும்.''

''அசடே! என்னை இன்னும் எப்படிடா காப்பாற்றி விடுவாய்? அந்த தசையிலிருந்துதான் என் வாழ்க்கை திசைத் திரும்பிவிட்டதே! நான் ஒரு நடைப்பிணம் இப்பொழுது.''

சிம்மாத்ரி அவளைத் தேற்றினான்.

''நடந்ததற்கு நம்மால் இனி ஒன்றும் செய்யமுடியாது. நடக்க வேண்டியதைப் பற்றிதான் இனி யோசிக்கணும்.''

''என்ன செய்யமுடியும் என்னால் இனி?''

''போலீஸ் ரிபோர்ட் தந்து அந்தக் கயவர்களை நீதிமன்றம் தண்டிக்கும்படிச் செய்கிறேன்'' என்று ஆவேசத்துடன் எழுந்தான் தம்பி.

''பைத்தியக்காரா! பணம், செல்வாக்கு, அதிகாரம் உள்ள பெரிய மனுஷங்களின் கையில் சட்டத்தின் கழுத்து நொருக்கப்பட்டு விடும். நீதிமன்றத்தில் நீதி தேவதையின் கண்களைக் குத்திவிட்டு நீதியை சமாதியாக்கி விடக்கூடிய மேதாவிங்க அவங்க. பணக்காரங்களைக் காப்பாற்றக் கூடிய இரும்புக் கவசம் சட்டம்! நீதிக்காக ஓடிக்கொண்டிருந்தால் என் வாழ்க்கை இன்னும் அவலமாயிடுமே தவிர எந்தப் பிரயோஜனமும் இருக்காதுடா'' செய்வதறியாது அவள் நடுங்கும் உதடுகளிலிருந்து இவ்வார்த்தைகள் வெளி வந்தன.

அவள் வார்த்தைகளில் உண்மை இருந்ததை சிம்மாத்ரியும் ராஜனும் உணர்ந்தார்கள்.

மறுநாள் சரளாவின் அந்திமக் காரியங்கள் நடந்தேறின. அன்றிரவு சாந்தாவைக் காணவில்லை.

சிம்மாத்ரியும் ராஜனும் இரண்டு நாட்கள் அவளைத் தேடி அலைந்தார்கள். ஆனால் அவள் ஜாடையையே காணோம். அவள் தற்கொலை செய்து கொண்டிருப்பாள் என்ற முடிவிற்கு வந்தார்கள் சிம்மாத்ரியும் ராஜனும்.

அதற்குப் பிறகு ராஜனும் எங்கேயோ போய்விட்டான்.

## 4

பாண்டுரங்கனின் கண்கள் சிவந்திருந்தன. ரத்தத்தில் முக்கி எடுத்தாற்போல செக்கச் சிவந்த கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று வழிந்துகொண்டிருந்தது.

''அந்தச் சமயத்தில் நான் போய் குறுக்கிட்டு அவளைக் காப்பாற்றாமல் போனதற்கு என்னை மன்னித்துவிடுடா'' சிம்மாத்ரி கண்களைத் துடைத்துக்கொண்டே சொன்னான்.

''நீ அப்படிச் செய்யாமல் போனதே நல்லதாயிற்று சிம்மாத்ரி'' பாண்டுரங்கன் கம்பீரமாய் பதிலளித்தான்.

அவன் வார்த்தைகளைக் கேட்டு வியப்போடு பார்த்தான் சிம்மாத்ரி.

''ஆமாம். அந்தக் குற்றத்தை நீ செய்தது போல நிரூபிக்கப்பட்டு ஜெயிலுக்குப் போயிருப்பாய். அப்ப குறைந்தபட்சம் உண்மை கூட தெரிந்திருக்காது எனக்கு.''

அவன் உள்ளங்கை முறுக்கேறிக் கொண்டது. பிரளய கால ருத்திரனைப் போல கோபத்தால் தடுமாறினான் பாண்டுரங்கன்.

''அந்தக் கயவர்களை வேட்டையாடித் தீருவேன். பிடித்து, இம்சித்து, இம்சித்து என் பழியைத் தீர்த்துக் கொள்வேன்.''



''ஆவேசத்தால் அனர்த்தந்தான் விளையும். வெறும் கையோடு சிங்கத்தோடு போராடுவது விவேகமில்லை'' என்றான் சிம்மாத்ரி.

''நடந்த அநியாயத்துக்கு பழிவாங்க பயப்படுவது மன்னிக்க முடியாத துரோகச் செயலே ஆகும். சோர்ந்து போய் விட்டுவிடுவது மிகப் பெரிய அபராதமே ஆகும். சிம்மாத்ரீ... புழக்கத்தில் இருந்து கொண்டிருப்பதால் கள்ளநோட்டு நிஜ நோட்டாகி விடாது. அதை ஒருநாள் கண்டுப்பிடித்தே தீருவார்கள்'' பாண்டுரங்கன் எழுந்து நின்றான்.

அவன் நகரப் போனபொழுது சிம்மாத்ரி கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான்.

''எங்கே?''

''தெரியாது.''

''உன்னை எங்கேயும் போக விடமாட்டேன்.''

''ஏன்?''

''சமூகத்தில் உனக்கு இருந்து வருகிற மதிப்பைக் கண்கூடாய் பார்த்தாய். நீ என்னோடு இந்த காரேஜிலேயே இருந்துகொள். இங்கிருந்தே உன் போராட்டத்தைத் தொடரு. ராமனுக்கு லட்சுமணன் துணையாய் இருந்தாற் போல உனக்கு நான் துணையாய் நிற்பேன்'' என்றான் சிம்மாத்ரி.

பாண்டுரங்கனின் கண்கள் குளமாகிவிட்டது. அன்பால் திக்குமுக்காடினான். இருவரும் ஒரே சமயத்தில் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டார்கள்.

# 5

தன் லட்சியத்தை எந்தப் பக்கத்திலிருந்து தொடங்குவது என்று தெரியாமல் யோசனையில் ஆழ்ந்தபடியே பார்க்கிற்குள் நுழைந்தான் பாண்டுரங்கன்.

அச்சுற்றுப்புறத்தைச் சுரு சுருப்பான அவன் கண்கள் ஆராய்ந்தன.

ஜோடியாய் வந்தவர்கள் ஏகாந்தமான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளோடு வந்தவர்கள் அவர்களை விளையாட விட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெண்கள் இருந்த இடங்களில் சில இளம் ரோமியோக்கள் அவர்கள் தம்மை கவனிக்க வேண்டும், தாம் அவர்களைக் கவரவேண்டும் என்ற உத்தேசத்துடன் சுற்றிச் சுற்றி வந்துக் கொண்டிருந்தார்கள்.

ப்ரொபஷனல் குண்டர்கள் சிலர் தம் பயிற்சியைக் காட்ட ஏதாவது சான்ஸ் கிடைக்குமா என்று நான்கு பக்கங்களையும் கவனமாய் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

பாண்டுரங்கன் முதலில் தென்பட்ட புதருக்குப் பக்கத்தில் மெத்தென்றிருந்த புல்தரையில் குப்புறப்படுத்துக் கொண்டான். கழுத்திலிருந்து தொங்கிய சங்கிலியின் லாக்கெட்டை எடுத்து ஒருமுறை வெளியே எடுத்துப் பார்த்தான். லாக்கெட்டைத் திறந்து எதிரேயிருந்த புல்தரையில் வைத்தான். முகவாய்க்குக் கீழே கைகளை வைத்துக்கொண்டு, முழங்கைகளைப் புல்லில் ஊன்றிக் கொண்டு லாக்கெட்டிலிருந்த அந்த போட்டோக்களையே கண்கொட்டாமல் பார்த்தான்.

அவன் கண்களிலிருந்து ஜில்லென்று நீர் வந்தது. ஒரு வினாடி கண்களை மூடிக்கொண்டான். இரண்டு கண்ணீர்



முத்துக்கள் உருண்டு மெத்தென்றிருந்த புல்லில் தெறித்தது—

''வேதனையோடு உன் லட்சியத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு சபலபுத்தியோடு ஏன் இவ்வாறு காலங்கடத்திக் கொண்டிருக்கிறாய்? நடத்து உன் போராட்டத்தை. பழிவாங்கு. அப்பழி தீர்ந்தச் சமயத்தில் உன் கண்களிலிருந்து வழியவேண்டிய ஒவ்வொருச் சொட்டுக் கண்ணீரையும் இப்பொழுது காரணமில்லாமல் வழியவிட்டு வீணாக்காதே. உண்மையை உன் வாயிலிருந்து வெளிவராதபடி சமாதியாக்கிவிட்ட அந்தக் கயவர்களை வேட்டையாடு. அவர்கள் இதயத்தைக் கிழித்து ரத்தத்தை உன் உள்ளங்கையால் குடி. அதுவரை ஓய்வு என்பதே இருக்கக்கூடாது உனக்கு''—என்று எச்சரித்தாற் போலிருக்கவே, சில வினாடிகளில் அவன் கண்ணீர் அப்படியே நின்று போய் கன்னங்கள் உலர்ந்துவிட்டது.

அவன் கண்கள் சிவந்தன.

''மேடம்...நான்...நான்...குற்றவாளியா?'' தனக்குள் முணுமுணுத்துக் கொள்வதுபோல அவ்வார்த்தைகளை உரக்கவே சொன்னான் பாண்டுரங்கன். அவன் குரல் நடுங்கிற்று.

அவள் ஒரு தெய்வம்!

அவனுக்கெதிரே நின்று கொண்டிருந்தாற் போன்ற உணர்வு! எவ்வளவு அழகு! அதையும்விட எத்தனை நளினம்! என்னவாகி விட்டது? தன் கண் முன்னாடியே அவ்வழகு...அந்த சௌந்தரியம் நாசமாகி விட்டது.

கண்ணீர் திரையிட்ட அவன் மங்கலான கண்களுக்கு எதுவும் புலப்படவில்லை. ஓரே ஒரு உருவமே அவன் கண் முன்னால் நிழலாடிக் கொண்டிருந்தது.

# 6

கரும்பலகையில் தவளையின் ஆர்டீரியல் சிஸ்டத்தை படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிட்டுக் கொண்டே இடது கையால் முகத்தில் வந்து படிந்த கேசங்களை நாருக்காய் ஒதுக்கிக் கொண்டே திரும்பினாள் அவள்.

பாண்டுரங்கன் பக்தியோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளை அவ்வாறு பார்ப்பது அவனுக்கு மிகவும் பிடித்த செயல்.

படைப்பு தேவனின் கற்பனைக்கும் மிஞ்சிய அழகு வைரமாய் மினுமினுத்துக் கொண்டிருந்தது. அவள் கன்னங்கள் தங்கத்தைப்போல பளபளத்துக் கொண்டிருந்தன.

சிவப்பு ரோஜாவைப் போல் மென்மையாய்—பனி முத்துக்களைப் போல தூய்மையாய் — ஒளிமயமான நெருப்புச் சிலையைப்போல—ஒளிவிட்டுக் கொண்டிருந்தாள் அவள். உருவம், உடல்கட்டு, நிறம் முதலியவைகளைப் பார்த்துப்—படைப்பு தேவனான பிரம்மனே பொறாமைப் படும்படியாய் இருந்தாள் அவள்.

அவள் அந்தக் கல்லூரியில் ஜுவாலஜி லெக்சராய் வந்து சேர்ந்திருந்தாள். பெயர் சகுந்தலா. அந்தப் பெயர் அவளுக்கே பொருத்தமாயிருந்தது.

வகுப்புக்களை கட் பண்ணிவிட்டு வெளியே சுற்றி கொண்டிருக்கும் மாணவர்கள் கூட அவள் வகுப்பிற்கு நீட்டாய் தயாராகி ஆஜராகத் தொடங்கினார்கள். பெண்கள் அவள் அலங்காரங்களை நன்றாய் கவனித்துவிட்டு, அதே போல தாமும் அலங்கரித்துக் கொள்ள முயன்றார்கள். அவள் திருமணமானவள் என்று தெரிந்ததுமே பலர் மனமொடிந்து போய்விட்டார்கள். ஆனாலும் அவள் கண்ணசைப்பைப் பார்த்து அப்படியே நடந்து கொள்ள பல ஆண் லெக்சரர்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள்.



அவள் கர்வமில்லாதவள். தன் அபார அழகிற்கு அகம்பாவம் கொண்டு பிறரை ஏளனமாய் பார்க்க மாட்டாள். மாணவ மாணவிகளோடு சேர்ந்து தானும் ஒரு மாணவியாய் நடந்துக் கொள்வாள்

அதுதான் அவளிடமிருந்த சிறப்பு. 'தனித்தன்மை. மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக டெஸ்டுகளை வைத்து அதில் நல்ல மார்க்குகள் வாங்கியவர்களுக்குப் பரிசுகள் தருவாள். அவளிடமிருந்து பரிசுகளைப் பெறவேண்டுமென்று துடித்துக் கொண்டிருப்பார்கள் மாணவர்கள்.

பாண்டுரங்கன் மெரிட் ஸ்டுடண்ட். அதனால் அவன் மீது அவளுக்குத் தனி அன்பு உண்டு. அவ்வப்பொழுது அவன் அவள் வீட்டிற்குக்கூட வந்து கொண்டிருப்பான்.

சகுந்தலாவின் கணவன் ஹரிதர். பிஸினெஸ்மேன். பிஸிமேன். அவளுக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமானவன். ஒரு தனிச் சிறப்பும் சிறந்த குணநலன்களையும் கொண்டவன்.

ஒருநாள் பாண்டுரங்கன் ஏதோ உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்ததை அவள் கவனித்துவிட்டாள். அவனை நெம்பரிட்டுக் கூப்பிட்டாள்.

"154"

அவன் காதில் விழவில்லை. அவளையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"154" திரும்பவும் கூப்பிட்டாள் சகுந்தலா. அவனிடம் சலனமில்லை. பக்கத்தில் உட்கார்ந்திருந்த மாணவன் கையால் தட்டிய பிறகு திடுக்கிட்டான் பாண்டுரங்கன். வகுப்பிலிருந்த எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். பாண்டுரங்கன் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டே எழுந்து நின்றான்.

''ஆர் யூ நாட் வெல்?'' கேட்டாள் அவள். பாண்டு ரங்கன் மென்று விழுங்கினான்.

''ஐ யாம் ஒ. கே. மேடம்''

''இப்ப நான் என்ன சொன்னேன்னு சொல்லு''

''பாடம் சொன்னீங்க மேடம்''

எல்லோரும் இன்னொரு முறை கொல்லென்று சிரித்தார்கள். அவள்கூட சிரித்தாள். ''சிரிப்பு என்றால் அப்படி இருக்கவேண்டும்'' என்று தோன்றும்படியாய் சிரித்தாள்.

''ஒ. கே...ஒ. கே...நீ கேட்கவில்லை. ஏதாவது மேட்னி சினிமாவுக்குப் போவதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தாய் இல்லையா? சரி, சரி உட்காரு'' அவள் போர்டை நோக்கித் திரும்பினாள்.

ஏனோ அவன் மனம் சிதறிப் போய்க் கொண்டிருந்தது. ஒன்றிய மனதோடு அவள் சொல்லித் தந்து கொண்டிருந்ததை அவனால் கேட்க முடியவில்லை. ஏனென்று புரியவில்லை.

வகுப்பு முடிந்து விட்டதாய் மணி அடித்தது. அவள் லேபை நோக்கி நடந்தாள். பாண்டுரங்கன் பின் தொடர்ந்தான்.

''ஏன் என் பின்னாடியே வருகிறாய்?என்ன வேணும்?'' சிரித்துக்கொண்டே கேட்டாள்.

''சாரீ மேடம், வகுப்பில் நீங்கள் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்ததை நான் கவனிக்காமல் இருந்துட்டேன்'' என்றான்.

''அதற்காக இப்பத் தொடர்ந்து வருகிறாயோ?''

''சே, அதில்லை மேடம்''

''சொல்லு''

''மாலையில் நீங்கள் வீட்டில் ஒய்வாய் இருப்பீங்களா?''



''ஆஹா...பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கிட்டு வீட்டிலேயேதான் இருப்பேன்''

''நான் உங்க வீட்டுக்கு வரேன்'' என்றான்.

''அதற்கு முன்னால் பர்மிஷன் வாங்கிக்க வேண்டிய அவசியமில்லை'' சிரிப்பொன்றை உதிர்த்து விட்டுலேபை நோக்கி நடந்தாள்.

அன்னப்பட்சியைப் போல அசைந்து நடந்து போய்க் கொண்டிருந்த அவளை எத்தனையோ கண்கள் மெய் மறந்துபோய் பார்த்துக் கொண்டிருந்தன.

அவ்வாறு நடக்க அவளால்தான் முடியும். அதுதான் அவளிடமிருந்த தனிச்சிறப்பு. பாண்டுரங்கன் எப்பொழுது மாலை வரும் என்று காத்துக் கொண்டிருக்கத் தொடங்கினான்.

13037
7 3055915

சகுந்தலா மேடத்திற்குப் பூஞ்செடிகளை வளர்ப்பது ஒரு பொழுதுபோக்கு. பாண்டுரங்கனின் சிநேகிதன் தன் வீட்டிலிருந்த ஆறுவிதமான ரோஜாச் செடிகளைப் பதியன் போட்டிருந்தான். அது தனக்கு வேண்டும் என்று நண்பனிடம் முன்கூட்டியே சொல்லி விட்டான்.

வேர் வந்ததுமே கத்திரித்து எடுத்துக்கொண்டுபோய் மேடத்திடம் தரவேண்டும் என்ற பரபரப்பு அவனுக்கு.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு நண்பனின் வீட்டிற்கு போய் ஜாக்கிரதையாய் ரோஜாக் கன்றுகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். சீக்கிரமாய் போய் அச்செடிகளை அவளிடம் தந்து பாராட்டை பெறவேண்டுமென்று அவன் மனம் தவித்தது.

பதினைந்து நிமிஷத்தில் போய்ச் சேர்ந்தான்.

விலையுயர்ந்த அம் மாடி வீடு விசாலமான முன்பகுதிகளோடு கட்டப்பட்டிருந்தது. சுற்றிலும் காம்பவுண்டுச் சுவர். சுவற்றோரமாய் போகன் வில்லாக் கொடிகள் படர்ந்து சிவந்தப் பூங்கொத்துக்களோடு வரவேற்பளித்துக் கொண்டிருந்தது.

தோட்டத்தில் விதம் விதமான குரோட்டன்ஸுகள், பூஞ்செடிகள், சீரான முறையில் வளர்த்துப் பயிரிடப்பட்டிருந்தன.

காம்பவுண்டுச் சுவற்றிற்கு இருபக்கங்களிலும் வரிசையாய் அசோகமரங்கள் அணிவகுத்தாற்போல நின்றன. மாடிக்குப் போகும் வழியில் ஒரு மூலையில் மாமரம் இருந்தது. அவ்வெல்லையிலேயே பவழ மல்லிகை மரம் கூட இருந்தது.

தண்ணீர்க் குழாயைப் பற்றிக்கொண்டு ஜாதி மல்லிகைக் கொடி மாடி பால்கனி வரை படர்ந்திருந்தது. இரவு வேளையில் மலரும் மரமல்லிகை மரம் மாடிக்கு மிகச் சமீபத்தில் கிளைகளைத் தழைய விட்டுப் படர்ந்திருந்தது. தோட்டத்திற்கு பவுண்டன் இருந்தது. ராதா கிருஷ்ணரின் சிலைக்கு நடுவேயிருந்து தண்ணீர் மெல்லிய குழாய் வழியாய் கொட்டிக்கொண்டிருந்தது. அசுர சந்தியா வேளையாதலால் நீரை வெள்ளித்தாரையாய் மேலே பீய்ச்சியடித்துக்கொண்டிருந்தது.

சகுந்தலா புடவையை இழுத்து மேலே சொருகிக் கொண்டு டியூப் மூலம் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். பாண்டுரங்கன் வந்ததை அவள் கவனிக்கவில்லை. அவன் ஒரு முறை தோட்டத்தைச் சுற்று முற்றும் பார்த்தான். அரண்மனையின் உத்யான வனத்தை போலிருந்தது அத்தோட்டம். மனதிற்குள் அவளைப் பாராட்டிக்கொண்டான் பாண்டுரங்கன். செடிகளைப் பேணுவதில் அவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டிருந்தாள் அவள். எந்த விஷயத்தையுமே அதிக கவனம் செலுத்தி திறம்பட செய்வதில் வல்லவள்.



பச்சைநிறப் புடவையில் பூஞ்செடிகளுக்கிடையே நின்றுகொண்டிருந்த சகுந்தலா அவன் கண்களுக்கு ஒரு தேவதையைப் போல தோன்றினாள்.

பத்தடி தூரத்தில் நின்றபடி தன்னையே பார்த்துக் கொண்டிருந்த பாண்டுரங்கனைப் பார்த்து மென்மையாய் சிரித்தாள்.

''என்ன பாண்டு அங்கேயே நின்றுவிட்டாய். இப்படி வா'' அவன் கிட்டே போனான்.

''அதென்னது? ரோஜாப் பதியன்களா?'' கேட்டான்.

''ஆமாம். உங்களுக்காகக் கொண்டுவந்தேன்.''

''திரும்பவும் வேலை வெச்சுட்டாய்னு சொல்லு.''

''நான் உதவி செய்றேன்.''

''ஜஸ்ட் எ மினிட்'' என்றாள் அசோக மரங்களுக்கு நீர் ஊற்றிக்கொண்டே.

''மேடம்.''

''சொல்லு.''

''இந்த ரோஜாக்கள் நகரத்தில் எங்கேயுமே கிடைக்காது. ரொம்பவும் அரிதான இவைகளை என் ஃபிரெண்டின் மதர் எங்கேயிருந்தோ வாங்கி வந்தாங்க. என் ஃபிரெண்டைப் கெஞ்சிக் கூத்தாடி இந்தப் பதியன்களை உங்களுக்காகக் கொண்டு வந்திருக்கேன். ஏன் தெரியுமா?''

அவள் ஒருமுறை அவனைப் பார்த்துவிட்டு மனோகரமாய் சிரித்தாள்.

''அதையும் நீயே சொல்லிவிடு'' என்றாள். பாண்டுரங்கன் பக்தி பூர்வமாய் பார்த்தான் அவளை.

''உங்களைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். உண்மையில் அதற்காக இல்லை. நீங்கள் வளர்க்கப்போகும்

இந்தச் செடிகள் உங்கள் அழகோடு போட்டி போட்டுக் கிட்டு அழகான ரோஜாப் பூக்களாய் பூக்கணும்னு ஆசை.''

லேசான கோபத்துடன் அவனைப் பார்த்தாள்.

''ஏய்! புகழ்ந்துவிட்டால் நான் ஒன்றும் மயங்கிப்போய் விடமாட்டேன். இந்த ட்யூபை உன் பக்கமாய் திருப்பினேன் னால் நீ நன்றாய் நனைந்து போயிடுவாய், ஜாக்கிரதை.''

''நான் உங்கள் பக்தன். சீடன். நீங்க என்ன செய் தாலும் சந்தோஷமாய் தாங்கிக்கொள்கிறேன். வாழ் நாளெல்லாம் ஞாபகம் வெச்சிட்டிருப்பேன்.''

''பெரிய பேச்செல்லாம் பேசாதே. இவைகளை நடலாம் வா'' என்று ட்யூபை போட்டுவிட்டு நடந்தாள் சகுந்தலா. அவளைப் பின்தொடர்ந்தான் அவன்.

''இங்கே நட்டால் நன்றாயிருக்கும்'' என்றாள் சகுந்தலா பிற ரோஜாச் செடிகளுக்குப் பக்கத்திலிருந்த இடத்தைக் காட்டி.

சின்ன கடப்பாரையைக் கையிலெடுத்துக் கொண்டு—''நான் தோண்டுகிறேன்''— என்று குழிதோண்டத் தொடங்கினான்.

அவனுக்குப் பக்கத்திலேயே தரையில் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு மண்ணைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

''உங்கள் கை மண்ணாகிவிடும். நானே செய்றேனே.''

சரியாய் அந்தச் சமயத்தில்தான் ஹரிதர் உள்ளே யிருந்து வெளியே வந்தான். அவன் கிளப்புக்குப் போகப் புறப்பட்டவன் அவளிடம் சொல்லிக்கொண்டு போவதற் காக வந்தான். பாண்டுரங்கனையும் மனைவியையும் பார்த்துச் சிரித்துவிட்டு—

''என்ன சக்கு, சீடனைக் கொண்டு வேலை வாங்கிட் டிருக்காயா?'' என்றான்.



''ஆமாங்க. இப்பல்லாம் இந்தச் சீடன் ரொம்பவும் புத்தனைப் போல ஆயிட்டிருக்கான். எப்பப் பார்த்தாலும் ஒரு பெரிய எழுத்தாளனைப் போல யோசனையில் மூழ்கிப் போய் கனவுலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான். ஒருக்கால் காதலில் விழுந்திருப்பானோன்னு தோணு கிறது.''

''சே, அதெல்லாம் ஒன்றுமில்லை சார்'' வெட்க மடைந்தவனாய் பதிலளித்தான் அவன்.

''இதில் தப்பென்னப்பா இருக்கு? அந்தந்த வயசுக்கு அந்தந்த ஆசை! அப்படி இல்லையென்றால் மொதல்ல நன்றாய் படி.''

''மேடத்தைப் போலவே நீங்களும் படி படிங்கிறீங்க! சார். படிச்சு முடிச்சுட்டு தெருவில் சுற்றி அலைஞ்சுட்டிருக் கணுமே தவிர எங்களுக்கு யார் உத்யோகம் தரப்போறாங்க சார்?''

''டோன்ட் வர்ரீ பாய். எல்லார் விஷயத்தையும் விட்டுத் தள்ளு. நான் உனக்கு உத்யோகம் தரேன் போதுமா?'' என்றான் ஹரிதர்.

''தாங்க்யூ சார்.''

''ஓ.கே. கேரீ ஆன். சக்கு, நான் கிளப்புக்குப் போறேன். ஐ மே கம் லேட்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான் ஹரிதர்.

''சார் எனக்கு உத்யோகம் தரேன்னார் மேடம்.''

''ரொம்பத் தந்துடுவார்! எல்லாம் அவர் இஷ்டந் தானா? உன்னை இண்டர்வ்யூவில் செலெக்ட் செய்ய வேண்டியது நான்! நான் வைக்கப்போற பரீட்சையில் நீ பாசாக வேண்டாமா?''

''கண்டிப்பாய் பாசாயிடுவேன் மேடம்.''

''அதென்ன அவ்வளவு இயாரண்டி?''

"உங்கள் மேல் எனக்குள்ள அன்பும் நாட்டமும் என்னை எந்த வேலை வேண்டுமானாலும் செய்ய வைத்து விடும்."

ரோஜா பதியன்களைக் குழிக்குள் வைத்து மண்ணை சமப்படுத்திக் கொண்டிருந்தாள் சகுந்தலா.

தண்ணீர் விடுவதற்கு வசதியாய் பாத்தியை சரி செய்து கொண்டிருந்தான் அவன்.

"என்னதான் செய்யப்போகிறாய், அதையும் பார்த்துடலாம்" அவள் குனிந்து நின்றபடி...தண்ணீரைக் கையால் இறைத்து ஊற்றிக் கொண்டிருக்கையில் பார்த்தான்—

லோ நெக் ஜாக்கெட்டிற்குள்ளிருந்து அவள் மார்பகங்கள் தென்பட்டன. கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியிலிருந்து லாக்கெட் கீழே தொங்கிக் கொண்டிருந்தது. ஜாக்கெட்டிற்கும் புடவைக்கும் இடையேயிருந்த வயிறு இரண்டு படிப்பாகி பாற்கடலின் அலைகளைப் போல தோன்றின. வெள்ளைத் தாமரைகளைப் போல அழகாயிருந்த அவள் பாதங்களை உதட்டால் ஒற்றியெடுக்க வேண்டும் போலிருந்தது.

கண்கொட்டாமல் சில வினாடிகள் அப்படியே பார்த்துக் கொண்டேயிருந்தான் அவன்.

அதற்குள் தன் தப்பை உணர்ந்து கொண்டு வெட்கப்பட்டான்.

தன் திருட்டுப் பார்வையை அவள் தெரிந்துகொண்டு விட்டால் பிறகு தன் நிலைமை எவ்வளவு மோசமாகி விடும் என்று தெரியும் அவனுக்கு.

அவன் மார்பு கொஞ்ச நேரம் லயம் தப்பி, பிறகு வேகமாய் படபடக்கத் தொடங்கிற்று.

"தோட்ட வேலை முடிந்துடுத்தோனோ?" கேட்டான்.



"முடிவு என்று ஒன்றில்லை. செய்தால் வேலை இருந்துட்டேதான் இருக்கும்."

"இன்றைக்குப் போதும் மேடம். நீங்க ரொம்ப களைத்துப் போயிருக்கீங்க."

"இந்த மாதிரிச் சொல்றவங்களை என்னவென்று சொல்லுவாங்க தெரியுமா?"

"என்னவென்று?"

"வேலைத் திருடன்."

"என்னை என்ன வேணும்னாலும் சொல்லுங்க' சகித்துக் கொள்கிறேன். நீங்க மட்டும் களைத்துப்போறதை என்னால் தாங்கிக்க முடியாது. எங்கே, உங்க கையைக் காட்டுங்க" அவள் உள்ளங்கையைக் காட்டினாள்.

அவள் உள்ளங்கை சிவந்திருந்தன.

"பார்த்தீங்களா? எப்படி கன்றிப்போயிருக்குன்னு! நல்லவேளை கொப்புளம் வரவில்லை" வருத்தத்தோடு சொன்னான் அவன்.

"உன் போக்கு நன்றாய்தான் இருக்கு மகானுபாவனே என்னை எந்த வேலையும் செய்யக்கூடாதுங்கிறாயோ?"

"ஏதாவது தோட்டக்காரனை வெச்சுக்கிட்டுச் செய்யச் சொல்லக்கூடாதா?"

"அதில் திருப்தி ஏற்படாது. நான் நட்ட செடிகள் நன்றாய் வளர்ந்து பூக்கள் பூக்கும்போது ஏற்படும் சந்தோஷம் தோட்டக்காரன் மூலமாய் செய்யச் செய்தால் கிடைக்காது. அதோடுகூட தோட்ட வேலை எனக்குப் பொழுதுபோக்கு" சொன்னாள் அவள்.

அவனுக்கு எப்படிச் சொல்வதென்று புரியவில்லை. ஆனால் அவள் அந்த முரட்டுவேலைகளைச் செய்தால் அவள் அழகிய கைகள் கன்றிப்போய் கொப்புளங்கள்

ஏற்பட்டுவிடும் என்று மட்டும் அவனால் நினைக்காமலிருக்க முடியவில்லை.

''வா, உள்ளே போவோம்'' உள்ளே நடந்தாள் அவள்.

சகுந்தலாவைப் பின்தொடர்ந்து உள்ளே அடியெடுத்து வைத்த பாண்டுரங்கன் கீழே ஹாலிலேயே உட்காரப் போனான்.

''இங்கே தனியாய் எதுக்கு? மேலே வா'' என்று மாடிப் படியை நோக்கி நடந்தாள் சகுந்தலா.

அந்த வீடு அவனுக்கு ஒன்றும் புதிதில்லை.

''பத்மினி எங்கே?'' கேட்டான்.

''பக்கத்து வீட்டிற்குப் போயிருக்கிறாள்.''

பத்மினி அவர்களுடைய பெண்ணின் பெயர்.

பாண்டுரங்கனை மாடியிலிருந்த தன் அறைக்கு அழைத்துச் சென்றாள் சகுந்தலா.

''உட்காரு. நான் குளித்துவிட்டு வரேன்'' என்று அட்டாச்டு பாத்ரூமை நோக்கி நடந்தாள் சகுந்தலா. குளியலறையின் கதவு மூடிக்கொண்டது.

பாண்டுரங்கனுக்கு அக்கதவிற்கப்பால் மேடம் குளிப்பதற்கு முன்னால் தன் உடம்பிலிருந்து ஒவ்வொரு துணியாய் அவிழ்க்கும் காட்சி கண்முன்னால் நிழலாடிக் கொண்டிருந்தது.

ஒருமுறை உள்ளே எட்டிப் பார்க்கவேண்டும் போலிருந்தது. அது காமத்தோடு அல்ல.

கீழ்த்தரமான யோசனையோ இல்லவே இல்லை. தான் வழிப்பட்டு வந்த அந்த அழகைக் கண்ணாரக் காண வேண்டும் என்ற தவிப்பு. பிரம்மன் அவள் உடம்பை எவ்வளவு அழகாய் படைத்திருந்தான் என்பதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவேசம் அவனைத் திணறடித்துக் கொண்டிருந்தது.



ஆனால் அது தப்பு என்று அவனுக்குத் தெரியும்.

அந்த யோசனையே மிக ஆபத்தானது என்று தெரிந்து தான் இருந்தது. ஆனால் ஆசையை அடக்கிக்கொள்ள முடியவில்லை அவனால்.

குளியலறையில் தண்ணீர் ஷவரிலிருந்து விழுந்து கொண்டிருந்த சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அவனுடைய வயது சின்ன வயது. பக்குவப்படாத மூளை அவனுடையது. அவள் அழகைக் கண்டால் அவனுக்குக் கண்மூடித்தனமான பக்தி.

மனோகரமான அவ்வழகை ஒரே ஒரு தடவையாவது பார்த்துத் தீரவேண்டும் என்பது அவன் ஆசை. யோசனைகள் மனதைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கவே அந்த நேரத்தில் அது தப்பாய் தோன்றவில்லை. இயற்கையின் அழகைப் பார்த்து மகிழ்வதில்தான் மனிதனின் வாழ்க்கை ரகசியமே உள்ளது... தாறுமாறாய் யோசிக்கத் தொடங்கினான் அவன். அவன் முதுகுத்தண்டு சிலிர்க்கத் தொடங்கிற்று. அது பயமா?

தடுமாறிக்கொண்டிருந்த கால்களோடு அறை வாசல் வரை நடந்து வெளியே எட்டிப் பார்த்தான். யாருமே தென்படவில்லை.

பத்மினி இன்னும் வரவில்லை. சமையல்காரன் அப்பு சாதாரணமாய் மாடிக்கு வரமாட்டான். முடிந்துவிடும். இன்னும் தாமதித்தால் அவகாசம் கைநழுவிப் போய்விடும்.

மெதுவாய் குளியலறையை நெருங்கினான்.

கதவின் சாவி துவாரத்தின் வழியாய் பார்த்தான். சரியாய் தென்படவில்லை. அவள் கால்கள் மட்டுமே தென்பட்டன.

அதற்குள் ஏதோ மின்னல் மின்னிற்று அறையில். திடுக்கிட்டான் அவன். கலவரத்துடன் திரும்பிப் பார்த்தான்

யாரும் இல்லை. அது தன் பிரம்மை என்றெண்ணிக் கொண்டான்.

ஆனால் அதற்குள் விநோதமான வலைக்குள் சிக்கிக் கொண்டுவிட்டதாய் அவன் அறிந்திருக்கவில்லை. குளிய லறையிலிருந்து வளையல்களின் சப்தம் கேட்டுக்கொண்டி ருந்தது. வென்ட்டிலேட்டர் வழியாய் பார்க்கவேண்டும். ஆனால் அது அந்த அறையில் இல்லை. ஒருக்கால் குளியலறைக்கு அந்தப் பக்கத்தில் இருந்திருக்க வேண்டும். அவனுக்கு நிராசை ஏற்பட்டது. எதையோ இழந்து விட்டாற்போன்ற உணர்ச்சி அவனை வாட்டத் தொடங் கிற்று. வந்து சோபாவில் சரிந்தான்.

அடுத்த ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு கதவு திறந்து கொண்டது. சகுந்தலா வெளியே வந்தாள். டிரெஸ்ஸிங் டேபிளுக்கு முன்னால் உட்கார்ந்து ஜடை பின்னிக் கொண்டே...

''இப்பச் சொல்லுப்பா, என்ன விஷயம்?'' என்றாள். பாண்டுரங்கன் சோர்ந்த மனதிற்கு பலத்தைக் கூட்டிக் கொண்டிருந்தான்.

''காலையில் வகுப்பில் பாடத்தை கவனிக்க முடிய லைன்னு சொன்னேன் இல்லையா மேடம்? நோட்ஸ் வேண்டும்.

''அதுசரி உனக்கு என்னவாயிடுத்துப்பா? இப்பல்லாம் நீ சரியாகவே இல்லையே.''

அவள் சொன்னது நிஜமே. என்னவென்று பதில் சொல்லுவான்.

ஜடை பின்னுவது முடிந்தது. முகத்திற்கு லிக்விட் மேக்கப் லோஷனைத் தடவிக்கொண்டு பஃப் மூலமாய் பௌடரை ஒற்றிக்கொண்டாள்.

ஃபேன் காற்றிற்கு அவள் கட்டிக்கொண்டிருந்த ஷிஃபான் புடவை படபடத்துக் கொண்டிருந்தது.



''இனிமேல் நான் கவனமாய் இருப்பேன் மேடம்'' உதடுகளுக்கு லிப்ஸ்டிக் தடவிக்கொண்டே சிரித்தாள்.

''அதையும் பார்த்துடறேன்'' புடவைக்கு மாட்சிங்காய் பிளாஸ்டிக் பொட்டை வைத்துக் கொண்டாள்.

ஸ்லீவ்லெஸ் சட்டைக்குக் கீழே உருண்டு திரண்டிருந்த தோள்களைச் சுற்றித் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு அவனுக்கெதிரே வந்து உட்கார்ந்துக் கொண்டாள்.

''நாளைக்கு டெஸ்டில் உனக்கு நல்ல மார்க்கு வந்தால் நல்ல பரிசு தரேன்'' என்றாள்.

தன் மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வத்தை உண் டாக்குவதற்காக அவள் சுயமாய் பரிசுகள் தந்து வந்தாள். அந்த விஷயம் அவன் அறியாததல்ல.

''அப்படீன்னால் நான் கேட்டதைத் தரணும்.''

''ஷ்யூர்... கேளு'' அவன் ஒரு வினாடி தயங்கினான்.

''உங்கள் கழுத்தில் இருக்கிற அந்தச் சங்கிலியில் தொங்கிட்டிருக்கிற டாலர் வேணும். அதில் உங்கள் போட்டோவை வைத்துத் தரணும்.''

''ரொம்பப் பெரிய ஆசைதான்.''

''தரேன்னீங்க.''

''ஷ்யூர். அப்ப மார்க்கு வாங்கு.''

''நீங்களே பார்த்துட்டிருங்க.''

''உம், டேக் நோட்ஸ்'' என்றாள் வெள்ளைக் காகிதங்களை அவனிடம் நீட்டி.

அவன் காகிதங்களை டீபாயின் மேல் வைத்துக் கொண்டு அவள் சொன்னதை கவனமாய் கேட்டு எழுதிக் கொள்ளத் தொடங்கினான்.

ஒரு கையைக் கன்னத்தில் ஊன்றிக்கொண்டு அவள் மென்மையாய் சொல்லிக் கொண்டிருந்த டிக்டேஷனை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து அவளைப் பார்த்தவன் அப்படியே நின்றுவிட்டான்.

''என்ன?''

''நீங்க எவ்வளவு அழகாய் இருக்கீங்க தெரியுமா?'' அவன் வார்த்தைகள் அவளுக்குக் கோபத்தை உண்டாக்கவில்லை. இனிமையாய் சிரித்தாள்.

''அழகுக்கு எல்லை ஏதுப்பா?''

''நோ! உங்கள் அழகைப் பார்த்தால் அந்த படைப்புத் தேவனுக்கே புத்தி பேதலித்துப் போயிருக்க வேண்டும்.'

''ஸ்டாப் இட். உனக்குப் பரிசு வேண்டுமா, வேண்டாமா?'' லேசான கோபத்துடன் கேட்டாள்.

''அம்மா'' அழைப்பைக் கேட்டு இருவரும் கதவுப் பக்கமாய் பார்த்தார்கள். சமையல்காரன் அப்பு கதவிற் கருகில் வந்து நின்றுகொண்டிருந்தான்.

''பாலாஜி சார் வந்திருக்காரும்மா.''

''உட்காரச் சொல்லு'' என்றாள்.

''வந்து ரொம்ப நேரமாயிடுத்தும்மா.''

''ஒருவினாடி யோசித்துவிட்டு— ''வரேன்னு சொல்லு'' என்று எழுந்திருந்தாள் சகுந்தலா.

''நான் நாளைக்கு வரேன்'' என்றான் பாண்டுரங்கன் எழுந்திருந்து.

அவளோடு சேர்ந்து படியிறங்கி வந்தான் பாண்டுரங்கன்.

பாலாஜி சோபாவில் உட்கார்ந்திருந்தான்.

''சாரீ, வந்தது தெரியாது. என் ஸ்டூடென்டிற்கு நோட்ஸ் தந்துட்டிருந்தேன்'' என்றாள். பாலாஜி பாண்டு



ரங்களை ஏளனமாய் பார்த்துவிட்டு, ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்துத் தந்து—

''ட்ரிபுள் ஃபைவ் சிகரெட் பெட்டி வாங்கிட்டு வா''— என்றான்.

பாண்டுரங்கன் கோபமாய் பார்த்தான்.

அவன் வேண்டுமென்றே தன்னை அவமானப்படுத்துவதற்காகத்தான் அவ்வாறு செய்வதாய் தோன்றிற்று.

''நான் உங்கள் வேலைக்காரன் இல்லை'' என்றான் கோபத்தோடு.

பாலாஜி திரும்பிச் சிரித்துவிட்டு ''அந்த விஷயம் எனக்குத் தெரியும்'' என்று கையிலிருந்த கேமிராவை உல்லாசமாய் பிடித்துக்கொண்டே—

''உன் வாழ்க்கையே இதில் இருக்குடா! அயோக்கியப் பயலே!'' என்பது போலிருந்தது அச்சிரிப்பு.

பாண்டுரங்கனுக்குக் காலடியில் பூமி நழுவினாற் போலிருந்தது. தான் குளியலறைக்கருகில்...தட்டாமாலைச் சுற்றிக் கொண்டிருந்தபொழுது பளிச்சிட்ட மின்னல் வெளிச்சம் நினைவிற்கு வந்தது. ''சிகரெட்டை நான் அப்புவை அனுப்பி வாங்கிட்டு வரச்சொல்றேன்'' என்று சொல்லிக் கொண்டிருர்தாள் சகுந்தலா.

பாண்டுரங்கன் வாசலைத் தாண்டிக் கொண்டிருக்கையில் பாலாஜி சொன்னது காதில் விழுந்தது—

''இப்படிப்பட்டவங்களை வீட்டிற்குள் வரவிடாதீங்க மேடம்! பைத்தியம்பிடித்த நாய் எப்ப யாரைக் கடிக்கும்னு சொல்ல முடியாது.''

பாண்டுரங்கனுக்குத் திரும்பி ஓடிவந்து பாலாஜியின் கழுத்தைப் பிடித்துத் திருகிக் கொன்று போட்டுவிட வேண்டும் போல ஆத்திரம் வந்தது.

பாலாஜியை எதிர்த்தால் தன் வீட்டிற்கு வந்தவரை அவமானப்படுத்தி விட்டதாய் மேடம் எண்ணுவாள் என்றெண்ணி பாண்டுரங்கன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான். அந்தர்லீலையாய் அவன் மனதிற்குள் ஒரு பயம்கூட ஏற்பட்டிருந்தது.

பாலாஜி கண்டிப்பாய் தன்னைப்பற்றி மேடத்திடம் இன்னும் ஏதாவது சொல்லுவான். மேடத்திற்குத் தன் மேலுள்ள நல்ல அபிப்பிராயம் போய்விடும்.

அவ்வாறு நடப்பதை அவன் விரும்பவில்லை. அவள் தன்னை இளப்பமாய் கருதத் தொடங்கினால் அவனால் பொறுத்துக்கொள்ள முடியாது. அந்த யோசனையையே அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

பாலாஜி கேலியாய் சிரித்துக்கொண்டே தன் இதயத்தைக் கையால் பிடித்து நசுக்கினாற் போலிருந்தது பாண்டுரங்கனுக்கு.

அவனுக்கு அழுகை வந்தது.

'ஏன் இவ்வாறு நடந்தது?' தன்மீதே தனக்கு அருவருப்பு ஏற்பட்டது. அவள் பார்க்காமல் போனாலும், அவளுக்குத் தெரியாவிட்டாலும், அவள் குளித்துக்கொண் டிருக்கும்போது பார்க்க வேண்டுமென்று தான் செய்த முயற்சி எவ்வளவு குற்றம் என்றும் எவ்வளவு பாவம் என்றும் இப்பொழுதுதான் புரியத் தொடங்கிற்று அவனுக்கு. மனம் அவனைச் சித்திரவதை செய்துகொண் டிருந்தது. அது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்திலோ—

பார்க்கக்கூடாத ஆள் தன்னை அச்சூழ்நிலையில் பார்த்துவிட்டான். பார்த்ததோடு கூட அதைக் கேமிராவில் படமும் பிடித்துக்கொண்டு விட்டான்.

ஒருவிதமான பயம்! வேதனை!

வாய்விட்டு அடுத்தவரிடம் சொல்லிக்கொள்ள முடியாத துரதிர்ஷ்டமான நிலைமை!



பரிசுத்தமான அவன் மனதைப் புரிந்துகொள்ள மாட்டார்கள். அவள் மேலிருந்த பக்தியாலும் அவள் அழகைக் கண்ணாரக் காணவேண்டும் என்ற தவிப்பாலும் இவ்வாறு செய்ததாய் சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எள்ளி நகையாடுவார்கள்... கால்கடுக்க நடந்து கொண்டேயிருந்தான். பஸ்ஸில் ஏறவேண்டும் என்ற யோசனைக்கூட ஏற்படவில்லை. பீச் வரைக்கும் நடந்தான்.

இரவு எட்டு மணியைத் தாண்டிவிட்டது.

இருட்டில் கடல்நீர் கருப்பாய் தெரிந்தது. 'கண்களை மூடிக்கொண்டு அதில் குதித்துவிட்டால்...' மனதிற்குள் எண்ணிக்கொண்டான்.

"தப்புச் செய்வது மனிதனுக்கு இயற்கைதான். செய்த தப்பை நினைத்து பச்சாதாபப்படுவதுதான் அதற்கு நல்ல பரிகாரம்"— என்ற தமிழ் லெக்சரரின் வார்த்தைகள் நினைவிற்கு வந்தன.

கொஞ்ச நேரத்திற்கு முன்னால் செய்த தவறு எவ்வளவு அனர்த்தங்களுக்கு வழிவகுக்கப் போகிறது என்று அந்த நேரத்தில் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவன் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்து கன்னங்களில் உருண்டோடிற்று.

அன்றிரவு அவனுக்கு உறக்கம் இல்லை.

## 8

வகுப்பிற்குப் போய் மேடத்திற்கெதிரே உட்காருவதற்கு மனசாட்சி இடங்கொடுக்கவில்லை. பாடங்கள் ஆறிப்போய்க் கொண்டிருக்கிறதே என்ற பயம் இல்லை. தொலைவில் போய்க்கொண்டிருக் வதனால் அவனுக்கு

கிறோமே என்ற வருத்தம் அவனை ஆட்டிவைத்துக் கொண்டிருந்தது.

பாண்டுரங்கன் கேன்டீனை நோக்கிப் போய்க்கொண்டிருந்ததை சகுந்தலா பார்த்தாள். ஒருக்கால் காபி குடிக்கத்தான் போகிறானோ என்றெண்ணினாள்.

பத்து நிமிஷங்கள் ஆகியும் அவன் வகுப்பிற்கு வராததால் நேற்று பாலாஜி சொன்ன வார்த்தைகள் அவனை வருத்தப்படுத்தியிருக்கலாம் என்று ஊகித்துக்கொண்டாள் அவள்.

பாலாஜி பேசும் வார்த்தைகளை சில சமயம் அவளே வெறுப்பாள். அந்த நால்வரில் அவள் கணவன் ஒருத்தன் தான் சாது! பிஸினெஸ் சம்பந்தப்பட்ட அவர்கள் வார்த்தைகளைக் கேட்டு சகித்துக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி அவளுக்கு அவர்கள் மீது எந்த மதிப்பும் இல்லை. பாண்டுரங்கனின் மனம் எத்தனை நுட்பமானது என்பதை அறிவாள் அவள்! அவனைப்பற்றி பாலாஜி அடித்த காமெண்ட் அவளுக்கு மிக வருத்தத்தைத் தந்தது!

''பாண்டுரங்கன் கேன்டீனில் இருக்கான். அவனைக் கூட்டிட்டு வா'' என்று இன்னொரு மாணவனை அனுப்பினாள்.

''கமின்'' என்றாள் சகுந்தலா. அவன் சீட்டில் வந்து உட்கார்ந்துக் கொண்டதுமே அவள் சொன்னாள்.

''கிளாசைக் கட் செய்துட்டு கேன்டீனில் போய் உட்கார்ந்திருந்தால் முதல் மார்க்கு வரவும் வராது, நீ கேட்ட பரிசும் வராது.''

''சாரீ மேடம்'' என்றான் தலைகுனிந்துக் கொண்டே. அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கத் துணிச்சல் இல்லை அவனுக்கு. வகுப்பு முடிந்தது!

அவனைத் தன்னோடு வரச்சொல்லி கூப்பிட்டாள் சகுந்தலா! ''நேற்று அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு கோபம் வந்துடுத்தா?'' கேட்டாள்.



''அவர் பெரிய மனுஷராயிருக்கலாம். ஆனால் எனக்கு அப்படி நடந்துக்கறதெல்லாம் பிடிக்கவில்லை. நீங்க எதுக்கு அப்படிப்பட்டவரை எண்டர்டைன் செய்றீங்க?''

''என் கணவரின் பிஸினெஸ் பார்ட்னர் அல்லவா?''

''சார் இருக்கறப்போ வரணும். பேசணும்! இல்லாத போது எதுக்கு வரணும்? வீட்டுக்கு வரவேண்டாம்னு சொல்லிடுங்க'' என்றான் கோபமாய்.

சகுந்தலா அவன் அப்பாவித்தனத்திற்குச் சிரித்தாள்.

''அப்படிச் சொல்லமுடியாது பாண்டு! பிஸினெஸ் பார்ட்னருங்களோடு மனஸ்தாபம் ஏற்பட்டுட்டால் ரொம்ப ஆபத்து! லட்சக்கணக்கான ரூபாய்களோடு விவகாரம் இல்லையா? நடந்ததை நினைத்து நான்கூட ரொம்ப வருத்தப்பட்டேன், ஃபர்கெட் இட்.''

''சரி மேடம்'' என்றான் பாண்டுரங்கன் மகிழ்ச்சியோடு. அவளுக்குத் தன்மேல் கோபம் இல்லை.

பாலாஜி தன்னைப்பற்றிச் சொல்லாமல் போனதற்கு மகிழ்ந்தான்! ஆனால் அவனிடமிருந்த தெகடிவ்வைக் கொண்டு கதையை எப்படி வளர்த்தப் போகிறான் என்று அந்த நேரத்தில் அவன் அறிந்திருக்கவில்லை.

சகுந்தலா லாபிற்குள் போய்விட்டாள்!

''டேய் பாண்டு'' வகுப்புத் தோழன் சிதம்பரம் கேட்டான்.

''என்ன?''

''நீ மேடத்தை என்ன ப்ரெசென்டேஷன் கேட்டாய்?''

''ஏதோ கேட்டேன்! உனக்கெதுக்கு?''.

''முட்டாள்தனமாய் எதையாவது போய் கேட்பது புத்திசாலித்தனமான செய்கையில்லை. நானாயிருந்தால் ஒரு முத்தம் கேட்டிருப்பேன்'' சிதம்பரத்தின் கன்னங்கள் அதிர்ந்து போகும்படியாய் விளாசிவிட்டான் பாண்டுரங்கன்

சிதம்பரம் ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள் வேகமாய் அங்கிருந்து போய்விட்டான் பாண்டுரங்கன்.

## 9

கேன்டீனில் சிநேகிதர்களோடு சேர்ந்து காபி குடித்துக் கொண்டிருந்தான் பாண்டுரங்கன்.

அவனுக்கெதிரே தினகர் தன் கும்பலோடு உட்கார்ந்திருந்தான்! தினகர் கல்லூரியில் ரௌடியாய் பெயர் பெற்றிருந்த மாணவன். அவனைக் கண்டாலே பெண்களுக்கு நடுக்கம். தனியாய் அகப்பட்டுக்கொண்டு விட்டால் பெண்களைத் திருட்டுத்தனமாய் கட்டிப்பிடிப்பதும், முத்தமிடுவதும் அவன் பழக்க வழக்கங்கள்!

அவன் கிரிமினல் லாயர் கிருஷ்ணமூர்த்தியின் மகன். இந்த மகன் செய்துவந்த தப்புத் தண்டாக்களையெல்லாம் அவர் தன் செல்வாக்கால் சடுகட்டி வந்துக்கொண்டிருந்தார்.

தினகர் உல்லாசமாய் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே அப்பொழுதுதான் கேன்டீனிலிருந்த பெண்கள் பகுதியிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்த சகுந்தலாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அடேய், கிளி போறதுடா" என்றான் கும்பலிலிருந்த ஒருத்தன்.

"அந்தக் கிளியின் கூந்தலிலிருக்கிற ரோஜாப் பூவைக் கொண்டுவந்து கொடுக்கிறவனுக்கு நூறு ரூபாய் தருவேன்" என்றான் தினகர்.

"அம்மோவ்! அது எங்களால் ஆகாது. அவள் லெக்சரர். அதோடு அவள் யாருன்னும் எங்களுக்கெல்லாம் தெரியும்" என்றான் அவன்.



"அப்படீன்னால் நானே கொண்டு வரேன், பார்த்துட்டிருங்க" எழுந்தான் தினகர்.

"குருவே அவசரப்படாதீர்! இது நல்ல வேலையில்லைன்னு தோணுது" எச்சரித்தான் ஒரு சீடன்.

ஆனால் அவனை ஏளனமாய் பார்த்துவிட்டு மளமளவென்று நடந்து வெளியே போனான் தினகர். பாண்டுரங்கன் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டேதான் இருந்தான். சரேலென்று எழுந்தான் அவன். அதற்குள் தினகர் மேடத்தை நெருங்கிவிட்டான்.

"மேடம்" என்று கூப்பிட்டான்.

அவள் நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் அவளை ஒருமாதிரியாய் பார்த்தான். கையிலிருந்த சிகரெட்டின் சாம்பலைக் கீழே தட்டிவிட்டு—

"உங்களோடு சின்ன வேலை இருக்கு."

"என்ன?" கோபமாய் கேட்டாள் சிகரெட் புகை முகத்திற்கருகில் வரவே கையால் தடுத்துக்கொண்டே.

"அந்த ரோஜாப்பூ எனக்கு வேணும்" என்று சட்டென்று அவள் கூந்தலிலிருந்த பூவை இழுத்து வாசனை பார்த்துவிட்டு—

"அபாரம்" என்றான்.

"ஸ்டுபிட்" கோபமாய் சொன்னாள் சகுந்தலா.

தினகர் ஏளனமாய் சிரித்துக்கொண்டே— "எனக்குப் பிடிச்ச காரியத்தைச் செய்றத்துக்கு நான் பயப்படமாட்டேன். ஆஃப்டர் ஆல் எடுத்துக்குங்க பூவை மட்டும்."

பாண்டுரங்கன் தினகரின் கையைப் பிடித்துக்கொண்டான்.

"ஸே சாரீ டு மேடம்" என்றான்.

''யாரோட பேசுகிறாய்னு தெரியுதா?'' நெருப்பை உமிழும் கண்களோடு கேட்டான் தினகர்.

''ஸே சாரீ ஃபஸ்ட்.''

தினகர் அவனை ஒரு சுண்டெலியைப் பார்ப்பது போல பார்த்துவிட்டு பெரியதாய் சிரித்தான். தினகரோடு கைகலப்பது ஆபத்து என்று அறிவான் பாண்டுரங்கன். ஆனால் அத்தனைப் பேருக்கு நடுவில் மேடத்திற்கு நேர்ந்த அவமானத்தை அவனால் சகித்துக் கொண்டிருக்க முடிய வில்லை.

''ஒரு போக்கிரியோடுன்னு தெரியும்'' என்றான்.

''பாண்டு, லீவிட் கமான்'' என்றாள் சகுந்தலா கணீரென்று.

ஆனால் அதற்குள் நடக்கக்கூடாத அனர்த்தம் நடந்தே விட்டது.

தினகர் உள்ளங்கையை மடக்கிக்கொண்டு பாண்டு ரங்கனின் நாடை எலும்புகள் நொருங்கிப் போகும்படியாய் ஓங்கி ஒரு குத்துவிட்டான்.

அந்த உதைக்கு பாண்டுரங்கன் மூன்று பல்டிகள் அடித்துக் கீழே விழுந்தான். கண்கள் பஞ்சடைந்தன.

திரும்பி எழுந்திருக்கப் போன பாண்டுரங்கன் பார்த்தான், உதட்டிலிருந்து ரத்தம் வழிந்துகொண் டிருந்ததை. தினகர் காலால் பின்னுக்குத் தள்ளினான் பாண்டுரங்கனை. அவன் சிநேகிதர்கள் ஏளனமாய் சிரித்துக் கொண்டிருந்தார்கள். தினகரின் கையில் பாண்டுரங்கன் குனோஸ் என்று பேசிக்கொண்டார்கள் அவர்கள். தடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை.

''டேய், முட்டாளே, என்னோடு கைகலக்கறது சிங்கத்தோடு கைகலக்கறதுன்னு அர்த்தண்டா, தெரிஞ் சுக்கோ'' என்றான் தினகர்.



மாணவர்கள் கும்பலாய் கூடிவிட்டார்கள்.

பாண்டுரங்கன் மெதுவாய் எழுந்திருந்தான்.

தினகரோடு பாண்டுரங்கன் வீணாய் சச்சரவை வரவழைத்துக் கொண்டு விட்டான் என்றெண்ணிக் கொண் டார்கள் எல்லோரும். தினகரைப் பற்றி எல்லோருக்குமே தெரியும்.

பாண்டுரங்கன் உடம்பிலிருந்த பலத்தையெல்லாம் கைகளிலும் கால்களிலும் வரவழைத்துக் கொண்டான். ''யா, ஹூ, ஹா''— என்று காற்றில் எம்பினான்.

என்ன நடந்து கொண்டிருந்தது என்று தினகர் ஊகித்து உணர்ந்து கொள்வதற்குள்ளாகவே பாண்டுரங்க னின் கை கத்தியைப் போல அவன் முகத்தின்மேல் பட்டது. அதே நேரத்தில் அவன் பாதம் தொடை எலும்பின் மீதும் பட்டது. தினகர் கீழே சரிந்துவிட்டான். தலை கனத்தது. மூக்கின் முகுளம் உடைந்து விட்டது. தொடை எலும்பு உடைந்து விட்டாற்போல வலியெடுத்தது.

அக்காட்சியைக் கண்கள் அகல விரியப்பார்த்துக்கொண் டிருந்தார்கள் தினகரின் நண்பர் குழாம்.

பாண்டுரங்கன் 'யா ஹூ ஹா' என்று இன்னொரு தடவை காற்றில் எம்பப் போனான்.

சகுந்தலா சரேலென்று அவன் கையைப் பிடித்துத் தடுத்தாள்.

''அயோக்கியவே! சிங்கத்தை வேட்டையாடுவது எனக்குக் கைவந்த கலை. இதுதான் கடைசி எச்சரிக்கை. காலேஜில எந்தப் பெண்ணின் ஜோலிக்குப் போனாலும் உன் சாவு என் கையில் எழுதி வைத்திருக்குன்னு தெரிஞ்சுக்கோ.''

தினகர் செம்மையாய் உதை வாங்கியது எல்லோருக்கும் மகிழ்ச்சியாய் இருந்தது.

பாண்டுரங்கனை எல்லோரும் பாராட்டினார்கள்.

பெண்கள் அவனை பக்தியோடு பார்த்தார்கள். அவர்கள் கண்களுக்குப் பெரிய ஹீரோவாய் தோன்றினான். ரகளை நடந்து கொண்டிருந்ததை தெரிந்துகொண்டு பிரின்ஸிபால் ஓட்டமும் நடையுமாய் வந்தார். நடந்ததைத் தெரிந்து கொண்டார்.

மெரிட் ஸ்டுடெண்டும், சாதுவுமான பாண்டுரங்கன் துஷ்டனான தினகருக்கு நன்றாய் பாடம் கற்பித்து விட்டான் என்று மனதிற்குள்ளேயே பாராட்டிக் கொண்ட அவர் தினகரை சஸ்பெண்ட் செய்துவிட்டார்.

காலேஜ் எல்லைக்குள் இப்படிப்பட்ட ரகளைகளை எல்லாம் இன்னொரு தடவை செய்யக்கூடாது என்று பாண்டுரங்கனுக்கும் கடுமையாய் எச்சரித்தார்.

தினகர் தன் சகாக்களோடு சேர்ந்து காலேஜ் காம்பவுண்டைத் தாண்டிக் கொண்டிருந்தவன் பாண்டுரங்கனைப் பார்த்து— ''உன் உயிரை எடுத்துடறேன் இரு'' என்பது போல சைகை காட்டிவிட்டுப் போனான். பாண்டுரங்கன் அலட்சியமாய் முகத்தை நிமிர்த்துக் கொண்டான்.

## 10

கிளாஸ் டெஸ்டைத் திருப்திகரமாய் எழுதி முடித்துவிட்டு விளையாட்டு மைதானத்தை நோக்கி நடந்தான் பாண்டுரங்கன்.

இருட்டும் வரை கிரிக்கெட் மைதானத்தில் பிராக்டீசு செய்தான். கண்டிப்பாய் முதல் மார்க் தனக்கேதான் வரும் என்றும், மேடம் தனக்குத் தங்க டாலரைப் பரிசாகத் தருவார் என்றும் நம்பிக்கொண்டிருந்தான் அவன். அதைப் பற்றிய யோசனையில் மூழ்கியபடியே காலேஜிற்கு வெளியே வந்தான் பாண்டுரங்கன்.



காற்றில் சர்ரென்ற சப்தம் கேட்டது. சறுக்கிவிழ இருந்தவன் எம்பி கீழே விழுந்தான். சுதாரித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். எதிரே மோட்டார் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி வைத்துவிட்டு, அதன்மேல் ஏறி உட்கார்ந்திருந்தான் தினகர்.

அவன் கேலியாய் சிரித்துக் கொண்டிருந்தான். சுற்றிலுமிருந்த பத்துப் பேர் குண்டர்கள் சைக்கிள் செயின்களோடு அவன்மேல் பார்ய்ந்தார்கள்.

பாண்டுரங்கன் புயலாய் எம்பினான். அந்த பத்துப் பேர் ஒரு பொருட்டல்ல என்பதுபோல எதிர்த்து நின்று போராடத் தயாரானான்.

சர் சர் என்று செயின்கள் சப்தமிட்டுக் கொண்டிருந்தன. அவன் உடம்பை கிழித்துக் கொண்டிருந்தன. அந்த அடிகளைப் பொறுத்துக்கொண்டு பொருட்படுத்தாமலிருந்த அவன் ஒருத்தனின் கையிலிருந்த செயினைப் பிடுங்கிக்கொண்டான். அதைச் சுற்றிலுமிருந்தவர்களை நோக்கிக் காற்றில் வீசிச் சுழற்றிக் கொண்டேயிருந்தான்.

எதிரிகள் விநாடி நேரம் அவன் சாகசத்திற்கும் துணிச்சலுக்கும் வியந்துப் போய்விட்டார்கள். ஒருத்தனின் தலையில் கிழித்துக்கொண்டு போயிற்று. இன்னொருத்தனின் கை எலும்பு உடைந்தது. மற்றொருத்தன் வலியால் கத்திக்கொண்டே கீழே விழுந்தான்!

எதிர்க்க வந்த மரணதேவனுக்கே மரணதேவனாய் நின்று எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தான்.

தினகர் கையிலிருந்த கழியை வேகமாய் குறிபார்த்து பாண்டுரங்கனின் காலைநோக்கி வீசினான். பாண்டு கீழே விழுந்தான்.

அந்த இடைவெளி போதும் அவர்களுக்கு. பாண்டுரங்கனின் உடம்பில் செம்மையாய் உதைகள் விழத் தொடங்கின.

தப்பித்துக் கொள்ளும் அவகாசமே இல்லாமல் போய் விட்டது. அவ்வளவுதான்! அவனுக்கு நினைவு தப்பி விட்டது.

ஃ ஃ ஃ

மறுநாள் மாலையில் நினைவு திரும்பிற்று பாண்டுரங்கனுக்கு. இரண்டாவது நாள் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனான்.

கட்டிலில் படுத்துக்கொண்டு சலனமில்லாமல் மேலே சுழன்றுக்கொண்டிருந்த சீலிங்ஃ பேனையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

வீட்டிற்கு முன்னால் கார் வந்து நின்றது. சகுந்தலாவும் ஹரிதரும் காரைவிட்டிறங்கி உள்ளே வந்துகொண்டிருந்ததைப் பார்த்து சரளா ஒதுங்கி நின்றாள்.

''வாங்க'' என்று சாந்தா அவர்களை வரவேற்றாள். பாண்டுரங்கன் வாசலை நோக்கி திரும்பிப் பார்த்தான். தன்னைப் பார்த்துத் தேற்றி ஆறுதலளிக்க வந்த பார்வதி பரமேசுவரன் தம்பதிகளைப் போல தோன்றினார்கள் அவன் கண்களுக்கு அவ்விருவரும். அவளைப் பார்த்ததுமே அவன் கண்களில் ஒளி பிறந்தது. டிரைவர் பழக்கூடையை உள்ளே கொண்டுவந்து வைத்தான்.

''எப்படி இருக்கு?'' கிட்டே வந்து உட்கார்ந்து கொண்டே கேட்டாள் சகுந்தலா. அந்த கேள்வியால் அவன் உடம்பு வலியெல்லாம் பஞ்சாய் பறந்து போய் விட்டாற்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''இப்ப நன்றாய்தான் இருக்கேன் மேடம்.''

''துஷ்டர்களைக் கண்டால் தூர விலகணும் அப்பா! நான் போன் செய்து கிருஷ்ணமூர்த்திக்கு வார்னிங் தந்தேன்'' சொன்னான் ஹரிதர்.

''அந்த ராஸ்கல் மேடத்தை அவமானப்படுத்தியதைப் பார்த்துட்டுச் சும்மாயிருக்க முடியலை சார் என்னால்'' திகிலோடு பதிலளித்தான் பாண்டுரங்கன்.



''அதற்காக இவ்வளவு ஆபத்தை வரவழைச்சுப் பாயா?'' கடிந்துகொண்டாள் சகுந்தலா.

''மேடம்! உங்க உடம்பின்மேல் ஒரு ஈ வந்து உட்கார்ந்தாலும் என்னால் சகித்துக்க முடியாது. அதோடு கூட இந்த மாதிரி நீங்க ரெண்டுபேரும் வந்து என்னைப் பார்ப்பீங்கன்னு தெரிஞ்சிருந்தால் தினமும் உதைபடுன்னாலும் பட்டுப்பேன்'' என்றான்.

சாந்தா காபி கோப்பைகளை ட்ரேயில் வைத்து எடுத்து வந்தாள்— ''என் தம்பிக்கு அநியாயத்தைப் பார்த்தாலே சகிச்சிட்டிருக்க முடியாதுங்க'' என்றாள்.

''எதையும் உத்தேசித்துப் பார்த்துட்டுச் செய்யணும். இப்படி நேரடியாய் போனால் எதிரடிதான் கிடைக்கும்'' என்றாள் சகுந்தலா காபி கோப்பையைப் பெற்றுக் கொண்டே.

''எதிரடியே கிடைத்தாலும், உயிரே போனாலும் சரி, நான் பொருட்படுத்தவே மாட்டேன், உங்களுக்காக நான் என்ன வேணுமானாலும் செய்வேன். உங்களைக் கண்டால் எனக்கு அவ்வளவு இஷ்டம் மேடம்.''

உறுதியான உள்ளத்தோடு அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட சகுந்லாவின் மனம் நெகிழ்ந்துவிட்டது. ஹரிதர் பரிவோடு பார்த்தான். தன் மனைவிபால் அவனுக்கிருந்த அந்த அன்பையும் மதிப்பையும் பார்த்து அசந்து போனான்.

சகுந்தலா அவன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி, தன் சங்கிலியில் இருந்த டாலரை அதில் மாட்டி— ''இந்தா நீ கேட்ட பரிசு'' என்று அவன் கழுத்தில் சங்கிலியைப் போட்டாள். அவன் கண்கள் பளபளத்தன. டாலரைக் கையால் தடவிப்பார்த்துக்கொண்டான் பெருமையோடு.

''தாங்க்யூ—தாங்க்யூ ஸோமச் மேடம். நான் உயிரோடிருக்கிறவரை இந்த டாலரை என் உயிருக்குச் சமானமாய் பாவித்து வருவேன்'' என்று கைகளைக் கூப்பினான்.

சகுந்தலாவின் கண்களில் நீர் கசிந்தது. பணத்தால் விலை மதிப்பிட முடியாதது அவன் அன்பு... ''இப்படிப்பட்ட தம்பிக்கு அக்காவாயிருக்கும் நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி'' என்றாள் சகுந்தலா.

சாந்தா தம்பியை பெருமையோடு பார்த்தாள்.

அவர்கள் போய்க் கொண்டிருக்கையில் திகிலடைந்து போய் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு அழுகை வந்தது. அந்த டாலரை எடுத்துப் பார்த்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்தான்.

## 12

பாண்டுரங்கன் குணமாக ஒரு வார காலம் ஆயிற்று.

அந்த ஒரு வாரத்தில்கூட எப்பொழுது காலேஜிற்குப் போவோமோ என்று துடித்தபடி இருந்தான்.

காலேஜிற்கு மிகவும் உற்சாகத்துடன் புறப்பட்டான். கழுத்தில் சங்கிலியில் தொங்கிக்கொண்டிருந்த டாலர். அதில் மேடத்தின் போட்டோ.

அவனுக்கு மிகவும் கர்வமாய் இருந்தது. மேடத்திற்கு அவன்மேல் மிகப் பிரியம். யோசித்தபடியே நடந்து கொண்டிருந்தான்.

பின்னாலிருந்து முதுகில் ஏதோ பட்டது. அத்துடன்— ''நகராதே! பின்னால் திரும்பிப் பார்க்க முயற்சித்தாயானால் உன் முதுகில் கத்தி இறங்கிவிடும்'' என்ற வார்த்தைகளும் கேட்டன. பாண்டுரங்கன் சிரித்துக் கொண்டான்.



அவ்வாறு செய்து கொண்டிருந்தது யார் என்று அவனுக்குத் தெரியும். சிம்மாத்ரி. திரும்பிப் பார்க்காமலேயே கேட்டான் பாண்டுரங்கன்.

''அப்படிச் செய்திடாதே. நான் என்ன செய்யணும்னு சொல்லு.''

''நீ காலேஜைக் கட் செய்துட்டு என்னை மார்னிங் ஷோவுக்குக் கூட்டிட்டுப் போகணும்.''

''கிழித்தாயடா பாவி! ஒரு வாரங்கழித்து இன்றைக்குதான் காலேஜிற்கு வரேன். வரும்போதே இதென்ன அபசகுனம்!'' என்று திரும்பினான்.

''ஆமாம், ஆமாம். அவங்க நய்யப்புடைத்தபோது மட்டும் ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டாய். எனக்காக ஒரே ஒருவேளை கூட மட்டம் போடமாட்டாய் இல்லையா?''

''இன்றைக்கு விட்டுவிடு, நாளைக்குப் போகலாம்.''

''உன்னை நிஜமாகவே கத்தியால் குத்தணும்'' என்றான் சிம்மாத்ரி.

''நான் ஒன்றும் வேற்று மனுஷன் இல்லையே, உம், குத்து'' சிரித்தான் அவன்.

''உன்னைப் பார்த்தால் அதுக்குதான் கோபம் பற்றிக் கொண்டு வருகிறது'' முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு அவனோடு சேர்ந்து காலேஜிற்கு வந்தான் சிம்மாத்ரி. இன்னும் பெல் அடிக்கவில்லை.

''வா, காபி குடிக்கலாம்'' என்று கேன்டீனை நோக்கி நடந்தான் சிம்மாத்ரியுடன் சேர்ந்து.

தினகர் கும்பல் அவனுக்கெதிராய் உட்கார்ந்திருந்தார்கள். பாண்டுரங்கனைப் பார்த்து அதில் ஒருத்தன் ஏளனமாய்ச் சொன்னான்— ''நம்ப பாவின் பாச்சா என்னவென்று தெரியும். முதல் எச்சரிக்கையாய் ஒருவார

காலம் படுக்கையில் தள்ளிட்டான். இன்னொரு தடவை பயல் துளிர்த்தானானால் எழுந்திருக்கிற வேலையே இருக்காது'' அந்த வார்த்தைகளைக் கேட்டு எஞ்சியவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

பாண்டுரங்கனின் இதயம் பகபகவென்று பற்றி யெரிந்தது.

சிம்மாத்ரி அவர்களைக் கூர்ந்து பார்த்துவிட்டு— ''கையில் கத்தியிருந்தால் வரிசையாய் குத்திக் கிழித்திருப்பேன் இவர்களை. ஒருகை பார்ப்போமா?'' என்றான்.

''தேவையில்லை. இவை தினகரின் வெறும் வளர்ப்பு நாய்கதான். கடிக்காது. அவன் என்னைத் திருட்டுத்தனமாய் அடித்தான். சக்தி இருந்தால் எதிர்த்து நின்று சவாலிட்டு விட்டு வரச்சொல். கண்ணில் மண்ணைத் தூவறேன்'' கோபத்தை அடக்கிக்கொண்டு, அவர்களுக்கு மட்டுமே தன் எச்சரிக்கை காதில் விழும்படியாய் சிம்மாத்ரியிடம் சொல்லிக்கொண்டே காபி குடித்துவிட்டு வெளியே நடந்தான் பாண்டுரங்கன்.

அவன் வகுப்பிற்குப் போய்விட்டான். சிம்மாத்ரி வீட்டிற்குப் புறப்பட்டு விட்டான்.

முதல் மணி அடித்ததும் இங்கிலீஷ் டிராமா வகுப்பு. மிகவும் போரடித்தது.

அடுத்தது மேடம் சகுந்தலாவின் தியரி வகுப்பு. அவள் வரவுக்காகக் காத்திருந்தார்கள். பத்து நிமிஷங்கள் ஆகியும் அவள் வகுப்பிற்கு வராததால் லாபை நோக்கி நடந்தான் அவன்.

லாப் அட்டெண்டர் அவள் காலேஜிற்கு வரவில்லை என்று சொன்னான். அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. போரடித்தது. சிம்மாத்ரியோடு மார்னிங் ஷோவுக்குப் போனாலாவது நன்றாயிருக்கும். அவனாவது சந்தோஷப்படுவான்.



மேடம் எதற்காக வரவில்லையோ? ஏதாவது மிக முக்கியமான காரியம் இருந்தாலொழிய வராமல் இருக்கமாட்டாள். வீட்டிற்குப் போய் பார்த்துவிட்டு வரவேண்டுமென்றிருந்தது. வகுப்பிற்கு மட்டம் போட்டுவிட்டுப் போனால் அவன் கோபித்துக் கொள்வான். ஒருமுறை போய் அவளைப் பார்த்தால்தான் அவன் மனம் சமாதானமடையும் போலிருந்தது.

மாலையில் காலேஜ் விட்டதுமே விளையாடப் போகாமல் நேராய் அவள் வீட்டிற்குப் போனான் பாண்டுரங்கன். கீழே ஹாலில் படுத்துக்கொண்டு ஆங்கில நாவலைப் படித்துக்கொண்டிருந்தாள் சகுந்தலா.

அவனைப் பார்த்துவிட்டு எழுந்திருக்காமலேயே சிரித்துக்கொண்டே ''வா, உட்கார்'' என்றாள்.

அவன் உட்கார்ந்து கொண்டே கேட்டான் ''காலேஜிற்கு ஏன் வரவில்லை?''

சகுந்தலா திடுக்கிட்டாள் அவன் வார்த்தைகளைக் கேட்டு. ஒரு மாணவனை லெக்சரர் உலுக்கி எடுத்து விசாரிக்கும் தோரணையில் கேட்கிறான் அவன்.

சிரித்துக்கொண்டே எழுந்து உட்கார்ந்து கொண்டு— ''ஏன், நான் வராமல் போனால் காலேஜ் சுவர் இடிந்து விழுந்து விடப்போறதா என்ன?''

''அது விழாவிட்டாலும் நானே இடித்துத் தள்ளிடுவேன்.''

''அதென்னது?''

''ஆமாம். அப்படித்தான். ஒரு வாரத்திற்கப்புறமாய் கிளாசுக்கு வரேன். நீங்க வராவிட்டால் எனக்கு... எனக்கு என்னவோ மாதிரி ஆயிடுத்து! மீதி கிளாசெல்லாம் அட்டெண்டே ஆகலை, தெரியுமா?'' சகுந்தலா அவன் முகத்தை வியப்போடு பார்த்தாள்.

''நான் வராவிட்டால் ஒருக்கால் படிப்பையே விட்டு விடுவாயோ?''

''கண்டிப்பாய் அப்படித்தான் செய்வேன்.''

''போதும் நிறுத்து! பெரிய மனுஷன் மாதிரி பேச்சு! அவரும் மகளும் பெங்களூருக்குப் போயிருக்காங்க. ஒரு வாரம் ஆகும் திரும்பி வரத்துக்கு. ஏர்போர்ட்டுக்குப் போயிட்டுக் களைப்பாய் இருந்ததால் வீட்டிற்குத் திரும்பி வந்துட்டேன்.'

''இந்த ஒருவாரமும் காலேஜுக்கு வரமாட்டீங்களா?'' அவள் அழகாய் இனிமையாய் சிரித்தாள்.

''அப்படிச் சொல்லலையே நான்! இன்றைக்கு ஒருநாள் தான்! அதான் சொன்னேனே களைப்பாய் இருந்துதுன்னு'' அப்பு காபியைக் கொண்டு வந்து கொடுத்தான். காபியைக் குடித்துக்கொண்டே சொன்னாள் சகுந்தலா.

''ராத்திரியில் வந்து இங்கே படுத்துக்கக்கூடாதா? தனியாய் பயம் எனக்கு.''

''பயமா? எதுக்கு?''

''எனக்குப் பேய் பிசாசுங்க என்றால் பயம். இவ்வளவு பெரிய வீட்டில் தனியாய் இருக்க பயமாயிருக்கு! மகள்கூட இல்லையே.''

''அதான் அப்பு இருக்கானே!'' அதைக்கேட்டு அப்புவின் முகத்தைப் பார்த்துவிட்டு கலீரென்றுச் சிரித்து விட்டாள் சகுந்தலா.

''அவன் தூங்கிவிட்டால் யானையை மிதிக்கவைத்து எழுப்பினாலும் எழுந்திருக்க மாட்டான். கும்பகர்ணன் தான்... நானே உன்னைக் கூப்பிடுவதற்காக வரலாம்னு இருந்தேன்'' என்றாள்.

அவனுக்குத் தன் மேலிருந்த நம்பிக்கையைப் பார்த்து மகிழ்ந்தான் அவன்.



''அம்மாவிடம் சொல்லிட்டு வரேன்.''

''ஓ.கே'' என்றாள் சகுந்தலா.

அப்பு அவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே பாண்டுரங்கனை ஒரு மாதிரியாய் பார்த்தான்.

ஏன் அப்படிப் பார்த்தானோ தெரியாது. ஆனால் அவனுக்கு அது அருவருப்பாயிருந்தது.

பாண்டுரங்கன் வீட்டிற்குப் போய் குளித்துச் சாப்பிட்டு விட்டுத் தாயிடம் சொல்லிக் கொண்டு, சில புத்தகங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

எட்டரை மணியளவில் மேடத்தின் வீட்டிற்கு வந்து சேர்ந்தான் அவன் பத்தரை மணி வரையிலும் அவனோடு வம்பு பேசிக்கொண்டே உட்கார்ந்திருந்தான். கீழே அறையில் படுத்துக்கொண்டான் பாண்டுரங்கன். ஹாலில் அப்பு. சகுந்தலா மாடியறைக்குப் போய்விட்டாள். பாண்டுரங்கனுக்குத் தூக்கம் வரவில்லை. கட்டிலில் அப்படியும் இப்படியும் புரண்டு படுத்தான். அவனுக்கு அன்றிரவெல்லாம் மேடத்தோடு பேசிக்கொண்டே கழிக்க வேண்டும் போலிருந்தது

கழுத்திலிருந்த சங்கிலியை எடுத்து டாலரிலிருந்த அவளைப் பார்த்துக்கொண்டே படுத்தான்! எவ்வளவு நேரம் பார்த்தாலும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அந்த மனோகரமான உருவத்தை பக்தியோடு கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தான். ஏதோ கார் வந்து போர்டிகோவில் நின்ற சப்தம் கேட்டது. யாரோ வந்திருக்கிறார்கள்.

யார்?

ஹரிதர்தான் திரும்பி வந்து விட்டார் போலும் என்றெண்ணிக் கொண்டான். இல்லாவிட்டால் அந்தச் சமயத்

தில் யார் வருவார்கள்? எழுந்து ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தான். யாரையும் காணோம்.

திரும்பவும் கட்டிலில் படுத்து கண்களை மூடிக் கொண்டான். யோசனைகள் தூங்கவிடாமல் செய்தன. புது இடம். அதற்குள்—

மாடியறையிலிருந்து வீலென்ற அலறல் கேட்டது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான் பாண்டுரங்கன்.

யாருடையது அந்தக் கத்தல்?

ஏன் கத்தினார்கள்?

''அப்பு! அப்பு!'' இரைந்து கேட்டது குரல். பாண்டுரங்கன் அக்குரலை அடையாளம் புரிந்து கொண்டான். அது மேடம்...அலறிய அலறல். இல்லை பயந்துபோய் அவள் ஓலமிட்டது. வந்து காப்பாற்றச் சொல்லி உயிருக்கு அஞ்சிக் கத்திய கத்தல்.

''என்ன நடந்தது?'' அவள் பயந்துக் கொண்டிருப்பாளா?''

போர்டிகோவில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டது நினைவிற்கு வந்தது. அப்படியானால்—அப்படியானால்—

ஏதோ நடந்து கொண்டிருக்கிறது. மேடம் ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாள் என்று, ஆறாவது அறிவு எடுத்துச் சொல்லிற்று. சரேலென்று கட்டிலை விட்டுக் கீழே குதித்தான் பாண்டுரங்கன்.

கதவு வெளியே தாழிடப்பட்டிருந்தது. அது யாரோ வேண்டுமென்றே பண்ணிய வேலை என்று ஊகித்துக் கொண்டான். கதறல் கேட்டுக் கொண்டேயிருந்தது!

அப்பு என்ன பண்ணிக் கொண்டிருக்கிறான்?



வீட்டிற்கு வந்தது யார்? பயத்தால் அவன் உடல் நடுங்கிற்று. வியர்த்துக் கொட்டிற்று.

''பாண்டுரங்கா, ப்ளீஸ் கம்'' கத்தல் கேட்டது.

கதவை பலமாய் உலுக்கினான். பிரயோஜனமில்லை, அவள் எவ்வளவு கத்தினாலும் அந்த மாடியைத் தாண்டி வெளியுலகத்திற்குக் கேட்காது.

ஒரு வினாடி தாமதம் பண்ணினாலும் என்ன ஆபத்து ஏற்படுமோ? அவன் மனம் தியதை எடை போட்டது.

அவசரப்படும்படி அவன் அந்தராத்மா ஓலமிட்டுக் கொண்டிருந்தது. ஜன்னலைத் திறந்து தோட்டத்திற்குள் குதித்துவிட்டான். போர்ட்டிகோவில் வெள்ளை அம்பாஸிடர் கார் நின்றிருந்தது. வாசலை நெருங்கி கதவைத் தள்ளினான். விநோதம்! அக்கதவுகள் கூட தாழிடப் பட்டிருந்தன.

ஏதோ திட்டம் திட்டப்பட்டு நடந்துக் கொண்டிருப்பதாய்த் தோன்றிற்று. சகுந்தலாவின் கத்தல் மனதைப் பிழியும்படியாய் கேட்டுக்கொண்டேயிருந்தது. எப்படியாவது சரி—அவளைக் காப்பாற்றவேண்டும். தன் உயிரே போனாலும் சரி! யாரோ ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள்.

''பாண்டு'' இன்னொரு தடவை கதறல்.

அவன் சக்தியை திரட்டிக் கொண்டான். மளமளவென்று தண்ணீர்க் குழாயைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறத்தொடங்கினான்.

பழக்கமில்லாத வேலை. பரபரப்பால் அவசரப்பட்டதால் பிடிநழுவிக் கொண்டிருந்தது. அவள் கதறல் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

"ராஸ்கல்ஸ்... நீங்க இவ்வளவு நீச்சமானவர்கள்னு தெரிஞ்சுக்காமல் போயிடுத்து! விடுங்கள். மரியாதையாய் போயிடுங்க."

பாண்டுரங்கன் பத்தடி கீழே நழுவி விழுந்தான். விஸ்வபிரயத்தனம் செய்து கொண்டிருந்தான் அவன்! விடாமல் மேலே ஊர்ந்துப் போய்க்கொண்டிருந்தான்.

அவளை யாரோ மானபங்கம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவன் மனம் வசம் தப்பிற்று. அவளைக் காப்பாற்றாவிட்டால் தன் வாழ்வே வீண் என்று தோன்றிற்று. அரும்பாடுபட்டு பால்கனிக்கு வந்து சேர்ந்தான். மேடத்தின் அறைக்கதவு உள்ளே தாழிடப்பட்டிருந்தது. ஓட்டமாய் ஓடி கண்ணாடி ஜன்னலை மோதினான்! கலகலவென்று சப்தமிட்டபடி கண்ணாடி உடைந்தது. அந்த வேகத்தில் உள்ளே வந்து விழுந்தான் அவன்.

அறையில் அவளை மானபங்கப்படுத்திக் கொண்டிருந்த கயவர்கள் ஒருவினாடி விக்கித்துப் போய்விட்டார்கள்.

அவன் எழுந்து நின்றுகொண்டு பார்த்தான்.

எதிரே... ஹரிதரின் பிஸினெஸ் பார்ட்னரான பாலாஜியும், நாகராஜும், மதனும்!

சகுந்தலாவின் உடம்பிலிருந்த ஆடைகள் குலைந்திருந்தன. சட்டை கிழிந்து தொங்கிற்று. அவளை அந்த நிலையில் பார்த்த அவனுக்கு பகீர் என்றது. கேசங்கள் கலைந்திருந்தன. அவள் ஓவென்று கதறிக்கொண்டிருந்தாள் மார்பைக் கைகளால் மறைத்துக்கொண்டு!

"கில் தோஸ் பாஸ்டர்ட்ஸ்" கத்தினாள் சகுந்தலா. அவன் தன்னைக் காப்பாற்றுவான் என்ற ஆசை அவளிடம் இருந்தது.

பாண்டுரங்கன் தகதகவென்று எரியும் அக்னியைப் போல பார்த்தான் அந்தக் கயவர்களை.



"மரியாதையாய் போய் விடுங்கள்! இல்லாவிட்டால் உங்கள் மூவரையும் கண்டந்துண்டமாய் வெட்டிப் போட்டுவிடுவேன்" உறுமினான் பாண்டுரங்கன்.

"கிழித்தாயடா, கோழிக்குஞ்சு! இந்த போட்டோவை ஒரு தடவை பார்."

அந்தப் போட்டோவைப் பார்த்ததுமே மனமொடிந்து போய்விட்டான் பாண்டுரங்கன். ஒருவினாடி அவன் காலடியில் பூமி நடுங்கினாற் போலிருந்தது.

அந்த இடைவெளி போதுமானதாயிருந்தது அவர்களுக்கு. பாண்டுரங்கனின் கழுத்து முறிந்துபோகும் படியாய் அடித்தான் நாகராஜ்.

"அம்மா" கத்தினான். காலால் வயிற்றில் தள்ளினான் மதன் அதே சமயத்தில். அவன் கீழே விழுந்துவிட்டான். பாலாஜியின் கைகளில் திமிறிக்கொண்டிருந்தாள் சகுந்தலா!

பாண்டுரங்கன் சக்தியைக் கூட்டிக்கொண்டு எழுந்திருக்கப் போனான். நாகராஜின் பூட்ஸ் கால் தொப்பென்று வந்து அவன் மூக்கைத் தாக்கிற்று. மூக்கிலிருந்து ரத்தம் வழியத் தொடங்கிற்று.

சகுந்தலாவின் வாழ்க்கை நாசமாகிக் கொண்டிருந்தது.

அவனுக்கு உயிரே போனாற்போலிருந்தது. ஆதரவில்லாத, ஒன்றுமே செய்யமுடியாத நிலைமை. அவன் அழுதுகொண்டிருந்தான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

சகுந்தலாவின் உடம்பின் மீது புலியாய் பாய்ந்தான் பாலாஜி. அவள் வீலென்று அலறினாள். அவள் கண்ணாடியைப் போன்ற கன்னங்களை வெறிநாய் கடித்துகுதறினாற்போல கடித்துக் கொண்டிருந்தான்.

பாண்டுரங்கன் எழுந்திருக்க முடியாமல் அவன் கழுத்தின் மீது காலால் அழுத்திக் கொண்டிருந்தான் மதன். சகுந்தலா நினைவு தப்பி விழுந்துவிட்டாள்.

ஒருவர் மாற்றி ஒருவராய் அம்மூவரும் அவள் கற்பை சூறையாடினார்கள். பாண்டுரங்கன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டுவிட்டான். எழுந்திருக்க முடியாத பரிதாபமான நிலை.

தான் பார்த்துக் கொண்டிருப்பது உண்மைதானா கதவு திறந்துகொண்டது!

அப்பு! அவர்களோடு கைகலந்து கொண்டிருந்தான் போலும் அந்நால்வரையும் சித்திரவதை செய்துக் கொல்லவேண்டும் போல ஆத்திரம் வந்தது! ஆனால் உடம்பு தன் சுவாதீனத்தில் இல்லை. தலை பாரமாய் இருந்தது. அவனால் நகரவும் முடியவில்லை.

அவளிடம் போய் அவளைத் தேற்றவேண்டும் போலிருந்தது.

''ஐயா, இது பிழைச்சிருந்தால் எல்லோருக்குமே ஆபத்து'' என்றான் அப்பு. அவன் கையில் பாறாங்கல் இருந்தது.

''ஆம், நிஜந்தான்'' என்றான் நாகராஜ்.

அப்பு பாறாங்கல்லை அவன் கையில் தந்தான்.

நடக்கப்போகும் ஆபத்தை பாண்டுரங்கன் உணர்ந்து கொண்டுதான் இருந்தான்.

சலனமில்லால் விழுந்துகிடந்த சகுந்தலாவை நோக்கி நடந்தான் நாகராஜ். அந்தப் பாறாங்கல்லால் அவள் தலையில் ஓங்கி அடித்தான்.

நினைவுதப்பி விழுந்துகிடந்த சகுந்தலா சத்தவும் இல்லை. அவள் தலை பிளந்துவிட்டது! ரத்தம் ஆறாய் ஓடத்தொடங்கிற்று!



''ஷி ஈஸ் டெட்'' என்றான் மதன் நிம்மதியாய் மூச்சுவிட்டு.

சட்டென்று அந்நால்வரும் ஒரே சமயத்தில் பாண்டு ரங்கனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

''அவனைக் கட்டிப்போடுங்கள்'' என்றான் பாலாஜி.

அக்கயவர்கள் பாண்டுரங்கனின் கால்களையும் கைகளையும் கட்டிப் போட்டார்கள்.

''இவனை ஃபினிஷ் செய்திட்டால் நம்ப காரியம் முடிவடைஞ்சுடும்'' என்றான் நாகராஜ்.

''நோ'' என்றான் பாலாஜி யோசனையுடன்.

''இதென்ன? இவன் எல்லாவற்றையும் பார்த்தான். இவனை விட்டுவைத்தால் நமக்குத்தான் ஆபத்து'' என்றான் மதன்.

''அவசரப்படாதீங்க ஃபிரெண்ட்ஸ்! இவன் உயிரோடி ருக்கணும், இந்த பாண்டுரங்கன் நமக்கு ஒரு தெய்வம்'' ஏளனமாய் சொன்னான் பாலாஜி.

''அப்படீன்னால்?'' புரியாமல் கேட்டான் நாகராஜ்.

''சகுந்தலாவை மிகக் கொடுமையாய் கெடுத்து கொன்றுவிட்ட புண்ணிய புருஷன் நம் பாண்டுரங்கன். தூக்கு தண்டனை கிடைத்ததும் இவன் போட்டோவை நம் படுக்கையறையில் வைக்கத் தகுந்த மகானுபாவன் இந்த பாண்டுரங்கன்'' என்றான் பாலாஜி.

''அடேய், அயோக்கியர்களே! சக்தியிருந்தால் என் கால்களையும் கைகளையும் கட்டியிருக்கிற கட்டை அவிழ்த்து விடுங்கடா. உங்களுக்கு மரணதேவனாய் மாறி உங்கள் கழுத்தை வெட்டி ரத்தத்தைக் குடிக்கிறேன் பாருங்கள்.''

''முட்டா வாயை!'' பூட்ஸ் காலால் பாண்டுரங்கனின் முகத்தில் ஓங்கி அடித்தான் மதன்.

வலியால் "அம்மா" என்று அலறினான் பாண்டுரங்கன். அவர்கள் செய்த குற்றத்தைத் தன்மீது சுமத்தப் போகிறார்கள். அநியாயம்—இதைவிட மோசடி எங்குமில்லை.

"இவனை அந்த சவத்திற்கருகில் இழுத்துட்டு வாங்க" பாண்டுரங்கனின் கேசத்தைப் பற்றி இழுத்துக்கொண்டு வந்தான் மதன்.

அவன் தலையிலிருந்து ஒழுகிக்கொண்டிருந்த ரத்தத்தால் பாண்டுரங்கனின் உடைகள் சிவந்த நிறத்தை அடைந்தன.

உயிரற்றுக் கிடந்த சகுந்தலாவின் கையைத் தூக்கிப் பார்த்தான் பாலாஜி. நீண்ட நகங்கள். அந்த நகங்களால் பாண்டுரங்கனின் முகத்தில் கீறினான் பாலாஜி.

அவன் என்ன செய்துகொண்டிருந்தான் என்று புரியவில்லை எஞ்சியவர்களுக்கு. பாண்டுரங்கனின் முகத்திலும் கைகளிலும் அவள் நகங்களால் கீறிக்கொண்டிருந்தான் பாலாஜி.

அப்பொழுதுதான் புரிந்தது அவர்களுக்கு—

பாண்டுரங்கன் அவளைக் கெடுக்க முயன்றபோது அவள் தடுக்கச் செய்த முயற்சிகளாய் எடுத்துக்காட்டுவதற்காக பாலாஜி அவ்வாறு செய்துகொண்டிருந்தான் என்று.

"அடேய் பாண்டு! சொன்னபடி கேள், இந்தக் குற்றத்தை நீ செய்ததாய் ஒப்புக்கொள்."

"என் உடலில் உயிருள்ளவரை ஒப்புக்கமாட்டேன்."

"நீ மறுத்தாலும், நீ இப்படிச் செய்ததை அப்பு கண்ணார பார்த்தான்" என்றான் பாலாஜி.

அப்பு ஒரு வினாடி மென்று விழுங்கினான். அவர்கள் வார்த்தையை மறுத்துப் பேசினால் தன் கதி என்னவென்று அறிவான் அவன்.



"ஆமாம் சார். 'என் கண்ணாலப் பார்த்தேன். அதற்குள் எல்லாம் முடிஞ்சிப் போயிருந்தது" என்றான் அப்பு.

"திருட்டு ராஸ்கல்! நன்றி கொன்றவன். உப்பிட்ட வீட்டுக்கே கன்னம் வைக்கிற துரோகி."

"என் விஷயத்தை விட்டுத்தள்ளு பையா! அம்மா குளிச்சிட்டிருக்கும்போது குளியலறைக் கதவு சந்து வழியாய் நீ பார்த்தாய். அதை ஐயா கூட போட்டோ எடுத்துட்டார். அம்மாவை அந்த மாதிரி பார்த்துப் பார்த்து ஆசை துளிர்த்துப்போய் அம்மா மேல் பாய்ந்துட்டாய். கற்பழித்தாய். அந்த விஷயம் வெளியே போயிடக் கூடாதேன்னு பாறாங்கல்லை அழுத்திக் கொன்றுட்டாய்."

"அயோக்கியனே" கூண்டில் அகப்பட்டுக்கொண்ட புலியாய் உறுமிக்கொண்டிருந்தான் பாண்டுரங்கன்.

"ஐயா இவன் பேச்சைக் காதில் போட்டுக்காதீங்க. நீங்க வீட்டிற்குப் போய் குளிச்சிட்டு வாங்க. போலீசுங்க வந்தால் நம்மை சந்தேகப்படுவாங்க" என்றான் அப்பு.

\ "ஓ.கே., ஓ.கே. இவனை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள். அரைமணியில் வந்துடறேன். நீ ஒரு தடவை எங்க மூணு பேர் வீட்டுக்கும் போன் செய்து இப்படி நடந்திருக்குன்னு சொல்லு" வெளியே நடந்தான்.

அவ்வறை வாசலிலேயே உட்கார்ந்து கொண்டான் அப்பு.

பாண்டுரங்கன் தன் கட்டுக்களை விடுவித்துக் கொள்ள விஸ்வபிரயத்தனம் செய்துகொண்டிருந்தான். அப்புவுக்கு பயமாய் இருந்தது. பாண்டுரங்கன் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு விட்டானானால கண்டிப்பாய் தன் உயிரை எடுத்துவிடுவான். ஒருமுறை உள்ளே வந்து எஜமானியின் சவத்தையும் பாண்டுரங்கனையும் மாறி மாறிப் பார்த்தான். அவனால் கட்டுக்களை அவிழ்த்துக் கொள்ளமுடியாது

என்றுணர்ந்து நிம்மதியாய் மூச்சுவிட்டு விட்டு டெலி போனை நெருங்கினான்.

பாண்டுரங்கன் கண்ணீர் நிரம்பிய கண்களோடு சகுந்தலாவை பரிதவித்துப் போய் பார்த்தான். அவள் உயிரோடிருந்தால் போதும், செத்திருக்கக்கூடாதே என்று மனதில் திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டேயிருந்தான் தவிப்போடு.

ஆனால் அவள் உயிர் எப்பொழுதேதே காற்றோடு கலந்துவிட்டது என்ற உண்மையை அவன் மனசாட்சி ஏற்றுக்கொள்ள மறுத்தது.

நடந்ததெல்லாம் கனவுபோலிருந்தது. உண்மையில் கனவாகவேயிருந்தாலும் அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது.

''மேடம்... மேடம்... ப்ளீஸ் ஒருதடவை பேசுங்க மேடம்... இந்தக் குற்றத்தை நான் செய்யலைன்னு சொல்ல மாட்டீங்களா?''

அவளை நோக்கி உருண்டான்.

அவளை எப்படித் தேற்றுவது? அவளைக் காப்பாற்ற முடியாத தன் ஆதரவில்லாத நிலைக்கு மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளவேண்டும்.

பூட்ஸ் சப்தம் டக் டக்கென்று கேட்டது. அந்த அரககர்கள் திரும்பவும் வருகிறார்கள் என்றுணர்ந்தான் பாண்டுரங்கன்.

''வாங்க, வாங்க ஐயா, வாங்க'' அப்பு பாலாஜி கும்பலை உள்ளே அழைத்துக்கொண்டு வந்தான்.

''என்ன தீர்மானித்துக் கொண்டிருக்கிறாய்?'' கேட்டான் நாகராஜ்.

''உங்களைத் தூக்குமேடையில் ஏற்றுவதற்கு.''



''மிஸ்டர்... அதிக சாமர்த்தியம் அனர்த்தத்திற்கு வித்து. எங்கப்பாவின் செல்வாக்கு, பணம், ஹோதா, எல்லாம் எங்களிடமுள்ள இரும்புக் கவசங்கள். உன்னால் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது. சமூகத்தில் எங்கள் பெயருக்கும்மதிப்புக்கும்களங்கம்ஏற்பட்டுவிடக்கூடாதுன்னு தான் உனக்கு இவ்வளவு தடவை சொல்றது. உன்னால் ஒன்றும் செய்திட முடியாது. இல்லை என்று சொல்விட்டுப் பிடிவாதமாய் போனால் உன் குடும்பமே அழிஞ்சுவிடும். உன் ஒருத்தன் மேல்தான் உங்கம்மா, அக்கா, தம்பியின் வாழ்வே ஆதாரப்பட்டிருக்கிறது. உன் குடும்பத்துக்குப் பொருளுதவி செய்கிறோம். உங்கக்காவுக்குக் கல்யாண மாகும். தம்பி நன்றாய் படிக்கமுடியும். யோசித்துப் பார்த்துக்கொள்.''

''உங்க மனுஷங்களின் நல்லதுக்காக ஒப்புக்கோ பையா'' என்றான் அப்பு.

''உன் உயிரை எடுப்பது ஒரு நிமிஷ வேலை. அப்புற மாய் உங்க வீட்டு மனுஷங்களை...யோசித்துக் கொள்...'' என்றான் மதன்.

''மூன்று சொல்லி முடிப்பதற்குள் ஒப்புக்கொண்டு விடணும்'' என்றான் பாலாஜி.

பாண்டுரங்கன் கண்களை மூடிக் கொண்டான்.

''ஒன்று''

தான் எப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலையில் அகப்பட் டுக்கொண்டிருக்கிறோம் என்று புரிந்தது அவனுக்கு.

ரோஷத்தாலும் ஆவேசத்தாலும் மனம் கொதித்தது. ஆனால்... ஆனால்...

''இரண்டு''

அவர்களைத் தன்னால் ஒன்றுமே பண்ண முடியாத துரதிஷ்டமான சூழ்நிலையில் இருந்தது நன்றாய் புரிந்தது.

சாட்சிகளைத் தமக்கு அனுகூலமாய் மாற்றிக்கொள்ளக் கூடிய சாமர்த்தியசாலிகள் அவர்கள்.

அம்மா—

அக்கா—

தம்பீ—

தான் இவர்களுக்குக் கட்டுப்படாமல் போனால் தன் மனிதர்களுக்கு எப்படிப்பட்ட தீங்குகள் நேருமோ?

''மூன்று''

பாண்டுரங்கன் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு ஓவென்று கதறிவிட்டான்.

''குட். தியாக மூர்த்தி பாண்டுரங்கா! உனக்குப் பிறவிகொடுத்த தாய்க்காகவும் உடன் பிறந்தவங்களுக்காகவும் உன் வாழ்க்கையைத் தியாகம் செய்கிற உன்னை நிஜமாய்...... எப்படிப் புகழ்வதோ, தெரியலை. நாங்கள் எங்கள் வாக்கை அப்படியே காப்பாற்றுவோம்.

நீ போலீசுக்குக் கட்டுப்பட்டுப் போயிடணும். ஒப்புக்கிட்டாப் போலதானே?'' கேட்டான் பாலாஜி.

''நான்தான் பண்ணினேன் இந்தக் குற்றத்தை'' கத்தினான் பாண்டுரங்கன்.

''சபாஷ்''

''வெரிகுட்''

''குட்'' மூவரும் மகிழ்ச்சியோடு கத்தினார்கள்.

''அப்பு! இனி தாமதிக்க வேண்டாம். போலீசுக்குப் போன் பண்ணு.''

பாண்டுரங்கன் கண்களை மூடிக்கொண்டான்.

முடிந்துவிட்டது.

தன் வாழ்க்கை நாசமாகி விட்டது.



''மேடம்... என்னை மன்னித்துவிடுங்கள். பண்ணாத இந்தக் குற்றத்தை என்மேல் போட்டுக்கிறேன். குறைந்த பட்சம் என் வீட்டாரையாவது காப்பாற்றிக் கொள்ளணுங்கிற சுயநலத்தோடு இதற்குத் தலை வணங்கிட்டேன்'' அவன் கண்களிலிருந்து கண்ணீர் மடைதிறந்தாற்போல வெளிவந்து கொண்டேயிருந்தது.

போலீசார் வந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் ரத்தினம் பாலாஜி கும்பலைப்பார்த்து முறுவலித்துவிட்டு— ''அதற்குள்ளேயே வந்துட்டீங்களே'' என்றார்.

''வராமலிருக்க முடியுமா? இந்தப் பையனை அரெஸ்ட் பண்ணி கேஸை பலமாய் போடுங்க இன்ஸ்பெக்டர்! உங்களுக்குப் பிரமோஷனுக்காக நான் மேலதிகாரிங்களோடு பேசறேன்'' என்று சொல்லிக்கொண்டே பத்தாயிரம் ரூபாய்களைக்கொண்ட கட்டை இன்ஸ்பெக்டர் ஜேபிக்குள் திணித்தான் பாலாஜி.

ரத்தினம் ஜேபியைத் தடவிப் பார்த்துக்கொண்டார் திருப்தியோடு.

''தாங்க்ஸ்...தாங்க்ஸ்...நான்தான் பார்த்துக்கறேனே... நீங்கள் கவலையில்லாமல் இருங்க...'' என்றார் இன்ஸ்பெக்டர் ரத்தினம்.

''போஸ்ட் மார்ட்டத்தைக்கூட ஜாக்கிரதையாய் மேனேஜ் பண்ணுங்க'' என்றான் நாகராஜ்.

''ஓ. கே.... ஓ. கே...''

பாண்டுரங்கனை அரெஸ்ட் செய்தார் இன்ஸ்பெக்டர். நகரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியபடி மறுநாள் செய்தித்தாள்களில் இந்தச்செய்தி பாண்டுரங்கனின் போட்டோவோடு கூட பிரசுரமாயிற்று.

பாண்டுரங்கனை வெறுத்து ஒதுக்காதவர்கள் இல்லை. அவனை தூக்கிலேற்றுவதுதான் சரியான தண்டனை என்று நிறையபேர் பாவித்தார்கள்.

சாட்சிகளுக்கு அனுகூலமாய் பாண்டுரங்கன் கோர்ட்டில் தான் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டு விட்டான். கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

போலீசார் விலங்கிட்டு ஜீப்பை நோக்கி அழைத்துச் சென்றார்கள்.

இறுதியில் பெற்ற தாயின் சாபங்களைக்கூட தாங்கிக் கொண்டு ஜீப்பை நோக்கி நடந்தான். அப்பொழுது... அப் பொழுது.

ஜீப்பிற்கருகில் பத்து வயது பெண்ணான பத்மினி யோடு நின்று கொண்டிருந்த ஹரிதரைப் பார்த்துத் தலை குனிந்துகொண்டான் பாண்டுரங்கன்.

''பாண்டு'' இரக்கம் ததும்பக் கூப்பிட்டார் ஹரிதர். பாண்டுரங்கன் மெதுவாய் நிமிர்ந்தான். கண்ணீர் நிரம்பிய கண்கள்.

ஹரிதர் முகத்தில் அவன்மேல் எந்த அருவருப்பும் தென்படவில்லை.

''பாண்டு! நிஜமாய் நீதான் இந்தக் குற்றத்தைச் செய்தாயா?''

பாண்டுரங்கன் பதில் பேசவில்லை.

''தம்பீ! மேடத்துக்கும் உனக்குமிடையேயிருந்த சிநேகம் எப்படிப்பட்டதுன்னு எனக்குத் தெரியும். நீ இப்படிச் செய்தாய்னு சொன்னால் என்னால் நம்பவே முடியலை. நம்பவும் மாட்டேன். உண்மையைச் சொல்லப் போனால் உன்மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லை. நான் இப்பொழுது எல்லாவற்றையும் இழந்துவிட்டவன். கண்ணீர்க் கடலில் தத்தளிச்சுட்டிருக்கிறவன். என் சக்கு இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையே இல்லை. ஆனால்



இந்தச் சின்னப் பொண்ணுக்காக... வாழ்ந்து தீரணும்னு மனதைத் திடப்படுத்திக்கிறேன். என் திருப்திக்காகச் சொல்லு. உண்மையில் நீ இந்தக் குற்றத்தைச் செய்யலைன்னு ஒரு வார்த்தை சொல்லிடுப்பா'' கண்ணீர் நிரம்பிய கண்களுடன் பாண்டுரங்கனின் தலையில் கை வைத்துத் தடவிக்கொடுத்தபடி பரிவாய் சொன்னார்

அவர் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க அவனுக்கு இதயத்தைப் பிசைந்தெடுத்தாற்போல இருந்தது.

வாய்விட்டு 'நான் குற்றவாளி இல்லை' என்று சொல்லிவிட வேண்டும் போலிருந்தது. அது ஹரிதரின் திருப்திக்காகத்தான். ஆனால் அதன் விளைவை அவன் அறிவான்.

ஒருவினாடி கண்களை மூடிக்கொண்டான். என்ன சொல்லவேண்டும்? எப்படிச் சொல்லவேண்டும்?

''என் இதயத்தைக் கசக்கிப் பிழிந்து வாழ்க்கையைத் தீயில் போட்டுப் பொசுக்கிக் கொண்டுவிட்ட துரதிர்ஷ்ட சாலி நான். என்னைக் குற்றவாளியாய் நிற்கவைத்துச் சட்டத்தின் கையில் பிடித்துத் தந்துட்டாங்க. நீதிமன்றம் என் குற்றத்தை ருசுவாக்கி தண்டனை தந்துவிட்டது. என்னை மன்னிச்சுடுங்க சார்.''

தன்னையறியாமல் அவன் குனிந்து விலங்குகள் பூட்டப் பட்டிருந்த கைகளோடேயே ஹரிதரின் பாதத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். அவன் கண்களி லிருந்து விழுந்த இரண்டு சொட்டுக் கண்ணீர் ஹரிதரின் பாதங்களை நனைத்தது.

கோர்ட்டுக்கு வெளியே அவ்விருவரும் நட்போடு பேசிக் கொண்டதைப் பார்த்து எல்லோரும் அடைந்த வியப்பிற்கு எல்லையில்லை. மனைவியைக் கற்பழித்துக் கொன்றுவிட்ட பாண்டுரங்கன்மீது ஹரிதரின் நடத்தையைப் பார்த்துப் போலீசாருக்கு வியப்பாயிருந்தது.

"வா" என்றார் இன்ஸ்பெக்டர் பொறுமையின்றி.

"போயிட்டுவரேன் சார்" என்றான் தொண்டை அடைக்க பாண்டுரங்கன்.

ஹரிதர் பதில் பேசவில்லை.

பாண்டுரங்கனைப் போலீசார் கூட்டிச் சென்று கொண்டிருக்கையில் மகளின் கையைப் பிடித்துக்கொண்டே சலனமில்லாமல் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார் ஹரிதர்.

## 13

பாண்டுரங்கனின் இரும்பு உள்ளங்கைகள் அழுத்தமாய் முறுக்கேறிக் கொண்டன. மூளை கூர்மையாய் வேலை செய்யத் தொடங்கிற்று. சமூகத்தைப் பிடித்து வாட்டுகிற கறையான்களை—அப்பாவிகளின் உயிர்களோடு விளையாடுகிற விஷப் பூச்சிகளை—நாசம் செய்வதற்கு அவன் ஒரு முடிவிற்கு வரத்தொடங்கினான்.

பச்சைப் புல் தரையிலிருந்த தங்கச் சங்கிலியைக் கையில் எடுத்து அதிலிருந்து சகுந்தலாவின் போட்டோவைப் பார்த்தான்.

அவன் கண்களில் பழிவாங்கும்—பார்வையில் கூர்மை—இதயத்தில் கோபம்—

அவன் ஒவ்வொரு அணுவும் ஆவேசத்தால் தத்தளித்தது. அவனைப் பார்த்து இயற்கைகூட ஸ்தம்பித்துப் போய்விட்டது.

"மேடம்! நயவஞ்சகத்தால் என்னை மோசம் செய்து சமாதிகட்டிய அந்தக் காமுகர்களை, நம்பிக்கை துரோகத்தோடு என் குடும்பத்தை நாசமாக்கிய அந்தக் கயவர்களைப் பிடித்து இம்சிப்பேன். உங்கள் ஆத்மாவிற்கு சாந்தியை



ஏற்படுத்துவதற்காக நான் செய்யப்போகிற இந்த முயற்சியின் இறுதியில் என் உயிரே போனாலும் நான் பயப்படமாட்டேன்" ஒரு காற்றின் அலை தேற்றுவது போல அவன் உடலைத் தழுவிவிட்டு போயிற்று.

விளக்கு வெளிச்சத்தில் கைக் கடியாரத்தைப் பார்த்தான். மணி எட்டரை. பார்க்கில் ஆளரவமில்லாமலிருந்தது. முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தான். எதிரி கும்பலை எந்த திசையிலிருந்து தாக்கத் தொடங்கலாம் என்று யோசித்தவாறே நடந்து கொண்டிருந்தான். மூன்று புலிகள். ஒருத்தன் பாலாஜி, இன்னொருத்தன் மதன், மூன்றாமவன் நாகராஜ்,

அவர்களுக்கு உதவிய நரி— அப்பு!

இந்த மிருகங்களை வேட்டையாட அவனிடம் மனத்துணிச்சலும், தைரியமும் மட்டுந்தான் இருந்தனவேயன்றி எந்தவிதமான ஆயுதங்களும் இல்லை.

ஆனாலும் தன் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள சாகஸத்தையே ஆயுதமாக்கிக் கொள்ளத் தீர்மானித்துக் கொண்டான்.

எந்த விதத்திலாவது அதற்கு முன்னால் சின்ன ஆதாரத்தைச் சம்பாதித்துக் கொண்டு பிறகு எதிரிகளின் இதயத்தைத் தாக்க முயலவேண்டும். ஆளரவமில்லாத அந்த வீதியில் நடந்து கொண்டிருந்தான்.

"இந்தச் சுற்றுப்புறத்தில் ஆண்களே இல்லையா? ஒரே ஒரு ஆண் போதும். இந்தப் பெண்ணுக்கு உதவி செய்ய மாட்டீரா? ஹெல்ப்... ஹெல்ப்...!" ஒரு பெண்ணின் குரல். தெருவில் ஆளரவமில்லை. வீதி விளக்குகளின் வெளிச்சம் மங்கலாய் இருந்தது.

அந்தப் பெண் அச்சமயத்தில் அங்கே என்ன செய்து கொண்டிருந்தாள் என்று அவனுக்குப் புரியவில்லை. தன்னைப் பார்த்து விட்டுதான் அவன் அவ்வாறு கத்தி

கிறாள் என்று புரிந்தது. அவளுக்குத் தேவையான ஹெல்ப் என்னவோ?

குருட்டு வெளிச்சத்தில் அவளைப் பார்த்தான் பாண்டுரங்கன். விலையுயர்ந்த அலங்காரங்களுடன் நவீனமாய் இருந்தாள் அவள். அழகி வேறு. அப்ஸரஸ்களைத் தோற்கடிக்கக்கூடிய அழகியாய் தோன்றினாள். பாண்டுரங்கன் அவளிடம் வந்தான். தன் வார்த்தைகளைக் கேட்டு அவன் தன்னை நெருங்கியதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தாள் அவள்.

"என்ன வேணும்? என்னவாச்சு?" கேட்டான் அவன். அவள் கார் பேனெட்டின் மேலிருந்து ஒரே பாய்ச்சலாய் கீழே குதித்தாள்.

"பெண்பிள்ளை, அழகானவள், ஹெல்ப் என்று கூப்டால் ஒரு ஆண்கூட வராவிட்டால் எப்படி? நான் என்னவாறதுன்னு இந்த ஆண்களின் உத்தேசம்?" கடுகடுப்புடன் கேட்டாள்.

அவள் வார்த்தைகளைக் கேட்டு அவன் லேசாய் சிரித்துவிட்டு—"நான்தான் வந்திருக்கேனே, சொல்லுங்கள். வாட் கேன் ஐ டூ ஃபார் யூ?"

"என்ன செய்யச் சொன்னாலும் செய்வீரா?" அவள் வார்த்தைகளில் குறும்பு பளிச்சிட்டது.

"கூப்பிட்டதும் வந்தது செய்றத்துக்குதானே"

"கார் பஞ்சராயிடுத்து."

"காரா? கார் டயரா?"

"டயர்தான். ஸ்டெப்னியை மாத்றணும். என்னால் முடியாது. உதவிகூட செய்ய முடியாது. வேலையையெல்லாம் நீர்தான் செய்யணும்."

"ஓ. கே. டிக்கியைத் தூக்குங்க. வேலையைத் தொடங்குகிறேன்" என்றான் பாண்டுரங்கன்.



"டிக்கியைத் தூக்க மாட்டாங்க. திறப்பாங்க" சிரித்துக்கொண்டே டிக்கியைத் தூக்கினாள் அவள்.

ஸ்டெப்னி, ஜாகி, எஞ்சிய கருவிகள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு பாண்டுரங்கன் டயரைப் பிரித்துக்கொண்டிருந்தபோது அப்பெண் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

"ஒரு மணி நேரமாய் இங்கேயே பழியாய்க் கிடக்கேன். ஒருத்தருக்காவது இரக்கம் தோன்றலை."

"ஒருத்தருக்காவதுன்னு சொல்றது தப்பு. நான் வந்துட்டேனே" திருத்திச் சொன்னான் அவன்.

"போகட்டும், ஒப்புக்கறேன். யூ ஆர் எ ஹீரோ"

"தாங்க்யூ"

"எனக்கு ஒரு சின்ன சந்தேகம்."

"என்ன?"

"குறைந்தபட்சம் என்ன வேணும்னுகூட கேட்காமல் ஓடிப் போயிட்டாங்க பாழாய்ப் போனவங்க. ஏன் நான் பிசாசைப் போல இருக்கேனா?" கோபமாய் கேட்டாள்.

பாண்டுரங்கன் சிரித்தான்.

"நாம்ப சினிமாவில் கந்தர்வ கன்னிகளைப் பார்ப்போம்" சினிமாவைப் பார்த்து அப்படிப்பட்ட கந்தர்வ கன்னிகளை விரும்புவாங்க நிறைய பேர். ஆனால் இப்படிப்பட்ட ஆளரவமில்லாத வழியில் தனியாய் போறவங்களுக்கு உண்மையாகவே கந்தர்வகன்னி எதிர்ப்பட்டாலும் என்னவாகும் தெரியுமா? மனுஷன் இதயமே வெடித்துச் செத்துவிடுவான். அப்படித்தான் உங்களை இவ்வெல்லையில் பார்த்துட்டு அவங்க இதயம் வெடித்து ஓடிப் போயிருப்பாங்க."

அவள் அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். கலகலவென்று பாயும் அருவிநீர் துள்ளிவிழுந்தாற்போல.

கோடி வீணைகளை ஒரே சமயத்தில் மீட்டினாற்போல தேனினும் இனிமையான அவள் சிரிப்பு...அவன் சோர்வையெல்லாம் மறந்து போகும்படி செய்தது!

''நல்லகாலம் நீங்க இதயம் வெடித்துச் சாகவில்லை. ஆமாம் உங்களுக்குக் கவிதை கூட வருமா?''

''நான் கவிஞன் அல்ல, கிராதகன்'' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. தான் யார் என்று தெரிந்தால் அவள் ஒரு வினாடிகூட அங்கே இருக்க மாட்டாள் என்று தெரியும் அவனுக்கு

வேலை முடிந்துவிட்டது...எழுந்திருந்தான்!

''அதற்குள்ளேயே?''

''ஏன், இன்னும் அரைமணி நேரம் வேலை செய்திட்டிருக்கச் சொல்றீங்களா?''

''நேரம் போனதே தெரியலை'' என்றாள்.

''சாமான்களை டிக்கியில் வைத்துடறேன் லாக் செய்திடுங்க'' என்றான். அவள் டிக்கியை லாக் செய்துவிட்டு ஒய்யாரமாய் நடந்து முன்சீட்டை நோக்கிப் போனாள்.

''இனி நீங்கள் போகலாம்'' என்றான்.

''தாங்கயூ சோ மச். ரியலீ யு ஆர் எ ஹீரோ!''

''நான் ஹீரோ இல்லை. மிகச் சாதாரண ஆள். ஓ கே. குட்லக்.''

அவள் சிரித்தாள்.

''ஏறுங்கள், உங்களை இறக்கிவிட்டு விடுகிறேன்'' என்றாள்.

''ஏற்றிக்கொள்வதும் வானளாவத் தூக்கி நிறுத்துவதும் திடீரென்று ஒரேயடியாய் கீழே தள்ளிவிடுவதும் பெண்களுக்கு நன்றாய் கைவந்த கலை. நான் நடந்தே போகிறேன்.''



''வானளாவத் தூக்கிநிறுத்த முடிந்தால் நான் சுவர்கத்தையே காட்டுவேன். நான் எல்லாப் பெண்களையும் போலில்லை. ஏறிப் பாருங்கள். உங்களுக்கே தெரியும்.''

கைக்கடியாரத்தைப் பார்த்துக்கொண்டான் பாண்டுரங்கன். நேரம் ஒன்பதரை.

''பரவாயில்லை. ஏறிக்குங்க. ரொம்பவும் பிகு செய்கிறவங்களைக் கண்டாலே எனக்கு எரிச்சல்''.

ஒருமுறை அவளைப் பார்த்தான் பாண்டுரங்கன்.

அவளுடைய குறும்புக் கண்கள் இருட்டில் மின்னிக் கொண்டிருந்தன. அவள் உரிமையோடு காரின் கதவைத் திறந்து அவனை உள்ளே தள்ளிவிட்டு கதவைச் சாத்தினாள்.

''இதென்ன அநியாயம்? இவ்வளவு பலவந்தமாய் என்னை ஏற்றிக்கிட்டீங்க?''

''என் இஷ்டத்திற்கு யாரும் மறுப்புச் சொல்லக் கூடாது.''

''அப்படீன்னால் இறங்கச் சொன்னாலும் இறங்க மாட்டேன்.''

''உங்களுக்கு அவ்வளவு பொறுமையிருந்தால் இறங்காமல் இருந்துக்குங்க.''

''உங்க பேர்?''

''என் பெயர் மஞ்சரி.''

''நன்றாயிருக்கு.''

''பெயர்தான் நன்றாயிருக்கா, நான் நன்றாயில்லையா?''

''அப்படிச் சொன்னால் நான் குருடனுக்குச் சமம்.''

''தாங்க்யூ'' கார் வேகமாய் போய்க் கொண்டிருந்தது.

''உங்க பேர்?''

''பாண்டுரங்கன்.''

''நான் நிஜமாய் கந்தர்வ கன்னிகையைப்போல அழகாய் இருக்கேனா?''

''என் கண்களுக்குள் உற்றுப் பார்த்தால் விழித்திரைக்குள் தென்படும் உருவத்தைப் பார்த்துக்கலாம்.''

''இருட்டில் தென்படவில்லை. கந்தர்வ கன்னிகைகள் பூலோகத்திற்கு உல்லாசமாய் வரும்போது எந்த ராஜ குமாரனையாவது பார்த்து மயங்கித் தூக்கிட்டுப் போய்டுவது வழக்கம். உங்களைத் தூக்கிட்டுப் போய் இந்த கந்தர்வ கன்னி எங்கேயாவது மறைத்து வைத்துவிட்டால்?''

''உங்கள் கைதியாய் இருப்பதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை'' அவன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

''நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?''

''கார் மெக்கானிக்.''

''வெரிகுட் சினிமா ஹீரோ க்வாலிஃபிகேஷன்! அப்படீன்னால் எனக்குக் காரை ரிப்பேர் செய்துக்கத் தோதான ஆளோடுதான் பரிச்சியம் ஆகியிருக்குன்னு சொல்லுங்க, சரி உங்களை எங்கே இறக்கிவிடணும்?'' கேட்டாள் அவள்.

பாண்டுரங்கன் சொன்ன பக்கமாய் காரை ஓட்டினாள் அவள். கார் நின்றது.

''அந்த காரேஜ்தான். எப்பவாவது வந்தால் இங்கே ரிப்பேர் செய்து அனுப்பறேன்.''

''ஓ.கே. ஓ.கே.''
அவன் காரைவிட்டு இறங்கினான்.

''சீ யூ அகெய்ன்'' என்றாள்.

கார் வேகத்தில் பறந்தது! அவன் பார்த்துக் கொண்டே நின்றான்.



அவள் பரிச்சயம் அவன் மனதிற்கு மிக உல்லாசத்தைத் தந்தது. ஆனால் அந்தப் பெண் யார் என்று தெரிந்து கொள்ளாமல் போனதுதான் அவன் செய்த தப்பு.''

''நகர்ந்தாயானால் முதுகு பிளந்துவிடும். யார் அந்தப் பெண்?'' சிம்மாத்ரி பார்த்துவிட்டான் என்று பாண்டுரங்கனுக்குப் புரிந்தது. ''என்னவோ! யாரோ மஞ்சரியாம்.''

''ஆளை எங்கே பார்த்தாய்?''

''டயர் பஞ்சராம்... ஸ்டெப்னியை மாற்றினேன்.''

''பஞ்சர் காருக்கு இல்லை. இதயத்தில்தான் ஆயிருக்கு. நீ மாற்றியது ஸ்டெப்னியை இல்லை. உன் மனதை.''

சிம்மாத்ரி சொன்னபோது பாண்டுரங்கன் உல்லாசமாய் காரேஜிற்குள் நடந்தான். மஞ்சரியின் உருவம் அவன் கண் முன்னாடி நிழலாடிக் கொண்டிருந்தது.

13037
14 3055915

ஹரிதரின் மாடிக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தான் பாண்டுரங்கன். கொஞ்சநேரம் அந்த மாடியையே பார்த்துக்கொண்டிருந்தான். சோகமே உருவெடுத்தாற்போல தென்பட்டது அந்த மாடி. உள்ளே போகலாமா வேண்டாமா என்று சில வினாடிகள் தயங்கினான். அவன் மார்பு உணர்ச்சிவசத்தால் படபடத்துக் கொண்டிருந்தது. மெதுவாய் காம்பவுண்டு கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நடந்தான்.

கால்கள் நடக்க மறுத்தன. பலவந்தமாய் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்துக்கொண்டிருந்தான். ஓரிடத்தில் அப்படியே நின்றுவிட்டான் அவன்.

ரோஜாச் செடிகளைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டான் பாண்டுரங்கன். ஒரு காலத்தில் அரண்மனை

உத்யானவனமாய் பூக்கள் பூத்துக் குலுங்கிய அந்த தோட்டம்... அவன் கண்களில் நீர் கிர்ரென்று சுழன்றது.

"மேடம், இந்த உலகமே நம்பினாலும் நம்பா விட்டாலும் நான் லட்சியம் செய்யமாட்டேன். நான் குற்றமற்றவன் என்று உங்களுக்குத் தெரியும். உங்களை மிகக் கொடுமையாய் இம்சித்து என் கண்முன்னாடியே கொன்ற கொலையாளிகளை வேட்டையாடி இம்சித்து, நரகவேதனையை அனுபவிக்கும்படிச் செய்து கொல்வேன்! எனக்கு வாழ்க்கை மேல்கூட ஆசையில்லை. என் சபதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு நீங்கள்தான் எனக்குச் சக்தியைத் தரவேண்டும். நான் வெற்றிபெறும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் என் மனம் சாந்தியடையும்."

அவனுக்கு அழுகை வந்துவிட்டது. கால்கள் நடுங்க கேசத்தைப் பற்றிக்கொண்டான் கைகளால்— "உங்களைக் காப்பாற்ற முடியாத இந்த துரதிர்ஷ்டசாலியை மன்னித்து விடுங்க மேடம்." கைகளால் தலையில் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டு தரையில் சரிந்தான். அதே சமயத்தில்—

அவன் தோளில் ஒரு கை படிந்தது! குளிர்ந்த ஸ்பரிசம். தேற்றுவதுபோல—அபயமளிப்பது போல தோன்றிற்று பாண்டுரங்கனுக்கு. மெதுவாய் திரும்பிப் பார்த்தான். உதாசீனமாய் நின்றபடி சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ஹரிதர்

பாண்டுரங்கன் ஹரிதரின் கால்களைக் கட்டிக்கொண்டு விட்டான். "நான் குற்றமற்றவன். எந்தப் பாவமும் செய்யலை நான்" ஓவென்று கதறிவிட்டான் பாண்டுரங்கன்.

ஹரிதர் அவன் தோளில் பரிவோடு தட்டினான். குழிவிழுந்த அக்கண்களில் பாண்டுரங்கனைப் பார்த்த மகிழ்ச்சி மின்னிக்கொண்டிருந்தது.

"சிநேகிதர்களை பிஸினெஸ் பார்ட்னர்களாய் நம்பியதற்கு துரோகம் செய்துவிட்டார்கள். நீதிமன்றத்திற்குக் கண்கள் இல்லை. எந்த ஆதாரமும் கிடைக்க முடியாமல் உன் கழுத்தை முறுக்கி உன்னை ஜெயிலுக்கு அனுப்பிட்டாங்கன்னு தெரியும். ஆனால் நீ வாயைத் திறந்து ஒரு வார்த்தைச் சொல்லியிருந்தாலும் கூட ஒருக்கால் உன்னை என்னால் காப்பாற்ற முடிந்திருக்கா துன்னே நினைக்கிறேன். உனக்குத் தெரியும்ப்பா! மேடம் தான் என்வாழ்க்கையின் ஒளியே! அவளோடேயே என்வாழ்க்கையும் போயிடுத்து! அவள் இல்லாத இந்த வாழ்க்கையை என்னால் ஒரு நிமிஷங்கூட தொடர முடியலை. அப்படிப் பட்ட சமயத்தில் என் பிஸினெஸ்ஸைக் கூட நன்றாய் வீழ்த்தி விட்டார்கள். என் மனைவியின் மறுஉருவமான என் குழந்தையின் உருவில் அவளைப் பார்த்து ஆறுதலடைஞ்சுட்டிருக்கேன்."



அப்பொழுதுதான் பார்த்தான் பாண்டுரங்கன். ஹரிதரின் இடதுகையும் காலும் பக்கவாதத்தால் பாதிக்கப் பட்டிருந்ததை கவனித்தான். "சார், இதென்ன அநியாயம்? கடைசியில் தெய்வமே கூட உங்களைப் பழித்தீர்த்துக் கிட்டுதா?"

ஹரிதரின் உதட்டில் வேதனைப் புன்னகையொன்று நெளிந்தது.

"என் விஷயத்தை விட்டுத்தள்ளு. கள்ளங்கபடமறியாத சின்னவயதில் நீ ஜெயிலுக்குப்போக நேர்ந்தது. உன் இதயத்தில் எப்படிப்பட்ட பழிவாங்கும் உணர்ச்சி கொதித்துக்கொண்டிருக்கும் என்று நான் அறிவேன். ஆறுதல்மொழி இந்தத் துன்பத்தைத் தணித்துவிடாது. புலியானது குரூர மிருகம் என்று தெரிந்தும்கூட அதைச் கொல்லச் சட்டம் ஒப்புக்கொள்ளாது. பத்துக்கொலைகளைப் பண்ணிய கொலைக்காரனைக் கொல்லுவதற்குக்கூட சட்டம்சம்மதிக்காது. அதனால்தான் எதிரிகளை சாமர்த்தியமாய் வீழ்த்தணும். அவங்க விரலாலேயே அவங்க கண்ணைக் குத்திக்கணும். உன் கையில் மண் ஒட்டிக்கக் கூடாது. இவ்வளவு நாளாய் தூக்கமில்லாமல் உன் இதயத்தில்

கொப்பளித்துக்கொண்டிருந்த குமுறலை இனி எதிரிகளின் இதயத்தில் மரண ஓலமாய் மாற்றவேண்டும்.''

வயோதிகனைப்போல தோற்றத்தில் மாறிப்போயிருந்த ஹரிதரின் குரல் வெகுநாட்களுக்குப் பிறகு கம்பீரமாய் ஒலித்தது.

''டாடி''

அந்தக் குரலைக்கேட்டு ஹரிதருக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டிருந்த பெண்ணைப் பார்த்த பாண்டுரங்கன் அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை.

சகுந்தலா அந்த வயதில் அப்படித்தான் இருந்திருப்பாளோ என்னவோ? தாயின் ஜாடையையே உரித்து வைத்திருந்தாற்போல தோற்றமளித்த அப்பெண்ணை பத்மினி என்று உணர்ந்துகொண்டான் பாண்டுரங்கன்.

''அடையாளம் தெரிஞ்சுதா? என் பெண் பத்மினிதான் சட்டம் படிக்கிறாள். ''மகளை அன்போடு பார்த்துச் சொன்னார் ஹரிதர். ''இவர் பாண்டுரங்கன். மம்மியின் கொலை வழக்கில் ஜெயிலுக்குப்போன நிரபராதி-ஐம் அ கரெக்ட் டாடி?'' என்றாள் பத்மினி.

''அம்மா''

''எஸ் டாடி. உங்க ரெண்டுபேர் பேச்சையும் கேட்டேன். இப்ப நான் இருக்கிற அதே லைனில்தான் இவரும் இருக்கிறார். இவ்வளவு நாளாய் குண்டுகள் இல்லாத துப்பாக்கியைக்கொண்டு எதிரிங்களை எப்படி வீழ்த்தணும்னு தெரியாமலிருந்தது. இப்பத்தான் எனக்கு ஒரு குண்டு கிடைச்சிருக்கு டாடி. இந்த குண்டாலேயே அவங்களை நாசமாக்குகிறேன்.'' பாண்டுரங்கனுக்கு பத்மினியின் வார்த்தைகளிலிருந்த உள்ளர்த்தம் புரிந்துவிட்டது.

''இங்கே அப்பு இருந்தானே. இப்பொழுது எங்கே அவன்?'' கேட்டான் பாண்டுரங்கன் யோசனையுடன்.



''அந்தக் கேள்விக்கு பதில் சொல்றதுக்கு முன்னால் உங்க டேஸ்ட் தெரியணும் எனக்கு'' என்றாள் பத்மினி.

''என்ன டேஸ்ட்?''

''சொல்றேன். நாம்ப ஷாப்பிங்கிற்குப் போகிறோம் இப்போது''

''போயிட்டு வாங்கம்மா'' என்றான் ஹரிதர் மகள் வார்த்தைக்கு மறுப்புச் சொல்லாமல்.

''கமான்'' என்று பத்மினி காரை நோக்கி நடந்தாள். பாண்டுரங்கன் காரில் பின்சீட்டில் ஏறி உட்கார்ந்துக்கொண்டான். பத்மினி அவனைக் கோபமாய் பார்த்தாள்.

''நான் ஒன்றும் உங்க டிரைவர் இல்லை. முன்னால் வந்து உட்கார்ந்துக்கலாம்.''

அவன் பதில் பேசாமல் வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

பத்து நிமிஷத்தில் கார் ஒரு துணிக்கடைக்கு முன்னால் வந்து நின்றது.

''கமான்'' என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டே உள்ளே நடந்தாள். கடைக்காரர்கள் பத்மினியை மதிப்போடு வரவேற்றார்கள். பலவிதமான புடவைகளை அவளுக்கு முன்னால் எடுத்துப் போட்டார்கள் சேல்ஸ்மேன்கள்.

''ஒரு புடவையை செலெக்ட் செய்யுங்க'' என்றாள் பத்மினி பாண்டுரங்கனைப் பார்த்து. அவன் ஒரு புடவையை எடுத்துத் தந்தான்.

''இந்தப் புடவை உனக்கு ரொம்ப நன்றாயிருக்கும்'' என்றான்.

''குட். வெரிகுட். மம்மி இப்படிப்பட்டதைத் தான் தேர்ந்தெடுப்பாங்க. என் டேஸ்ட் கூட இதேதான்'' என்றாள் பத்மினி சிரித்துக்கொண்டே.

அதற்குள் கடைக்கு முன்னால் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து கடை முதலாளி இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததுமே பாண்டு ரங்கனின் முகத்தில் நிறங்கள் மாறத்தொடங்கின. உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன.

''அப்பு!'' அவன் வாயிலிருந்து ஒவ்வொரு எழுத்தாய் வெளிவந்து கொண்டிருந்தது. கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.

''உஷ்! அவசரப்படாதீங்க. என்ன செய்யணும்னு நான் அப்புறமாய் சொல்றேன். உங்கக் கண்ணில் தென்படுகிற அந்த நிப்பொறிதான் என் டேஸ்ட்'' என்றாள் பத்மினி மெல்லிய குரலில்.

''ஹலோ அப்பு!'' கூப்பிட்டாள் பத்மினி.

அப்பு பத்மினியைப் பார்த்துச் சிரித்துவிட்டு— ''செலெக்ஷன் ஆயிடுத்தா?'' என்று கேட்டபடியே அவளுச்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பாண்டு ரங்கனைப் பார்த்தவன் அதிர்ந்துவிட்டான். ''இவன்?'' அவன் புருவங்களை நெறித்துக்கொண்டே பார்த்தான்.

''என் பாய் ஃபிரெண்ட்'' என்றாள் பத்மினி—அப்பு விடம் தென்பட்டுக் கொண்டிருந்த கலவரத்தை கவனித்த படியே!

பில்லைக் கொடுத்துவிட்டு வெளியே வந்துகொண்டே திரும்பிப் பார்த்தாள். அப்பு போன் செய்துகொண்டிருந் தான். அவன் யாருக்குப் போன் செய்கிறான் என்று அவளுக்குத் தெரியும்.

''நீ இல்லாமலிருந்தால் அவனைக் கண்டந்துண்டமாய் வெட்டிப் போட்டிருப்பேன்'' என்றான் பாண்டுரங்கன்.

''அந்த அவசரந்தான் வேண்டாங்கிறது. என்ன செய்ய ணும்னு நான் சொல்றேன்'' என்றாள் பத்மினி காரில் ஏறிக் கொண்டே.



''சொல்லு.''

''இன்றிரவு இந்த ஷாப் எரிந்து சாம்பலாயிடணும்'' பத்மினி உறுதியாய் சொன்னாள். அதற்குமேல் எதுவும் சொல்லத் தேவையிருக்கவில்லை பாண்டுரங்கனுக்கு. அதை எப்படிச் செய்து முடிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

கார் நகர்ந்தது.

# 15

மெய்ன்ரோடில் ஒருபக்கமாய் காரை நிறுத்தினாள் பத்மினி. வீதியில் வாகனங்களின் நெரிசல் இன்னும் குறைய வில்லை. அவள் காருக்குள்ளேயே உட்கார்ந்திருந்தாள். கைக்கடியாரத்தைப் பார்த்துக்கொண்டாள். இரவு ஒன்பது மணி.

பெட்டிக்கடையைத் தவிர ஏறக்குறைய எல்லா கடைகளையுமே மூடிவிட்டார்கள். பாண்டுரங்கன் காரி லிருந்து இறங்கினான். அங்கிருந்து கொஞ்சம் தூரத்தி லிருந்த அப்புவின் துணிக்கடையைப் பார்த்தான்.

'சேல்ஸ் க்ளோஸ்ட்' என்ற போர்டு வைக்கப்பட்டி ருந்தது. அதுதான் சரியான சமயம் என்றெண்ணிக் கொண்டான் பாண்டுரங்கன் மனதிற்குள்ளேயே.

பிற்பகல் கடைக்குப் போனபொழுது அப்பு தன்னைப் பார்த்து கலவரமடைந்ததைக்கவனித்தான் பாண்டுரங்கன். அதனால்தான் இப்பொழுது அவன் தன் உருவத்தை மாற்றிக்கொண்டான் அடையாளம் தெரியாதபடி. தாடி. கண்களுக்கு ரெபன் கிளாஸுகள், தலையில் தொப்பி வைத்துக்கொண்டான். ஸ்வெட்டரைப் போட்டுக் கொண்டு மேலே கோட்டை மாட்டிக்கொண்டான். அவனைப்

பார்த்த யாருமே பிற்பகல் தம் கடைக்கு வந்தவன் அவன் தான் என்று சொன்னால் நம்பமாட்டார்கள். அவன் வேஷம் மாற்றிக்கொண்டதை பத்மினி சுயமாய் பார்த்திருக்காவிட்டால் அவளேகூட நம்பியிருக்க மாட்டாளோ என்னவோ?

சின்ன பௌடர் டப்பா சைசில் இருந்த ஒரு பொருளை பத்மினி அவனிடம் சிரித்துக்கொண்டே தந்தாள் ''ஜாக்கிரதை'' என்று. அவன் அதை மிக ஜாக்கிரதையாய் வாங்கிக்கொண்டு ஜேபியில் வைத்துக்கொண்டு மிடுக்காய் அந்தக் கடைக்குள் நுழைந்தான்.

சேல்ஸ்மேன்கள் தாறுமாறாய் இறைந்து கிடந்த துணிகளையெல்லாம் சரியாய் மடித்து வைத்துக்கொண்டிருந்தார்கள். கேஷ் கௌண்டரைக்கூட மூடிவிட்டார்கள். ஷட்டரை இறக்குவதற்காக ஒருத்தன் முயன்றுகொண்டிருந்தபோது மளமளவென்று கடைக்குள் நுழைந்தான் பாண்டுரங்கன்.

''ஒரு புடவை வேணும்'' கேட்டான்.

''சேல்ஸ்ஸை க்ளோஸ் செய்துட்டோம்'' சொன்னான் சேல்ஸ்மேன்.

''ப்ளீஸ்! இன்னிக்கு என் சிநேகிதியின் பிறந்தநாள்! நான் ஊருக்கு வருவதற்குள் தாமதமாயிடுத்து! நீங்கள் மறுத்தால் விழாவையே முற்றிலும் பாழடித்தவர்களாவீங்க'' மிக தீனமாய் வேண்டிக் கொண்டான் பாண்டுரங்கன். அவன் கை கோட்டு ஜேபிக்குள் சுருசுருப்பாய் நெளிந்து கொண்டிருந்தது.

''இப்ப விற்கமுடியாது'' சேல்ஸ்மேன் திரும்பவும் சொன்னான்.

''உங்க முதலாளி எங்கே?''

''அதோ'' சுட்டிக் காட்டினான் பணத்தை எண்ணிக் கொண்டிருந்த அப்புவை.



பாண்டுரங்கன் மளமளவென்று அவனை நோக்கி நடந்தான்.

''சார் எனக்கு அர்ஜென்ட்டாய் ஒரு புடவை வேணும். உங்கள் ஆட்கள் தரமுடியாதுங்கிறாங்க.''

''சேல்ஸ் முடிந்த பிறகு தரமாட்டாங்க. நாளைக் காலையில் கடை திறந்த பிறகு வாங்க.''

''எனக்கு இப்ப ரொம்ப அவசரம்'' பாண்டுரங்கனின் முகத்தை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான் அப்பு.

''அவ்வளவு அவசரமா?''

''ஆமாம். என் சிநேகிதி ஒருத்தி—விரைவில் எனக்கு வாழ்க்கைத் துணைவியாகப் போகிறாள். அந்தக் காதலியின் பிறந்தநாள். வெறும் கையோடு போனால் நன்றாயிருக்காது.''

''பொறந்த நாளுக்கு இப்பத்தானா போவாங்க?'' அப்பு லேசாய் சிரித்தான்.

''ஊரிலிருந்து வரத் தாமதமாயிடுத்து. பஸ் வழியில் கெட்டுப்போயிடுத்து.''

''இந்தா மங்கேஷ், இவருக்குப் புடவை வேணுமாம் பாரு'' என்றான் அப்பு. போய் எடுத்துக்குங்க. மங்கேஷ் என்ற சேல்ஸ்மேன் கொஞ்சம் எரிச்சலோடு பார்த்தான் பாண்டுரங்கனை. அவன் சிரித்துக்கொண்டு அவனிடம் போனான்.

ஒரு பத்துப் புடவையை எடுத்து அவனுக்கு முன்னால் போட்டுவிட்டு ''சீக்கிரமாய் எடுத்துக்குங்க.'' என்றான் சேல்ஸ்மேன் எரிச்சலுடன்.

சீக்கிரத்தில் கடையைவிட்டுப் போகத் துடித்துக் கொண்டிருந்தார்கள் ஊழியர்கள்.

பாண்டுரங்கன் ஒரு புடவையை எடுத்து ''இது என் காதலிக்கு நன்றாயிருக்கும். பேக் செய்'' என்றான்.

''உன் காதலி சிவப்பாய் இருப்பாளோ?'' என்று கேட்க வேண்டும் போலிருந்தது சேல்ஸ்மேனுக்கு. ஆனால் அவன் தோற்றத்தைப் பார்த்து பயந்து சும்மாயிருந்தான்.

சேல்ஸ்மேன் அந்த பக்கமாய் போனதுமே கோட் ஜேபிக்குள்ளிருந்த பொருளின் மூடியை விலக்கி அதிலிருந்த நான்காய் மடித்து வைத்திருந்த ஒரு ஈரத்துணியை எடுத்து மேஜைமேலிருந்த ஒரு புடவை மடிப்பிற்குள் வைத்து விட்டான் பாண்டுரங்கன்.

அப்புடவைகளை ஒரு இளைஞன் வந்து எடுத்துச் சென்று உள்ளே ஷெல்பில் வைத்துவிட்டான். பாண்டுரங்கன் நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டான். தன் வேலையைத் தடங்கலின்றி முடித்துவிட்டான். அது அவன் முதல் முயற்சி! எதிரிகளை நோக்கி எடுத்துக்கொண்டிருந்த முற்றுகை—வெற்றிகரமாகப் போகிறது.

அவன் வாங்கியப் புடவை சுமார் முன்னூறு ரூபாய் விலை மதிப்புக்கொண்டது. ஆனால் அதை அறுநூறு ரூபாய்க்குத் தன் தலையில் கட்டிவிட்டவிஷயம் அவனுக்குத் தெரியா விட்டாலும் அக்கடை எரிந்து சாம்பலாகிவிடப் போகிறது என்ற விஷயம் மட்டும் நன்றாய் தெரியும்.

பில்லைத் தந்துவிட்டு பாக்கெட்டுடன் அப்புவை நோக்கி நடந்தான் பாண்டுரங்கன்.

''தாங்க்யூ, எங்கக் கல்யாண ஜவுளிகளைக்கூட இங்கேயே வாங்குகிறோம்'' என்றான்.

''பொண்ணுக்குப் புடவை பிடிக்காவிட்டால் நாளைக் காலையில் வந்து மாற்றிக்குங்க'' என்றான் அப்பு.

''ஓ. கே. ஓ. கே. ஆனால் மாற்றிக்க வேண்டிய தேவையே இருக்காது. என் செலக்ஷன் என் காதலிக்கு ரொம்பவும் பிடித்துப் போயிடும்'' என்று முறுவலுடன் வெளியே நடந்தான் பாண்டுரங்கன்.



''இப்படிப்பட்ட கஸ்டமருங்க கிடைத்தால் நம்ப முதலாளி மெட்ராசையே விலைக் கொடுத்து வாங்கிடு வார்''—சேல்ஸ்மேன் மெதுவாய் பக்கத்திலிருந்தவனிடம் சொன்னான். அது பாண்டுரங்கனின் செவியில் விழுந்து விட்டது. அவன் சிரித்துக் கொண்டான். இன்னும் அரை மணிக்குள் அந்தக்கடை சாம்பலாகி விட்டால் அப்பு கப்பரையைக் கையில் ஏந்திக்கொள்ள வேண்டியிருக்கும். அதனால்தான் அவன் அந்தப் பேச்சைப் பொருட்படுத்த வில்லை. அப்புவைக் கைக்குள் போட்டுக்கொண்டு அவன் மூலமாகவே எதிரிகள்மீது முற்றுகையைத் தொடங்க வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தான் பாண்டுரங்கன்.

அவன் காரை அணுகிக் கதவைத் திறந்து உள்ளே உட்கார்ந்துக் கொண்டான். புடவை பாக்கெட்டை அவள் மடியில் போட்டான். அதைக் கையில் எடுத்துக்கொண்டு— ''என்ன, வேலை ஆச்சா?'' கேட்டாள் பத்மினி முன் நெற்றியில் வந்து படிந்த கேசங்களை ஒதுக்கிக்கொண்டே.

''ஆங்'' என்றான் அவன் லேசாய் சிரித்துவிட்டு கடை மூடும் வரைக்கும் காருக்குள்ளே உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தார்கள் இருவரும். அவர்கள் கடையை மூடு வதற்குள்ளாகவே தீப்பிடித்துக் கொண்டு விட்டால் தம் பிளான் பாழாகி விடும். அடுத்த பத்து நிமிஷத்தில் அப்பு கடையை மூடிவிட்டுப் புறப்பட்டான். அதைப் பார்த்த பிறகுதான் நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டார்கள் இருவரும்.

''இன்னும் எவ்வளவு நேரமாகும்?'' கேட்டாள் பத்மினி.

''ஈரத்துணி உலர்ந்ததுமே அதிலுள்ள பாஸ்பரஸ் பற்றி எரியும். தீ கொஞ்சங் கொஞ்சமாய் பரவி கடை முழு வதும் எரிந்து சாம்பலாகிவிடும்'' அவன் சொன்னான்.

அவன் காரைக் கிளப்பினான்.

''எங்கே?'' கேட்டான்.

''இங்கேயே இருந்தால் நம்மை யாராவது சந்தேகப்பட ஏது உண்டு''

கார் வேகமாய் புறப்பட்டது.

அவன் பதில் பேசவில்லை. அவள் வார்த்தைகளில் இருந்த உண்மையை உணர்ந்தான்.

## 16

இரவு பத்தரை ஆயிற்று. ஒவ்வொரு பத்து நிமிஷங்களுக்கு ஒரு தடவை அந்தக் கார் வீதியின் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப்பக்கமும் இந்த பக்கத்திலிருந்த அந்தப் பக்கமுமாய் வேகமாய் போய்க் கொண்டிருந்தது வெறிப் பிடித்தாற்போல.

பாண்டுரங்கன் உற்சாகம் இழந்தவனாய் பார்த்தான் அவளை. கடைமூடும்போது எப்படி இருந்ததோ அதே போலவேதான் இருந்தது. அது தீப்பற்றி எரியக்கூடிய அறிகுறிகள் எதுவுமே தென்படவில்லை. தான் வைத்த ஈரத்துணி புடவையிலிருந்து நழுவிப் போயிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது அவனுக்கு. அதனால் அவன் உற்சாகம் வடிந்து கொண்டிருந்தது!

தெருவில் ஜனநடமாட்டமே மிகக் குறைவாயிருந்தது.

''நம் முயற்சி வீணாயிடுத்து போலிருக்கு'' சோர்வுடன் சொன்னான் அவன்.

பத்மினி பதில் பேசவில்லை. அவள் மூளை மின்னல் வேகத்தில் யோசித்துக் கொண்டிருந்தது. காரைக் கொஞ்சம் தூரத்தில் நிறுத்திவிட்டாள் பத்மினி.

''நீங்க சரியாய்தானே வைத்தீங்க?''



''ரொம்ப ஜாக்கிரதையாய் வைத்தேன்.''

''என்ன வெச்சீங்களோ? எப்படி வைக்கணுங்கிறதுகூட தெரியாவிட்டால் எப்படி? நம்ப பிளானே கை நழுவிப் போயிடுத்து போலிருக்கு.'' மனமொடிந்து சொன்னாள் பத்மினி.

சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டே கடையை நோக்கித் திரும்பினான்.

திடீரென்று அவன் கண்கள் மின்னின. கடைக்குள்ளிருந்து ஷட்டர்களுக்குக் கீழேயும் பக்கங்களிலும் புகை சூழ்ந்து வெளிவந்து கொண்டிருந்தது.

''ஹுர்ரே'' பெரிதாய் கத்திவிட்டான் பாண்டுரங்கன்.

''சக்ஸஸ்'' அவன் கையை அழுத்தினாள் பத்மினி. புகை பரவி கடையிலுள்ள துணிகளை எரித்துக் கொண்டிருக்கிறது. அது போதும்!

அடுத்த பத்து நிமிஷத்திற்குள் அத்தனையும் சாம்பலாகி விடும்.

கார் நகர்ந்தது. அங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த பெட்ரோல் பங்கிற்கு அருகில் காரை நிறுத்திவிட்டு யோசனையுடன் அவனைப் பார்த்தாள் பத்மினி.

அவன் உற்சாகத்துடன் காரிலிருந்து கீழே குதித்தான். பங்கிற்குள் வேகமாய் ஓடிப்போய் பங்க் முதலாளியைக் கேட்டு டெலிபோனைக் கையிலெடுத்துக் கொண்டான்.

அப்புவிற்குப் போன் செய்து, கடை தீப்பற்றி எரிந்துக் கொண்டிருக்கும் விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டான்.

எவ்வளவு வேகமாய் போனானோ அதே வேகத்துடன் வந்து காரில் ஏறிக்கொண்டு—''க்விக், சீக்கிரமாய் போ'' என்றான். பத்மினியின் கால் ஆக்ஸிலேட்டரை பலமாய்

அழுத்திற்று. கார் அம்பாய் பறந்தது. வீதி ஆளரவமில்லாமல் இருந்தது. அந்த வழியாய் தான் அப்பு வரவேண்டும்.

''இங்கே நிறுத்து'' என்றான்.

பத்மினி காரை சாலையோரமாய் நிறுத்தினாள். கார் நின்றதுமே பாண்டுரங்கன் கீழே இறங்கி சாலையோரத்தில் கிடந்த பெரிய பாறாங்கற்களை தூக்கி வந்து வீதிக்குக் குறுக்காய் வைத்தான். மரத்திற்குப் பின்னால் நின்றபடி அப்புவின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

சரியாய் ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு கார் அங்கே வந்து நின்றது. தெருவிற்குக் குறுக்காய் கற்கள் இருந்ததைப் பார்த்துவிட்டு அப்பு கலக்கத்துடன் கீழே இறங்கினான். அவன் அக்கற்களை அப்புறப்படுத்தும் முயற்சியில் இருந்த போது பின்னாலிருந்து வந்து— ''நகராதே. நகர்ந்தாயானால் உயிர் போயிடும்'' என்றான் பாண்டுரங்கன்.

அப்பு அதிர்ச்சியடைந்து விட்டான். அவன் மார்பு படபடத்தது.

''யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?'' பயத்தால் இதயம் படபடக்கக் கேட்டான்.

''அப்புறமாய் சொல்றேன். மொதல்ல காருக்குள் ஏறு.''

''என் கடை... எரிஞ்சுப் போயிட்டிருக்கு... நான் அர்ஜென்ட்டாய் போகணும்'' அப்பு அழாதகுறையாய் சொன்னான் தவித்துப்போய்.

''நீ போய் செய்யக்கூடியது எதுவுமில்லை. உன் கடை முழுவதும் எரிந்து சாம்பலாயிடுத்து''— கடுமையாய் சொன்னான் பாண்டுரங்கன்.

''என்னைப் போகவிடு. உனக்கு என்ன வேணுமோ சொல்லு'' கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டான் அப்பு.

''உன் உயிர்.''



''என் உயிரால் உனக்கென்ன லாபம்?''

''ரொம்ப லாபம் இருக்கு. பதில் பேசாமல் காரில் ஏறு. இல்லாவிட்டால் என் கையிலிருக்கும் துப்பாக்கி வெடித்து விடும். அதிலிருக்கும் குண்டு உன் மார்பில் இறங்கிவிடும். உன் உயிர் பறந்துவிடும்.''

''வேண்டாம் என்னைக் கொன்றுவிடாதே. பிள்ளைக் குட்டிக்காரன் நான்.''

''அப்படீன்னால் காரில் ஏறிக்கொள்'' கையிலிருந்த துப்பாக்கியை அவன் முதுகில் பொறுத்தினான் பாண்டுரங்கன். அது நிஜத்துப்பாக்கி அல்லவென்று அப்புவுக்குத் தெரியாது. அப்பு மெதுவாய் அடியெடுத்து வைத்தான். அவனைத் தொடர்ந்து பாண்டுரங்கன்.

தன்னை அடையாளம் தெரிந்து கொள்ளாமலிருப்பதற்காகக் கருப்பு கோஷாத் துணியைப் போட்டுக்கொண்டு பத்மினி அவர்களிடம் வந்தாள். கயிற்றால் அவன் கைகளைக் கட்டினாள். அவன் தப்பித்துக்கொள்ள முயன்று விடாமலிருப்பதற்காக பக்கத்திலேயே துப்பாக்கி மூலமாய் பயமுறுத்திக் கொண்டே உட்கார்ந்திருந்தான் பாண்டுரங்கன்.

பத்மினி காரைக் கிளப்பினாள். ஊருக்கு ஒதுக்குப்புறத்தில்—மலைப்பாங்கான அந்தப் பிரதேசத்தில்—மனித சஞ்சாரமில்லாத இடத்தில்—ஒரு மலையடிவாரத்தில் காரை நிறுத்தினாள் பத்மினி.

''உம்... இறங்கு'' கதவைத் திறந்தான் பாண்டுரங்கன். அவன் இறங்கப்போவதற்குள் காலால் படீரென்று தள்ளினான்.

''ஐயோ!'' மரண ஓலத்தைப்போல முழங்கிக் கொண்டே காரிலிருந்து பந்தாய் உருண்டு வெளியே வந்து விழுந்தான் அப்பு. பயந்துப்போய் அவன் அலறிய அலறல்

அவ்வெல்லையெல்லாம் எதிரொலித்தது. ஆனால் அவ்வெல்லையில் அவனைக் காப்பாற்றுவதற்குக் கடவுளேகூட வரமுடியாத நேரம் அது. அவ்விடத்திலேயே சிகரெட்டைப் புகைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த சிம்மாத்ரி புலியாய் பாய்ந்தான் அப்புவின் மீது. அவன் கேசங்களைப் பற்றிக் கொண்டு முகத்தில் ஓங்கி குத்தினான். பாண்டுரங்கன் அறிவித்திருந்ததால் முன்கூட்டியே அங்கு வந்து சேர்ந்திருந்தான் சிம்மாத்ரி.

"ஏன்? நான் என்ன செய்தேன்னு என்னை இப்படி இம்சிக்கிறீங்க?" கதறினான் அப்பு.

"நீ என்ன செய்தாய்னு உனக்கா தெரியாது? குள்ளநரியே!— உன்னைக் கண்டதுண்டமாய் வெட்டி காக்கைகளுக்கும் ஓநாய்களுக்கும் இரையாய் போட்டாலும் கூட நீ செய்த பாவத்திற்கு இணையாகாதுடா."

"நான் ஒண்ணுமே செய்யலையே? எனக்கொண்ணுமே தெரியாதே! என்னை விட்டுவிடுங்க. என்னைக் கொன்னுடாதிங்க" லபோதிபோவென்று அடித்துக் கொண்டான் அப்பு.

பாண்டுரங்கனின் கண்களில் தீப்பொறி பறந்து கொண்டிருந்தது மங்கலான அந்த வெளிச்சத்தில் நன்றாய் தெரிந்தது.

"உப்பிட்ட வீட்டிற்குக் கன்னம்வைத்தப் படுபாவிடா நீ! கள்ளங்கபடமறியாத ஒரு பெண்ணை மிகக் கொடுமையாய் கொல்ல ஒத்துழைத்த கிராதகன் நீ!" வயிற்றில் குடல் சரிந்து விடும்போல, பூட்ஸ்காலால் தள்ளினான் பாண்டுரங்கன்.

"ஐயோ, செத்தேனே" புழுவாய் நெளிந்து கொண்டிருந்தான் வலியால்.

"சொல்லு! சகுந்தலாவைக் கொலை செய்றத்துக்கு முன்னாடி என்ன நடந்ததுன்னு சொல்லு."



"எனக்குத் தெரியாது."

"தெரியாதா?" சிம்மாத்ரி அவன் கேசத்தைப் பற்றிக் கொண்டான்.

"அந்தப் பையன்தான்... அம்மாவின் மாணவன்... கொன்றான்... அவன் பெயர் பாண்டுரங்கன்" மூச்சிரைத்தது அப்புவுக்கு.

அதைக்கேட்ட பாண்டுரங்கனுக்குப் பதைபதைத்தது தேகம்.

"அடேய் போக்கிரி! நான்தாண்டா அந்த பாண்டுரங்கன். உன் உயிரை எடுப்பதற்காக வந்திருக்கும் பிரளயகால ருத்திரன்டா நான்" அப்புவை நிற்கவைத்து சுலீரென்று அடித்தான்.

அந்த உதைக்கு அந்தப் பக்கத்திலேயே ஆளுயரத்திற்குத் தோண்டப்பட்டிருந்த குழிக்குள் போய்விழுந்தான் அப்பு. அந்தக் குழியை சிம்மாத்ரி முன்கூட்டியே தோண்டி ரெடியாய் வைத்திருந்தான்.

"உன்னை இந்தக் குழிக்குள்ளேயே சமாதியாக்கி விடுகிறேன்" பற்களை நறநறவென்று கடித்தான் பாண்டுரங்கன்.

"வேண்டாம். என்னை ஒன்றும் செய்யாதீங்க. உங்களுக்கு எவ்வளவு பணம் வேணுமானாலும் தர்து டறேன். என்னை உயிரோடு விட்டுவிடுங்கள். கையெடுத்துக் கும்பிடுகிறேன் உங்களை."

"உயிரின் மேல் எப்படிப்பட்ட ஆசை இருக்கும் என்றும், உயிருக்கு அபாயம் நேர்ந்தால் எப்படி இருக்கும் என்றும் நீ புரிஞ்சுக்கணும். உனக்கு இது அந்திம நேரம்."

பத்மினியும் சிம்மாத்ரியும் பள்ளத்தில் மண்ணைத் தோண்டிப் போடத் தொடங்கினார்கள். அப்பு கதறிக் கொண்டிருந்தான். சவு, இரக்கம் என்பது அம்மூவரிடமும் இல்லை.

''ஒரு அப்பாவிப் பெண்ணைக் கயவர்கள் மூவரும் மானபங்கம் செய்யவும் கொல்லவும் உதவிய அரக்கன் நீ எந்தப் பாவமும் அறியாத என்னை ஜெயிலுக்கு அனுப்பிய பாவி நீ. உன்னை விட்டுவிட்டால் என்னை தெய்வமேகூட மன்னிக்காதுடா அப்பு. அதனால்தான் முதலில் உன்னைக் கொன்றுவிட்டு உன் எஜமானர்களின் இதயத்தில் இபய பேரிகையை வாசிக்கச் செய்கிறேன்.''

கழுத்து வரையிலும் புதைத்தார்கள் அப்புவை. அவன் தலையின்மேல் பூட்ஸ் காலை வைத்தான் பாண்டுரங்கன்.

''மொதல்ல உன் கடையை எரித்தேன். இப்பொழுது உன் உயிரையும் எடுக்கப்போகிறேன். பிறகு உன் மனைவி, குழந்தைகள்... வரிசையாய்... அன்றைக்கு நீங்கள் இம்சித்துக் கொன்ற அந்த புண்ணிய ஆத்மாவின் மனநிம்மதிக்காக ஒன்றிற்குப் பத்துமடங்கு உங்களை இம்சித்துக் கொல்வேன்.''

அப்பு ஓவென்று கதறித் தீர்த்துவிட்டான்.

''சிம்மாத்ரீ... ஆகட்டும்...'' சிம்மாத்ரி ஒரு சீசாவி லிருந்து தேனை எடுத்து அப்புவின் முகத்திலும் தலையிலும் [illegible]ஊற்றினான்.

''இதென்னது?... இதென்னது?'' கத்தினான் அப்பு.

''காத்திருந்து பாருடா அயோக்கியனே!'' என்றான் பாண்டுரங்கன். அப்புவை அவன் படுத்திக்கொண்டிருந்த இம்சையைக் கண்ணால் காண சகிக்கவில்லை பத்மினிக்கு. ஆனால் தன் தாயின் மரணத்திற்குக் காரணகர்த்தாவாய் இருந்த அவனுக்கு இந்த தண்டனை தகுந்தது தான் என்று மனதை சரிப்படுத்திக் கொண்டாள்.

ஒரு டப்பாவின் மூடியைத் திறந்து அவன் தலையைச் சுற்றிலும் தெளித்தான் பாண்டுரங்கன். நன்றாய் கொழுத்திருந்த சிவப்பு எறும்புகள்... மெதுவாய் கும்பல் கும்பலாய் தேன் பூசிய அவன் முகத்தில் படர்ந்து கொண்டிருந்தன.





''ஐயோ... ஐயோ! செத்துப் போயிட்டிருக்கேன். காப்பாற்றுங்கள்.''

''யாரைக் கூப்பிடுகிறாய்? உன்னைக் காப்பாற்ற இங்கே யாரும் வரமாட்டாங்க. ஒருக்கால் வந்தாலும் அவனுக்கும் இதே கதிதான் ஏற்படும்'' எறும்புகள் அவன் முகத்தைப் பிடுங்கிக்கொண்டிருந்தன. வாயிலும், கண்களி லும் மூக்கிலும் காதுகளிலுமாய் போய்க்கொண்டிருந்தன.

மின்சாரம் ஷாக் அடித்தாற்போல... நரம்புகளை ஊசியால் குத்தினாற்போல இருந்தது. அதைவிட வேறு நரகவேதனை இருந்திருக்காது.

''வேண்டாம், ஐயோ வேண்டாம்... இந்த நரகத்தி லிருந்து காப்பாற்றுங்கள். கொன்றே போட்டுவிடுங்கள். கொன்று புண்ணியம் கட்டிக்கொள்ளுங்கள். காப்பாற் றுங்கள், காப்பாற்றுங்கள்.''

குறைந்தபட்சம் அந்த எறும்புகளை உதறிக்கொள் வதற்குக்கூட கைகளை அசைக்க முடியாமல் கட்டிப்போடப் பட்டிருந்தது. அப்பு துடித்துடித்துக் கொண்டிருந்தான். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வழிந்துக்கொண் டிருந்தது.

மூக்குத்தண்டு உடைந்து போவதுபோல பட்டென்று பூட்ஸ் காலால் அடித்தான் பாண்டுரங்கன்.

''அம்மா'' கதறினான் அப்பு. ''என்னைக் கொன்று போட்டுவிடுங்க. நான் பாவி, நிஜந்தான். அம்மாவைக் கொன்றவங்களுக்கு உதவி செய்தேன். நம்பிக்கை துரோகி, சுயநலம் என்னை அப்படிச் செய்யவைத்தது. இப்படித் துன்புறுத்தாதீங்க. என்னைக் கொன்று போட்டுவிடுங்க'' ஓவென்று கதறினான். ''மொதல்ல என்னை இந்த நரகத்தி லேருந்து விடுதலை செய்யுங்க. நான் நடந்ததையெல்லாம் சொல்றேன்.''

பாண்டுரங்கன் கடுமையாய் சிரித்தான்.

''குள்ளநரித் தந்திரம் செய்தாயோ, என்ன செய்வேன் தெரியுமா?''

''தெரியும்'' அவனிடம் தைரியம் வந்துவிட்டது! சிம்மாத்ரியைப் பார்த்தான் பாண்டுரங்கன். முன்னேற்பாடாய் எடுத்துவந்திருந்த வாளியிலிருந்த நீரைக் கொண்டு வந்து அவன் முகத்தையெல்லாம் ஈரத்துணியால் துடைத்தான் சிம்மாத்ரி. அவன் வலியால் முக்கி முனகிக்கொண்டிருந்தான். முகமெல்லாம் சிவந்து, கன்றிப்போய் வீங்கிவிட்டிருந்தது.

''சொல்லு!'' அவனை நெருங்கி வந்து முழங்காலிட்டு அமர்ந்து கொண்டான் சிம்மாத்ரி.

''என்னை வெளியே எடுங்கள். மூச்சுவிட முடியவில்லை. தவிப்பாய் இருக்கு'' கெஞ்சிக் கேட்டுக்கொண்டான் அப்பு.

''ஓ.கே. ஆனால் பைத்தியக்கார வேஷம் போட்டாயானால் தலையைச் சீவிடுவேன்'' என்று சைகை காட்டினான் சிம்மாத்ரிக்கும் பத்மினிக்கும். அவர்கள் மண்ணை எடுத்துப் போடத்தொடங்கினார்கள். அப்புவுக்குப் போன உயிர் திரும்பி வந்தாற்போல இருந்தது. உடம்பு வெளியே வந்ததும், குளிர்ந்த காற்று படவே வலியை மறந்துபோகத் தொடங்கினான். அவனை வெளியே அழைத்து வந்து குடிக்கத் தண்ணீர் கொடுத்தான் பாண்டுரங்கன். பாரமாய் மூச்சுவிடடுக்கொண்டான் அப்பு.

''அவங்க ரத்தத்தைக் குடிக்கிற அதமர்கள் தம்பீ, சகுந்தலாம்மாவைக் கெடுத்துக் கொன்றுவிட வேண்டுமென்று முன்பே திட்டம் போட்டு கொண்டிருந்தாங்க. என்னை அவங்க சொல்றபடி நடக்கணும்னு பயமுறுத்தினாங்க. நான் அது தப்பு வேண்டாம் தம்பீன்னு வேண்டிக்கிட்டேன். என் மனைவியையும் என் மகளையும் கொன்று போட்டுவிடுவதாய் சொன்னாங்க. அதனால் நான் கட்டுப்பட்டுப் போயிட்டேன். நீ வந்ததுமே போன் செய்யச் சொன்னாங்க. அன்றிரவு நீ தங்கிவிட்டாய். நான் போன் செய்தேன். அந்தக் கயவர்கள் வந்துட்டாங்க. அப்புறமாய் நடந்தது உனக்குத் தெரியும்.''



''நீ பாறாங்கல்லை எதற்காகக் கொண்டுவந்தாய்?''

''அதைக்கூட அவங்க சொன்னபடிதான் செய்தேன் ஒருக்கால் அவங்க செய்த குற்றம் வெளிப்பட்டுவிட்டால் என்னையும் அதில் சிக்கவைத்து விடணும்னுதான் அப்படிச் செய்தாங்க.''

''இதெல்லாம் இல்லை. அவங்களைக் கொலையாளிகளாய் நிரூபிப்பதற்கு எனக்குத் தகுந்த சாட்சிகளும் ஆதாரங்களும் தேவை'' கேட்டான் பாண்டுரங்கன்.

அப்பு கலவரமடைந்தவனாய் பார்த்தான். ''தம்பீ! இப்படிப்பட்ட விஷயங்களைப் போலீசாரும் நீதிமன்றங்களும் உடனே குற்றவாளிங்களாய் தீர்மானித்துவிடாது. அதற்குள் அவங்க எப்படிப்பட்ட குற்றத்தையும் செய்துடுவாங்க. நம்ப தலையில் ஓங்கி அடித்துவிடுவாங்க—மேற்கொண்டு துளிர்க்க முடியாமல். நீ தனி ஆள். அவங்களை எதிர்க்கக்கூடிய துணிச்சல் உன்னிடம் இருந்தாலும் சரி, அவங்களை ஜெயிக்கமுடியுங்கிற நம்பிக்கை மட்டும் எனக்கு இல்லை'' என்றான் அப்பு சோர்வுடன்.

''அப்படீன்னால்?'' என்றான் பாண்டுரங்கன் பொறுமை இழந்து.

''அந்த அயோக்கியர்களைப் பற்றி நான் சிறப்பாய் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. உன்னை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு பிறகு உன் குடும்பத்தை சின்னாபின்னம் செய்தாங்க. அதைக்கொண்டு அவங்க குணம் எப்படிப்பட்டதுன்னு ஊகித்துக் கொள்''

பாண்டுரங்கனின் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன.

''அதனால்தான் அப்பு! பழிவாங்காமல் போனால் இந்த வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை. என் உயிரே போனாலும் பரவாயில்லை. ஆனால்... அவங்களை... வதைத்து... இம்சித்து... இம்சித்து மண்ணைக் கவ்வ வைக்கணும்.''

''நிஜந்தான். ஆனால்...''

''நீ இவ்வளவு பெரிய மனுஷனாய் எப்படி ஆக முடிந்தது?'' கேட்டான் சிம்மாத்ரி.

''நான் தின்னுட்டிருப்பது பாவச்சோறு. அவங்களுக்கு உதவி செய்ததற்குப் பணம் தந்தாங்க. அதைக் கொண்டு தான் வியாபாரம் வெச்சுக்கிட்டேன்.''

''உன்னை இவ்வளவு இம்சித்தது எனக்குத் தெரிஞ்ச விவரங்களையே திரும்பவும் உன் வாயால் கேட்கறத்துக்காக இல்லை அப்பு! நீ கெட்டிக்காரன். உன்னை இந்தக் குற்றத்தில் சிக்க வைத்துக்கிட்டிருக்காங்கன்னு உனக்கு முன்பே எனக்கு தெரியும்.''

''ஆமாம்.''

''அப்படீன்னால் நீ கொஞ்சமாவது ஜாக்கிரதையை மேற்கொண்டிருக்க வேண்டும், இல்லையா?''

அப்பு பதில் பேசவில்லை.

அவன் எதையோ மறைக்கிறான் என்று மூவருக்குமே புரிந்தது.

அவன் கண்களில் நீர் சுரந்தது.

''நடந்த இம்சைக்குத் திரும்பவும் மகா இம்சையைப் பண்ணவேண்டும் என்கிற கொள்கையில் நான் எப்படிப்பட்ட ஆபத்திற்கும் பின்வாங்க மாட்டேன். நீ எனக்கு உதவி பண்ணினால் உன்னைக் காப்பாற்றும்பொறுப்பு என்னைச் சேர்ந்தது. இல்லாவிட்டால் முதலில் உன் தலையை வெட்டிப் போட்டுவிட்டு அவங்களுக்குப் பரிசாக



அனுப்பி வைப்பேன்'' என்றான் பாண்டுரங்கன் கடுமையாய்.

அவன் வெறுமே பயமுறுத்துவதற்காக அல்லவென்றும் உண்மையிலேயே அந்தக் காரியத்தைப் பண்ணிவிடுவான் என்றும் அப்புவுக்குப் புரிந்துதான் இருந்தது. அவன் கண்களில் நீர் சுரந்துதான் இருந்தது.

''ஒரு குற்றத்தைப் பண்ணினால் தற்காலிகமாய் அதிலிருந்து கொஞ்சநாள் தப்பிக்க முடியுமே தவிர, என்றாவது ஒரு நாள் உண்மை வெளிப்படாமல் போகாதுன்னு எனக்குத் தெரியும் தம்பி. வாழ்க்கையில் மிகக் கொடுமையாய் தப்பு வழியில் போயிட்டேன். அந்தப் பாவத்திலிருந்து எனக்கு விமோசனம் வேணும்... உயிருக்கு அஞ்சிக்கிட்டே ஒவ்வொரு நிமிஷமும் செத்துட்டிருக்கிறதைவிட உனக்கு ஒத்துழைப்பதேமேல். அவங்க பண்ணிட்டிருக்கிற வியாபாரங்களையும், கொடுமைகளையும்பற்றி எனக்குத் தெரியும். கடைசியில் நீ ஜெயிலிலிருந்து விடுதலையான அன்றைக்கே உன்னைக் கொன்றுவிடக்கூட முயற்சிப் பண்ணினாங்க.''

பாண்டுரங்கனுக்கு ஜீப்பில் தன்னை குண்டர்கள் வேட்டையாடித் துரத்தியது நினைவிற்கு வந்தது.

''தம்பீ! நான் அவங்கக் கூடவே இருந்துட்டு, அவங்களை எப்பொழுது, எப்படி வீழ்த்தணும்னு உனக்குச் சொல்கிறேன். ஆனால் என்னை தவறாய் புரிஞ்சுக்கக் கூடாது''

''சரி''

இன்னொரு விஷயம். நீ சொன்னது போல நான் ஜாக்கிரதையை மேற்கொண்டது நிஜந்தான். சகுந்தலாம்மாவை அவங்க கெடுத்திட்டிருந்தபோது நான் போட்டோக்கள் எடுத்துக்கிட்டேன்.''

''சபாஷ்'' கத்திவிட்டான் பாண்டுரங்கன்.

''என்னிடந்தான் இருக்கு. என் மச்சினருக்கு ஸ்டியோ ஒன்று சொந்தமாய் இருக்கு. அவனைக் கொண்டு டெவலப் பண்ணிக்கொண்டு என்னிடம் பத்திரமாய் வைத்துட்டிருக் கேன். நெகிடிவ்ஸ்கூட இருக்கு.''

''உனக்கு போட்டோக்களை எடுக்கணும்னு ஏன் தோணிற்று?'' பத்மினி கேட்டாள்.

''நடக்கப்போற குற்றத்தைப் பற்றி முன்கூட்டியே தெரியும். அதனால் எப்பவாவது உதவணும்னுதான்''

''போலீஸ் ரிபோர்ட் தந்திருக்க வேண்டியது.''

''அப்ப இருந்த இன்ஸ்பெக்டர் ரத்தினம் அவங்க ஆள்தான் தம்பி. அதனால் அந்தக் காரியத்தைப் பண்ணலை''

''அப்பு, உன் கடை எரிஞ்சுப்போயிடுத்தேன்னு கவலை படாதே. உனக்கு நஷ்டமாகாமல் இன்ஷ்யூரென்ஸ் வரும் படியாய் நான் பார்த்துக்கறேன். நீ உடனே போட்டோக் களை பாண்டுரங்கனிடம் தந்துவிடு'' என்றாள் பத்மினி.

''சரிம்மா.''

''இந்த நிமிஷத்திலிருந்து நாம்ப ஒன்றாகிவிட்டோம்'' என்றான் பாண்டுரங்கன்—அப்புவோடு கைக்குலுக்கிவிட்டு.

அப்பு ஒருமுறை முகத்தைக் கைகளால் தடவிக்கொண் டான். பொர பொரவென்றிருந்தது முகம். எறும்புகள் பிடுங்கிய முகம்!

''பட்ட இந்த தண்டனை மூலமாய் பழைய அப்பு செத்துட்டான். இப்ப இந்த நிமிஷத்திலேருந்து கௌரவர் களின் பக்கத்தில் இருந்துக்கிட்டு அவங்களை நாசம் பண்ணு வதற்குக் காரணகர்த்தாவாய் இருந்த சகுனியைப்போல பாலாஜி பக்கமாய் இருப்பதுபோல நடித்து அவங்க அழி வுக்கு காரணமாகப் போறேன்.''



சுலபமாகவே அப்பு தன் பக்கமாய் சேர்ந்துவிட்டது பாண்டுரங்கனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

''நீ எங்கே தங்கியிருக்கிறாய்?'' கேட்டான் அப்பு பாண்டுரங்கனை. அவன் சொன்னான்.

''நாலு பேருக்கிடையே நீ வளைய வந்தாயானால் நீ இருக்குமிடத்தைக் கண்டுப்பிடித்து உன்னைப் பிடித்துக் கொண்டு விடுவாங்க. அதனால் நான் நீ தங்குவதற்கு ஒரு ரகசிய இடத்தைக் காட்டுகிறேன்''

''எங்கே?''

''நகர எல்லையைத் தாண்டி எனக்கு ஒரு வீடு இருக்கு. தற்சமயம் காலியாய்தான் இருக்கு. நீ அதில் தங்கியிருக் கலாம்.''

பாண்டுரங்கனுக்கு அந்த ஆலோசனை பிடித்திருந்தது

''இன்னொரு விஷயம். நீ என்னை டைரக்டாய் சந் திக்க ஒருநாளும் முயற்சிக்காதே. அது நம்மிருவருக்குமே க்ஷேமம் அல்ல.''

தனக்காக இல்லாவிட்டாலும் அப்புவின் நன்மைக்காக ஒப்புக்கொண்டான் பாண்டுரங்கன்.

''வாங்க போகலாம்'' என்றான் சிம்மாத்ரி.

நால்வரும் காரை நோக்கி நடந்தார்கள்.

## 17

ஆபீசு அறையில் உட்கார்ந்துகொண்டு ரெஜிஸ்தர் தபாலில் வந்த உறையைக் கிழித்தான் பாலாஜி. அதற்குள் போட்டோக்கள் இருந்தன. சாதாரணமாய் அந்த போட் டோக்களைப் பார்க்கப் போனவன் பக்கத்தில் குண்டு விழுந்தாற்போல அதிர்ச்சியடைந்து விட்டான். சகுந்தலா

வைக் கற்பழித்துக் கொண்டிருந்தபோது யாரோ எடுத்திருந்த போட்டோக்கள்.

யார் எடுத்திருப்பார்கள்? இவ்வளவு வருஷமாய் மௌனமாய் பேசாமலிருந்து விட்டு இப்பொழுது ஏன் களத்தில் குதிக்க வேண்டும்?... தன் நண்பர்களான மதனுக்கும் நாகராஜனுக்கும் போன் செய்து சொல்ல வேண்டும். அப்படிப் பார்த்தால் அவர்களுக்குக்கூட போட்டோக்கள் கிடைத்திருக்க வேண்டும்.

ரிசீவரைக் கையிலெடுக்கப் போனான். அதற்குள் அதுவே மணியடித்ததைப் பார்த்துச் சட்டென்று கையிலெடுத்தான்.

''ஹலோ யாரு?'' மறுமுனையிலிருந்து ஒரு சிரிப்பு கேட்டது.

''ஹலோ யாரு?''

''மரணதேவன்''

''இதென்ன உளறல்?'' ஒரு வினாடி வாயடைத்துப் போய்விட்டது அவனுக்கு.

''புலிதோல் போர்த்திய பசுவைப்போல வெருமே தைரியத்தைக் காட்டிக்ககாதே முட்டாளே! கையிலுள்ள போட்டோக்களைப் பார்த்ததுமே காலடியில் பூகம்பம் வந்துட்டாற்போல அதிர்ந்து செத்துட்டிருக்காய்னு தெரியும்.''

''ஆல் ட்ராஷ்.''

''அப்படியென்று உன் மனதை சமாதானப்படுத்திக்க முயற்சிக்கிறாய் போலிருக்கு. அப்புவின் முறையீட்டைக் கேட்டாயோவோ?''

பாலாஜியின் முகத்தில் ரத்தமே வற்றிவிட்டாற்போல ஆயிற்று.

அன்று காலையில்தான் அப்பு ஓட்டமாய் ஓடிவந்தான் அவன் வீட்டிற்கு. அவனுடைய துணிக்கடையை எரித்து



சாம்பலாக்கிவிட்டுத் தன்னையும் யாரோ கொலை செய்ய முயற்சித்தார்கள் என்றும் சொன்னான். அப்பு தான்பட்ட இம்சைகளைக் கூடச் சொன்னான். அதையெல்லாம் யார் செய்தார்கள் என்று தன்னால் கண்டுப்பிடிக்க முடியவில்லை என்றும் சொன்னான்.

''தைரியம் இருந்தால் எனக்கு எதிரே வந்து நின்று யார் என்று சொல்லு.''

''உனக்கு மரணதேவன் நான். பாண்டுரங்கன்.''

''பாண்டுரங்கனா? நீயா?'' ஆச்சரியத்தோடு கேட்டான். பாண்டுரங்கன் விடுதலையாகிவிட்டால் உண்மையை வெளிப்படுத்த முயல்வான் என்று பயந்து கொண்டிருந்தார்களேயன்றி, இப்படி பிளாக்மெயில் செய்து பழிவாங்க முயலுவான் என்று ஊகித்திருக்கவில்லை.

''ஆமாம். இப்ப உங்க நாலுபேரின் வாழ்வும் என் கையில் இருக்குடா கயவனே! என் சக்தி எப்படிப்பட்டதுன்னு பூர்வாங்கமாய் அப்பு ருசி பார்த்துவிட்டான். இப்போதிலிருந்து உங்கள் வாழ்க்கைகள் நான் சொன்னாற் போல—ஆட்டிவைத்தாற் போல நடக்கப் போகின்றன.''

பாலாஜி கொஞ்சம் சுதாரித்துக்கொண்டான். மறுமுனையில் இருந்தவன் பாண்டுரங்கன் தான் என்று தெரிந்ததுமே அவன் பயம் போய்விட்டது.

''முயல்குட்டி புலியோடு மோதுவது நல்லதில்லை பாண்டுரங்கா! எங்க போட்டோக்களை சம்பாதித்துக் கொண்டு சூப்பர் இம்ப்போஸ் செய்துக்கிட்டு ரொம்பத் தான் சாமர்த்தியத்தைக் காட்டிக்கிறாய். இதற்குப் போய் பயந்து நடுங்குவதற்கு நாங்கள் ஒன்றும் ஆட்டு மந்தைங்க இல்லை.''

''சூப்பர் இம்ப்போஸ் செய்துக்கிட்ட காப்பிகள் இல்லைடா, இவற்றின் நெகடிவ்கள்கூட என்னிடம் இருக்கு.''

''பிளாக்மெயில் செய்கிறாயா?''

''ஆமாம். உடனே எனக்கு ஐந்து லட்சம் வேணும்.''

''அவ்வளவு வேணுமா?''

''மோசம் செய்து சம்பாதித்ததுதானே! உன்னிடமுள்ள கருப்புப் பணத்தில் இந்த ஐந்து லட்சம் எந்த மூலைக்கு?''

''அவ்வளவு பணம் எதுக்கு?''

''உங்களுக்கு சமாதி கட்ட.''

''நான் கொடுக்க முடியாது.''

''போட்டோக்களை பேப்பர்களில் பிரசுரித்து விடுவேன்'' எச்சரித்தான் பாண்டுரங்கன். பாலாஜி சற்றும் எதிர்பார்த்திராதச் சூழ்நிலை இது. அவன் தன் நண்பர்களோடு பேசக்கூட அவகாசம் தராமல் திணறடித்துக் கொண்டிருக்கிறான் பாண்டுரங்கன்.

''ஆல் ரைட்! நீ கேட்ட பணத்தைத் தரேன். ஆனால் ஒரு நிபந்தனை! எனக்கு நெகடிவ்ஸ் வேணும்.''

''நீ பணம் தந்தபிறகு எனக்கு நெகடிவ்கள் எதற்கு?''

''உனக்கு பணத்தை எப்படித் தருவது?''

''இன்றிரவு பத்துமணிக்குப் பிறகு... போரூருக்குப் போற வழியில் கடைசியாய் தென்படுகிற அந்தக் குன்றிற்கருகில்! ஆனால் பைத்தியக்கார வேஷம் போட்டாயானால் போட்டோக்களை போலீசாரிடம் ஒப்படைத்து விடுவேன்.

''ஓ.கே'' என்று போனை வைத்துவிட்டான் பாலாஜி. அவன் உதடுகளில் குரூரமான சிரிப்பொன்று தவழ்ந்தது.

''பொடியன்!'' என்றெண்ணிக் கொண்டான் பாலாஜி.

சரியாய் அதே சமயத்தில் மதனும் நாகராஜும் கதவைத் திறந்துக்கொண்டு உள்ளே வந்தார்கள். கோட்டு



ஜேபிக்குள்ளிலிருந்து இருவரும் தனித்தனியாய் தமக்கு வந்த கவர்களை எடுத்து மேஜைமேல் போட்டார்கள்.

''வெல்! உங்களுக்கும் வந்திருக்குன்னு சொல்லுங்க!'' என்றான் பாலாஜி சிரித்துக்கொண்டே. அவர்கள் முகங்களில் கலக்கம் நன்றாய் தென்பட்டது.

''இப்ப என்ன செய்றது?'' கேட்டான் மதன்.

''இன்றிரவு அவன் கேட்ட பணத்தைத் தந்துடணும்'' என்றான் பாலாஜி மெதுவாய்.

## 18

இரவு பத்தடித்துச் சில நிமிஷங்கள் ஆகியிருந்தன. பாண்டுரங்கன் போரூருக்குப் போகும் வழியிலிருந்த அந்தக் கடைசி குன்றின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான். இருட்டில் அவன் கண்கள் சுருசுருப்பாய் வேலை செய்து கொண்டிருந்தன. சிம்மாத்ரி ஒரு குன்றிற்குப் பின்னால் மறைந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். அவ்விருவரும் ஏறிவந்த மோட்டார் பைக்கைக் குன்றிற்கு மறைவான இடத்தில் பாறாங்கற்களுக்கிடையே யாரும் பார்த்து விடாதபடி வைத்திருந்தார்கள்.

பாண்டுரங்கனுக்கு தொலைவிலிருந்து வந்துகொண்டிருந்த காரின் ஹெட் லைட்கள் தென்பட்டன. அவன் சிரித்துக்கொண்டான். பாலாஜி பயந்து போய் வந்து கொண்டிருப்பான் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் காரில் எத்தனை பேர்கள் இருந்தார்களோ?

அவன் தனியாய் தான் வருகிறானோ அல்லது தன் ஆட்களுடன் வருகிறானோ தெரியாது. கார் குன்றிற்கருகே வந்து நின்றுவிட்டது கதவைத் திறந்துக்கொண்டு ப்ரீபகேசுடன் பாலாஜி கீழே இறங்கினான்.

இருட்டாய் இருந்தாலும் அவ்வெல்லையையெல்லாம் கூர்ந்து கவனிக்க முடிந்தது பாண்டுரங்கனால்.

பாலாஜி குன்றின் முன்பாகத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான். ஒரு கை கோட்டு பாக்கெட்டிற்குள் இருந்தது. இன்னொரு கையில் ப்ரீப்கேஸ் இருந்தது.

''பாண்டுரங்கா! இந்தா கேஷ்! நெகடிவ்வைக் எடுத்துட்டு வா'' பெரிதாய் கத்தினான் பாலாஜி. பாண்டுரங்கன் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்ததுமே பாலாஜி தன் ஆட்களுக்கு தன் சதித் திட்டத்தை உணர்த்துவதற்காகத் தான் அவ்வாறு பெரிதாய் கத்தினான் என்றும் அது தன் ஆட்களுக்கு குறிப்பு என்றும் பாண்டுரங்கனுக்குத் தெரியாது.

பாண்டுரங்கன் குன்றின் மறைவில் நின்றுக்கொண்டிருந்தான்— ''உன் ஜேபியிலிருக்கிற துப்பாக்கியை தொலைவில் விசியெறி. இல்லாவிட்டால் உன்னை இங்கேயிருந்தே சுட்டுவிடுவேன்'' கத்தினான் பாண்டுரங்கன்.

பாலாஜி அவன் சொன்னபடியே செய்தான்.

''காரில் இன்னும் யார் இருக்காங்க?''

''என் நண்பர்கள்... மதனும், நாகராஜனும்.''

''அவங்களைக் கூட காரைவிட்டு இறங்கச் சொல்லு'' பாலாஜி அவர்களைக் கூப்பிட்டான்.

''ப்ரீப்கேசை அங்கேயே வைத்துவிட்டு மூவரும் திரும்பிப் போங்கள்'' உத்தரவிட்டான் பாண்டுரங்கன்.',

''நெகடிவ்ஸ்.''

''உங்களைப் போன்ற மோசடிக்காரன் இல்லைடா நான். அயோக்கியனே. திரும்பிப் போங்கள்.''

அவன் சொன்னதுபோலவே செய்தார்கள் அம்மூவரும். பாண்டுரங்கன் சரேலென்று பாறாங்கல்லின் மேலிருந்து கீழே குதித்தான். ஒரே பாய்ச்சலாய் அவ்விடத்திற்குப் போய் ப்ரீப்கேசைக் கையில் எடுத்துக்கொண்டான்.



''அதோ அந்த ஏரிக்கரைக்குப் பக்கத்திலுள்ள சின்ன கற்களுக்குக் கீழே கவர் உள்ளது. அதில் உங்களுக்குத் தேவையான நெகடிவ்கள் இருக்கின்றன. ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு போய் அதை எடுத்துக்குங்க'' என்று சொல்லிவிட்டுத் திரும்பப் போனான்.

கழுத்திற்கருகில் ஏதோ சில்லென்று பட்டது.

''திரும்பாதே. செத்து ஒழிவாய்'' கடுமையாய் ஒரு குரல் கேட்டது. பாலாஜி கும்பல் திடீரென்று திரும்பிப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினார்கள்.

பாண்டுரங்கனுக்குத் தான் வலையில் சிக்கிக்கொண்டு விட்டது புரிந்தது. தப்பித்துக் கொள்ளும் அவகாசம் இல்லை. பின்னால் ஒருத்தன் அல்ல கண்டிப்பாய் நிறைய பேர் இருந்து தீருவார்கள்.

பாண்டுரங்கன் மெதுவாய் கழுத்திற்குக் கீழாய் ஓரக் கண்களால் பார்த்தான். பத்துப் பேர் கைகளில் துப்பாக்கியை வைத்துக்கொண்டு நின்றிருந்தார்கள். பின்னாலிருந்து ஒருத்தன் பாண்டுரங்கனின் முதுகுத்தண்டு உடைந்துவிடும் போல அடித்தான். அந்த அடிக்கு அவன் போய் பாலாஜியின் பாதத்தில் விழுந்தான்.

பாலாஜி குரூரமாய் பார்த்தபடியே அவன் கழுத்தின் மீது காலை வைத்து அழுத்தினான்.

''என்னடா பொடியனே! உன்னிஷ்டப்படி ஆட்டங் காட்டுவதற்கு எங்களை என்ன அந்த பைத்தியக்கார அப்புன்னு நினைச்சுட்டியா?'' பாண்டுரங்கனின் முகத்தில் காலால் உதைத்தான். அவன் உதடு கிழிந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

''இவன் கைகளைப் பின்னுக்குச் சேர்த்துக் கட்டிப் போட்டுவிட்டு இவனை வேனிற்குள் தூக்கிப் போடுங்கள்'' என்றான் பாலாஜி.

இவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வது எப்படி?

சுருசுருப்பாய் இயங்கிற்று பாண்டுரங்கனின் மூளை. ஆனால் அதற்கு அவகாசம் இல்லை என்று அவனுக்குத் தெரியும்! கால்களையும் கைகளையும் கட்டி வேனிற்குள் தூக்கிப் போட்டார்கள் அவனை. சிம்மாத்ரி அதைப் பார்த்துவிட்டு மலைப் பாறைகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டான்.

## 19

“திஸ் ஈஸ் பாலாஜி”—

அந்த ஹாலே அதிர்ந்து போகும்படியாய் சிரித்தான் பாலாஜி. பாண்டுரங்கனின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன. ஆனால் அவனால் எதுவும் செய்யமுடியாத ஆதரவில்லாத நிலைமை.

நாலடி உயரத்தில் அவன் கால்களையும் கைகளையும் கட்டித் தொங்கவிட்டார்கள். அவன் கழுத்தில் கயிற்றைக் கட்டிச் சுருக்கிட்டு, மேலேயிருந்த கொக்கியோடு பிணைத்துக்கட்டியிருந்தார்கள். கீழே தகதகவென்று நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அந்த நெருப்பிலிருந்து வெளி வந்துக்கொண்டிருந்த சிகை அவன் உடம்பை தகித்துக் கொண்டிருந்தது. எப்படிப்பட்ட கொடுமைக்கும் தயங்காதவன் பாலாஜி என்று தெரியும் பாண்டுரங்கனுக்கு.

ஆனால் உதடுகளைக் கடித்துக்கொண்டு பிடிவாதமாய் தாங்கிக் கொண்டிருந்தான் அவன்.

சிம்மாத்ரி மூலமாய் தான் இவர்களிடம் சிறைப்பட்ட விஷயம் அப்புவுக்கும்பத்மினிக்கும் தெரிந்து போயிருக்கும். அப்பு மூலமாய்தான் அவன் இங்கிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் மனதின் மறுமூலையில் ஏதோ சந்தேகம்.



அப்பு தனக்கு உதவுவானா? தான் அவனுக்கு செய்த இம்சைகளை மறந்துப்போய் தனக்கு உதவுவானா? அதற்குப் பழிவாங்க எண்ணித் தன் இந்த ஆதரவில்லாத நிலையைப் பயன்படுத்திக் கொள்வானோ?

ஆனால் அப்படிச் செய்ய வழியில்லை. போட்டோக் களையும் நெகடிவ்களையும் கூட தன்னிடம் ஒப்படைத்து விட்டான். அப்படிச் செய்தால் அவனுக்கே ஆபத்து. மதன், பாலாஜி, நாகராஜ் மூவரும் அவனைச் சுற்றிச் சூழ்ந்துக் கொண்டார்கள்.

“என்னடா பயலே! உன் மூஞ்சிக்கு ஐந்து லட்சம் வேண்டுமோ? பேப்பர்களில் எங்கள் போட்டோக்களைப் போட்டு விடுவாயோன்னேன்?”

கையிலிருந்த நெகடிவ்களைக் கீழேயிருந்த நெருப்பில் போட்டுக் கொண்டிருந்தான் பாலாஜி. அவை புஸ்ஸென்று பற்றி எரிந்தன.

அவ்வளவு வருத்தத்திலும் அவன் சிரித்தான். ‘தூ’ என்று அவன் முகத்தில் உமிழ்ந்தான்.

“என்ன திமிர்! உன்னை என்ன செய்றேன் பார்”— பளீரென்று அடித்தான் பாலாஜி.

“நீங்கள் எவ்வளவு பொல்லாதவங்கன்னு எனக்குத் தெரியும்டா. அதனால் நெகடிவ்களுக்கே நெகடிவ்களை எடுத்து ஜாக்கிரதையாய் வெச்சிருக்கேன்டா” அதைக் கேட்டு மூவரும் குண்டு விழுந்தாற்போல அதிர்ந்து விட்டார்கள்.

“ஜக்கு! இவனை நன்றாய் விளாசு” கோபத்தால் தள்ளாடியபடி கத்தினான் பாலாஜி.

“நான் இங்கிருந்து இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் வெளியேறாவிட்டால் உங்கள் வாழ்க்கையெல்லாம் நடுத்தெருவுக்கு வந்துவிடும்டா அயோக்கியர்களே” எச்சரித்தான் பாண்டுரங்கன்.

ஜக்கு என்ற அந்த கையாள் சாட்டையை எடுத்துக் கொண்டு வந்தான். பாண்டுரங்கனை அடிக்கத் தொடங்கினான்.

உடம்பெல்லாம் காயமடைந்து சதை கழன்றது. ரத்தம் கொட்டிற்று. தழும்புகள் ஏற்பட்டன. அந்த அடிகளையெல்லாம் பற்களைக் கடித்துக்கொண்டு தாங்கிக் கொண்டிருந்தான் அவன்.

''மரியாதையாய் நெகடிவ்களைக் கொடுத்துவிடு.''

''அவை உங்களுக்குக் கிடைக்கிற வரைக்கும் என்னைக் கொல்லமாட்டீங்க. அதனால் தரமுடியாது'' மேலும் நிறைய அடிகள் வந்து விழுந்தன.

''வேண்டாம், அவனை அடிக்காதீங்க, கொல்லாதீங்க' என்று உள்ளே ஓடிவந்தான் அப்பு.

ஜக்கு நிறுத்திக்கொண்டான்.

''ஏன்?'' கோபமாய் பார்த்தான் நாகராஜ்.

''நீங்கள் பெரிய மனுஷங்களாயிருந்தாலும் கொஞ்சங் கூட மூளையே இல்லாதவங்க. அவனைக் கொன்றுவிட்டால் நம்ப குட்டெல்லாம் வெளிப்பட்டு விடும். அவனிடமுள்ள சாட்சிகளையும் ஆதாரங்களையும் நாம்ப கைப்பற்றிக் கொள்கிற வரைக்கும் அவனைக் கொல்லக்கூடாது.''

''அவனைக் கொன்றால் அவனோடேயே அதெல்லாம் சமாதியாயிடும்'' என்றான் மதன்.

''அவற்றை யாரிடமாவது கொடுத்து பத்திரப்படுத்தி வைத்திருந்தானானால் என்ன செய்வீங்க? அப்புறமாய் அந்த ஆள் அதை வெளிப்படுத்திட்டால்?'' அப்பு சந்தேகத்தை வெளியிட்டான்.

அதுவும் உண்மையாய்தான் பட்டது.

''பாண்டுரங்கா! அவைகளை எங்கே ஒளித்துவைத் திருக்காய், சொல்லிவிடு. இல்லாவிட்டால் உன்னைக்



கொன்றுபோடாமல் விடப்போறதில்லை'' பாலாஜி அவனை நோக்கி நடந்து வந்தபடியே கேட்டான்.

''பத்தாண்டுகள் ஜெயில் சுவர்களுக்கிடையே நலிந்து போயிருக்கிற உடம்பு இது. உயிருக்கு நான் அஞ்ச மாட்டேன். சட்டத்தின் பிடியில் அகப்பட்டுக் கொள்ளாத உங்களை—நானே சட்டமும் நீதியுமாய் ஆகி உங்களுக்கு சமாதி கட்டிவிடுகிறேன். என்ன கஷ்டம் வந்தாலும் நான் எதிர்த்து நிற்பேன்.''

அப்பு ஒருமுறை பாலாஜி கும்பலைப் பார்த்தான்.

''ஜக்கு, அந்த சாட்டையை இப்படிக் கொடு'' என்றான்.

ஜக்கு சாட்டையை அப்புவிடம் தந்துவிட்டு அப்பால் நகர்ந்து கொண்டான்.

அப்பு அங்கிருந்தவர்கள் யாரும் கவனிக்காதவாறு பாண்டுரங்கனுக்குக் கண் ஜாடை காட்டினான்

''பாவம், சின்ன பையன், உனக்கேன் இந்த வீண் கஷ்டங்களெல்லாம், சொல்லு? உன்னிடமுள்ள சாட்சி களையெல்லாம் எங்களிடம் ஒப்படைத்து விடு. உன்னை விடுதலை பண்ற பொறுப்பு என்னைச் சேர்ந்தது.

''சீ, வாயை மூடு''

அப்பு கோபமாய் சாட்டையை ஓங்கப்போனவன் நின்று விட்டான்.

''இன்றைக்கு சனிக்கிழமை. சனிக்கிழமை தோறும் அஹிம்சையைப் பின்பற்றி வருகிறேன் நான். பிழைத்துப் போனாய்'' என்றான்.

நெருப்பின் உஷ்ணமான சிகைகள் பாண்டுவை வாட்டிக் கொண்டிருந்தன. பாண்டு மிகப் கொடுமையான தண்ட னையைப் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்என்று புரிந்தது அப்புவுக்கு. முதலில் அவனை அந்த தண்டனையிலிருந்து

மீட்க வேண்டும். அப்பு நான்கு மூலைகளையும் பார்த்தான். கடைசியாய் இருந்த செல் கண்ணில்பட்டது அப்புவுக்கு. அது மூன்றரை அடி நீளமும் இரண்டரை அடி அகலமும் கொண்ட அறை. ஆள் நிற்கவோ படுக்கவோ முடியாது.

"இப்படியே வெச்சிட்டிருந்தால் செத்தொழிவான். ஒரு காரியம் பண்ணினால் நல்லது" என்றான் அப்பு.

"என்ன?"

"உட்காரவோ நிற்கவோ முடியாத அந்த டெத்செல்லிற்குள் போட்டு விடுவோம். யமனால் கூட காட்டமுடியாத நரகத்தை அந்த செல் அவனுக்குக் காட்டிவிடும். நமக்குத் தேவையான ஆதாரங்களைப் பற்றிச் சொல்ற வரைக்கும் அதிலேயே கிடக்கணும் அவன்."

பாலாஜி ஒப்புக்கொண்டான். "ஜக்கு! அவனை அந்த செல்லிற்கு மாற்றுங்கள்" உத்தரவிட்டான்.

அப்பு தன்னை தற்காலிகமாய் அந்த நெருப்பு உபாதையிலிருந்து மீட்கத்தான் இந்த உபாயத்தைச் சொல்லியிருக்கிறான் என்று புரிந்தது பாண்டுரங்கனுக்கு.

செல்லிற்குள் கால்களைக் குறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். தாகமாய் இருந்தது. பசியால் வயிறு பிசைந்தெடுத்தது. கொஞ்சநேரம் ஓய்வாய் உட்கார்ந்திருந்தால் சக்தியைக் கூட்டிக் கொள்ளலாம்.

"கூண்டுக்குள் இருக்கிற புலிதானேன்னு எண்ணி அசட்டையாய் இருந்தால் நெருப்பை வாரியிறைச்சு விடும், ஜாக்கிரதை" என்றான் கையாளைப் பார்த்து பாலாஜி.

அப்பு செல்லிற்கருகில் வந்தான்.

"இதப்பார், பெரிய மனுஷங்களோடு உனக்கெதற்கு வீண் தகராறு? சொல்லு! அழகாய் ராஜியாகிப் போ. உன் வழியில் நீ போய்ச் சேரு" என்று உள்ளங்கையைக் காட்டினான் அவனுக்கு.



'கூடிய சீக்கிரத்தில் உன்னை இங்கிருந்து விடுவிக்கிறேன்' என்று எழுதியிருந்தது உள்ளங்கையில். பாண்டுரங்கன் அதைப் பார்த்தான். ஆனால் ஏதுமறியாதவனைப் போலச் சொன்னான்:—"அடேய், கிழ நரியே, உன் துணிக்கடையை எரித்து, உன்னை நரக வேதனைப்படுத்தி விட்டு விட்டது என்னைப் பற்றி நீ அவங்களுக்குச் சொல்லுவாய்னு தான்! நான் உனக்குக் காட்டியது வெறும் சாம்பிள் தான். உங்களை இம்சித்துப் பழி வாங்குவதுதான் என் லட்சியம். ராஜியாக முடியாது என்னால்."

நாகராஜன் இடி இடியென்று சிரித்தான். "இந்த செல்லை விட்டு வெளியே போக முடியும்னு நினைத்துட்டிருக்கிறாயோ?"

"என்னை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது" என்றான் பாண்டுரங்கன்.

"அப்படீன்னால் இவனுக்குப் பச்சைத் தண்ணீரைக் கூட தராதே ஜக்கு. இப்படிப்பட்டவங்களை எப்படி வழிக்குக் கொண்டு வரணும்னு எனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் பாலாஜி.

அவனைத் தொடர்ந்து நாகராஜும் மதனும் அப்புவும் கூட நடந்தார்கள்.

பாண்டுரங்கனுக்கு ஒருமுறை காலை நீட்டிப் படுத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. கைகளை நீட்ட முயன்றான். குறுக்காய் இரண்டு பக்கங்களிலும் சுவர்கள்... அவன் முயற்சிக்கு இடங் கொடுக்கவில்லை. கால்களை நீட்டவும் வழியில்லை. நிற்கவும் வழியில்லை. எவ்வளவு நேரந்தான் இப்படியே இருப்பதோ?

இன்னும் கொஞ்ச நேரம் அதில் இருக்க நேர்ந்தால் அதற்குப் பிறகு உடம்பு அவன் பேச்சிற்குப் பணியாது. உயிரோடு சமாதி கட்டச் சுவர் எழுப்பினாற்போல மூன்று பக்கங்களிலும் சுவர்களோடு நான்காவது பக்கம் இரும்புக்

கம்பிகளால் கதவும் இருந்தது. அவர்கள் தன்னை ஏதாவது செய்வதற்குள்ளாகவே தான் அச்சிறையிலிருந்து வெளியேறி விட வேண்டும்.

அப்புவை நம்பிக் காத்திருப்பதா? அல்லது தன் முயற்சி யைத் தான் செய்வதா?

பாண்டுரங்கன் கம்பிக் கதவின் வழியாய் பார்த்தான். ஜக்குவும் அவன் ஆட்களும் உல்லாசமாய் உட்கார்ந்து குடித்துக் கொண்டிருந்தார்கள்.

தாகமெடுத்தது அவனுக்கு. தொண்டை வரண்டு போயிற்று. நாக்குத் தவித்தது. உடம்பெல்லாம் எரிச்சல்... வலியால் கண்களை மூடிக் கொண்டான் ஒருமுறை.

''தாகம்... தண்ணீர் வேண்டும்'' சோர்ந்துபோய் கேட்டான் பாண்டுரங்கன்.

ஜக்கு கேலியாய் சிரித்தான்.

''மருந்தடிச்சிக்கிறாயா?'' அவன் ஆட்கள் கொல் லென்று சிரித்தார்கள்.

''அடேய் ஜக்கு! இப்ப அவகாசம் உன் பக்கமாய் இருக் குன்னு இறுமாந்துவிடாதே! என்னோடு ஆட்டமாடிய யாரையும் விட்டுவிடமாட்டேன். ஞாபகம் வைத்துக் கொள்''

ஜக்கு சிரித்தான்.

''நீ சொன்னதை செய்யணும்னால் இன்னொரு ஜென்மம் எடுத்து வந்தால்தான் முடியும் உன்னால். எங்க பாஸ் உன்னைக் கண்டதுண்டமாய் வெட்டி தன் வளர்ப்பு நாய்க்கு இரையாய் போடப் போகிறார்.''

கூலிக்காக அவ்விடத்தில் வேலை பண்ணிக்கொண் டிருப்பவன் ஜக்கு. அவனோடு பேசுவது வீண். தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பதுபோல ஆகிவிடும். ஆனால் ஆவேசம் கட்டுமீறிக்கொண்டு வந்து கொண்டிருந்தது.



ஆனால் ஆவேசத்திற்கு இணையாய் சக்தி இல்லை அவ னிடம்.

''தாகம்... தாகம்'' பாண்டுரங்கனின் மூளை சுருசுருப் பாய் யோசித்துக் கொண்டிருந்தது. தொண்டையை ஈரப்படுத்திக் கொள்ள வேண்டும். கழுத்திலிருந்து சங்கிலியைக் கழற்றி டாலரைத் திறந்தான். டாலர் விளிம்பில் கைவிரலை வைத்து சர்ரென்று கீறிக்கொண் டான். ரத்தம் ஜிவ்வென்று பொங்கிற்று. உத்வேகத்துடன் அந்த ரத்தத்தைப் பார்த்தான். வாயைத் திறந்து விரலிலிருந்த ரத்தத்தை வாயில் படும்படியாய் வைத்துச் சப்பிக்கொண்டான்.

காய்ந்த தொண்டை ஈரமாகிக் கொண்டிருந்தது.

ஜக்குவும் அவன் அடியாட்களும் கூட வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜக்குவின் முதுகுத்தண்டில் சிலிர்த்தது.

## 20

காரேஜில் ரிப்பேருக்கு வந்த பழைய காரின் பின்சீட்டில் உட்கார்ந்திருந்தான் அப்பு. அவனுக்குப் பக்கத்திலேயே பத்மினியும் முன்சீட்டில் சிம்மாத்ரியும் உட்கார்ந்திருந் தார்கள். மூவரும் யோசனையில் ஆழ்ந்திருந்தார்கள்.

பாண்டுரங்கனை எப்படி விடுதலை செய்வது என்பது தான் அவர்களை வாட்டிக் கொண்டிருந்த பிரச்னை. அப்பு கோட்டு பாக்கெட்டிலிருந்து சிகாரை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந் தாற்போலிருந்தது அவன் புருவங்கள் நெறிந்ததைப் பார்த்தால்.

''ரொம்ப கட்டுக்காவல்களை ஏற்பாடு செய்தி ருக்கான் அந்த பாலாஜி.''

''பாண்டு தப்பித்துக்கொள்ள வழியில்லையா?'' சிம்மாத்ரி ஆசையாய் கேட்டான்.

''ஊஹும். அங்கிருந்து ஒரு எறும்பால்கூட தப்பித்துக் கொண்டுவிட முடியாது.''

''அங்கே போகக்கூடிய அவகாசம் உங்களுக்கு மட்டுந் தான் இருக்கு அங்கிள். நீங்கதான் ஏதாவது செய்யணும்'' என்றாள் பத்மினி.

அப்பு லேசாய் சிரித்தான்.

''அம்மா! இது துஷ்டர்களோடு விவகாரம்! நான் உங்கள் ஆள் என்று அவனுக்குத் தெரிந்து விடக்கூடாது. அதனால்தான் நான் இவ்வளவு குழப்பத்தில் ஆழ்ந்து விட்டேன்.

யோசித்தால் வழிகிடைக்காமல் போகாது. மூளை யைத் தீட்டி யோசித்துப் பாருங்கள்'' என்றான் அப்பு, நெற்றியில் படிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே.

அதற்குள் காரேஜிற்கு முன்னால் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெண் இறங்கினாள். அவளைப் பார்த்ததுமே அப்பு— ''இதென்னது இந்தப் பொண்ணு இங்கே வந்துட்டாளே''- என்றான் கலக்கமடைந்துபோய்.

''இந்தப் பொண்ணு நம்ப பாண்டுவின் ஃபியான்ஸி'' என்றான் சிரித்துக்கொண்டே சிம்மாத்ரி. அப்புவின் கண்கள் மின்னின.

''இந்தப் பொண்ணு பாலாஜியின் மகள் மஞ்சரி'' திடுக்கிட்டான் சிம்மாத்ரி.

பத்மினி வியப்போடு பார்த்தாள்.

''சிம்மாத்ரி, இந்த சான்ஸை சாமர்த்தியமாய் பயன் படுத்திக்கணும். முள்ளை முள்ளால் தான் எடுக்கணும். சொல்றேன் கேளு. மஞ்சரி பாண்டுரங்கனைப் பற்றிக் கேட்பாள் உன்னிடம். மீதி விவரங்கள் எதையும் அவளிடம்

சொல்லாதே. அவன் அவங்க கெஸ்ட் ஹவுசில் இருக்கான் என்று மட்டும் சொல்லு போதும்'' என்றான் அப்பு.

பத்மினியும் அப்புவும் காரின் பின்சீட்டிற்குக் கீழ பதுங்கி உட்கார்ந்துக் கொண்டார்கள் மஞ்சரியின் கண்ணில் தென்பட்டு விடாமல்.

''ஹலோ? எங்கே என் ஹீரோ.''

''எதுக்கு?'' கேட்டான் சிம்மாத்ரி.

''நான் ஹீரோன்னு சொன்னதுமே நீ வந்தாய். என் ஹீரோவுக்கு அஸிஸ்டென்டா நீ?''

''இந்த காரேஜின் சொந்தக்காரன் நான். உன் ஹீரோ எனக்குதான் அஸிஸ்டென்ட்.''

''ஓ! கிளாட். அவன் எங்கே?''

''எதுக்கு அவன்?''

''காரை ரிப்பேர் செய்துக்கணும்.''

''நான் செய்றேன்.''

''ஷட் அப். அவன்தான் செய்யணும்.''

''அவன் இல்லை.''

''எங்கே போனான்?''

''பாலாஜியின் கெஸ்ட் ஹவுசில் கெஸ்ட்டாய் இருக்கிறான். அங்கே போய் ரிப்பேர் செய்துக்குங்க.''

''ஓ! ஃபைன்! எங்க கெஸ்ட் ஹவுசில்தான் இருக்கானா? தாங்க்யூ, சீயூ அகெய்ன்'' என்று காருக்குள் சரேலென்று தாவி, ஸ்டார்ட் செய்தாள்.

சிம்மாத்ரி சிரித்துக்கொண்டே திரும்பி வந்து— ''போய் விட்டாள்'' என்றான்.

''குட்! எதிர்பாராமல் வேலை முடிஞ்சுவிடும்.''

"இந்தப் பொண்ணு அவனை விடுதலை செய்து விடுவாளா?"

"கண்டிப்பாய். மகளைக் கண்டால் பாலாஜிக்கு உயிர் தந்தையைப் பொருட்படுத்தவே மாட்டாள் அவள். பாண்டு ரங்கனை அவளுக்குப் பிடித்திருக்கிறது. அதனால் நம்ப வேலை காரியம் நன்றாய் முடிந்துவிடும். நான் போட்ட கணக்குத் தப்பாயிருக்காது."

அந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது பத்மினியின் முகத்தில் நிறம் மாறத்தொடங்கியதை சிம்மாத்ரி கவனித்து விட்டான்.

"வாங்க, நாமும் கூடவே போய்... தொலைவில் இருந்தபடியே எல்லாவற்றையும் கவனிப்போம்" என்றான் அப்பு.

சிம்மாத்ரி காரேஜிலிருந்து ஒரு காரை வெளியே எடுத்தான். அப்பு, பத்மினி இருவரும் அதில் ஏறி உட்கார்ந்துக்கொண்டதும் கார் புறப்பட்டது.

## 21

கெஸ்ட் ஹவுஸின் காம்பவுண்டுச் சுவற்றின் கேட்டைத் தாண்டி போர்டிகோவுக்குள் வேகமாய் நுழைந்தது கார். காரிலிருந்து மஞ்சரி வேகமாய் கீழே குதித்தாள். அங்கே தந்தையின் கார் இல்லாததைப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்தவளாய் உள்ளே போனாள். இரண்டு அறைகளைத் தாண்டி உட்புறமாய் இருந்த கான்பிரென்ஸ் ஹாலை நோக்கி நடந்தாள் மஞ்சரி. அவளைப் பார்த்ததுமே கையிலிருந்த சிகரெட் துண்டைக் கீழே போட்டுவிட்டுக் காலால் அணைத்தான் ஜக்கு. அடியாட்கள் கூட மரியாதையுடன் எழுந்து நின்றார்கள். அவர்களைப் பார்த்ததுமே மஞ்சரிக்கு என்றுமில்லாத கோபம் வந்துவிட்டது. அந்தச்



சூழ்நிலை சினிமா வில்லன்களின் பாசறையைப்போல தென்பட்டது அவளுக்கு.

அவள் கண்களில் செல்லுக்குள் மிக ஹீனமாய் அடைக்கப்பட்டிருந்த பாண்டுரங்கன் தென்பட்டான். அவளுக்கு ஆச்சரியத்தோடு கூட கோபமும் துக்கமும் வந்தது. ஜக்குவைத் தீவிரமாய் பார்த்துவிட்டு—

"எதுக்காக அவனை அடைத்து வைத்திருக்காங்க?" கேட்டாள்.

"அப்பா..." மென்று விழுங்கினான் ஜக்கு. அவள் செல்லை நோக்கி நடந்தாள்.

"அப்பா எப்போதுமே அப்படித்தான். என்னென்னவோ அக்கிரமக் காரியங்களையெல்லாம் செய்திட்டிருப்பார். அதான் ஐ ஹேட் டாடீ."

பாண்டுரங்கன் சோர்ந்து போய் அவளைப் பார்த்தான். அவள் பாலாஜியின் மகள் என்று அவனுக்குப் புரிந்தது.

"பாண்டு, வாட் ஆல் திஸ் ஐ ஸே! நீங்க இங்கே வந்ததாய் சிம்மாத்ரி சொன்னதைக் கேட்டு விட்டு அப்பாவின் கார் ரிப்பேருக்குத்தான் வந்தாயாக்கும்னு நினைச்சேன். ஸோ சாரீ" என்று ஜக்குவை நோக்கித் திரும்பினாள்." இவரை வெளியே திறந்துவிடு."

"அப்பாவுக்குத் தெரிஞ்சால் எங்க உயிரை எடுத்துடுவாரு" ஜக்கு மென்று விழுங்கினான்.

"எடுத்தால் எடுத்துக்கட்டும். மொதல்ல இவரை வெளியே விடுங்க. இவர் என் ஹீரோ" என்றாள் மஞ்சரி.

"அந்தக் காரியத்தை நீங்களே பண்ணிக்குங்க. இந்தாங்க சாவி." என்று கொடுத்து விட்டான் ஜக்கு.

மஞ்சரி பூட்டைத் திறந்து அவனை வெளியே அழைத்து வந்தாள்.

‘‘ஸோ சாரீ ஹீரோ. எங்கப்பா வெரும் ஃபூல். அவர் சங்கதியை நான் கவனிச்சுக்கிறேன், வாரும் போகலாம்’’ என்றாள். அவள் அவனைக் கைத்தாங்கலாய் பிடித்துக் கொண்டே வெளியே நடத்தி அழைத்துக்கொண்டு வந்ததைப் பார்த்துவிட்டு ஜக்கு மளமளவென்று போனை நோக்கி நடந்தான்.

பாண்டுரங்கனைக் காரில் உட்காரவைத்து ஸ்டார்ட் பண்ணினாள் மஞ்சரி. அவ்விடத்திலிருந்து கொஞ்சம் தூரத்தில் ஒரு மரத்திற்குப் பின்னால் மறைந்திருந்து அவர்களைப் பார்த்த அப்புவின் உதடுகளில் குறுநகை படர்ந்தது. பத்மினியும் சிம்மாத்ரியும் நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டார்கள்.

அவன் சொன்னாற்போல காரை ஓட்டிக் கொண்டிருந்தாள் மஞ்சரி. அவள் ஏதேதோ பேசிக் கொண்டேயிருந்தாள். ஆனால் பாண்டுரங்கன் பதில் பேசவில்லை.

‘‘இவ்வளவு தூரம் எங்கே?’’ கேட்டாள்.

அவன் திரும்பி அவளைப் பார்த்தான். தோளில் வந்து படிந்த கேசங்களைப் பின்னுக்கு ஒதுக்கிக்கொண்டிருந்தாள் மஞ்சரி.

‘‘நாம்ப இருக்கிற இடம் யாருக்கும் தெரியக் கூடாதுன்னுதான்’’

‘‘நாம்ப என்கிறீங்க. என்னையும் சேர்த்தா?’’ கேட்டாள் மஞ்சரி.

‘‘ஆமாம். உன்னை நான் கிட்னாப் செய்கிறேன்’’ அதைக் கேட்டு அவள் சிரித்தாள். விழுந்து விழுந்து சிரித்தாள்.

அவன் காட்டிய ஒரு வீட்டின் காம்பவுண்டிற்குள் ஓட்டினாள் காரை. அது பாண்டுரங்கன் தங்கியிருப்பதற்காக அப்பு கட்டிய வீடு.



‘‘என்னை கிட்னாப் எதுக்காகப் செய்யணும்? நீங்க வரச்சொன்னாலே வந்துட மாட்டேனா?’’ என்றாள் மஞ்சரி மென்மையாய் சிரித்துக்கொண்டே.

‘‘நீ பாலாஜியின் மகள்’’

‘‘அதனால்?’’

‘‘அவர் எனக்கு விரோதி’’

‘‘அதற்காக?’’

‘‘உன்னைக் கற்பழிக்கப் போகிறேன்’’ என்றான் அவன்.

அதைக் கேட்டு திடுக்கிட்டு விட்டாள் மஞ்சரி. அவள் முகம் களையிழந்தது. அவனை அருவருப்போடு பார்த்தாள். அதுவரை அவன் மேலிருந்த நல்ல அபிப்பிராயம் அந்த ஒரே வார்த்தையால் துடைத்தெறிந்தாற் போல போய்விட்டது. பாண்டுரங்கனின் கண்கள் நெருப்புக் கோளங்களாய் இருந்தன. அவன் முகத்தோற்றத்தைப் பார்த்தால் அவன் சொன்னபடியே செய்துவிடுவான் என்று தோன்றிற்று அவளுக்கு. ஆளரவமில்லாத அந்தப் பகுதியில் அவள் கத்தினாலும் யாருக்கும் காதில் விழாது. தான் இருந்த நிலைமை அவளுக்குப் புரிந்துவிட்டது. ஆனால் தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள்.

அவன் காரிலிருந்து இறங்கி கதவைத் திறந்து வேகமாய் அவள் கையைப் பிடித்து வெளியே இழுத்தான். அதைப் பெரிய அவமானமாய் பாவித்த மஞ்சரியின் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது.

‘‘சீ! நீயும் ஒரு ஆணா? ஆதரவில்லாமலிருக்கிற நிலையில் ஒரு பெண்ணைக் கெடுக்க முயல்கிற உன்னை என்ன செய்தாலும் பாவம் இல்லை. உன்னை இரக்கப்பட்டு விடுவித்தது என் தப்பு. அரக்கன் நீ’’ கோபத்தால் அவள் மூக்கு அதிர்ந்தது.

''மூடு வாயை'' கதவைத் திறந்து அவளை உள்ளே தள்ளினான் பாண்டுரங்கன். அந்த வேகத்திற்கு அவள் கட்டிலில் மல்லாந்து விழுந்தாள்.

அவன் கதவைச் சாத்திவிட்டுத் திரும்பினான். ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்துக்கொண்டே கட்டிலை நெருங்கி வந்தான்.

ஆனால் மஞ்சரி கட்டிலைவிட்டுக் கீழே குதித்து அவன் கைக்கு எட்டாமல் ஓடிப்போக முயற்சிக்கவில்லை. ''வேண்டாம், என்னை ஒன்றும் செய்திடாதே. என் கற்பை அழித்துவிடாதே. என்னை விட்டுவிடு'' என்று பயந்துபோய் கத்தவில்லை. அவனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

கலைந்த கேசங்கள். அவள் தந்தை அடித்த உதைகளின் வலிகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு சோர்வுடன் கட்டிலை நெருங்கி வந்தவன் நின்றுவிட்டான்.

''ஏன்... நின்றுவிட்டீரே ஏன்?'' தீவிரமாய் கேட்டாள் மஞ்சரி. உண்மையில் அவனே கேட்டிருந்தால் மனப்பூர்வமாய் தன்னையே தான் ஒப்படைத்துக் கொண்டிருப்பாளோ என்னவோ? ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் அவள் இதயத்தில் நெருஞ்சி முள்ளாய் குத்தி வேதனை செய்து கொண்டிருந்தது.

அவள் அவ்வாறு கேட்கவே அதிர்ந்துவிட்டான் பாண்டுரங்கன். அவள் சவாலை எடுத்து வீசிவிட்டாள்—சுளீரென்று சாட்டையால் அடித்தாற்போல.

அவன் அவளைப் பார்த்தான். அவள் பயந்தாற்போல தென்படவில்லை. தன்னைப் பொருட்படுத்தினாற் போல கூட தோன்றவில்லை அவனுக்கு.

ஆனால்— அக்கண்களில் அப்பாவித்தனம்—அக்கண்களிலிருந்த சிநேகபாவம்—நன்றாய் தென்பட்டது. அவளை



அவமானப்படுத்தியதற்கு வினாடிநேரம் வருத்தம் ஏற்பட்டது பாண்டுரங்கனுக்கு.

ஆனால் அந்த உணர்ச்சியை அவள் கவனித்து விடாதவாறு ஜாக்கிரதையை மேற்கொண்டான்.

''ஏன் நின்றுவிட்டீர்கள்? பயமாய் இருக்கிறதா?'' கன்னத்தில் ஓங்கி அறைந்தாற்போல கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் கேட்கும் கேள்விக்கு அவனிடம் பதில் இல்லை. என்னவென்று சொல்லுவான்?

சரேலென்று அவளுடைய இரு தோள்களையும் அழுத்திப் பிடித்துக்கொண்டான். அவள் கைகளைப் பின்னுக்கு வைத்து பேலென்ஸ் செய்து நின்றுகொண்டே அவனைப் பார்த்தாள். அவள் அவனைப் பின்னுக்குத் தள்ளிவிட எந்த முயற்சியுமே செய்யவில்லை.

''உன்னை நாசமாக்க இரண்டே நிமிஷம் போதும் எனக்கு'' என்றான்.

மஞ்சரி மென்மையாய் அவன் கைகளில் தன் கையை வைத்தாள். அவள் கோபம் தணிந்து கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அவளுக்கு அவன்மீது முன்பே ஏற்பட்டிருந்த அன்பு அப்படிப்பட்டது.

''உங்களால் அப்படிச் செய்யமுடியாது'' என்றாள் பரிகாசமாய்.

''ஷட் அப். நான் அரக்கன்.''

''உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே, ஒரு கோழைன்னு.''

''என் கோபத்தைத் தூண்டிவிடாதே.''

''அநுசரி. என்னை எதற்காக இங்கே கூட்டி வந்தீங்க?''

''உன் தந்தைக்குப் பாடங்கற்பிக்க.''

''இதென்ன அநியாயம்? அவர் ஏதாவது தப்புச் செய்தால் அவரைத் தண்டிக்கலாமே. தவிர நடுவில் என்னோடு எதற்கு சரஸம்?''

13037
3055915

''சரஸம் இல்லை. புரி.''

''என்ன செய்வீர்கள்?''

''கொலை செய்வேன்.''

''ரேப் ஆயிடுத்து. இனி கொலை செய்யப் போறீர் போலிருக்கு'' ஏளனம் தொனித்தது அவள் குரலில்.

''மஞ்சரி.''

''உங்களை ஒரு ஹீரோவாய் நினைச்சிட்டிருந்தேன். இவ்வளவு கையாலாகாதவராய் எண்ணியிருக்கவில்லை.''

''நீ என்னை என்ன வேணுமானாலும் சொல்லிக் கொள், பரவாயில்லை. ஆனால் உன்னை இங்கேயிருந்து மட்டும் விடப்போறதில்லை.''

''நீங்க விட்டாலும் நான் போகப்போறதில்லை. அப்ப என்ன செய்வீங்க?''

பாண்டுரங்கனுக்கு அவள் வார்த்தைகள் பைத்தியம் பிடிக்கச் செய்தன. அவள் ஏன் இவ்வாறு பேசுகிறாள் என்று புரியவில்லை.

அவன் எண்ணியது ஒன்று... நடந்ததோ இன்னொன்று...

அவளை வைத்துக்கொண்டு பாலாஜியை வீழ்த்த எண்ணியிருந்தான். ஆனால் மஞ்சரியை அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மனம் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

மெல்லிய காற்றின் ஓசையில்... அருவியின் கலகல தொனியில் உதயசூரியனின் ஒளி சேதி விசாரித்தாற் போல... அவள் பக்திபூர்வத்தோடு தன் கண்களையே பார்த்தபடி சொல்லிக் கொண்டிருந்த ஒவ்வொரு வார்த்தைகளும் அவனைத் தோற்கடித்துக் கொண்டிருந்தது.



தனிமையில் தவித்துக்கொண்டிருந்த அவனுக்குக் காதலுக்கு விளக்கம் சொல்லுவதுபோல அவள் வாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த சொற்கள்... வழியோடு ஓடிக்கொண்டிருந்த பிரவாகத்தில் தாகத்தைத் தீர்த்துக் கொள் என்று சொன்னாற்போல அவள் நடந்துகொண்ட விதம்... அவனைத் திணறடித்துக் கொண்டிருந்தன.

இது தன்னிடமிருந்து தப்பித்துக் கொண்டு போவதற்காக அவள் செய்யும் உபாயமோ என்றும் எண்ணினான்.

கதவைத் தட்டிய சப்தம் கேட்டது. போய் கதவைத் திறந்தான்.

வெளியே சிம்மாத்ரி நின்றுகொண்டிருந்தான்.

காரில் அப்பு உட்கார்ந்திருந்தான். பாண்டுவைப் பார்த்து லேசாய் சிரித்தான் அவன்.

அவன் காரை நோக்கி நடந்தான். அதே சமயத்தில் மஞ்சரி கட்டிலிலிருந்து கீழே குதித்து கதவிற்கருகில் வந்து சந்து வழியாய் எட்டிப் பார்க்கத் தொடங்கினாள். அவளுக்கு ஏதோ புரிந்தாற் போலிருந்தது. ஆனால் முற்றிலுமாய் புரியவில்லை. அப்பு பாண்டுரங்கனைப் பாராட்டினான்.

''உன் சமயோஜித புத்திக்கு மெச்சிக் கொள்கிறேன் அப்பா! அந்தப் பொண்ணைக் கூட்டிட்டு வந்து நல்ல காரியந்தான் செய்தாய்.''

''அதுசரி, நான் இங்கே வந்தது உனக்கெப்படித் தெரிந்தது?'' ஆச்சரியமடைந்தவனாய் கேட்டான் பாண்டு.

''பிளான் சிம்மாத்ரியோடது தானே?'' என்று சிம்மாத்ரியைப் பார்த்தான் அப்பு. மஞ்சரி வந்ததையும் அவளை கெஸ்ட் ஹவுசுக்கு அனுப்பி வைத்ததையும் சொன்னான். அங்கிருந்து நீ இங்கே கூட்டி வந்து விடுவாய்னு தெரிந்ததுதான். ரெண்டு நாளைக்கு

இங்கேயே அடைத்து வை அந்தப் பொண்ணை. பாலாஜிக்கு உயிர் இந்தப் பொண்ணு மேலே. ஜாக்கிரதை'' எச்சரித்தான் அப்பு.

''அந்தப் பொண்ணால் எந்த ஆபத்தும் இல்லை'' என்றான் பாண்டுரங்கன்.

''அந்தத் தந்தையின் மகள். மறந்துவிடாதே'' என்றான் அப்பு.

''ஆனால் அந்தக் குணம் இல்லை'' அப்பு சிரித்தான்.

''வாழ்க்கையையே வடிகட்டியிருக்கிற அனுபவசாலி நான். தேள்குட்டி பார்க்க அழகாய் இருக்கேன்னு நினைத்து எங்கேயோ வைத்துக்கிட்டு நீதிபோதனையை ஓதிக்கொண்டிருந்தால் அது தன் சகஜமான குணத்தைக் காட்டாமல் போகாது பாண்டு! அது கொடுக்கால் கொட்டாமல் போகாது.''

''ஆனால் மஞ்சரி எனக்கு உதவி செய்வாள் என்று தான் எண்ணுகிறேன்.''

''ஆமாம். இப்பவே நிறைய உதவி பண்ணிட்டாள்'' சிரித்தான் அப்பு. சிம்மாத்ரி காரின் பின் சீட்டிலிருந்து கேரியரை எடுத்துத் தந்தான் பாண்டுரங்கனிடம். ''எப்படி வழிக்குக் கொண்டு வருகிறாய்னு பார்ப்போம். மாடி அறையில் போன் இருக்கிறது. தேவையானால் போன் செய்.''

''சரி'' என்று சொல்லிவிட்டு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை விவரித்துச் சொன்னான் பாண்டுரங்கன்.

''ஓ. கே.'' என்றான் சிம்மாத்ரி.

சிம்மாத்ரி காருக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டதுமே அப்பு காரைக் கிளப்பினான். கார் மறைந்தது.

பாண்டுரங்கன் திரும்பி உள்ளே வந்ததைப் பார்த்துவிட்டு ஏதுமறியாதவளைப் போல மளமளவென்று கட்டில் போய் உட்கார்ந்துகொண்டாள் மஞ்சரி.



அவனுக்கும் தன் தந்தைக்குமிடையே பெரிய சச்சரவு இருந்து கொண்டிருக்கிறது என்று மட்டும் அவளால் ஊகிக்க முடிந்தது.

அதற்குள் நன்றாய் இருட்டிவிட்டது. அவன் கேரியரை அவளுக்கு முன்னால் வைத்துவிட்டு—''சாப்பிடு''என்றான்.

''நான் சாப்பிடமாட்டேன்.''

''சாப்பிடாவிட்டால் பசியால் வாடுவாய். நீ இங்கே சிறைப்பட்டிருக்கிறாய். உன்னால் ஓடிப்போயிடமுடியாது என்றான்.

''போய்விட நினைத்தால் ஒரு நிமிஷத்தில் போய்விட முடியும் என்னால்.''

''எப்படி அவ்வளவு உறுதியாய் சொல்கிறாய்?'' மஞ்சரி ஒரு மாதிரியாய் சிரித்தாள்.

''என் மனசாட்சி''

''பேச்சால் என்னை ஏமாற்ற முயற்சிக்காதே. நான் ரொம்பக் கெட்டவன்''

அவள் பேசித் தன்னை மயக்கிவிட முயற்சிக்கிறாள் என்று தெரியும் அவனுக்கு. ஆனால் அவனால் அவளை மிரட்டி அடக்க முடியவில்லை. அந்த பலவீனம் ஏன் என்று தான் அவனுக்குப் புரியவில்லை.

அவன் கதவை வெருமே சாத்திவிட்டு வெளியே வராந்தாவில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

இரவு மணி எட்டு. பனிச் சாரல் அடித்துக் கொண்டிருந்தது. சுற்றிலும் இருட்டாய் இருந்தது. நெருப்புப் பொறிகளால் செய்த ஆபரணங்களைப்போல தொலைவில் நகரம் தீப ஒளியால் மின்னிக் கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்தில் அவள் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

''எனக்குப் பசிக்கிறது'' என்றாள்.

''கேரியரை வைத்திருக்கேன். நீ சாப்பிடலாம்.''

''அது போதாது'' சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''வேறென்ன வேண்டும்?''

''நீங்கள்!''

''உங்கப்பா என்னை எப்பொழுதோ தின்று விட்டார். நீ சாப்பிட என்னுள் எதுவும் மீந்திருக்கவில்லை.''

''உங்கள் ரகளையை நீங்களிருவரும் வெச்சுக்குங்க. மொதல்ல சாப்பிடலாம், வாங்க'' அவன் கையைப் பிடித்து இழுத்தாள் மஞ்சரி.

அவளுக்கு நல்ல பசி என்று ஊகித்துக் கொண்டான் பாண்டுரங்கன். அவளைக் கஷ்டப்படுத்த விரும்பாதவனாய் அவளோடு கூடவே உள்ளே நடந்தான்.

## 22

பாலாஜி கோபமாய் நடைபயின்றுக் கொண்டிருந்தான்.

''நம்ப மேலிருக்கிற பழியால் பொண்ணுக்கு என்ன கெடுதல் செய்வானோ?'' நாகராஜ் சந்தேகத்தை வெளியிட்டான்.

''மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரிசுங்கிறாப் போலன்னா இருக்கு'' என்றான் மதன்.

''லாபமில்லை. அவனைக் கொன்று போட்டாலே யொழிய நம்மைத் தூங்க விடமாட்டான் போலிருக்கு'' என்றான் பாலாஜி ஆத்திரந்திர.



''அவன் ஜெயிலிலிருந்து வெளிவந்ததுமே நாம்ப செய்த முயற்சி தோற்றுப்போனது நம்ப பேட்லக்'' நாகராஜ் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டே சொன்னான்.

''போலீஸ் ரிபோர்ட் தந்தால்?'' என்றான் அப்பு மெதுவாய்.

''சாக்கடையில் கல்லை விட்டெறிந்தால் நம் மூஞ்சியில் தான் சாக்கடை நீர் தெரித்து விழும்'' பொறுமையின்றிச் சொன்னான் பாலாஜி. போயும் போயும் மிகச்சாதாரணமான ஒரு சின்னப் பையன் தன்னோடு மோதிக்கொண்டது பாலாஜியின் சரித்திரத்திலேயே இப்பொழுதுதான் முதல் முதலாய் நடக்கிறது.

''நீங்க நினைத்தால் அந்தப் பையனை ஒரு மூட்டைப் பூச்சியை நசுக்குவதைப் போல நசுக்கிவிடுவது ஒன்றும் பெரிய காரியமில்லை. பெண்ணை கிட்னாப் செய்துட்டான்னு கிரிமினல் கேஸ் போட்டுவிட்டால் சரி. நம்பப் பொண்ணு நமக்கு சாட்சி சொல்லாமல் போயிடுவாளா என்ன?'' திரும்பவும் சொன்னான் அப்பு—ஆலோசனை சொல்வது போல.

''இந்தப் பூமியில் எங்கேயிருந்தாலும் சரி அவனைப் பிடித்துக் கொன்று போட்டுவிடுகிறேன். அதற்கு எப்படிப் பிளான் போடணும்னு எனக்குத் தெரியும்.''

அதே சமயத்தில் ஜக்கு கையில் ஒரு பாக்கெட்டை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

''பாஸ், இந்த பார்ஸல் நம்ப போர்டிகோ படிகளுக்கு அருகில் கிடந்தது'' என்று ஒரு அட்டைப்பெட்டியைக் காட்டினான்.

அதைக் கூர்ந்து கவனித்தான் பாலாஜி. ''பாலாஜிக்கு'' என்று எழுதியிருந்தது அதன்மீது.

''அதைப் பிரி.''

ஜக்கு அதற்குமேல் சுற்றியிருந்த கலர் காகிதத்தை ஜாக்கிரதையாய் பிரிக்கத் தொடங்கினான். எஞ்சியவர்கள் அதில் என்ன இருக்குமோ என்று ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்சலைப் பிரித்து முடித்தான்.

அதற்குள்—ஒரு அழகான பெண் பொம்மையின் உடலிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட தலை இருந்தது.

அப்பு அதைப் பார்த்துவிட்டு வீலென்று கத்திவிட்டான். பாலாஜி அருகில் குண்டு விழுந்துவிட்டாற் போல அதிர்ந்தும் போனான். மதனும் நாகராஜனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். இதன் குறிப்பு என்ன?

தன் மகளைக் கொல்லப்போகிறேன் என்று அர்த்தமா? தன்... தன்... மகள்... இன்னும் உயிரோடு இருப்பாளா? மகளைக் கொன்று போட்டுவிட்டு இப்படி பார்சல் அனுப்புவேன் என்று சொல்வதுதான் இதிலுள்ள அர்த்தமா?

டெலிபோன் ஒலித்தது.

ரிசீவரைக் கையிலெடுத்துக் கொண்டான் பாலாஜி.

''ஹலோ.''

மறுமுனையிலிருந்து சிரிப்பு.

''யார் நீ?''

''நான்தான் பாண்டுரங்கன். பார்சலைக் கண்ணால் பார்த்தாயல்லவா?''

''மஞ்சரியை என்ன செய்தாய்?''

''இன்னும் முழுவதுமாய் ஒன்றும் செய்துவிடவில்லை. இம்சித்துக் கொண்டிருக்கிறேன். சேம்பிளைக் கேளு—''

''டாடீ'' என்ற அலறல் கேட்டது. அந்த அலறல் பாலாஜியின் இதயத்தில் சம்மட்டியால் அடித்தாற் போலிருந்தது.



''பாலாஜி, ஒரு ஆணைத் தலைகீழாய் தொங்கவிட்டு இம்சிப்பது வேறு. ஆனால் அதுவே ஒரு பெண்ணா யிருந்தால்?''

வீலென்ற அலறல் திருப்பக் கேட்டது பாலாஜிக்கு. பாலாஜி பதில் பேசவில்லை.''

''உன் மகள் இப்போது என் கைதியாய் எப்படியிருக் கிறாள் தெரியுமா? உடம்பில் நூலிழைகூட இல்லாமல் தலைகீழாய் தொங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் உடம்பை களைத்துப் போகும்வரை நன்றாய் இம்சித்து விட்டு—அதற்குப் பிறகு நீங்கள் மேடம் சகுந்தலாவையும் எங்கக்கா சாந்தாவையும் மானபங்கம் செய்ததுபோல அரக்கத்தனமாய் அனுபவித்து விட்டு—அதற்குப் பிறகு அவள் அழகான உடம்பிலிருந்து தலையை வெட்டி உமக்குக் காணிக்கையாய் அனுப்பிவைப்பேன்.''

''டர்ட்டி ரோக்'' பற்களை நறநறத்தான் பாலாஜி—

''ஏன், உன் ஃபிரெண்டுகளுக்குக் கூட பங்கு வேணுமோ?'' கேலியாய் சிரித்தான் பாண்டுரங்கன்.

''டாடீ, என்னைக் காப்பாற்று'' இதயத்தைப் பிழியும் படியாய் இருந்தது மஞ்சரியின் குரல்.

போன் கட் ஆகிவிட்டது.

பாண்டுரங்கனைக் கொன்று போட்டுவிட வேண்டும் போல ஆத்திரமாய் இருந்தது பாலாஜிக்கு.

''ஜக்கு, போங்கள், போய் நாலு பக்கமும் தேடுங்கள். அவனைக் கொன்று போட்டுவிட்டு என் பெண்ணைக் கூட்டிட்டு வந்துடுங்க'' உத்தரவிட்டான் பாலாஜி.

''நாம்ப வீணாய் அவனை இன்னும் இன்னும் தூண்டி விட்டுட்டிருக்கோம்னு தோணுது'' என்றான் அப்பு மெதுவாய்.

மதன் கோபமாய் பார்த்தான்.

''திரும்பவும் ஏதாவது கேசை ஜோடித்து அவனை ஜெயிலில் தள்ளிவிட்டால் துள்ள முடியுமா அவனால்?'' என்றான்.

''துள்ளுவானோ கடிப்பானோ எனக்குத் தெரியாதுப்பா. அவன் கையால் 'ருசி' பார்த்திருக்கிறவன் நான். அப்பப்பா! எப்படித்தான் பிழைத்து வெளியே வந்தேனோ எனக்கே தெரியலை. நினைத்துப் பார்த்தாலே மார்பு படபடக்குது'' அப்பு தன் அனுபவத்தை நினைப்பூட்டினான்.

''அவனுக்கு இரக்கங்காட்டுவது நமக்கே ஆபத்து என்றான் நாகராஜ்.

''நீங்க என்னத்தைச் செய்தாலும் சரி ஆபத்தில் சிக்கிக் கொண்டுவிடாமல் பார்த்துக்குங்க, போதும்'' என்றான் அப்பு.

''இவ்வளவு கோழைத்தனம் எப்படி வந்தது அப்பு உனக்கு?'' மதன் கேட்டான்.

''அனுபவிச்சவனுக்குத் தானேப்பா தெரியும்?''

தற்போது பாண்டுரங்கன் முற்றுகையிட்டிருப்பது பாலாஜியின் மேல். தன்மீது கூட எந்தச் சமயத்தில் பாய்வானோ என்ற பயம் இல்லாமல் போகவில்லை எஞ்சிய இருவருக்கும்.

ஆனாலும் தன் செல்வாக்கு, பணம், பலம் இவைகளைப் பார்த்து தைரியமாய் இருந்து வந்தார்கள். பாலாஜி மட்டும் குட்டி போட்ட பூனையாய் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

எத்தனையோ பெண்களின் வாழ்க்கையோடும், கற்போடும் விளையாடியிருக்கும் மிருகத்தைப் போன்ற அவன் தன் சொந்தப் பெண்ணைப் பற்றிய விஷயத்திற்கு வந்ததுமே வெலவெலத்துப் போனதைப் பார்த்த அப்பு தனக்குள் சிரித்துக்கொண்டான்.

# 23

மஞ்சரியின் கண்ணீரைப் பார்த்த பாண்டுரங்கன் தலைகுனிந்து கொண்டான். அவள் மெதுவாய் அவனிடம் வந்து நின்றாள். உல்லாசமாய் ஆடிப்பாடித் திரிந்து கொண்டிருக்கும் மஞ்சரியின் கண்களிலிருந்து பொலபொல வென்று உதிர்ந்து விழுந்த கண்ணீர் முத்துக்களைப் பார்த்த பாண்டுரங்கன் கலவரமடைந்தான்.

''சாரீ'' என்றான்.

அவள் பதிலுக்கு அவன் இரண்டு தோள்களிலும் கைகளை வைத்தாள். அவன் கண்களையே கூர்ந்து பார்த்து விட்டு—

''சாரீ எதுக்குச் சொல்றீங்க?''

''என்னைக் கண்டால் உனக்குக் கோபம் வரலையா?''

''மொநல்ல கோபம் வந்தது நிஜந்தான். ஆனால் இப்பொழுது... ஒரு நல்லவனின் வாழ்க்கையை நெருப்பில் போட்டுப் பொசுக்கி, உங்கள் வாழ்க்கையை நாசமாக்கி விட்ட என் தந்தையைக் கண்டால் வெறுப்பாயிருக்கிறது.''

''நிஜமாகவா?''

''என் இதயத்திற்குள் எட்டிப் பாருங்கள் பாண்டு! உண்மையைச் சொல்லணுமானால் நீங்கள் அப்பாவை பயமுறுத்துவதுபோல நிஜமாகவே என்னை நீங்கள் என்ன பண்ணினாலும் கூட உங்களைத் தப்புச் சொல்ல மாட்டேன். உங்களுக்கு இவ்வளவு சான்ஸ் கிடைத்தும் என்னை நீங்கள் இவ்வளவு ஆதரவுடன் நடத்துகிற உங்கள் பண்பு என் மனதில் பதிந்து போய்விட்டது. அந்தத் தந்தையின் மகளாய் என்னை தண்டித்தாலாவது அந்த புத்தி கெட்டவருக்குப் பாடங்கற்பித்ததாய் ஆகலாமோ என்னவோ? அதனால்தான் நான் இங்கே துன்பப்பட்டுக்

கொண்டிருக்கேன்னு அவர் நம்பணும் என்றுதான் நீங்கள் போன் செய்தபோது அப்படிக் கத்தினேன்.''

''நான் செய்வது தப்பில்லைங்கிறாயா?'' பாண்டு ரங்கன் பரிதாபமாய் கேட்டான்.

மஞ்சரி உணர்ச்சியில்லாமல் சிரித்தாள். ''வீதிகளில் ஏதாவது ஆக்ஸிடென்ட் நடந்தால் ஜனங்கள் எழுச்சி யடைந்து ஆத்திரத்துடன் லாரிகளைக் கொளுத்திச் சாம்ப லாக்கி விடுவதை நாம்ப சாதாரணமாய் பார்க்கிறோம். அதற்குக் காரணம் ஒரு உயிர் பலியாவது ஜனங்களின் கண் ணோட்டத்தில் மிகக் கொடுமை. மகாபாவமாய் பாவிப்பது தான் அதற்குக் காரணம். ஒரு பெண்ணின் கற்பைச் சூறை யாடிக் கொன்றுவிட்டு, அந்தக் குற்றத்தை உங்கமீது சுமத்தியவங்களை நீங்கள் பழிவாங்குவது தப்பில்லைன்னு நம்புகிறேன் நான். சட்டத்தின் கண்களைக் கட்டிவிட்டு நீதி தேவதைகளையே சிறைப்படுத்தக்கூடிய அதமர்களை உங்களைப் போன்றவங்கதான் தண்டிக்கணும்.''

''ஆனால் அவர் உன் தந்தை!''

''தந்தை! பிறவி கொடுத்தவர்! உயிர் கொடுத்த வரேயானாலும் அவர் செய்த கொடுமைகளை என்னால் ஏற்றுக்க முடியாது. உங்கள் உடம்பிற்குள்ளிருக்கும் ஒவ் வொரு அணுவும் அவரைப் பழிவாங்கத் தயாராயிருப்பதை நான் அறிகிறேன். நீங்கள் செய்கிற தர்ம யுத்தத்தில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமென்று மட்டும் மனதார விரும்புகிறேன் நான். அவங்களை மன்னிப்பீரோ அல்லது, குத்திக் கொல்வீரோ அது உங்கள் இஷ்டம். ஆனால் உங்களைக் கண்டால் எனக்கு இஷ்டம்.'' அவள் கண்களில் குபுக்கென்று கண்ணீர் ததும்பியது.

''மஞ்சரி, இதென்ன?''

அவள் பைத்தியக்காரியைப் போல் சிரித்தாள்.





''பாண்டு! இந்தக் கண்களால் உங்கள் இதயக் காயங் களைக் கழுவி, உங்கள் இதயத்தில் ஒரு பூவாய் மணம் வீசிக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு.''

அவன் ஒரு வினாடி கண்களை மூடிக்கொண்டான்.

''என்மேல் ஆசை வைத்துக்காதே மஞ்சரி! எந்த நிமிஷத் திலும் அணைந்து போய்விடக்கூடிய தீபத்தைப் போன்ற வன் நான்.''

''உங்களுக்கு வஜ்ர கவசமாயிருந்து உங்களைக் காப் பாற்றுவேன்''

''நீ என்னை விடுதலை செய்திருக்காவிட்டால் அவங்க இந்நேரம் என்னைக் கொன்றிருப்பாங்க.''

அவன் வாயை தன் விரல்களால் பொத்தினாள் மஞ்சரி. இருவருக்குமிடையே கொஞ்ச நேரம் மௌனம் தாண்டவமாடிற்று. ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்கள். கடைசியில் அவனே சொன்னான்.

''ரொம்ப நேரமாயிடுத்து, படுத்துக்கொள்'' அவளைக் கட்டிலுக்கருகில் அழைத்துச் சென்று படுக்க வைத்தான். மஞ்சரி கட்டிலில் சரிந்தவள் அவன் கைகளை மெதுவாய் தன் கைகளிலிருந்து விடுவித்துக் கொண்டாள். ஒரு தலையணையையும், போர்வையையும் எடுத்துக்கொண்டு வெளியே நடந்தான். கதவை வெருமே சாத்திவிட்டு வராந்தாவில் துப்பட்டியை விரித்துப் படுத்துக்கொண்டான் சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு புகைத்த படியே ஆகாயத்தை நோக்கிப் படுத்துக்கொண்டான். வெள்ளித் தட்டைப்போல மின்னிய சந்திரன் நடுவானத்தில் குங்குமப் பொட்டைப் போல தோன்றினான்.

பாண்டுரங்கனின் யோசனைகள் மஞ்சரியைப் பற்றியே தாவின. பழிவாங்கக் கருதி அவளை ஒரு கருவியாய்

பயன்படுத்த உத்தேசித்து அவளைக் கடத்தி வந்தான் ஆனால் அவள் அவனைக் காதலிக்கிறாள்.

அவள் தந்தை அவனுக்கு எதிரி! அந்தத் தந்தை கைகட்டிக் கொண்டு வெறுமே உட்கார்ந்துவிட மாட்டான். ஆட்களை அனுப்பித் தன்னைப் பிடித்துக் கொண்டுவர ஏதாவது சதி செய்வான். அவன் கையில் சிக்கிக் கொண்டுவிட்டால் இனி தன்னைக் கொல்லாமல் விட்டுவிட மாட்டான். அப்புவும் பத்மினியும் காலையில் ஒருக்கால் வராமல் போகலாம்.

சிகரெட் துண்டை அப்பால் வீசியெறிந்து விட்டு, மார்பின் மீது கைகளைப் போட்டுக்கொண்டு படுத்துக் கொண்டான்.

யோசனைகள் தூங்கவிடவில்லை. வெகுநேரங்கழித்து உறக்கத்தில் ஆழ்ந்துப் போனான் அவன். தன் உடம்பில் ஏதோ சில்லென்று படவே திடுக்கிட்டு கண்விழித்தான்.

அவனுக்குப் பக்கத்திலேயே படுத்துக் கொண்டிருந்தாள் மஞ்சரி. அவள் கைகளால் அவன் மார்பில் தடவிக் கொண்டிருந்தாள்.

"ஏய் இங்கே எதுக்கு வந்தாய்?" கேட்டான்.

"இவ்வளவு பெரிய வீட்டில் பயமாயிருந்தது. எந்தப் பிசாசாவது மேலே வந்து விழுந்துடுமோன்னு..."

"உன்னைப் பார்த்து அவை எப்பொழுதோ ஓடிப் போயிருக்கும்."

"அந்தக் காரியத்தை நீங்களே செய்யலாமல்லவா?"

"உடம்பு கொழுப்புப் பிடித்து அலைகிறதோ?"

"உடம்பு கொதிக்கிறது" அவனோடு ஒட்டிக்கொண்டாள் மஞ்சரி.

"ஏய்! ஏன் இப்படி மேலே வந்து விழுகிறாய்?"



"திரும்பிப் போகாததும், உருகிப் போகாததும் என்னன்னு பார்த்துடத்தான்" மஞ்சரியின் கண்களில் குறும்புத்தனம்...

"தப்பு—இப்படி ஆண் பக்கத்தில் படுத்துக்கக் கூடாது."

"உங்களுக்கு புத்தியேயில்லை. இஷ்டமான ஆணுக்குப் பக்கத்தில் இல்லாமல் கல்லுக்குப் பக்கத்திலும் முள்ளுக்குப் பக்கத்திலும் படுப்பாங்களா?"

"நான் உன்னை ஏதாவது செய்துவிட்டால்?"

"என்ன செய்வாய்னு பார்த்துடணும்னு தான் இருக்கு" அவன் கால்மேல் காலைப்போட்டு அவன் இடுப்பைச் சுற்றிலும் கைகளைப் போட்டாள்.

"உள்ளே போய் படுத்துக்கொள்."

"ஜாயிண்டாய் என்றால் ஒப்புக்கறேன்."

"என் ஜாயிண்ட்டுகளைக் கழற்றி எறிந்துடுவாய் போலிருக்கு."

"இங்கே நிலா வெளிச்சமும், தென்றல் காற்றும் சுகமாய் இருக்கு, நான் செத்தாலும் உள்ளே போக மாட்டேன்."

"சரி, அப்படீன்னால் இங்கேயே இருந்துகொள். நான் உள்ளே போகிறேன்."

"உங்களைவிட முள்ளும் கல்லுமே மேல். நிலா வெளிச்சத்தில் பெண்ணொருத்தி பக்கத்திலிருக்கும்போது சரஸமாடத் தெரியாத பாறாங்கல் நீர்" —சரேலென்று அவன்மேல் விழுந்து முகத்தில் முத்தமிட்டாள் மஞ்சரி. அவள் உரிமை எடுத்துக்கொண்டதைப் பார்த்து அவன் திணறத்தொடங்கினான்.

''ஏய்! தனியாய் இருக்கிற ஆணை இப்படிக் கெடுத்து கொடுமை செய்யலாமா?'' அவளைத் தள்ளிவிடப் போனான்.

''உங்களை இப்பொழுது யார் காப்பாற்றிவிடப் போறாங்கன்னு பார்த்துடலாம். உம்மை ரேப் செய்யப் போறேன்'' அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்!

பாண்டுரங்கன் அவளையே பார்த்தபடி இருந்தான். அவள் நடவடிக்கையைப் பார்த்து வாய்வார்த்தை வெளிவரவில்லை அவனுக்கு. அவன் கேசத்தில் விரல்களை அளைந்து மயக்கத்துடன் பார்த்தாள். தலையைத் தடவிக் கொண்டிருந்தாள். அவள் மார்பு அவன் மார்பின் மீது நலிந்துகொண்டிருந்தது.

மெல்லிய வழுவழுப்பான தோள்கள் நிலா வெளிச்சத்தில் புடம்போட்ட தங்கத்தாலான வாழைத்தண்டுகளைப்போல இருந்தன.

அவள் மெல்லிய உதடுகள் அதர அமிர்தத்தோடு குழைந்து அவனுக்கு மயக்கத்தை ஊட்டிக்கொண்டிருந்தன. கண்ணாடி போன்ற கன்னங்கள் நிலா வெளிச்சத்தில் பளபளத்துக் கொண்டிருந்தன.

புடவைக் கொசுவங்களுக்கும் ஜாக்கெட்டிற்கும் இடையேயிருந்த அகலமான வயிற்றில் அவன் கைகளை இழுத்துத் தடவச் செய்தாள். கால் கட்டை விரலால் அவன் புறங்கால்களைத் தடவிக் கொண்டிருந்தாள். அவன் நகரவில்லை.

கண்கள் செருக அவனைப் பார்த்து— ''இவ்வளவு நல்ல ஏகாந்தம் திரும்பவும் நமக்குக் கிடைக்குமா பாண்டு?'' காதுக்கருகில் கெகிசுத்தாள் மஞ்சரி.

அவள் தோள்களைச் சுற்றிலும் கைகளைப் போட்டு அவளை அழுத்தமாய் பிடித்துக்கொண்டான் பாண்டு. அவள் கண்களையே பார்த்தான். பக்தி... அன்பு...



தன்னையே நம்பிக்கொண்டிருக்கும் ஆசை அக்கண்களில் நன்றாய் தென்பட்டது.

''மஞ்சரி! உன் வாழ்க்கை அருமையானது. என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலிகள் கனவிலும் காணமுடியாத— உணரமுடியாத அபார அழகி நீ. மதிப்பிட முடியாத வாழ்க்கை உன்னுடையது. சமுத்திரத்தின் அலைகள் தாக்கியதால் கரையோரத்தில் வீசியெறியப்பட்ட கிளிஞ்சலைப் போன்றவன் நான். முத்துக்களையும் ரத்தினங்களையும் பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டியவன் நீ. கிளிஞ்சலுக்காக ஆசைப்படக்கூடாது மஞ்சரி!'' நாத்தழுதழுக்கச் சொன்னான் பாண்டுரங்கன்.

''நீங்கள் வீசியெறிகிற கிளிஞ்சலுக்குக்கூட ஒரு அர்த்தம் இருக்கும் பாண்டு! ரத்தினங்களைப் பொறுக்கி எடுக்கப் போய் சிக்கல்களை வரவழைத்துக் கொள்வதைவிட அந்தக் கிளிஞ்சலைக் கொண்டே திருப்தியடைவதுதான் என் விருப்பம். அதிலேயே சந்தோஷத்தைத் தேடிக் கொள்வேன்.''

''ஆனால் பகையால் வெந்துகொண்டிருக்கும் நான் அந்த ஜுவாலையில் எதிரியை நாசந்தான் செய்வேனோ அல்லது வெந்து வெந்து நானே சாம்பலாவேனோ தெரியாத நிலை என்னுடையது.''

''அப்படிப்பட்ட சமயம் நெருங்கிவிட்டால் உங்களுக்கும் முன்னால் நானே செத்தொழிகிறேன் பாண்டு.'' அவள் முறுவலுடன் அதைச் சொன்னாலும் அதைக்கேட்ட அவன் மனம் ஏனோ நெகிழ்ந்துவிட்டது.

''அவசர முடிவுகள் நல்லதில்லை மஞ்சரி. சில நிமிஷங்கள் சந்தோஷத்திற்காக உன்... உன்... உன் வாழ்க்கையோடு விளையாட முடியாது என்னால்.''

''அவசர முடிவோ என்னவோ. ஆனால் தவறான முடிவு மட்டும் இல்லை. நான் மணக்க விரும்புகிற ஆளுக்காக நான் எதற்கும் வருத்தப்படமாட்டேன்.

''என்னை விரும்புகிற ஒருத்தி இருக்கிறாள் என்ற திருப்தி ஒன்றே போதும் எனக்கு. அந்த ஒருத்தியின் நலனும், சுகமும் முக்கியம் எனக்கு.''

''என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' இரக்கம் ததும்பக் கேட்டாள் மஞ்சரி.

அவன் அவள் தலையை சரேலென்று மார்போடு சேர்த்து அழுத்திக்கொண்டான்.

''கேள்! என் இதயம் உனக்கு என்ன சொல்கிறதுன்னு கேள் மஞ்சரி! என்னை வேண்டும் என்று விரும்புகிற உனக்காக என்னை உனக்கு அர்ப்பணம் செய்து கொள்கிறேன். நீ கேட்டால் என் கழுத்தை வெட்டி என் உயிரை வேண்டுமானாலும் உனக்கு அர்ப்பணம் செய்வேன். என் இதயத்தைப் பெயர்த்து உனக்குக் காணிக்கையாய் உன் உள்ளங்கைகளில் வைக்கிறேன். ஐ லவ் யூ ஸோ மச்'' ஆவேசமாய் சொன்னான் அவன்.

மெதுவாய் தன் உதடுகளால் அவன் உதடுகளைத் தாக்கினாள் மஞ்சரி.

''இது என் முதல் முத்தம்'' மெதுவாய் சொன்னாள் மஞ்சரி.

''இல்லை, ஒரு இனிய நினைவாய் ஞாபகத்தில் வைத்துப்பேன்.''

''நம்புகிறேன்''

''ஒதுங்கிப் படுத்துக்கொள்''

அவள் ஒதுங்கிப் படுத்துக் கொண்டாள்.

இருவரும் வெவ்வேறு பக்கமாய் திரும்பிப் படுத்துக் கொண்டார்கள்.

நிலாவெளிச்சம் அவ்விருவர் மீதும் அமிர்த தாரைகளை சொரிந்து கொண்டிருந்தது!



''இது கனவில்லையே?'' என்றெண்ணிக் கொண்டான் அவன்.

''இந்த உண்மை கனவாகிப் போய்விடக் கூடாதே'' என்றெண்ணிக் கொண்டாள் அவள்.

# 24

ரிசீவரைக் கையிலெடுத்துக் கொண்டு நம்பரை டயல் செய்தான் பாண்டுரங்கன். மறுமுனையிலிருந்து ஹலோ என்று கேட்டதுமே சிரித்தான் பாண்டுரங்கன்.

''யார் நீ?'' கேட்டான் பாலாஜி.

''நான்தான் பாண்டுரங்கன் பாலாஜி. உன் மகளோடு பேசுகிறாயா?''

ஒரு வினாடி நிசப்தம்,

''உன் மகளோடு நான் எப்படி ஆடிட்டிருக்கேன் தெரியுமா?''

''உளறாதே. நாக்கு அறுந்துவிடும்''

''புலி மான் குட்டியோடு முதலிரவு கொண்டாடினாற் போல......'' பாண்டுரங்கனின் குரல் கணீரென்றது.

''உன்னைக் கொன்னு போட்டு விடுவேன் ராஸ்கல்.''

''அதெல்லாம் அப்புறமாய் பாலாஜி. இதற்குள் வேலையை முடித்து விடணும்னுதான இருந்தேன். ஆனால் அவ்வளவு ஷோக்காய் இருக்கிற உன் மகளை ஒரே யடியாய் கொல்ல முடியவில்லை என்னால். இன்னும் கொஞ்சநாள் ஆட்டங்காட்டிவிட்டு உன் மகள் உடம்பி லுள்ள சூட்டைத் தணித்துவிட்டு உன்னிடம் ஒப்படைக் கிறேன்.''

''அவ்வளவு நாள் நீ உயிரோடு இருக்கப் போறேன்னு நினைச்சுட்டிருக்காயோ?''

பாண்டுரங்கன் சிரித்தான். ரிசிவரை மஞ்சரியிடம் தந்தான்.

''டாடீ''

''பப்பீ'' வேதனையுடன் கேட்டது பாலாஜியின் குரல்.

''டாடீ, என்னை விடுதலை செய் டாடீ. என்னை இவன் என்னென்னவோ செய்கிறான். செத்துப் போயிட்டிருக்கேன் டாடீ'' பாலாஜி உள்ளங்கையை மடக்கி மேஜை மேல் ஓங்கி அறைந்த சப்தம் நன்றாய் கேட்டது.

''என்னை வீதியில் ஆடையில்லாமல் நடந்து போகும்படி செய்யப் போறானாம். அப்படி மட்டும் நடந்தால் நான் செத்துப் போயிடுவேன்'' அழுகைக் குரலில் சொன்னாள் மஞ்சரி.

''நீ எங்கேயிருந்து பேசுகிறாய்?''

''தெரியாது''

''போன் நம்பர்!'';

''தெரியாது''

''நகரத்தைத் தாண்டி எவ்வளவு தூரத்தில் இருக்கிறாய்?''

''இருபத்தி நாலாவது கிலோ மீட்டர் கல்லைப் பார்த்தேன்''

''எந்தப் பக்கம்?''

''தெரியாது''

''சுற்று வட்டாரத்தில் வீடுங்க இருக்கா?''

''இல்லை''

''சூரியன் நீ இருக்கிற வீட்டுக்கு எந்த திசையில் உதிப்பான்?''



''கேட் பக்கமாய்.''

''வீட்டிற்கு முன்னால் என்னென்ன சூழ்நிலைகள் இருக்கும்?''

''நான் உள்ளே கைதியாய் இருக்கிறேன். தெரியாது.''

''நீ கவலைப்படாதே பப்பீ. ஜக்கு விடாமல் நாலு பக்கமும் தேடிட்டேயிருக்கான். அவனைக் கொன்று போட்டுவிட்டு உன்னை மீட்டு வந்துவிடுவான்.''

பாண்டு போனை வாங்கிக்கொண்டான்.

''உன் மகளை எங்கே மறைத்து வைத்திருக்கேன்னு உனக்குத் தெரியவில்லையா?''

''அது நிமிஷவேலை. என் ஆட்கள் உன்னைப் பிடித்து கொன்று என் மகளைக் கூட்டி வந்துவிடுவார்கள்.''

''ஆனால் உன் முயற்சி பலிக்காது வருந்துவாய்.''

''வருந்தவேண்டிய நிலையில் இருப்பது நீதான்டா! மஞ்சரியை உன் கையாலேயே நீ கொண்டு வந்து ஒப்படைத்து விடுவாய் பார்.''

''அவ்வளவு உறுதியாய் எப்படிச் சொல்கிறாய்?''

''குருவி வந்து குன்றை முட்டிற்றாம். உன் தம்பி ராஜன் இப்பொழுது என் ஆதீனத்தில்தான் இருக்கிறான். தெரியுமா உனக்கு?''

பாண்டுரங்கன் அதைக் கேட்டு திடுக்கிட்டான்.

''நீ என்ன செய்யலாம்னு நினைக்கிறாயோ அதைத் திரும்பவும் ஒருமணி நேரத்திற்குப் பிறகு போன் செய்'' என்று சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டான். பாலாஜி.

பாண்டுரங்கன் மனமொடிந்து போய் மஞ்சரியைப் பார்த்தான். தலையில் கை வைத்து உட்கார்ந்துவிட்டான்.

மஞ்சரி முறுவலுடன் அவன் தோளில் கையை த்தா

''உங்க தம்பி இருக்கிற இடத்தைப் பற்றிச் சொல்லி பயமுறுத்துகிறார் இல்லையா?''

பாண்டுரங்கன் அவள் கையைத் தோளிலிருந்து எடுத்து விட்டு அவளைத் திரும்பிப் பார்த்தான். ''நீ எப்பவாவது பார்த்திருக்காயா?'' கேட்டான்.

''பார்த்ததில்லை. எங்கப்பாவும் அவர் நண்பர்களும் ரௌடிகளை வெச்சுக்கிட்டு திருட்டு வியாபாரம் செய்துட்டிருப்பாங்க. அப்பா சொல்லிட்டாரானால் எங்கேயோ உங்க தம்பியை மறைத்துதான் வைத்திருப்பார்.''

அவளை சோர்ந்து போய் பார்த்தான்.

''பெரிய ஹீரோன்னு நினைத்தேன் உம்மை. நீங்கள் அவ்வளவுதானா?'' ஏளனமாய் சொன்னாள் மஞ்சரி.

''மஞ்சரி, பரிகாசம் உதவாது.''

''பரிகாசம் செய்யாமல் வேறென்ன செய்யச் சொல்றீங்க? என்னென்னவோ செய்யப்போறதாய் சொன்னீங்க. ஒன்றையும் காணோம். உங்களால் முடியாது, இல்லையா?''

''என் யோசனைகளை வேறுபக்கமாய் திருப்பாதே மஞ்சரி! உன்னை விட்டுவிட்டால் ராஜனை விட்டு விடுவாராம்.'' மஞ்சரி சிரித்தாள்.

''எவ்வளவு முட்டாள் நீங்கள்! என்னதான் பலம் இருந்தாலும் புலியானது வேடனை மறைந்திருந்துதான் தாக்கும். நீங்கள் அவரை வீழ்த்தக்கூடிய சாமர்த்திய சாலின்னு அப்பாவின் கும்பலுக்குத் தெரியாதுன்னு நினைத்து விட்டீங்களா?''

''அப்படீன்னால்? என்ன சொல்கிறாய்?''

''நீங்க என்னை விட்டாலும் உங்க தம்பியை விட்டுவிட மாட்டார். அவனை வைத்துக் கொண்டு உங்களை அழவைப்பார்.''



மஞ்சரி சொன்னது உண்மைதான் என்று பாண்டுரங்கனுக்கு நன்றாய் தெரியும்.

''அப்படீன்னால் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

''பெண் ஒருத்தியின் யோசனை உங்களுக்கு பிடிக்குமா?''

''என் கோபத்தைத் தூண்டாதே, சொல்லு.''

''ஓ.கே. போன் செய்ங்க முதலில்'' அவன் பதில் பேசாமல் பாலாஜிக்குப் போன் செய்தான்.

''வெரிகுட் பாண்டு! எனக்குத் தெரியும் நீ போன் செய்வாய்னு'' என்றான் பாலாஜி.

பாண்டு ரிசீவரை மஞ்சரியிடம் தந்தான். ''டாடீ, நீ உடனே ராஜனை விட்டுவிடு. இல்லாவிட்டால் இந்த அரக்கன் என்னை என்ன செய்வானோ தெரியாது'' குரல் அடைக்கச் சொன்னாள்.

''நீ பயப்படாதே பப்பீ.''

''பப்பியும் இல்லை டாமியும் இல்லை, என்னை இப்பவே பாதி ரேப் செய்துட்டான். நீ வந்து இவனைக் கொல்வதற்குள் முழுதும் அனுபவித்து விடுவான். என்னைக் கண்ட இடங்களில் எல்லாம் தொடுகிறான். சே... சீ... கையை எடு'' பாண்டுரங்கனைப் பார்த்து கண்ணைக் கொட்டிவிட்டுச் சிரித்தாள் மஞ்சரி.

பாண்டுரங்கன் போனை வாங்கிக்கொண்டான்.

''பாலாஜி! என் தம்பி மேல் எனக்கு இருக்கும் அன்பை விட உன் மகள்மேல் உனக்கு உள்ள பாசம் அதிகம்னு நம்மிருவருக்குமே தெரியும். ராஜனை க்ஷேமமாய் விடாமல் போனால் உன் மகளைக் கெடுத்து நடுத்தெருவில் விட்டு விடுவேன். என்றோ போய்விட்டான் என்றெண்ணிக் கொண்டிருந்த தம்பி எனக்கு இல்லைன்னே நினைத்துக்

கொண்டு விடுகிறேன். உன் மஞ்சரி விஷயத்தில் உன்னால் அப்படி நினைக்கமுடியாது. அதனால் ராஜனை நீ என்ன செய்தாலும் கவலைப்படமாட்டேன். உன் இஷ்டப்படி விட்டுட்டேன்'' என்றான்.

பாலாஜி ஒரு வினாடி யோசித்தான். அவன் இவ்வாறு அடங்காப்பிடாரியாய் இருப்பான் என்று ஊகித்திருக்கவில்லை.

''சரி, இன்றிரவு அந்த மலைப்பகுதிக்கருகில் மாற்றிப்போம்.''

''திரும்பவும் வீழ்த்த முயற்சித்தால்... இம்முறை செத்தொழிவீர்கள்'' என்று போனை வைத்துவிட்டான் பாண்டுரங்கன். ஆனால் அவனுக்குத் தெரியும் தன்னைப் பிடித்துக்கொள்ள அவர்கள் கண்டிப்பாய் வலை பின்னுவார்கள் என்று.

மஞ்சரி சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தாள் சோபாவில். போர்டிகோவில் கார் வந்து நின்றது.

வந்தது யார் என்று பாண்டுரங்கனுக்குத் தெரியும். போய் கதவைத் திறந்தான்.

அப்பு, சிம்மாத்ரி.

சிம்மாத்ரி கேரியரையும் இரண்டு சிகரெட் பெட்டிகளையும் மேஜைமேல் எடுத்து வைத்தான்.

பாண்டுரங்கன் தான் பாலாஜியோடு பேசிய விஷயங்களைச் சொன்னான் அப்புவிடம். அவன் புருவம் நெளிந்தது

''ராஜன் முதலியவர்கள் சிறைப்பட்டிருக்கிற விஷயம் எனக்கு இதுவரை தெரியவே தெரியாது. உன்னைப் பிடித்துக்கொள்ளதான் இப்படிச் சொல்லியிருப்பாங்களோன்னு தோணுது'' என்று கோட் ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்து பாண்டுரங்கனிடம் தந்தான்.



''ஆபத்துக்கு உதவும். ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்'' என்று சொல்லிவிட்டு மஞ்சரியிடம் வந்தான் அப்பு.

''அம்மா! உன்னை இப்படித் தொந்தரவிற்குள்ளாக்குவதற்கு ரொம்ப வருத்தமாயிருக்கு. அயோக்கியர்களுக்கு உதவி செய்து தப்புச் செய்வதைவிட ஒரு நல்லவனைக் கரையேற்றுவதற்குச் செய்கிற இந்த முயற்சியில் உன்னை ஒரு பகடைக்காயாய் பயன்படுத்திக்க வேண்டியிருக்கு. பெரியவன், உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். எங்களை மன்னித்து விடு.''

மஞ்சரியின் கண்களில் குபுக்கென்று நீர் ததும்பிற்று. ''இல்லை அங்கிள். அப்பாவின் உண்மை சொருபத்தைப் பற்றித் தெரிந்த பிறகு அத்தந்தைக்கு மகளாய் ஏன் பிறந்தேனோன்னு அழுகை வருது. குறைந்தபட்சம் நீங்களாவது இவருக்கு ஆதரவாய் இருக்கிறதைப் பார்த்துச் சந்தோஷமாய் இருக்கு. குற்றம் செய்றவங்களைக் கண்டாலே நான் வெறுப்பேன். சட்டத்தின் பிடியில் அவங்க அகப்பட்டுக்கொள்கிற வரைக்கும் நான் இந்த யாகத்தில் ஒரு சமித்தாய் இருக்கணும்னு நினைக்கிறேன்'' என்றாள் வேதனையோடு மஞ்சரி.

அப்பு அன்போடு அவள் தலையை வருடினான். ''தங்கமான பொண்ணு! உன்னிடமுள்ள நல்ல குணத்தில் நூற்றில் ஒரு பங்காவது உன் தந்தைக்கு இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே'' என்றான்.

அப்புவும் சிம்மாத்ரியும் போய்விட்டார்கள். அவர்களை வழியனுப்பிவிட்டு பாண்டுரங்கன் உள்ளே வந்தான். ''சாப்பிடலாம் வா'' என்றான் மஞ்சரியிடம்.

''நான் சாப்பிடப் போவதில்லை.''

''பசிக்கலையா?''

''அதான் என்னை அனுப்பி வைத்துடப் போறீங்களே. நான் எதற்குச் சாப்பிடணும்?''

''நிலைமை உனக்குத் தெரியும்.''

''என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதான் எப்படியாவது துரத்திவிடப் பார்க்கிறீங்க.''

பாண்டுரங்கன் சிரித்தான். ''நாம்ப இங்கே க்ஷேமமாய் ஒன்றும் இல்லை மஞ்சரி. எந்தச் சமயத்தில் எதிரிகள் நம்மீது படையெடுத்து வந்துடுவாங்களோன்னு இருக்கு. உன்னை எனக்கு எவ்வளவு பிடிக்கும்னு வார்த்தைகளால் சொல்லமுடியாது என்னால். ஐ லவ் யூ.''

அவன் அவள் தோளில் கைவைத்தான். அவன் அவள் கண்களையே உற்றுப் பார்த்தான். அதில் பொங்கி வந்த அன்பின் அலைகளில் அவன் மூழ்கித்தத்தளிக்கத் தொடங்கினான். அவன் மனம் காற்றில் படபடக்கும் சருகைப் போல நடுங்கத்தொடங்கிற்று.

அவள் எல்லையில்லாத அன்பு அவன் மனதை நெகிழ்த்தி விட்டது. அதில் கரைந்துபோய்க் கொண்டிருந்தான். அவளைக் கிட்டே இழுத்துக்கொண்டு கழுத்திற்கு மேல் மெதுவாய் முத்தமிட்டான்.

அவன் காதுகளில் குசுகுசுத்தாள் அவள்.

''என் உடம்பில் உயிருள்ளவரை நான் உங்களோடேயேதான் வசிப்பேன்''— அவள் குரல் லேசாய் நடுங்கிற்று.

''நானே ஒரு அனாதை! பெயர்கெட்டவன். எந்த நிமிஷத்தில் எங்கே வீசியெறியப்படுவேனோ தெரியாது. என் மேல் உனக்கு ஏன் இவ்வளவு அன்பு மஞ்சரி?'' மஞ்சரி சலனமில்லாமல் பார்த்தாள் அவனையே.

''எனக்குத் தெரியும் நீங்கள் அப்படிச் சொல்வீர்கள் என்று. ஆனால்... கோடீஸ்வரனின் மகளாய் பட்டுப் படுக்கைகளின் மேல் நடக்கும் நாகன் நீங்கள் ஒரு மெக்கானிக் என்று தெரிந்தே உங்களை நேசித்தேன். ஜெயில் தண்டனை



அனுபவித்துவிட்டு சமூகத்தில் கொலையாளி என்ற பெயரை வாங்கியிருப்பவர் என்று தெரிந்தே நேசித்தேன். என் கண்ணோட்டத்தில் காதலிப்பதற்குத் தேவையான அருகதைகள் சொத்தோ அந்தஸ்தோ ஹோதாவோ இல்லை. என் அன்பை ஏற்றுக்கொண்டு சமமாய் அன்பை பகிர்ந்தளிக்கக்கூடிய ஒரு நல்ல மனிதர் தான். நீங்கள் என்னை ஆகாசத்தில் தூக்கி வைக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என் ஆசையெல்லாம் உங்களோடு சேர்ந்து வசிக்க வேண்டும் என்றுதான்'' என்றாள் மஞ்சரி.

பாண்டுரங்கன் ஒரு வினாடி கண்களை மூடிக்கொண்டான். மரண தேவதையோடு தான் பண்ணிக் கொண்டிருக்கும் இந்தப் போராட்டத்தில் எந்த நிமிஷத்தில் எப்படி இருக்குமோ அவனுக்கே தெரியாது.

அவளுக்கு என்னவென்று பதில் சொல்லுவான்? அவள் முதுகைத் தடவினான்.

''நீ என் உயிர் மஞ்சரி'' என்று மனதிற்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டான் அவன்.

அவன் இதயத்திலிருந்து அவளுக்கும் அந்த வார்த்தைகள் கேட்டு விட்டாற் போலிருந்தது. அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் பளீரென்று ஒளிர்ந்தன.

## 25

இரவு பத்துமணியைத் தாண்டிவிட்டது. அந்த மனைப் பகுதியில் ஆளரவமில்லாமலிருந்தது.

ஒரு பாராங்கல்லுக்குப் பக்கத்தில் பாண்டுரங்கன் தயாராய் நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்திலேயே மஞ்சரியும் இருந்தாள்.

அவள் இடுப்பைச் சுற்றிலும் குண்டுகள் கட்டப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து வெளியேறிய ஒயர்கள் பாண்டுரங்கனின் கையில் இருந்தன.

ஒரு முறை தன்னையே தான் பார்த்துக்கொண்டு சொன்னாள் மஞ்சரி.—

''இதெல்லாம் நிஜ குண்டுகளைப் போலவே இருக்கின்றன.''

''இதெல்லாம் நிஜ குண்டுகள் இல்லாமல் பொய் குண்டுகள் என்று நினைத்துவிட்டாயோ? என் கையிலுள்ள சுவிட்சை அழுத்தினால் இவை 'டாம்' என்று வெடித்து விடும்'' என்றான் பாண்டுரங்கன்.

அது பெரிய சைஸ் பாட்டரிகள் என்று அவ்விருவருக்கும் மட்டுமே தெரியும்.

தொலைவில் வந்து கொண்டிருந்த கார் ஹெட் லைட்டுகள் தென்பட்டன. அதைத் தொடர்ந்து இரண்டு மெடாடார் வேன்களும்கூட வந்து நின்றன.

பாண்டுரங்கன் ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்து வைத்துக் கொண்டான். தேவையானால் அதைப் பயன் படுத்திக்கொள்ளவும் தீர்மானித்துக் கொண்டுவிட்டான் அவன்.

காரிலிருந்து பாலாஜி, மதன், நாகராஜ் மூவரும் இறங்கினார்கள். காருக்குள்ளிருந்து ஒரு சர்ச் லைட் மின்னிற்று. அதுவரை காரிருளாய் இருந்த அவ்வெல்லையில் வெளிச்சம் பரவிற்று.

''பாண்டு, நீ சொன்னதுபோலவே உன் தம்பியைக் கூட்டி வந்திருக்கோம். மஞ்சரியை அனுப்பு''

சுமார் முந்நூறு அடி தூரத்தில் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

''பாலாஜி! பைத்தியக்கார வேஷம் போடாதே. என் கையிலுள்ள சுவிட்சை அழுத்தினால் போதும். உன் மகள்



உடம்பைச் சுற்றிலும் உள்ள குண்டுகள் வெடித்து விடும். என் கையிலுள்ள துப்பாக்கி நெருப்பைக் கக்கும்'' எச்சரித்தான். பாலாஜி சிரித்தான்.

''நீ சொன்னபடியே செய்துவிட்டேன்'' பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த அடியாளுக்கு சைகை காட்டினான் பாலாஜி.

சர்ச் லைட் மெடாடர் வேனின் மீது படிந்தது. அதிலிருந்து திடமாய் இருந்த ஒரு இளைஞன் கீழே இறங்கினான். அவன் கைகளிலும் கால்களிலும் சங்கிலிகள் பிணைக்கப் பட்டிருந்தன. உடம்பில் சட்டை இல்லை. ஜின்ஸ் பேன்ட், அகலமான பெல்ட், பம்ப் ஷூ.

பாண்டு ஒரு வினாடி தன்னையே மறந்துவிட்டான். தம்பியைப் பார்த்த மகிழ்ச்சி அவனைப் பரவசத்தில் ஆழ்த்திற்று.

''தம்பீ ராஜா, வந்துவிடு. நான்தான் உன் அண்ணன்'' பாண்டு பெரிதாய் கத்திவிட்டான்.

மஞ்சரி ஒருமுறை பாண்டுரங்கனை ஏறிட்டுப் பார்த்து விட்டு முன் நோக்கி அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். அந்தப் பக்கத்திலிருந்து ராஜன் பாரமாய் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

மஞ்சரியின் இடுப்பில் கட்டியிருந்த ஒயரைக் கையிலிருந்து கீழே போட்டுவிட்டான். துப்பாக்கியை ஜேபியில் வைத்துக் கொண்டான்.

அதுதான் அவன் செய்த தப்பு.

மஞ்சரி நடந்து வந்துக் கொண்டிருந்த இடத்திற்கும் ராஜன் நடந்து வந்துக் கொண்டிருந்த இடத்திற்குமிடையே பத்தடி தூரந்தான் இருந்தது. ராஜாவின் பார்வை பாண்டுரங்கனின் மீதே நிலைத்திருந்தது.

இருவருக்குமிடையேயிருந்த தூரம் குறைந்து கொண்டே வந்தது.

மஞ்சரி கிட்டே வந்ததுமே பாலாஜி அவளை சரேலென்று காருக்குள் தள்ளிவிட்டான்.

அச்சமயத்தில் ராஜன் இரண்டடி தூரத்தில் இருந்தான் பாண்டுரங்கனுக்கு.

பாண்டுரங்கன் இரு கைகளையும் நீட்டி ''ராஜன்'' என்றான். அவன் இதயம் படபடத்தது.

ராஜனின் கை காற்றில் எம்பிற்று.

''பட்'' என்ற சப்தம்...பாண்டுரங்கனின் கண்கள் பஞ்சடைந்து போயின. ஸ்பிரிங்காய் எம்பி நாலடி தூரத்தில் போய் விழுந்தான் அவன்.

நாலைந்து பேர் ராஜனை சங்கிலியால் பிணைத்துப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு விட்டார்கள்.

இன்னும் நாலுபேர் பாண்டுரங்கன் மேல் பாய்ந்து நகர முடியாமல் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள்.

பாண்டுரங்கனுக்கு நடந்த மோசடி புரிந்தது. திரும்பவும் சிக்கிக்கொண்டு விட்டான் அவன். இம்முறை தப்பித்துக்கொள்ள அவகாசம் கிடைக்காமல் போகலாம்.

மதன் விகாரமாய் சிரித்துக்கொண்டே நெருங்கினான் அவனை.

''என்னடா, மச்சானே! தம்பியை கூட்டிட்டுப் போகிறாயோ?'' ஏளனமாய் கேட்டான். பாலாஜி கோபமாய் அவன் கன்னங்களில் மாறி மாறி அறைந்தான்.

போட்ட திட்டம் தோல்வியடைந்து விட்டதைப் பார்த்து மஞ்சரி மனமொடிந்து விட்டாள். ஆனால் தன் பரபரப்பை யாரும் கவனித்துவிடாமலிருக்க முயன்றாள். பாண்டுரங்கனை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாத ஆதரவில்லாத நிலைமை அவளை வருத்திற்று.



''அந்த நெகடிவ்கள் எங்கே இருக்குன்னு சொல்லி விடு. இல்லாவிட்டால் உங்களிருவரையும் சேர்த்து கொன்று போட்டு விடுவோம்'' உறுமினான்.

''அவற்றை உங்களிடம் தராதவரையிலும் என் உயிருக்கு ஆபத்து வராதுன்னு தெரியுமடா'' என்றான் பாண்டு.

''இவனை இழுத்துட்டுப் போங்கள்'' நாகராஜ் உத்தரவிட்டான். பாண்டுரங்கனை இழுத்துச் சென்று மெடாடருக்குள் தள்ளி அவனைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டார்கள் பாலாஜியின் ஆட்கள். இன்னொரு வேனுக்குள் ராஜனை சங்கிலியால் கட்டி ஏற்றிக் கொண்டார்கள்.

மஞ்சரி கடைக்கண்ணில் துளிர்த்து நின்ற கண்ணீரை ஒருவரும் கவனியாதவாறு துடைத்துக் கொண்டாள்.

பாலாஜியும் அவன் நண்பர்களும் ஏறிக்கொண்டதுமே கார் புறப்பட்டது, அதைத் தொடர்ந்து மெடாடர்கள் புறப்பட்டன.

''ஏம்மா, அந்த ராஸ்கல் உன்னைத் தப்புத்தண்டா எதுவும் செய்துடலையே?'' கேட்டான் பாலாஜி.

மஞ்சரி பதில் பேசவில்லை.

''அவன் உன்னைப் படுத்திய பாட்டுக்குத் தகுந்த தண்டனையை பிரதிபலனாய் அடைவான்'' அழுத்திச் சொன்னான்.

''அவனை என்ன செய்யணும்னு எனக்கு நன்றாய் தெரியும் டாடீ'' என்றாள் நடுங்கும் குரலோடு.

''பொண்ணு ரொம்ப பயந்துடுத்து போலிருக்கு'' என்றான் மதன் மஞ்சரியின் தோளில் கைவைத்து.

பாலாஜி சூள் கொட்டினான் அதைக் கேட்டு.

மஞ்சரி மதனின் கையைத் தள்ளிவிட்டாள்.

"பாண்டுரங்கன் உன்னை என்ன செய்தான்?" கேட்டான் நாகராஜ்.

அவனை இழுத்துக் கன்னத்தில் அறைய வேண்டும் போலிருந்தது மஞ்சரிக்கு. ஆனால் கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

கார் வேகத்தை மேற்கொண்டது. மெதுவாய் திரும்பிப் பார்த்தாள். மோடாடார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன.

திடீரென்று சர்ரென்ற சப்தத்துடன் நின்றுபோய் விட்டது கார். வீதியைப் பார்த்தான் பாலாஜி. வீதிக்கு நடுவே ஒரு ஜீப்பின் பானெட்டின் மேல் உட்கார்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான் கருப்பு உடை அணிந்திருந்த ஒருத்தன்.

ஜீப் பானெட்டின் மேல் ஏறி உட்கார்ந்தபடியே சிறுத்தைப் புலியைப்போல உடம்பை விரைத்துக்கொண்டான். அவர்களை அலட்சியமாய் பார்த்துச் சிரித்தான். சிகரெட் புகையை குப்பென்று அவர்களை நோக்கி ஊதினான். திடீரென்று சிரித்தான். சிரித்துக்கொண்டே கைத்தட்டினான்.

அவ்வளவுதான்! வீதிக்கு இரு பக்கங்களிலுமிருந்த பெரிய பெரிய பாறாங்கற்களுக்கு மறைவிலிருந்தும், மரங்களுக்குப் பின்னாலிருந்தும் பலவான்கள் சிலர் வந்து இரண்டு மோடாடர்களையும் மோதினார்கள்.

எதிர்பாராத விதத்தில் யாரோ தம்மை முற்றுகையிடத் தொடங்கியதைப் பார்த்து பாலாஜி கூட்டத்தார் திகைத்துப் போனார்கள்.

அவர்கள் பாண்டுரங்கனின் ஆட்களா? அல்லது கொள்ளைக் கூட்டத்தினரா? பாண்டுரங்கனுக்குப் பின்னால் அவ்வளவு ஆட்படை இருந்ததென்று சொன்னால் நம்ப முடியவில்லை. அவர்களைத் தாக்கிவிட்டுத் தப்பித்து செல்லவேண்டும்.



பாலாஜியின் யோசனைகளைப் புரிந்து கொண்டு விட்டாற்போல சரேலென்று மொடாடரின் கதவுகள் திறந்துகொண்டன.

பாலாஜியின் ஆட்கள் வெளியே குதித்தார்கள். இரு கும்பல்களுக்குமிடையே போர் தொடங்கிவிட்டது. அது தான் சமயம் என்று பாண்டுரங்கனும் வெளியே குதித்தான்.

அவர்களைத் தனக்காக அப்புநான் ஏற்பாடு செய்திருப்பான் என்று புரிந்தது பாண்டுரங்கனுக்கு.

ஜீப் பானெட்டில் உட்கார்ந்திருந்த கருப்புஉடை மனிதன் ஒரே பாய்ச்சலாய் காற்றில் எம்பி அவர்களுக்கிடையே குதித்தான். கைக்கு அகப்பட்டவர்களைப் பிடித்துத் தாக்கிக் கொண்டிருந்தான். சண்டை போடுவதில் அவனுக்கிருந்த திறமையைப் பார்த்து வியந்தான் பாண்டுரங்கன். அவன் ஏதாவது கும்பலுக்குத் தலைவனாயிருக்க வேண்டும். அங்கே நிலைமை விபரீதமாகி விட்டதை உணர்ந்தான் பாலாஜி.

இன்னும் கொஞ்ச நேரத்தில் தம் ஆட்கள் கட்டுப் பட்டுப் போய்விடுவார்கள். ஆனாலும் இங்கே இருப்பது நல்லதாய் தோன்றாததால் டிரைவரைக் காரை வேகமாய் ஓட்டிக்கொண்டுப் போகச் சொல்லி உத்தரவிட்டான்.

"அப்ப நம்ப ஆளுங்க?" கேட்டான் டிரைவர்.

"அவங்களுக்காக இங்கேயே இருந்தால் அப்புறம் நம்மையும் ஒரு கை பார்த்துடுவாங்க."

"ஆனாலும் கைக்கு அகப்பட்டவனை விட்டுவிடுவதா?" நாகராஜ் துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டான். பாலாஜி கோபமாய் பார்த்தான்.

"முட்டாளாயிருக்காதே! நிலைமையை இன்னும் மோசமாக்கி விடாதே" என்று அவன் கையைத் தட்டி விட்டான்.

''அப்ப அவனை விட்டுவிட்டால் என் பழியைத் தீர்ப்பது எப்படி?'' என்றாள் மஞ்சரி.

''அவன் நம்ப இரும்புப் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டுவிட முடியாது. இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் அவனைக் கொன்றுவிடுகிறேன்.''

''போ டாடி, உன்னால் ஒன்றுமே செய்யமுடியாது. என்னைத் துன்புறுத்திய தொல்லைகளை என்னால் மறக்க முடியாது'' என்றாள் அழுவதுபோல நடித்தபடி. அவனை யாரோ காப்பாற்றிவிட்டது அவளுக்கு மிகச் சந்தோஷத்தைத் தந்தது.

பாலாஜி மகள் தோளில் கை வைத்தான்— ''உனக்கு மனக்கஷ்டத்தை ஏற்படுத்தினவங்க யாராயிருந்தாலும் சரி இந்தப் பூமியில் இருக்கக்கூடாது. அவன் கால் கைகளை உடைத்து உனக்குப் பரிசாய் தரேன்.''

''அவன் தான் எண்ணியதைச் செய்தே தீருவான் போலிருக்கு'' என்றாள் மஞ்சரி.

''என்ன சொன்னான் அவன்?'' மதன் கேட்டான்.

''உங்கள் எல்லோரையும் ஒருத்தரையடுத்து இன்னொருத்தராய் சித்திரவதை செய்து கொல்லப் போகிறானாம். அதுசரி, அவனுக்கு நீங்கள் என்ன துரோகம் செய்தீங்களாம்?'' அந்த கேள்வியைக் கேட்டு மூவரும் திடுக்கிட்டு விட்டார்கள். எப்படிப்பட்ட அரக்கனாய் இருந்தாலும் சரி தம் மகளுக்கு அது தெரிவதை விரும்பமாட்டான் என்று புரிந்துப்போய் விட்டது பாலாஜிக்கு.

பாண்டுரங்கன் வேகமாய் வேனை நோக்கிப் போனான். ராஜனை விடுவிடுக்க வேண்டும் என்ற அவன் உத்தேசம் கடைசியாய் கைதவறிப் போய்க் கொண்டிருக்கிறது. ராஜன் நினைவு தப்பி வேனுக்குள் விழுந்துகிடந்தான். கதவுகள் மூடிக்கொண்டன. அடுத்த நிமிஷமே வேன்கள் இரண்டும் வேகமாய் புறப்பட்டு விட்டன.



பாண்டுரங்கன் எதிரே கருப்பு உடையுடன் இருந்த ஆளைப் பார்த்து ''தாங்க்ஸ்'' என்றான். ஒரு வினாடி அச்சுற்றுப்புறத்தைத் துழாவினான். அப்பு எங்கேயாவது இருக்கிறானா என்று. ஆனால் ஜாடையைக் காணோம். கருப்பு உடையுடனிருந்த ஆளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

அவன்... அவன்... அந்த காலத்து எதிரி...

'தினகர்!'

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு திரும்பவும் சந்திக்கிறான் அவனை. திரும்பவும் இன்னொரு சிறைக்குள் அகப்பட்டுக் கொள்ளப் போகிறோம் என்று உணர்ந்தான் பாண்டுரங்கன். தன்னையறியாமல் அவன் கையை பேன்ட் ஜேபிக்குள் விட்டு துப்பாக்கியை எடுத்து தினகரை நோக்கி குறிவைத்தான். தினகர் பயப்படவில்லை. அவன் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாகவில்லை.

ஒவ்வொரு அடியாய் முன்நோக்கி வந்துகொண்டிருந்தான் தினகர். அவன் ஆட்கள் அசையாமல் நின்றிருந்தார்கள். தினகரின் பலத்தையும் சாமர்த்தியத்தையும் அறிவான் பாண்டுரங்கன். இவனுக்குத் தன்னால் ஆக வேண்டிய காரியந்தான் என்ன?

தன்னை எதற்காக விடுதலை செய்தான்?

''தினகர், கிட்டே வராதே.''

தினகர் அவன் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. பாண்டுரங்கனின் மூளை சுறுசுறுப்பாய் யோசித்தது. சிங்கத்தின் வாயிலிருந்து தப்பித்துப் புலிக் கூண்டில் வந்து சிக்கிக்கொண்டு விட்டேனா?

தன்னைச் சுற்றிலும் நின்றிருந்த தினகரின் ஆட்களைப் பார்த்தான் பாண்டுரங்கன். அவர்கள் தன்னைத் தாக்குவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை.

''ஏன் நின்றுவிட்டாய்? உன் கையிலுள்ள துப்பாக்கியால் சுடேன்'' என்றான் தினகர் இரண்டடி தூரத்தில் வந்து நின்றுகொண்டு.

பாண்டுரங்கன் பதில் பேசவில்லை.

''உன்னால் சுட முடியாது. துப்பாக்கியை ஜேபியில் போட்டுக் கொள்'' என்றான் தினகர். பாண்டுரங்கன் அதேபோல் செய்தான்.

''வெரிகுட்! அப்படிச் சொன்னதுபோல செய்தால் எனக்கும் சந்தோஷமாய் இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே ஜேபியிலிருந்து வெள்ளை கர்சீஃபை வெளியே எடுத்தான் தினகர்.

''வெள்ளை நட்பிற்கு அறிகுறி. இந்த நிமிஷத்திலிருந்து நாம்ப நண்பர்கள்'' என்றான் அவன்.

தினகரின் வார்த்தைகளை நம்பலாமா கூடாதா என்று தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தான் பாண்டுரங்கன். நம்பிக்கை ஏற்படாவிட்டாலும் அந்த நிமிஷத்தில் நம்பினாற்போல நடிக்கவேண்டும். வேறு வழியில்லை.

தினகர் சிரித்துக்கொண்டே அவனுக்கு கை கொடுக்கப் போனான். பாண்டுரங்கன் ஒருமுறை அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். விரோதிக்குக் கை கொடுக்கக்கூடாது.

தினகர் கம்பீரமாய் சிரித்தான்.

''உன் சந்தேகம் எனக்குத் தெரியும். என்னை ஒரேயடியாய் நம்பமுடியாது உன்னால். ஆனால் நான் உன் சிநேகிதன் இப்பொழுது. அப்புறமாய் உனக்கே தெரியும்.''

தினகர் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவனை வியப்பிற்குள்ளாக்கிற்று. மெய்மறந்து போய் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் வரவிற்கும், பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும் ஏதோ மர்மம் உள்ளது என்பதைப் புரிந்து கொண்டான் பாண்டுரங்கன்.



''ஃபிரெண்ட், இந்த தினகருக்குத் திருட்டுத்தனமாய் வீழ்த்துவது எல்லாம் பழக்கமில்லை. நீ என்னை சந்தேகப்படுவது போல உனக்கு ஏதோ கெடுதல் செய்யணும்னால் நான் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டிய தேவையேயில்லை. உன்னை விடுதலை செய்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஏன் தெரியுமா?''

பாண்டுரங்கன் ஏன் என்பதுபோல வியப்புடன் ஏறிட்டான் அவனை.

''இங்கேயில்லை. என்னோடு வா போவோம், சொல்றேன்'' அவன் தோளில் கை வைத்தான் தினகர்.

தினகர் ஸ்டீரிங்கிற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டான். பாண்டுரங்கன் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

ஜீப் புறப்பட்டதுமே பின்னால் வேனுக்குள் ஏறிக் கொண்ட அவன் அடியாட்கள் ஜீப்பைத் தொடர்ந்தார்கள்.

ஜீப் வேகமாய் போகத் தொடங்கிற்று.

## 26

அது பெரிய ஹால். தினகருக்கு எதிராய் உட்கார்ந்து கொண்டிருந்தான் பாண்டுரங்கன். அவனைச் சுற்றிலும் தினகரின் ஆட்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஒரு பெண் ட்ரேயில் தேநீர் கொண்டு வந்து டீபாயின் மேல் வைத்தாள்.

''என்னை இங்கே ஏன் கூட்டிட்டு வந்தாய்?'' கேட்டான் பாண்டுரங்கன்.

''மொதல்ல தேநீரைக் குடி, அப்புறமாய் கதைக்கு வருவோம்'' என்று அப்பெண்ணிற்கு சைகை காட்டினான்.

பாண்டுரங்கன் தேநீரை ஓரேமூச்சில் கடகடவென்று குடித்து முடித்தான்.

"பிரெண்ட்! எப்பொழுதும் மெதுவாய் குடிக்கணும்" தினகர் சொன்னான்.

பாண்டுரங்கன் அவன் சொன்னதைக் கேட்டுக் சிரித்தான். அவன் கண்களில் ஏனோ நீர் சுழியிட்டது.

"மெதுவாய் என்ற பதத்திற்கே என் அகராதியில் இடமில்லை தினகர். எந்தக் காரியத்தைச் செய்தாலும் துப்பாக்கிக் குண்டைப்போல வேகமாய் செய்றதையே என் வழக்கமாய் மாற்றிக்கொண்டு விட்டேன்."

"ஓ.கே. லெட் அஸ் கம் டு தி பாயிண்ட்" அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று துடிப்புடன் காதுகளைத் தீட்டிக் கொண்டிருந்தான் பாண்டுரங்கன்.

தினகர் எழுந்து நின்றான். ஒருமுறை அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியைச் சுற்றிலும் வந்தான்.

"உன் கதை முழுவதும் எங்களுக்குத் தெரியும்" என்று சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு பாண்டுரங்கனிடம் ஒன்றை நீட்டினான்.

பாண்டுரங்கன் மௌனமாய் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

"நீ தனியன். நிராயுதபாணி. ஆனாலும்கூட விடாப் பிடியாய் எதிரிகளோடு மோதிக்கத் தொடங்கிவிட்டாய். உண்மையில் உன் விரோதிகளின் பலத்திற்கு முன்னால் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டால் நீ ஒரு அணில்குட்டியைப் போன்றவன். நான் சொல்றது சரிதானே?"

பாண்டுரங்கன் ஆவேசத்தால் படபடத்தான். உள்ளங் கையை மடக்கிக்கொண்டு சோபாவில் ஓங்கிக் குத்தினான்.

"அந்த ராட்சசர்களின் பலத்தைப் பார்த் து பயப்படுறவன் இல்லை நான். அவங்களைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டே தீருவேன்."



"எப்பொழுது?"

பாண்டுரங்கன் கோபமாய் பார்த்தான்.

"உடனே இல்லை. அவங்க செய்த ஒவ்வொரு பாவத்தையும் ஞாபகப்படுத்திக்கொண்டு ஒவ்வொரு நிமிஷமும் நரக வேதனையை அனுபவிக்கும்படியாய் இம்சித்து இம்சித்து, வேட்டையாடிக் கொல்வேன்."

"அதுக்கு நாங்கள் உனக்கு ஒத்துழைக்கிறோம்" என்றான் தினகர்.

"நாங்கள் என்கிறாயே, இன்னும் யார்?"

"மேடம் ஜுவாலாதேவி."

"அவள் யார்?" பாண்டுரங்கன் கண்களை மூடிக் கொண்டு கேட்டான்.

"எனக்குத் தெரிந்த தெய்வம்."

"பின்னே எனக்கு எதுக்காக உதவிபண்ண விரும்புகிறாய்?"

"நான் விரும்பலை. அது மேடம் ஜுவாலாதேவியின் தீர்மானம். அவள் சொன்னதை செய்வதுதான் என் வழக்கம். அவள் நெருப்பில் குதிக்கச் சொன்னாலும் குதித்துவிடுவேன்."

பாண்டுரங்கன் அவனை வியப்போடு பார்த்தான்.

பெண்களை உல்லாசப் பொருள்களாய் பாவிக்கும் தினகர் ஒரு பெண்ணிற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறான் என்றால் அவனால் நம்பமுடியவில்லை,

"ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை எங்கோ ஓரிடத்தில் திசை திரும்புகிறது. கடந்த காலத்தில் நான் எப்படிப் பட்டவனாய் இருந்தாலும், மேடம் ஜுவலாதேவி, என் உயிரைக் காப்பாற்றித் தஞ்சமளித்த பிறகு நான் முற்றிலும் மாறிப்போய் விட்டேன். அவள் குளிர்ந்த

பார்வை தன்னைப் போன்றவர்களின் வாழ்க்கையில் மழையாய் பெய்கிறது. அதே பார்வை நெருப்பைக் கக்கி தகதகவென்று எரியவும் செய்யும். அவள் கைகள் தம்மைப் போன்றவர்களுக்கு அபயமளிக்கிறது. அதே கை பஸ்மாசுர னின் கையைப் போல எதிரிகளை பஸ்பமாக்குகிறது.

அதுதான் அவள் குணநலன். அது என் கண்ணோட்டத் தில் ஒரு உயர்ந்த மலையைப் போல'' தினகர் ஆவேசமாய் சொன்னான்.

''மேடம் எனக்கு எதற்காக உதவறாங்க?'' கேட்டான் பாண்டுரங்கன்.

''அவள் எதிரிகளுக்கு நீ எதிரியானதால்! தனியாய், ஆயுதமில்லாமல் யுத்தபூமியில் நின்று போராடிக் கொண் டிருக்கிற உனக்குத் தேவையான ஆயுதங்களைத் தந்து உதவு கிறாள் மேடம். நீ எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடிக்கும் பின்னால் நிழலாய் இருந்து உன்னைக் காப்பாற்றுவான் இந்தத் தினகர்.''

''அவ்வளவு சாமர்த்தியமுள்ள ஒருத்தி எதுக்கு என்னை தேர்ந்தெடுத்துக்கிட்டாள் என்று தெரிஞ்சுக்க லாமா?''

''மேடம் உன்னையே அதற்குத் தேர்ந்தெடுத்துககிட் டாங்கன்னால் அதற்குத் தகுந்த காரணம் ஏதோ இருக் கணும். அவள் என்ன பண்ணினாலும் யோசித்துதான் செய்வாள்.''

''அது உனக்குத் தெரியாதா?''

''தெரியாது.''

''மேடத்தை நானும் பார்க்கணும்''

தினகர் மறுத்துத் தலையசைத்தான்.

''அது இப்ப முடியாது.''

''ஏன்?''



''அதுகூட மேடத்தின் தீர்மானந்தான்.''

''அந்த தீர்மானத்திற்கு என்னால் கட்டுப்பட்டிருக்க முடியாவிட்டால்?''

''அவளுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. ஒருக்கால் நீதான் நஷ்டமடைவாய்.''

பாண்டுரங்கன் பதில் பேசவில்லை. தினகரின் வார்த்தைகளில் அவனுக்கு நம்பிக்கை பிறந்தது. தினகர் சொன்னதுபோல மேடத்தின் உதவியைப் பெறுவது நல்ல தாய் பட்டது. அப்புவால் வெளிப்படையாய் வந்து தனக்கு உதவ முடியாது.

சிம்மாத்ரி...?

பத்மினி...?

தனக்கு இருக்கும் மனிதர்கள் அவர்கள். அதையும் விட பலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் கண்டிப்பாய் மேடம் சொன்னதுபோல் செய்ய வேண்டும். தனக்கு ஒரு அரவணைப்பு வேண்டும். மிக முக்கியம் அது.

''சரி, நான் சம்மதிக்கிறேன்'' என்றான் எழுந்து நின்று.

''எனக்குத் தெரியும் பாண்டு. இந்த நிமிஷத்திலேருந்து நாம்ப ஒன்று'' கையை நீட்டினான் தினகர்.

பாண்டுரங்கன் தன் கையை அவன் கையில் வைத்தான். தினகர் ஆட்கள் கைதட்டினார்கள்.

தினகர் சைகை பண்ணி ''அவங்க ரெண்டுபேரையும் கூட்டிட்டு வாங்க'' என்றான்.

''அவங்க ரெண்டு பேரும் என்றால் யார்?'' பாண்டு ரங்கன் புரியாமல் கேட்டான்.

ஒரு அடியாள் போய் சுவற்றிலிருந்த சுவிட்சை அழுத்தி னான். சுவற்றிலிருந்த ஒரு ஓட்டை ஒரு பக்கமாய் நகர்ந்து கொண்டது.

உள்ளேயிருந்து அப்புவும் சிம்மாத்ரியும் வெளியே வந்தார்கள். பாண்டுரங்கன் அவர்களை வியப்போடு பார்த்தான்.

''இவங்க இங்கே எப்படி வந்தாங்க?'' கேட்டான்.

''உன்னைப்பற்றிய தகவல்களைச் சொன்னதற்கு நான் தான் கூட்டிட்டு வந்தேன். கடைசியில் நான் உண்மை விஷயத்தைச் சொன்னதும் நீ எங்கே போயிருக்கிறாய்னு சொன்னாங்க. அதனால் என்னால் அங்கே வர முடிந்தது'' என்றான் தினகர்.

## 27

சிகரெட் புகையை இழுத்து வெளியே ஊதிக்கொண்டே யோசனையில் ஆழ்ந்தான் பாண்டுரங்கன். தம்பியை அவர்களிடமிருந்து விடுவித்துக் கொள்ள முடியாமல் போனதற்கு அவனுக்கு மிக வருத்தமாயிருந்தது. கண் முன்னால் தம்பியே வந்து கொண்டிருந்தான். ராஜன் ஏன் அவ்வாறு செய்தான்? புரியவில்லை. தான் அவ்வாறு முட்டாள்தனமாய் நடந்து கொள்ளாமலிருந்திருக்க வேண்டும்.

தினகரைப் பார்த்தான் பாண்டுரங்கன்.

''ராஜனை அவர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும்'' என்றான்.

தினகர் பதில் சொல்வதற்குள்ளாகவே அப்பு கேட்டான். ''ராஜன என்றால் அந்த டார்ஜானைத்தானே சொலகிறாய்?''

பாண்டுரங்கன் அவனைக் கோபமாய் பார்த்தான். ''டார்ஜான் இல்லை. அவன் என் தம்பி'' என்றான். அப்புவின் புருவம் தெளிந்தது.



''ராஜன் உன் தம்பி என்று எனக்கு இதுவரை தெரியாது. உனக்கு ஒரு உண்மையை சொல்கிறேன். வருந்தக்கூடாது.''

''சொல்லு'' என்றான் தினகர் சூள் கொட்டியபடி.

''ராஜனை அவங்க கைக்குள் போட்டுக்கொண்டு விட்டாங்க. ஒருக்கால் உன்னைப் பொருட்படுத்தாமல் போகலாம்''

''அப்படியென்றால்?''

''ஒரு பயில்வானுக்குத் தருகிற உணவைத் தந்து ஆளைத் தயாராக்கிக் கொண்டே போதைப் பொருட்களுக்கு அவனை அடிமையாக்கிட்டாங்க. இப்ப ராஜனுக்கு யோசிக்கும் சக்தி இல்லாமல் போயிடுத்து. தான் யாா என்று தனக்கே தெரியாத நிலையில் அவங்க சொன்ன காரியத்தைப் செய்வான். ராஜன் இப்பொழுது ரொம்ப ஆபத்தான மனுஷனாய் மாறிப் போய்விட்டான் பாண்டு! மிக முக்கியமானச் சூழ்நிலைகளில் அவனை வெளியே கூட்டிட்டு வருவாங்க. இன்றைக்கு உன்மீது அவனை ஒரு கருவியாய் பயன்படுத்தினாங்க.''

அப்புவின் வார்த்தைகளை திக்பிரம்மையோடு கேட்டான் பாண்டுரங்கன். அவன் கண்கள் சிவந்தன.

''ஆனாலும் சரி என் ராஜனை நான் மீட்டுக்கொள்ள வேண்டும்.''

அப்பு பரிவோடு அவன் தோளில் கைவைத்தான்.

''பெதிடைன், மார்ஃபியா, போன்றவைகளுக்குப் பழக்கப்பட்டுப்போன ஆளை காப்பாற்ற முடியாது. உன் முயற்சி பலிக்காது. அந்த மருந்துகள் இல்லாவிட்டால் ஆள் திற்கவும் முடியாது. உயிர் போகும்படியான நரக உபாதையை அனுபவிப்பாங்க. அதனால் அவனை நீ கூட்டிட்டு வந்தும் பிரயோஜனமில்லை'' சொன்னான் அப்பு.

பாண்டுரங்கனின் கண்களில் நீர் சுழன்றது. காணாமற் போய் விட்டான் என்றெண்ணிக் கொண்டிருந்த தம்பி உயிரோடு தென்பட்டும் நடைப்பிணமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்று தெரிந்ததுமே அவன் இதயம் நெகிழ்ச்சியடைந்தது. அவன் பழிவாங்கும் உணர்ச்சி இன்னும் அதிகமாயிற்று.

## 28

பத்மினி பால்கனியில் நின்றபடி பாண்டுரங்கனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். இருட்டி விட்டது.

ஒரு மோட்டார் சைக்கிள் ஹரிதர் வீட்டு காம்பவுண்டிற்குள் வேகமாய் வந்தது.

பால்கனியின் குட்டிச் சுவற்றில் கைகளை ஊன்றிக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்த பத்மினியின் முகத்தில் ஆனந்தம் ஏற்பட்டது.

தோட்டத்தில் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. அவன் வீட்டிற்குள் நுழையும் முன்பே பத்மினி மளமளவென்று கீழே இறங்கி வந்து விட்டாள்.

உள்ளே தந்தை தூங்கிக் கொண்டிருந்தார்.

பத்மினிக்கு அவனைப் பார்த்ததுமே இதயத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று. பௌர்ணமி சந்திரனைப் பார்த்து மலரும் அல்லியைப்போல அவள் முகம் மலர்ந்தது.

கண்களில் ஒளி. உதட்டில் மந்தகாசம். அவனைப் பற்றிய யோசனைகள் வரவர அதிகரித்துக்கொண்டேயிருந்தன அவளிடம். அவளையே அறியாமல் அவள் மனம் அவன் வசம் போய்விட்டது.



"நான் அவனை நேசிக்கிறேனா என்ன?" என்று தன்னையே கேட்டுக்கொண்டாள். அக்கேள்வியை கேட்டுக் கொண்ட பொழுது அவள் கன்னங்கள் அவளுக்கே தெரியாமல் சிவந்துவிடும்.

ஒவ்வொரு நிமிஷம் அவன் என்ன செய்து கொண்டிருக்கிறானோ என்ற சங்கடமான ஆவேசமும், எங்கே எந்தக் குற்றத்தை செய்துவிட்டுத் திரும்பவும் சட்டத்தின் பிடியில் சிக்கிக்கொண்டு விடுவானோ என்ற குழப்பம் அவளைக் கலங்கடித்துக் கொண்டேயிருந்தது ஒருபக்கத்தில்.

மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே வரப்போனான் பாண்டுரங்கன்.

அவள் அவனுக்கெதிரே வந்து நின்றாள். அவன் எப்படிப்பட்ட ஆபத்திலிருந்து வெளியேறியிருக்கிறான் என்று சிம்மாத்ரி மூலமாய் அவளுக்கு அதற்குள் தெரிந்துப் போயிருந்தது.

நிலா வெளிச்சத்தில் அவள் கண்களில் பளபளத்த நீரை அவன் பார்த்துவிட்டான்.

"இதென்னது?" என்றான்.

தன் கண்களில் சுரந்தக் கண்ணீரைப்பற்றி அவன் கேட்கிறான். என்னவென்று பதில் சொல்லுவாள்? எதற்காக என்று சொல்லுவாள்? அவன் நிலைமை வேறு— தன் யோசனைகள் வேறு.

அவன் கைகளைப் பிடித்துக்கொண்டே தோட்டத்திற்குள் அழைத்துச் சென்றாள் பத்மினி. அதேபோல அவன் கைகளைப் பிடித்துக்கொண்டே வாழ்நாளெல்லாம் நடந்துப் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றிற்று ஆசை... அவ்விருப்பம் அவளை அந்தச் சமயத்தில் திணறடித்துக் கொண்டிருந்தது. மாமரத்திற்குக் கொஞ்சம் தூரத்திலிருந்த மல்லிகைப் பந்தலின் கீழே அவனை உட்கார வைத்துவிட்டு, அவனுக்குப் பக்கத்தில் தானும் உட்கார்ந்து கொண்டாள் பத்மினி.

மல்லிகை மலரின் சுகந்தம் அவ்வெல்லையெல்லாம் குப்பென்று பரவிக் கொண்டிருந்தது.

அவன் மடியில் தலைவைத்துப் படுத்துக்கொண்டு அவன் கழுத்தைச் சுற்றி கைகளைப் போட்டு அவனோடு உருகிப் போகவேண்டும் என்று மனம் தவித்துக்கொண்டிருந்தது. அவன் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள் பத்மினி.

அவள் கை நடுங்கிற்று. நடுங்கும் குரலுடன் சொன்னாள்— "நீங்கள் எவ்வளவு ஆபத்திலிருந்து தப்பியிருக்கீங்க தெரியுமா?"

"உம்" என்றான்.

"சிம்மாத்ரி சொன்னான்."

பாண்டுரங்கன் பதில் பேசவில்லை.

"உங்களுக்கு ஏதாவது ஆயிட்டால் என்னால் தாங்கிக்க முடியாது" என்றாள் பத்மினி மெல்லிய முரலில்.

"எனக்கொண்ணும் ஆகாது" என்றான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். துணிச்சல் தான் அதில் தெரிந்ததே தவிர பயம் இல்லை. அதனால் தான் அவளுக்குப் பயம்!

"இவ்வளவு நாளாய் நீங்கள் செய்யாத குற்றத்திற்கு தண்டனையை அனுபவிச்சீங்க. நீங்கள் செய்கிற இந்த யாகத்தில் உங்கள் கையில் மண் ஒட்டிக்கொண்டு விடக்கூடாது. சட்டத்தின் பிடியில் நீங்கள் சிக்கிக்கொண்டு விடக்கூடாது. திரும்பவும் நீங்கள் ஜெயிலுக்குப் போனால் உங்களுக்காகவே காத்துக்கொண்டிருக்கும் இந்தப் பெண்ணின் இதயமே வெடித்துவிடும்னு ஞாபகத்தில் வெச்சுக்குங்க" என்றாள்.

அவள் வார்த்தைகளைக் கேட்டு பாண்டுரங்கன் திடுக்கிட்டு விட்டான். அதே சமயத்தில் அவள் கண்களி



லிருந்து இருச்சொட்டுக் கண்ணீர் உதிர்ந்து அவன் கைமேல் தெறித்தன. அவன் நெகிழ்ந்து விட்டான்.

"பத்மினி" என்றான் இரக்கத்தோடு.

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் பத்மினி.

சக்கிரம் போன்ற அக்கண்களில்... அவன்மேல் அவளுக்கிருந்த அன்பு அமிர்தமாய் பொழிந்து கொண்டிருந்தது. தன்னையறியாமல் அவள் கைமேல் தன் கையை வைத்தான் அவன்.

மின்சாரம் தாக்கிற்று பத்மினியின் மனதில். அவள் உடம்பு லேசாய் நடுங்கிற்று. அவன் ஸ்பரிசம்... ஏதோ போல் தோன்றிற்று.

கற்பனையில் ஒவ்வொரு நிமிஷமும் தோன்றி தன் மனம் முழுவதும் நிரம்பியிருந்தவர் தனக்கு அத்தனை நெருக்கத்தில் வந்துவிட்டதைப் பார்த்து அவள் கண்களை மூடிக்கொண்டாள் ஒரு வினாடி. அந்த நேரத்தில் அவளுக்கு இன்னும்... இன்னும் நெருக்கமாக வேண்டும் என்று தோன்றிற்று அவளுக்கு.

சொல்லமுடியாத தவிப்பு... ஏதோ உணர்ச்சியின் உந்தல் அவள் ஒவ்வொரு அணுவிலும்...

அவன் மீது அவளுக்கிருந்த அன்பு அவளைச் சும்மாயிருக்க விடவில்லை. அவனுக்கு மிக நெருக்கமாய் நகர்ந்தாள். இன்னும் கிட்டே... அவனோடு ஒன்றிப்போக வேண்டும் போன்ற தவிப்பு...

அவளுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் அவன் உணர்ந்து கொண்டுதான் இருந்தான். ஆனால்... அன்றைக்குத் தாயைக் கொன்ற பழி சுமத்தப்பட்டு ஜெயிலுக்குப் போன அநியாயத்திற்காகப் பழிவாங்கத் துடித்த தன்மீது அவளுக்கிருந்த எண்ணத்தை இதுவரை இரக்கம் கலந்த நட்பாகத்தான் பாவித்தானே தவிர அன்பாய், நேசமாய் பாவிக்கவில்லை அவன். தன் தாயைக்

கொன்றவனைப் பழிவாங்க எண்ணும் தனக்கு ஒத்துழைக்கிறாள் என்று மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தான்.

அவன் ஊகம் தவறாகி விட்டது.

ஆனால் அவனுக்கு இரண்டுமே முக்கியந்தான். அந்தக் கயவர்களையும் ஒடுக்கவேண்டும். அந்த முயற்சியில் தான் விரும்பும் பாண்டுரங்கனுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது.

அவள் குமுறல்கள் அவனுக்குப் புரிந்துவிட்டது. அவள் கைமேல் தன்னையறியாமல் அவன் கை முறுக்கேறிக் கொண்டது.

அவன் கண்முன்னாடி மஞ்சரி சட்டென்று வந்து நின்றாள். அவ்வளவுதான்! அவள் குரும்புத்தனங்களும், பேச்சும், நெருக்கமும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். மஞ்சரிக்குத் தன் மேலிருந்த அன்பை அவன் அறிவான். அவனுக்காக சிரித்துக்கொண்டே உயிரையும் தரக் கூடியவள் மஞ்சரி. மெதுவாய் நகர்ந்து கொண்டான் பாண்டுரங்கன்.

திடுக்கிட்டுப் பார்த்தாள் பத்மினி. அவன் நடத்தை அவள் மனதை மிகவும் புண்படுத்திற்று. ஏதோ வருத்தம்... வேதனை அவள் முகத்தில் நன்றாய் தெரிந்தது. கண்களில் கண்ணீர் சுழியிட்டது.

அவன் மனம் துடிதுடித்தது. மஞ்சரியின் இருப்பிடத்தில் அவனால் பத்மினியை வரவேற்க முடியாது. அவளைத் தன் காதலியாய் ஊகித்துக்கூட பார்க்க முடியவில்லை அவனால்.

ஒரு சிநேகிதியாய்—தன் நலனைக் கருதும் நல்லிதயம் படைத்தவளாய் மட்டும் அவன் இதயத்தில் அவளுக்கு இடம் இருந்தது.

அதோடு அவள்—அசல் தன் தாயைப் போன்ற ஜாடையைக் கொண்டிருந்தாள். சகுந்தலா சமானமில்லாத, அசாதாரணமானப் பெண். வளர்ந்தும் வளராததுமான பருவத்தில் அவள் தன்மீது பதிப்பித்திருந்த முத்திரை அழிக்க முடியாதது.



பத்மினியின் மனதை வருத்தப்படுத்தி விட்டோமோ என்று தன்னையே கேட்டுக்கொண்டான் பாண்டுரங்கன். அப்படியானால் மறு உலகத்திலிருக்கும் சகுந்தலா தன்னை மன்னிக்கமாட்டாள். பத்மினியைப் பார்த்தான் பாண்டுரங்கன். அவள் வழுவழுப்பான கன்னங்களில் கண்ணீர்.

உருகிப் போய்விட்டான் பாண்டுரங்கன். பரிவோடு அவள் கண்ணீரைத் துடைத்தான். பத்மினியின் மனதை புண்படுத்த அவன் விரும்பவில்லை. அவள் தோளைப் பிடித்துத் தன் பக்கமாய் திருப்பினான்.

"பத்மினி! என்னை சரியாய் புரிந்துகொள். சுழற் காற்றில் சிக்கிக்கொண்டிருக்கும் படகைப் போன்றவன் நான். என் மனதில் இந்த நேரத்தில் பழிவாங்கிக்கொள்ளும் பகை உணர்ச்சியைத் தவிர அன்பிற்கோ நேசத்திற்கோ இடமில்லை. நடுக்கடலில் இருக்கிறேன் நான். பத்திரமாய் கரையைத்தான் போய்ச் சேருவேனோ அல்லது ஒரேயடியாய் மூழ்கித்தான் போய்விடுவேனோ தெரியாத துரதிர்ஷ்டசாலி. அன்பு, நேசம் என்ற வார்த்தைகளால் மனதை பலவீனப்படுத்தி என் கவனத்தைச் சிதறடித்து விடாதே. என் லட்சியம் நிறைவேறும் வரைக்கும் தயவு செய்து வழி காட்டியாய் நடந்து கொள்" என்றான்.

அவன் வார்த்தைகளிலிருந்த மென்மைக்கு அவள் மனம் குளிர்ந்தது. அவன் மௌனத்திற்குக் காரணம் தன் மீது உள்ள நிராகரிப்பு அல்ல என்று தெரிந்து திருப்தியடைந்தாள். அவள் முகம் மலர்ந்தது. அது மட்டுமில்லை, அவன் வார்த்தைகள் தன்னையேயறியாமல் அவளுக்குக் கடமையை நினைப்பூட்டின.

"நிஜந்தான். அது உங்கள் ஒருத்தரின் லட்சியம் மட்டுமே இல்லை, என்னுடைய லட்சியம்கூடத்தான். நாமிருவரும் சேர்ந்து சாதிக்கவேண்டிய பெரிய காரியம் அது. உங்களுக்கு எவ்வளவு பொறுப்பு உள்ளதோ அத்தனைக்

கத்தனை என் தாயின் மரணத்திற்குக் காரணமானவங்களைப் பழிவாங்கவேண்டிய அவசியம் எனக்கும் இருக்கு.”

அவளிடம் ஏற்பட்ட மாறுபாட்டிற்கு மகிழ்ச்சியடைந்தான் அவன்.

அவளிடம் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தென்பட்ட நுட்பமான உணர்ச்சிகள் எல்லாம் மாயமாகி விட்டன. அவள் இப்பொழுது மென்மையான உணர்ச்சிகளைக் கொண்ட பெண் அல்ல. லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக எதையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்றும் இறுதியில் உயிரையே இழக்க நேர்ந்தாலும் தயங்கக் கூடாது என்ற துணிச்சலும் கொண்ட வீராங்கனையாகி விட்டாள்.

அவனும் எழுந்து நின்றான். போர்டிகோ வரைக்கும் வந்து ஒரு முறை திரும்பிப் பார்த்தான்.

அவள் பின்னாடியே நின்று கொண்டிருந்தாள். அதற்குள் அவன் போய்விடுவது பிடிக்கவில்லை அவளுக்கு.

அவன் மௌனமாய் மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தான்.

## 29

நாகராஜ் விஸ்கி கிளாசை கீழே வைத்துவிட்டு இடைவிடாமல் ஒலித்துக் கொண்டேயிருந்த டெலிபோனை எரிச்சலுடன் பார்த்துவிட்டு ரிசீவரைக் கையிலெடுத்தான்.

“ஹலோ! நாகராஜ்!”

“யார் நீ?”

“ஃப்ரெண்ட்”

“அப்படீன்னால்?”



மறுமுனையிலிருந்து பதிலுக்கு அடையாள மொழியைப் போல ஒரு விசில் போன்ற சப்தம் கேட்டது.

நாகராஜின் முகம் மலர்ந்தது.

“என்ன வேணும்?” கேட்டான் நாகராஜ்

மறுமுனைக் குரலில் சிரிப்பு.

“வேண்டியதைத் தருவது எங்கள் முறை. எங்களுக்குக் கரென்ஸி வேண்டும்.”

“எங்கிருந்து பேசுகிறாய்?”

“அது உனக்குத் தேவையில்லை.”

“விஷயத்துக்கு வந்தால் நல்லது” என்றான் நாகராஜ்.

“நாங்க வந்த காரியம் திருப்பியடிச்சுவிட்டது. இந்தச் சமயத்தில் என்ன செய்றதுன்னு யோசித்து குழம்பிக் கொண்டிருந்தபோதுதான் உன் பெயர் மூளையில் பளிச்சிட்டது.”

“என் பேரா? ஏன்?”

மறுமுனை ஆள் சிரித்தான்.

“நாகராஜ்! பெரிய மனுஷனாய் வளைய வந்து கொண்டிருக்கிற கள்ளக்கடத்தல்காரங்க லிஸ்டில் உன் பேரும் இருக்கிறது எங்களுக்குத் தெரியும். அதனால்தான் எங்க விவகாரங்களை உம்மோடு செட்டில் செய்துக்கலாம்னு விரும்புகிறோம்.”

“பேசுகிறது போலீசு அதிகாரிங்களோ, கஸ்டம்ஸ் அதிகாரிங்களோ இல்லைன்னு எப்படி நம்புவது?” சந்தேகத்தோடு கேட்டான் நாகராஜ்.

“மிஸ்டர் நாகராஜ்! இந்தத் துறையில் மிக அனுபவசாலி நீங்கள்! வாய் வார்த்தையால் உடன்படிக்கையாறது தானேயொழிய காகிதங்களின் வேலை நமக்குக் இடையாது மூப்பது லட்சம் விலை மதிப்புக் கொண்ட வைரங்களை

மிகப் பிரயாசைப்பட்டு வெளிநாட்டிலிருந்து வரவழைத்தோம். அவற்றை வேண்டும் என்று கேட்டிருந்த வஹீத்கான் கார் ஆக்ஸிடென்டில் செத்துட்டதால் நாங்கள் சிக்கலில் ஆழ்ந்துவிட்டோம். அதோடு கூட வைரங்கள் இருக்குமிடத்தை கஸ்டம்ஸ் அதிகாரிங்க கண்டுபிடிச்சுட்டாங்க. இந்த வைரங்களுக்காகத் தீவிரமாய் வேட்டையாடத் தொடங்கியிருக்காங்க.''

மறுமுனையிலிருந்தவனின் அவசரத் தேவை என்னவென்பதைப் புரிந்துக்கொண்டான் நாகராஜ. அதனால் தலைக்குமேல் போகத்தொடங்கினான்.

''இப்ப எனக்கு வைரங்கள் தேவையில்லை.''

''எங்களுக்குத் தெரியும் நாகராஜ். வெளிப்படையாய் உங்களிடம் உண்மையைச் சொல்லிவிட்டதால் நீங்க உங்களுக்கு சாதகமாய் திருப்பிக்க முயலுகிறீங்க இங்கே வந்து சேர்ந்திருக்கும் சரக்கை திரும்பி எடுத்துட்டுப் போக முடியாது. அதனால் நஷ்டமானாலும் பரவாயில்லை முப்பது லட்சம் விலைமதிப்புடைய இந்த வைரங்களை இருபத்தைந்து லட்சத்திற்கே உங்களுக்குத் தர முன் வருகிறோம்''— மறுமுனைக் குரல் சொல்லிற்று.

''இருபத்தைந்து லட்சமா?'' நாகராஜின் கண்கள் மின்னின. அவனுக்குத் தெரியும்—ஒருமுறை அதிகாரிகளின் கண்களில் மிளகாயைத் தூவிவிட்டு, கொண்டு வந்திருக்கும் சரக்கை எப்படியாவது பேரமாடி விற்றுத் தீர்த்துவிட வேண்டுமேயன்றி, திரும்பிக் கொண்டு போகமுடியாது. அவர்கள் ராஜிக்கு வந்தாற்போல பேசத் தொடங்கியதால் நாகராஜ் சொன்னான்—

''அவ்வளவு பணம் இல்லை. இருபது லட்சம்.''

''ரொம்பக் குறைவு.''

''உங்களிஷ்டம்'' என்றான் நாகராஜ.



''சரக்கை சாம்பின் பார்த்தால நீங்களே எங்கப் பின்னாடி சுற்றத் தொடங்கிடுவீங்க. இவை ரொம்ப அரிதானவை. பார்க்கிறீங்களா?''

''உம்.''

''அப்படீன்னால் ஒரு காரியம் செய்ங்க.''

''என்ன?''

''உங்க வீட்டுக்கு முன்னால் கந்தல் உடையோடு ஒரு பைத்தியக்காரனைப் போன்ற ஆள் சுற்றி சுற்றி வந்துட்டிருப்பான். அவன் எங்க ஆள். அவனிடம் வைரத்தின் சேம்பிள் இருக்கும். அவனை உள்ளே கூட்டிட்டுப் போய் பரிசோதித்துக்குங்க.''

நாகராஜ் யோசனையில் ஆழ்ந்தான்.

''என்ன யோசிக்கிறீங்க? வைரப் பரீட்சை செய்துக்கத் தெரியும் உங்களுக்குன்னு நாங்கள் அறிவோம்.''

''ஓ.கே. சாம்பிளைப் பார்க்கிறேன்.''

''சரியாய் இருபது நிமிஷங்களுக்குப் பிறகு போன் செய்றேன்'' மறுமுனை ஆள் போனை வைத்துவிட்டான்.

அந்த வைரங்களை சம்பாதித்துக் கொண்டால் அதில் சுமார் பத்துலட்சம் லாபம் கிடைக்கும் என்று தெரியும் நாகராஜுக்கு.

அச்சமயத்தில் தன்னையறியாமல் அவன் மனதை யோசனை துளைத்தெடுக்கத் தொடங்கிற்று. பாலாஜிக்கும் மதனுக்கும் இந்த விஷயம் தெரியாமல் மேனேஜ் செய்துகொள்ள வேண்டும். பத்துலட்சம் லாபம் அவன் கண்முன் நிழலாடிற்று.

நாகராஜ் அடியாளை அழைத்தான். ''நம் வீட்டிற்கு முன்னால் கந்தலாடையோடு பைத்தியக்காரன் திரிஞ்சுட்டிருப்பான். அவனைக் கூட்டிட்டு வாங்க'' உத்தரவிட்டான்.

அவர்கள் உடனே விடுவிடென்று வெளியே நடந்தார்கள்.

விசாலமான அந்தப் பங்களாவுக்கு எதிரே வீதிக்கு மறுபக்கத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்தான் ஒரு ஆள்.

அவனைப் பார்த்தால் கள்ளக்கடத்தல் கும்பலைச் சேர்ந்த ஒருவன் அவ்வாறு பைத்தியக்காரன் வேஷத்தில் இருக்கிறான் என்று சொன்னால் யாருமே நம்பமாட்டார்கள்.

''ஏய், என்ன செய்கிறாய் இங்கே?'' உறுமினான் அடியாள்.

அந்தப் பைத்தியக்காரன் அப்படியும் இப்படியுமாய் பார்த்துவிட்டு— ''உங்க பாஸ் என்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாரா?'' கேட்டான். இருவரும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஆமாம்.''

''அப்படீன்னால் வா.''

அவனை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான் அடியாள். நாகராஜ் அவனை ஒருமுறை கூர்ந்து பார்த்தான்.

அவனை எதுவும் கேள்வி கேட்காமலேயே கையை நீட்டினான் நாகராஜ். பைத்தியக்காரன் பேன்ட்டிற்குக் கீழேயிருந்த ஜிப்பை இழுத்து அதிலிருந்து வைரத்தை எடுத்து நாகராஜனிடம் தந்தான்.

அதை வாங்கிக்கொண்டு கூர்ந்து பார்த்தான் நாகராஜ். ஒளியை வாரியிறைத்துக் கொண்டிருந்த அந்த வைரம் மிக விலைமதிப்பு வாய்ந்தது என்பதை ஊகித் தறிந்து கொண்டான். அவர்கள் சொன்னது போலவே நாற்பது லட்சம் வரை கேஷ் செய்துகொள்ளலாம்.

''இனி நீ போ'' என்றான்.



பைத்தியக்காரன் சிரித்துக்கொண்டே திரும்பி கையை நீட்டினான்.

அந்த வைரத்தைத் திருப்பித் தரச்சொல்லி கேட்கிறான் அவன். அது எப்படியும் திரும்பித் தன் கைக்குதானே வந்து சேரும் என்றெண்ணி அதை அவனிடம் திருப்பித் தந்துவிட்டான் நாகராஜ்.

''இவனை வெளியே கொண்டுபோய் விட்டுட்டு வாங்க.''

கையாட்கள் பைத்தியக்காரனை கூட்டிச் சென்றார்கள்.

நாகராஜ் கைக் கடியாரத்தைப் பார்த்துக்கொண்டான். அதற்குள் கால்மணி நேரம் ஆகிவிட்டிருந்தது. அநாவது இன்னும் ஐந்து நிமிஷத்தில் போன் வரும். எப்படியாவது வைரங்களை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான் நாகராஜ்.

சாம்பிளைப் பார்த்ததும் அந்த யோசனை மேலும் உறுதியாகிவிட்டது. இதெல்லாம் ரகசியமாய் நடந்து முடிய வேண்டும். பாலாஜிக்கும் மதனுக்கும் தெரிந்துவிட்டால் ஷேர்கள் தரவேண்டும். இது தனக்கு வந்து சேர்ந்திருக்கும் நல்ல அவகாசம். இந்த அதிர்ஷ்டத்தை மீறி அவர்களுக்குப் பங்கு தர மனம் விரும்பவில்லை.

பர்மா, ரங்கூன் தேசங்களிலிருந்து ஹெராயின், கஞ்சா முதலியவைகளை வரவழைத்துக் கள்ளக்கடத்தல் வியாபாரம் செய்வதில் மூவரும் பங்காளிகள்தாம்.

போன் மணியடித்தது. தாமதிக்காமல் சட்டென்று எடுத்துக்கொண்டான் ரிசிவரை.

''இப்பொழுது சொல்லுங்கள்.''

''பார்த்தேன்.''

''என்ன செய்யலாம்னு நினைக்கிறாய்?'' இம்முறை ஒருமையில் அழைத்தது குரல்.

''ஓ.கே. வாங்கிக் கொள்கிறேன்.''

''ஆனால் ரிஸ்க்கை நீதான் எடுத்துக்கனும்.''

''அப்படீன்னால்?''

''கஸ்டம்ஸ் அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, எங்க ஆள் ஒரு ஸ்டார் ஓட்டலில் தங்கியிருக்கிறான். அவனிடம் நீ இருபத்தைந்து லட்சங்களைத் தந்துவிட்டு வைரங்களைப் பெற்றுக்கொள்ளணும்.''

''எந்த ஓட்டல்?''

சொன்னான் மறுமுனை ஆள்.

''ரூம் நம்பர்?'

''அந்த ஓட்டலில் இருக்கிற அறுநூறு ரூமில் எந்த அறையில் இருக்கிறான் என்று தெரியாது. சில அறைங்களில் கஸ்டம்ஸ் ஆளுங்க கூட இருக்காங்க.''

நாகராஜின் முகம் சிவந்தது.

''இது அநியாயம். சரக்கை நீங்களே ஒப்படைக்க வேண்டும்'' என்றான்.

''சாரீ, அந்த அவகாசம் எங்களுக்கு இல்லை. நீங்கள் முடியாதுன்னு சொன்னால் அவற்றை சமுத்திரத்தில் வீசியெறிந்து விட்டுப் போய்விடுகிறோம். ஆனால் ரிஸ்க் நாங்க எடுத்துக்க மாட்டோம்.''

விடவும் முடியாத பேரம்.

''சரி, எப்பொழுது, சொல்லு'' கேட்டான் நாகராஜ்.

''சரியாய் இன்றிரவு ஒன்பது மணிக்கு.''

''ஓ.கே.''

போன் கட் செய்யப்பட்டது.



நாகராஜ் யோசித்தபடி உட்கார்ந்திருந்தான். பணத்தை ஒப்படைத்துவிட்டு வைரங்களை எடுத்துக் கொண்டு வரக்கூடிய சாமர்த்தியம் படைத்தவர்கள் தன் அடியாட்களில் ஒருத்தனுமே இல்லை. கொஞ்சம் தவறினாலும் போதும் தன் பணம் போவதோடு கூட சிக்கலிலும் ஆழ்ந்துவிட நேரிடும். சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தான்.

''நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க சார். நான் பார்த்துக்கறேன்'' என்றான் அவன் அடியாட்களுள் ஒருத்தனான அஜய்.

நாகராஜ் அவனைக் கூர்ந்து பார்த்தான். அஜய் எத்தனையோ காரியங்களை சாகசத்தோடு பண்ணியிருக்கிறான். ஆனால் இந்தக் காரியம் இவனால் முடியாது என்று தோன்றிற்று.

அந்த ஆள் ஓட்டலில் எந்த அறையில் இருக்கிறான் என்று தெரியாது. அதோடு கூட அதிகாரிகள் சிலரும் அதே ஓட்டலில் இருக்கிறார்கள் என்று சொல்கிறான் ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் தன் வியாபாரம் அதிகாரிகளின் கண்பார்வையில் இருந்து வருவதை அறிவான் அவன்.

அஜய் பிடிப்பட்டுவிட்டால் எவ்வளவு ஆபத்து என்றறிவான் அவன்.

''நோ.''

''பாஸ்'' ஏதோ சொல்லப் போனான் அஜய்.

நாகராஜ் சிரித்துவிட்டு— ''இது உன்னால் முடியாது அஜய்.''

அதைக் கேட்டு அஜய் முகம் சிறுத்துவிட்டது. டிராயரைத் திறந்து நகரத்திலிருந்த குண்டர்களின் லிஸ்ட்டுகளை வெளியே எடுத்தான். ஒவ்வொருவரைப் பற்றியும் படித்துக்கொண்டே வந்தான். முரட்டுத்தனமாய் வேலை பண்ணும் கயவர்கள்தான் அந்த லிஸ்டில் அடங்கியிருந்

தார்களேயன்றி சாமர்த்தியமாய் வேலையை சாதிக்கக் கூடியவர்கள் ஒருத்தருமே இல்லை. தற்சமயம் விவகாரங்களை மிக சாமர்த்தியத்தோடு செய்து முடிக்க வேண்டும். குத்துவதற்கும் கொல்வதற்குமாயிருந்தால் தன் ஆட்களே போதும். ஒரு சாமர்த்திசாலி வேண்டும்.

நண்பர்களோடு கலந்தாலோசிக்க வேண்டும். அதனால் நஷ்டந்தான். வேறு வழியில்லை தாங்கிக் கொள்ள வேண்டும்.

30 130 31
3055915

பாண்டுரங்கன் தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருந்தான். அது ராஜனைப் பற்றித்தான் என்று உணர்ந்து கொண்டான் தினகர்.

''ராஜனைப் பற்றிதானே யோசிக்கிறாய்?'' கேட்டான். பாண்டுரங்கன் தலையாட்டினான்,

''ராஜன் இப்பொழுது நாகராஜனின் ஆதீனத்தில் இருக்கிறான்'' என்று சொன்னான் அப்பு.

''நா...க...ரா...ஜ்'' பற்களை நறநறத்தான் பாண்டுரங்கன்.

''அவனுக்குப் போன் செய்'' என்றான் தினகர்.

''எதுக்கு?''

''உன் தம்பி ராஜனை விட்டுவிடச் சொல்லு. இல்லாவிட்டால் அவனைக் கொன்று விடுவேன்னு பயமுறுத்து'' பாண்டுரங்கனுக்கு அந்த ஆலோசனை பிடிக்கவில்லை. அப்பு இடைமறித்து சொன்னான்.

''பாண்டு, அம்மூவரும் மேனேஜிங் பார்ட்னராய் நடத்திவந்து கொண்டிருக்கும் மருந்துக் கம்பெனியில்



மருந்துகளோடு கூட போதைப் பொருட்களையும் சப்ளை செய்துட்டிருப்பாங்க. வேறு கம்பெனி லேபிள்களைத் தம் மருந்துகளுக்குப் பயன்படுத்துவாங்க கூட.''

''எதுக்கு?''

''இவங்க தயார் செய்கிறது மட்டச்சரக்கு மருந்துங்க''

''குட்! இது இப்பொழுது நமக்கு பிரம்மாஸ்திரமாய் இருக்கணும் பாண்டு. ராஜனை உன்னிடம் ஒப்படைக்காமல் போனால் ஃபேக்டரி விவகாரங்களைப் போலீசுக்குச் சொல்லி விடுவேன்னு பயமுறுத்து'' என்றான் தினகர்.

''போலீசுங்க மேல் பயம் இருந்திருந்தால் அவங்க இந்த வியாபாரத்தைப் செய்திருக்க முடியாது'' என்றான் பாண்டுரங்கன்.

''பயமில்லாமலிருக்கலாம். ஆனால் பயமுறுத்தினால் கட்டுப்படுவதற்கு சான்ஸ் உண்டுன்னே நினைக்கிறேன்.''

பாண்டுரங்கன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. போனைக் கையிலெடுத்துக் கொண்டான். டயல் செய்துவிட்டு—மறுமுனையிலிருந்து ''ஹலோ'' என்று கேட்டதுமே,—பாண்டுரங்கன் ஹியர்'' என்றான்.

தேடப்போன மூலிகை காலுக்குத் தட்டுப்பட்டாற் போலிருந்தது நாகராஜனுக்கு.

''உன் தம்பி காகப் செய்தாயோ?''

''ஆமாம்.''

''ராஜனுக்காக நீ எதையும் செய்வாய்னு தெரியும் எனக்கு. ஓ.கே. அவனை விட்டு விடுகிறேன். ஆனால் சின்ன கண்டிஷன்.''

''சொல்லு''

நாகராஜ் சொன்னான்.

"வைரங்கள்!" முணுமுணுத்தான் பாண்டுரங்கன்.

பேசாமல் ஒப்புக்கொண்டுவிடு என்பதுபோல சைகை காட்டினான் தினகர்.

"ஓ. கே. முயற்சிக்கிறேன். ஆனால் தோற்று விட்டால்?"

"ராஜனின் பிணம் கிடைக்கும். அது மட்டுமில்லை, உன்னையும் கொன்று விடுவேன்" நாகராஜின் குரலில் கடுமை.

"சரி. பணத்தை ஒப்படையுங்கள்."

"எங்கே?"

"ராத்திரி எட்டரை மணிக்கு. சூர்யா தியேட்டருக்கு எதிரே காரை பார்க் செய்துட்டு அதிலேயே உட்கார்ந்துட்டிருப்பேன்."

"சரி"

"அப்ப ராஜன்?"

"அதான் சொன்னேனே! வைரங்கள் என் கைக்கு வந்து சேர்ந்ததுமே அவனை விட்டுவிடுகிறேன்."

"அப்படியில்லை. நீங்கள் ராஜாவைக் கூட்டிட்டு மயானத்திற்கருகில் சரியாய் பத்துமணிக்கு ரெடியாய் இருங்கள். நான் வைரத்தோடு அங்கேயே நேராய் வரேன்."

"சரி. ஆனால் ஏதாவது பைத்தியக்கார வேலை செய்தாயானால் ஜாக்கிரதை. உன் உயிரை அங்கேயே எடுத்துவிடுவேன். என் விஷயம் உனக்குத் தெரியும்."

பாண்டுரங்கன் சிரித்தான். "என் விஷயத்தையும் நீங்க மறந்துட வேண்டாம்" என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டான்.

# 31

ஓட்டல் போர்ட்டிகோவில் காரை நிறுத்தினான் பாண்டுரங்கன். காரைவிட்டு இறங்காமல் பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டிருந்த பத்மினியைப் பார்த்தான்.

அப்பகுதியில் நாகராஜனின் ஆட்கள் எந்த மூலையிலாவது ஒளிந்து தன்னை ஒரு கண் பார்த்துக் கொண்டேயிருப்பார்கள் என்று தெரியும் அவனுக்கு.

பத்மினி ப்ரீப்கேசுடன் காரைவிட்டிறங்கினாள். ஜீன்ஸ் பேன்ட்டில் டக் செய்துக்கொண்டிருந்தாள். அகலமான பெல்ட். கேசங்களை அலட்சியமாய் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள்.

ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்து சிரித்துக்கொண்டாள். நாகராஜின் ஆட்கள் ஆங்காங்கு சுற்றி வந்துகொண்டிருந்தார்கள்.

பாண்டுரங்கனை காரைவிட்டு இறங்கும்படி சைகை காட்டினாள் அவன் காரிலிருந்து இறங்கினான்.

ஃபுல்சூட்டில் இருந்தான் அவன். பார்ப்போருக்கு அவன் மிகப் பணக்காரனைப் போல தெரிந்தது.

ஃப்ரீப்கேசை அவனிடம் தந்தாள். "நான் இங்கேயே வெயிட் செய்திட்டிருக்கேன். விஷ் யூ பெஸ்ட் ஆஃப்லக்" என்றாள்.

அவன் மேற்கொண்டிருக்கும் காரியம் எவ்வளவு கஷ்டமானது என்பதை அவள் அறிவாள். அதனால் மனதில் என்னதான் கிலேசமாய் இருந்தாலும் முகத்தில் மட்டும் முறுவல் மாறாமல் ஜாக்கிரதையாய் இருந்தாள். அவன் ஓரடி முன்னுக்கு நடந்தவன் திரும்பிப் பார்த்தான். விளக்கு வெளிச்சத்தில் அவள் கண்களில் குபுக்கென்று கண்ணீர்த் திரை...

அவனுக்கு தைரியம் சொன்னாளே தவிர அந்தத் தைரியம் அவனிடம் இல்லை. ஆனால் அவனிடம் அந்த பயம் இல்லை.

பயமில்லாமல் முன்நோக்கி நடந்து கொண்டிருந்தான் அவன். கார் ஸ்டீரியங்கிற்கு முன்னால் உட்கார்ந்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

ரிஸப்ஷனுக்கருகில் நாலைந்து பேர் நின்றுகொண்டிருந்தார்கள். ஒரு வினாடி நின்றான். தன்னை யாரும் கவனிக்கவில்லை என்று தெரிந்து கொண்டதும் லிஃப்டை நோக்கி நடந்தான்.

முதல் மாடியில் இறங்கி நடந்தான். ஒவ்வொரு ரூமாய் நின்று நின்று தாண்டிப் போய்க்கொண்டேயிருந்தான். ஏதாவது அறிவிப்பு காதில் விழுகிறதோ என்று செவிகளைத் தீட்டிக் கொண்டு கேட்டான்.

ஒரு அறையின் கதவு திறந்திருந்தது.

நான்கு பேர் உட்கார்ந்து மெல்லிய குரலில் பேசிக் கொண்டே மருந்தடித்துக் கொண்டிருந்தார்கள்.

மேலும் நடந்தான். ஒரு அறைக்கு முன்னால் நின்றான். ஏனோ தனக்குவேண்டிய ஆள் அந்த அறையில் இருப்பான் என்று தோன்றிற்று.

மெதுவாய் விரலால் கதவைத் தட்டினான். கதவு திறந்து கொண்டது.

கதவைத் திறந்த ஆளின் முகம் சிவந்து கன்றிப் போயிருந்தது.

''டைரக்டர் சார் ஸ்டோரி டிஸ்கஷனில் இருக்கார். நீங்க யார்?'' என்றான் அவன். அது சினிமாக்காரர்களின் அறை.

''சாரீ, நான் என் ஃபிரெண்டின் அறைன்னு நினைச்சுட்டேன்'' என்று மளமளவென்று நடக்கத் தொடங்



கினான். அந்த மாடியில் அவனுக்கு வேண்டிய ஆள் இல்லை. இரண்டாவது மூன்றாவது மாடியில்கூட இல்லை. நாலாவது மாடியில் அடியெடுத்து வைத்தான்.

ஒரு அறைக்கதவு ஒருக்களித்துத் திறந்திருந்தது. அதிலிருந்து ஒரு பெண்... எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். பாண்டுரங்கனைப் பார்த்துவிட்டு உள்ளே வரச் சொல்லி சைகை காட்டினாள்.

அருவருப்புடன் பார்த்துவிட்டு முன்நோக்கி நடந்தான். ஒரு அறைக்குள்ளிருந்து ஓட்டல் பையன் வெளியே வந்தான். அங்கேயே நின்றுகொண்டிருந்த பாண்டுரங்கனைப் பார்த்துவிட்டு— ''யாருக்காக வந்தீங்க சார்?'' கேட்டான்.

''என் ஃபிரெண்டுக்காக வந்தேன்.''

''நம்பர்?'' பாண்டுரங்கன் அவன் கையில் பத்து ரூபாய் காகிதம் ஒன்றை வைத்துவிட்டு— ''அவர் இன்னும் வரலை. இங்கேயே காத்துட்டிருக்கேன்'' என்றான்.

பையன் போய்விட்டான்.

பையன் போனதும் பாண்டுரங்கன் முன்னுக்கு நடந்தான். ஒரு அறைக்கு முன்னால் அவன் நின்றான்.

அந்த அறையின் கதவு மின்னல் வேகத்தில் திறந்து கொண்டது. அத்துடன் ஒரு கை பலமாய் பாண்டுரங்கனின் தோளின்மேல் பட்டது. அவன் தேறிக் கொள்வதற்குள்ளாகவே அவனை உள்ளே வேகமாய் இழுத்து கதவைச் சாத்திவிட்டது அக் கை.

அவன் கையிலிருந்த ப்ரீப்கேஸ் எம்பி அப்பால் போய் விழுந்தது. பாண்டுரங்கன் கீழே துள்ளி விழப்போனவன் சமாளித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தான். தன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. எதிரே நின்று கொண்டிருந்தவனைப் பார்த்து விக்கித்துப் போய் விட்டான். ''தினகர், நீயா?'' என்றான் கோபமாய்.

''உஷ்! பேசாதே. மொதல்ல நாம்ப இங்கேயிருந்து வெளியேறிடணும்'' என்று பாண்டுரங்கனைப் பொருட்படுத்தாமல் ஜன்னலுக்கருகில் போய் பைனாகுலர் வழியாய் வெளியே பார்த்தான்.

''என்ன, இதெல்லாம்?'' பொறுமை தளர்ந்து போய் கேட்டான் பாண்டுரங்கன். தினகர் திரும்பினான்.

ஃப்ரீபைக் காட்டி ''இதில் கேஷ் இருக்கா?'' கேட்டான்.

''இருக்கு. நான் கேட்டதற்கு பதில் சொல்லலை.''

''இதெல்லாம் நம்ப மேடம் பிளான். அதை அமுலாக்குவதுதான் நம் வேலை. அவ்வளவுதான்.''

''ராஜனை விடுதலை செய்யணும். வைரங்கள் இல்லாமல் போனால் ராஜனுக்கு அபாயம்.''

தினகர் சிரித்தான். ''வைரங்கள் இருந்தால்தானே மொதல்ல?''

பாண்டுரங்கனின் முகம் நிறம் மாறத் தொடங்கிற்று. தான் ஏமாந்துபோய் கொண்டிருக்கிறோமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது.

''வைரங்கள் இல்லாவிட்டால் இந்தப் பணம் உனக்குக் கிடைக்காது'' ஆவேசமாய் சொன்னான் பாண்டுரங்கன். தினகர் லேசாய் சிரித்தான்.

''அவசரப்படாதே. நாகராஜின் ஆட்கள் இந்த ஓட்டலைச் சுற்றிலும் இருக்கிறார்கள். மொதல்ல நாம் இங்கிருந்து பணத்தோடு வெளியேறிவிட வேண்டும். போய் ராஜாவை விடுதலை செய்துக்கணும்.''

''உன்பேச்சு எதுவும் எனக்குப் புரியவில்லை.''

''தற்சமயம் உனக்குப் புரியத் தேவையில்லை. ஆனால் இரண்டே வார்த்தைகளில் இப்ப நாம் நாகராஜனை வீழ்த்துவோம். வைரங்கள் வேண்டுமென்றால் ராஜனை விடுதலை செய்யணும் என்று பேரம் பேசுவோம்.''



''இப்ப மட்டும் வைரங்கள்...''

''தரமாட்டோம்.''

''அப்படீன்னால்?''

''நாம்ப போய் ராஜாவை விடுவித்துக் கொள்வோம்''-

தினகர் தன்னிடம் சொல்லாமல் இவ்வளவு நாடகமாட வேண்டிய காரணம் என்ன என்றுதான் பாண்டுரங்கனுக்குப் புரியவில்லை. அதையே கேட்டான் தினகரிடம்.

''ரிஸ்க் எடுத்துக்கணும்னு தோன்றிற்று. நாகராஜிடம் வைர ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டது நான்தான். அதற்குப் பிறகுதான் உன்னைக் கொண்டு அவனுக்கு ராஜனை விடுதலை செய்யச் சொல்லிப் போன் செய்ய சொன்னேன். இப்பப் புரிஞ்சுதா?''

ராஜனுக்கு ஆபத்து நேருமோ என்று பயந்து தான் ஒப்புக்கொள்ளாமல் போகலாம் என்று ஊகித்து தினகர் அவ்வாறு செய்திருக்கிறான் என்று புரிந்தது பாண்டுரங்கனுக்கு! ப்ரீப்கேசைத் திறந்து அதிலுள்ள கரென்ஸி நோட்டுக்களைக் கூர்ந்து பார்த்தான் தினகர்.

அவை உண்மையான நோட்டுக்கள் தான். அதாவது நாகராஜை செம்மையாய் வீழ்த்திவிட்டாற் போலதான்.

''இப்ப நாம்ப வெளியேறி விடணும்'' என்றான் தினகர்.

''வெளியே போர்டிகோவில் பத்மினி காரோடு காத்துட்டிருக்காள்.''

''அந்தக் காரில் நாம்ப போகக்கூடாது.''

''ஏன்?''

''நீ அதில் வந்ததை அவங்க கவனித்திருப்பாங்க. அதனால் வேறுவிதமாய் வெளியேற வேண்டும்.''

அதுவும் உண்மைதான் என்று பட்டது பாண்டுரங்கனுக்கு.

பாண்டுரங்கன் பதில் பேசாததைப் பார்த்து விட்டு தினகர் சொன்னான். ''உனக்கு ஆவேசம் அதிகம். ஆலோசனை குறைவு. நீ அந்தக் கட்டிலில் படுத்துக்கொள். சொல்கிறேன்.''

பாண்டுரங்கன் ஏன் என்று கேட்கவில்லை.

தினகர் கதவிற்கருகில் போய் லேசாய் திறந்துபார்த்தான். நாலைந்து அறைகளுக்கப்பால் இரண்டு அரேபிய ஷேக்குகள் பேசிக்கொண்டே வந்து கொண்டிருந்தார்கள். தினகர் மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்யத் தொடங்கிற்று. அவர்கள் அறைக்கு முன்னால் வரும்வரை காத்திருந்து — ''எச்ஸ்யூஸ் மீ'' என்று கூப்பிட்டான். அவர்கள் நின்றார்கள்.

''வாட் டு யூ வான்ட்?''

''என் ஃபிரெண்ட் மார்வலியால் கஷ்டப்படுகிறான்.''

''ஸோ டேக் ஹிம் டு டாக்டர்.''

''அதுக்குத்தான் முயற்சி செய்துட்டிருக்கேன். நீங்கள் கொஞ்சம் உதவி செய்தால் அவனைக் கார் வரைக்கும் கூட்டிட்டுப் போக முடியும்'' என்றான் தினகர் கெஞ்சினாற் போல— ''சமயத்திற்கு ஓட்டல் பையன் யாரும் கண்ணில் படவில்லை'' தனக்குள் முணுமுணுத்துக்கொள்வது போல சொன்னான் தினகர்.

அரபு ஷேக்குகள் இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஓ. கே.'' என்று அவ்விருவரும் உள்ளே எட்டிப் பார்த்தார்கள்.

தினகரன் வார்த்தைகளைக்கேட்ட பாண்டுரங்கன் கட்டிலில் அசௌகரியத்தோடு நெளிந்துகொண்டிருந்தான்.



அவர்கள் உள்ளே வந்ததும் தினகர் கதவை சட்டென்று சாத்திவிட்டு உள்ளங்கைகளைக் கத்தியைப் போல செய்துகொண்டு அவ்விருவரையும் கழுத்து பிளந்து விடும் போல அடித்தான். அந்த அடிக்கு அவ்விருவரும் பேச்சு மூச்சு இல்லாமல் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தார்கள்.

''கமான் பாண்டு, வேஷத்தை மாற்று'' அவசரப்படுத்தினான் தினகர். பத்தே நிமிஷங்களில் அரபு ஷேக்குகளைப் போல வேஷத்தை மாற்றிககொண்டார்கள் பாண்டுரங்கனும் தினகரும்.

கீழே விழுந்து கிடந்த ஷேக்குகள் இருவரையும் பார்த்தான் பாண்டுரங்கன்.

''பாவம், வீணாய்...''

''இரக்கம், அனுதாபம் எல்லாம் அப்புறமாய். மொதல்ல நட வெளியே'' ஃபிரீப்கேசைப் பிடித்துக் கொண்டு வெளியே நடந்துகொண்டே சொன்னான் தினகர்.

மளமளவென்று லிஃப்டை நோக்கி ஓடினார்கள்.

''கிரௌண்ட் ஃப்ளோர்'' என்றான் தினகர்.

''லிஃப்ட் பாய் லிஃப்டின் பட்டனை அழுத்தினான்.''

லிஃப்ட் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. அவன் அவ்விருவரின் முகங்களையும் கூர்ந்து பார்த்தான்.

அவன் அவ்வாறு பார்த்ததால் பாண்டுரங்கனுக்கும் தினகருக்கும் அவன் மாறுவேஷத்திலிருந்த நாகராஜின் ஆள் என்று புரிந்துவிட்டது. அவர்கள் ஊகித்தது உண்மையே. அவன் அஜய். பாண்டுரங்கன் புறப்பட்டதிலிருந்தே அவன் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தான்.

அஜய் திடீரென்று ஜேபியிலிருந்து துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

''லிஃப்ட் நின்றதுமே பைத்தியக்கார வேஷம் எதுவும்

போடாமல் எனக்கு முன்னால் நடங்கள்'' என்றான். மூன்றாவது மாடியைத் தாண்டிற்று லிஃப்ட்.

''வாட் நான்சென்ஸ்?'' என்றான் தினகர் கொஞ்சம் நகர்ந்து கொண்டு.

தினகரை ஏறிட்டுப் பார்த்தான் அஜய்.

அந்த இடைவெளி போதுமாயிருந்தது பாண்டுரங்க னுக்கு.

சரேலென்று துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டிருந்த கையை பின்னுக்குச் சேர்த்துக் கட்டிப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் கழுத்தில் ஓங்கி அடித்தான். அந்த அடிக்குப் பத்துபேர் அஜய்கள் இருந்தாலும் தரையோடு சாய்ந்துவிட வேண்டியதுதான். அவன் துப்பாக்கி நழுவி விட கீழே சாய்ந்து விட்டான்.

பாண்டுரங்கன் அந்த துப்பாக்கியை எடுத்து ஜேபியில் வைத்துக் கொண்டான்.

லிப்ட் கிரௌண்ட் ப்ளோரை அடைந்தது. தினகர் மளமளவென்று அஜயைத் தூக்கி நிற்கவைத்தான். அவன் இமைகளைத் திறந்தான். இப்பொழுது அவனைப் பார்த் தால் நினைவு தவறிய ஆள் என்று யாரும் எண்ணிக் கொள்ள முடியாது.

லிஃப்டின் கதவுகள் திறந்து கொண்டன.

சுறுசுறுப்பாய் நான்கு பக்கங்களையும் ஆராய்ந்து கொண்டே ஏதுமறியாதவர்களைப் போல மெதுவாய் நடக்கத் தொடங்கினார்கள்.

கொஞ்சம் தடுமாற்றம் தென்பட்டாலும் நாகராஜனின் ஆட்கள் தம்மைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்று தினகர் அறிவான்.

போர்டிகோவில் காருக்குள் இருந்த பத்மினி அவர் களையே பார்த்துக் கொண்டிருந்தாள். தினகர் மெதுவாய் சொன்னான்.

''அவளை போகச் சொல்லி விடு. நாம்ப நம் காரில் போவோம்''

அந்தக் காரை தாண்டிக் கொண்டு போனபொழுது மூக்குக் கண்ணாடியை எடுத்துவிட்டு அவளுக்கு சைகைக் காட்டினான் பாண்டுரங்கன போகச்சொல்லி.

நிற்காமல் போய்க் கொண்டேயிருந்த அவர்களைப் பார்த்து தனக்குள் சிரித்துக் கொண்டாள் பத்மினி.

பத்மினியின் கார் நகர்ந்தது. அடுத்த இரண்டு நிமிஷங் களுக்குள் தினகர் ஏறி ஸ்டார்ட் செய்த கார் ஓட்டல் கேட்டைத் தாண்டி விர்ரென்று வேகமாய் போயிற்று.

''ராஜனை எப்படி விடுதலை செய்றது?'' கேட்டான் பாண்டுரங்கன்.

''விடுதலை செய்ற விதத்தில்'' என்றான் வேகமாய் காரை ஓட்டிக் கொண்டே. அவன் காரோட்டிக் கொண் டிருந்த விதத்தைப் பார்த்தால் டிரைவிங்கில் அவனுக்கு இருந்த திறமை நன்றாய்ப் புலப்பட்டது. அறுபது கிலோ மீட்டர் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது கார்.

''அப்படீன்னால்?''

''அவங்க ராஜனை நம்மிடம் ஒப்படைத்து விடுவாங்க''

அவன் வார்த்தைகள் புரியவில்லை. ஆனாலும் தினகர் ஏதோ திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான் என்று மட்டும் தெரிந்தது. ஒரு முறை பின்னால் திரும்பிப் பார்த் தான், தம் காரை யாராவது பின் தொடர்ந்து வருகிறார் களோ என்று. யாரும் தென்படவில்லை.

ஏறக்குறைய தெருவெல்லாம் ஆளரவமில்லாம லிருந்தது. இருளைக் கிழித்துக்கொண்டு போய்க் கொண் டிருந்தது கார்.

பாண்டுரங்கன் தெருவில் பார்வையை ஓட்டினான் பத்மினி வழியில் தென்படுவாள் என்று. கொஞ்ச தூரத்தில்

தெருவோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அவன் கார் தென்பட்டது. காருக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தாள் பத்மினி.

''தினகர், காரை நிறுத்து. பத்மினி நமக்காகக் காத்துட்டிருக்கிறாள்'' என்றான் பாண்டுரங்கன்.

தினகர் அவன் சொன்னது போலவே காரை நிறுத்தினான். பத்மினி மளமளவென்று அவர்களை நோக்கி ஓடி வந்தாள்.

''வேலை முடிஞ்சுடுத்தா?'' கேட்டாள்.

''முடியாவிட்டால் எப்படி வந்திருப்போம்?'' தினகர் வார்த்தைகளைக் கேட்டு சிரித்தாள் பத்மினி.

''உங்கள் சாமர்த்தியத்தைப் பற்றிஎனக்குத்தெரியுமே. உங்களோடு நானும் வரட்டுமா?'' கேட்டாள்.

''நீ ப்ரீப்கேசை எடுத்துட்டுப் போ. இங்கே நடக்க வேண்டிய காரியங்களை முடித்துவிட்டு நாங்க வரோம்'' என்று ப்ரீப்கேசை பத்மினியிடம் தந்தான் தினகர்.

''அப்படீன்னால் இந்த திட்டம் உனக்குக் கூட முன்பே தெரியும்னு சொல்லு'' பரிகாசமாய் கேட்டான்.

ஆம் என்பதுபோல கண்களாலேயே சிரித்தாள் அவள். தினகர் அவளைப் பார்த்தான்.

''தெரிவது மட்டுந்தானா? நமக்கு இந்தப் பிளானைச் சொன்னதே பத்மினிதான்'' என்றான் பாண்டுரங்கன். வியப்போடு பார்த்தான்.

''ஓ.கே. நான் போறேன்'' ப்ரீப்கேசுடன் பத்மினி தன் காரை நோக்கி நடந்தாள்.

தினகர் தன் காரைக் கிளப்பினான்.

# 32

தினகர் ஒரு மரத்தடியில் காரை நிறுத்தினான். மெதுவாய் சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு வெளியே பார்த்தான். நாகராஜனும் அவன் ஆட்களும் அவ்வெல்லையில் காத்துக் கொண்டிருப்பார்கள் என்று தெரியும்.

கார் டாஷ்போர்டிலிருந்து ஒரு பிளாஸ்டிக் கவரை வெளியே எடுத்து நீட்டினான் ''இதோ.''

''என்ன?''

''வைரங்கள்.''

''அதான் இல்லை என்றாயே.''

''அப்பச் சொன்னேன். இப்பத் தர்ரேன். இவற்றை தந்துட்டு நாம்ப ராஜனை மீட்டுக்கொள்ளணும்.''

அந்தக் கவரை ஜேபியில் வைத்துக்கொண்டு காரை விட்டு இறங்கி நின்றான் பாண்டுரங்கன்.

''நாகராஜ்'' அவன் குரல் அம் மலைப் பிரதேசத்தில் எதிரொலித்தது. அவன் அழைப்பிற்கு மறுபக்கத்திலிருந்து பதில் குரல் கொடுத்தாற்போல டார்ச் விளக்கு எரிந்தது.

''ஒருத்தர் மீது இன்னொருத்தருக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்துதான் நீ சொன்னபடி செய்தேன். இதோ வைரங்கள்'' கையிலிருந்த பிளாஸ்டிக் கவரை காற்றில் ஆட்டிக்கொண்டே காட்டினான்.

டார்ச் லைட் மெதுவாய் பக்கத்தில் திரும்பிற்று. அந்த வெளிச்சம் ராஜனின் மேல் பட்டது. சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த ராஜன் அவற்றை விடுவித்துக்கொள்வதற்கு விஸ்வபிரயத்தனம் செய்து கொண்டிருந்தான்.

"ரா...ஜா..." அவன் மனம் வேதனையால் முனகிற்று. தன் தம்பியை அந்த நிலையில் பார்த்தபோது அவன் இதயத்தைப் பிசைந்தெடுத்தது.

"ராஜனை இப்படி அனுப்பிவிடு."

"வைரங்கள்..."

"உன் அடியாட்களில் யாரையாவது அனுப்பு தரேன்."

"சரி இந்தா! ராஜனை விடுகிறேன். ஆனால் அவனை நீங்கள் வசப்படுத்திக்கொள்ள வேண்டியது! அதில் என்னால் ஒன்றும் செய்யமுடியாது" நாகராஜின் குரல் கேட்டது... டார்ச் லைட் திரும்பிற்று! அது நேராய் பாண்டுரங்கனின் மேல் பட்டது!

அந்த வெளிச்சத்தில் ராஜன்...காலடி எடுத்து வைத்துக் கொண்டே அந்த வெளிச்சம் காட்டிய வழியில் நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவனுக்குப் பின்னால் கையில் துப்பாக்கிகளைப் பிடித்துக்கொண்டே இரண்டு அடியாட்கள் வந்துகொண் டிருந்தார்கள்.

ராஜன் கிட்டே கிட்டே நெருங்கி வந்துக்கொண்டிருந் தான். பாண்டுரங்கனுக்குச் சந்தேகம். முன்போலவே ராஜன் தன்னை எதிர்ப்பானோ என்ற குழப்பம். இன்னொரு பக்கத்திலோ வெண்ணையாய் உருகிப் போய்க் கொண்டிருந்தான் பாசத்தால்.

"ராஜா! டேய் ராஜா! நான்தான்டா தம்பீ, பாண்டுரங்கன், உன் அண்ணன்டா" கத்தினான்.

ராஜன் அதைக் காதில் வாங்கிக்கொண்டதாய்த் தெரிய வில்லை. டார்ச் லைட்டின் வெளிச்சம் பின்பக்கத்திலிருந்து வந்து பட்டுக்கொண்டிருந்ததால் அவன் முகத்தில் என்ன உணர்ச்சி தோன்றிக் கொண்டிருந்தது என்று புலப்பட வில்லை.



"ராஜா, என் ராஜா" பாசம் குழையக் கூப்பிட்டான் பாண்டு.

"சுளீர், பட்" பாண்டுரங்கன் எம்பி அப்பால் விழுந்தான்.

ராஜன் அவனை நெருங்கிக் கொண்டிருந்தான்.

"ராஜா, நான் உன் அண்ணன் பாண்டுரங்கன்டா. நான் உங்களுக்காகத்தான்டா இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்தேன். அந்த அரக்கனின் பிடியிலிருந்து உன்னை காப்பாற்றத்தான்டா நான் வந்திருக்கேன்."

பட்... பட்... பட்... பட். ராஜன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பாண்டுரங்கனை இரு கைகளாலும் தூக்கி 'விர்'ரென்றுச் சுழற்றிச் தொலைவில் வீசியெறிந்தான். ராஜன் அவன் வார்த்தைகளைக் கேட்கக் கூடிய நிலையில் இல்லை!

மிக ஆபத்தான மனிதனாய் மாறிவிட்டிருந்த ராஜனிட மிருந்து முதலில் தப்பித்துக்கொள்ள வேண்டும். கீழே இறங்காமலேயே தினகர் நிலைமையை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

புலியின் அடியிலிருந்து தப்பித்துக்கொண்டு கர்ஜனை புரிந்த சிங்கத்தைப்போல சீற்றமடைந்தான் பாண்டுரங்கன். "யா... ஹூ... ஹ..." காற்றில் எம்பிலான். அவன் பாதம் ராஜனின் முகத்தில் பட்டது.

ராஜன் மல்லாந்து விழுந்தான். நினைவு தப்பி விட்டது. அந்தச் சொற்ப நேர இடைவெளி போதும் பாண்டுரங்கனுக்கு.

அதே சமயத்தில் தினகர் காரிலிருந்து இறங்கி விசிலடித் தான். கலகம் தொடங்கிவிட்டது.

ஒரு மெடாடர் வந்து காருக்குப் பக்கத்திலேயே நின்றது. சங்கிலிகளால் ராஜனை கட்டினான் பாண்டு ரங்கன். மெடாடாரிலிருந்து இறங்கிய தினகரின் ஆட்கள் ராஜனை வேனுக்குள் ஏற்றினார்கள். நாகராஜ் எதிர் பார்க்காத சம்பவம் இது.

இரு தரத்தாருக்குமிடையே முற்றுகை தொடர்ந்து விட்டது. அவ்விடத்துச் சூழ்நிலை குருக்ஷேத்திர யுத்தமாய் தயாராயிற்று. தினகரும் பாண்டுரங்கனும் கையிலகப்பட்ட வர்களையெல்லாம் செம்மையாய் உதைத்துக் கொண்டிருந் தார்கள். அவர்கள் உதைகளைத் தாங்கிக்கொண்டு உறுதியாய் நிற்கமுடியவில்லை எதிரிகளால்.

பாண்டுரங்கனை எதிர்த்த பயில்வான் வேகமாய் அவனைப் பின்னுக்குத் தள்ளினான்.

அவன் சுதாரித்துக்கொண்டு நின்றான். அதே சமயத்தில் அவன் கழுத்தில் ஏதோ சில்லென்று பட்டது. அது துப்பாக்கி!

''வைரங்கள் எங்கே?'' நாகராஜ் கடுமையாய் கேட்டான். சொல்லாமல் போனால் தயையின்றி சுட்டுத் தள்ளிவிடுவேன்.

''ஜேபியில் இருக்கு'' என்றான்—தினகர் தன்னிடம் வைரங்கள் என்று சொல்லிவிட்டு தந்திருந்த போலிகளை! அவன் கழுத்தில் துப்பாக்கியை அப்படியே ஊன்றி வைத்துக் கொண்டே நாகராஜ் பாண்டுவின் ஜேபியிலிருந்த கவரை எடுக்கப் போனான். அந்தக் கவரை எடுத்துவிட்டால் போதும் அதில் வைரங்கள் இருக்கின்றனவா இல்லையா என்று பார்த்துக்கொள்ள முயல்வான். அந்த இடைவெளி போதும் பாண்டுரங்கனுக்கு.

அவன் ஜேபிக்குள் கையைவிட்டு வெளியே எடுத்து கொண்டிருந்தான். நாகராஜனின் கையிலிருந்த துப்பாக்கி எம்பி அப்பால் போய் விழுந்தது. அவன் சுதாரித்துக் கொள்வதற்குள்ளாகவே பாண்டுரங்கன் அவன் முகவாய்க்கு கீழே ஓங்கி குத்தினான். கிறீச்சென்று கத்திக்கொண்டே கீழே விழுந்தான் நாகராஜ் நாகராஜனுக்கு எழுந்து நிற்கும் அவகாசத்தைத் தரவில்லை பாண்டுரங்கன். அவனுக்கு அவர்கள் தன்னைப் படுத்திய சித்திரவதைகள் ஞாபகத் திற்கு வந்துவிட்டது. பூட்ஸ் காலால் அவனை கிடைத்த இடத்திலெல்லாம் உதைத்துத் தள்ளத் தொடங்கினான். நாகராஜ் கத்திக் கூச்சலிட்டான். நாகராஜின் ஆட்கள் அங்கிருந்து ஓடிப்போய்க் கொண்டிருந்தார்கள் அதே சமயத்தில் தினகரின் கையில் கத்திக்குத்து பட்டுவிட்டது. ரத்தம் வேகமாய் ஒழுகத்தொடங்கிற்று. கத்தியால் தன்னை குத்தியவனின் கழுத்தைத் திருகிப் போட்டுவிட் டான் தினகர். தினகர் தன்கையிலிருந்து வழிந்த ரத்தத்தை பார்த்ததுமே ஆவேசத்தால் கொதித்தெழுந்தான்.

நாகராஜை அலாக்காய் தூக்கி கிர்கிர்ரென்று சுழற்றி விட்டுத் தரையில் வீசியெறிந்தான். நாகராஜ் நினைவு தப்பிவிட்டான். பாண்டுரங்கன் அவன் கைகளைச் சட்டிப் போட்டுவிட்டு காருக்குள் தள்ளினான். தினகரின் கை களுக்கு கர்சீஃபால் கட்டுப் போட்டுவிட்டு அவன் கண்களை ஏறிட்டான். இருவர் பார்வையும் ஒரு வினாடி கலந்தன.

பாண்டுரங்கன் அவனை அழுத்தமாய்த்தழுவிக்கொண் டான். தினகர் அவன் முதுகில் தட்டினான்.

''ஒரு எதிரி நம் கைக்கு சிக்கிவிட்டான். கமான்'' என்றான் தினகர்.

பாண்டுரங்கன் ஸ்டீரியங்கிற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டான். கார் அங்கிருந்து அம்பாய் பறந்தது.

## 33

ராஜன் சோர்ந்து போய் கட்டிலில் படுத்திருந்தான். அசையக்கூட முடியாத பரிதாபமான நிலையில் இருந்தான் அவன்.

''இஞ்...ஜ...க்...ஷ...ன்'' புலம்பிக்கொண்டிருந்தான் தீனமாய்.

நரகமாய் இருந்தது அவனுக்கு. மருந்து சாப்பிடாமல் போனால் சாவிலிருந்து விமுக்தி இல்லை. ஹிஸ்டீரியா வந்தவனைப் போல நடுங்கிக் கொண்டிருந்தான்.

தம்பியை அந்நிலையில் பார்த்தபோது பாண்டுரங்கனின் வயிற்றைப் பிசைந்தெடுத்தது.

''தினகர், டாக்டரைக் கூப்பிடு'' என்றான் பாண்டுரங்கன். ''இஞ்செக்ஷன்...மருந்து...'' கண்களைத் திறந்து சூனியத்தைப் பார்த்துக்கொண்டே யாரைக் கேட்கிறான் என்று கூடத் தெரியாத நிலையில் புலம்பிக்கொண்டிருந்தான் ராஜன்.

''உயிர் நிற்கமாட்டேங்குது, மருந்து''

தினகர் ஒருமுறை ராஜனையும் இன்னொருமுறை பாண்டுரங்கனையும் மாறி மாறிப் பார்த்தான்.

அவன் ஏனோ உதட்டைப் பிதுக்கினான்.

''ராஜனை டாக்டரிடம் காட்டணும். டாக்டரை வரவழை'' பாண்டுரங்கன் சொன்னான் திரும்பவும்.

தினகர் பாண்டுரங்கனின் தோளில் கையை வைத்தான். ''பாண்டு! ஐயாம் சாரி! அவன் உடம்பு முற்றிலும் போதை பொருளுக்கு அடிமையாய் போயிடுத்து. ராஜனால் இனிப் பழைய ஆளாக முடியாது.''

''அவன் பழைய ஆளாகணும்'' ஆவேசமாய் சொன்னான் பாண்டு.

தினகர் ஒரு மாதிரியாய் பார்த்தான் பாண்டுவை. அண்ணனாய் அவன் அவ்வாறு விரும்பலாம். ஆனால் போதைப் பொருளுக்கு !அடிமையானவன் சாகும்வரை அப்பழக்கத்தை விடமுடியாது. அப்படிச் சொல்வதைவிட அந்த மருந்தால் அவனை விடமுடியாதுஎனலாம். அதனால் தினகர் பரிவோடு சொன்னான்—

''அப்படி ஆனால் நல்லதுதான். ஆனால் அப்படிப் பட்ட சான்ஸுகள் மிகக் குறைவாய் உள்ளன. மார்பியா·



பெதிடின், ஹிராயின் போன்ற போதைப் பொருளுக்குப் பழக்கப்பட்ட அந்த ஆள் அவற்றைப் பயன் படுத்திட்டிருக்கும்போதுதான் கொஞ்ச நாளாவது வாழ்ந்துட்டிருப்பான். இல்லாவிட்டால் அவன் கொஞ்சமும் பயன்படாமல் போயிடுவான்.''

''அப்படீன்னால்?''

''ராஜனின் நிலைமை சரியாய் இல்லைன்னு நினைக்கிறேன் நான். அவனுக்கு மருந்து கொடுக்கணும். அவன் உன்னை அடையாளம் புரிஞ்சுகிட்டதாய் தோணலை. அதனால் அவன் மூளை கூட மரத்துப்போயிருக்கணும்.''

''அப்படீன்னால் இப்ப என்ன பண்றது?''

''ரெண்டு நாளைக்கு நாம்ப அவனுக்கு இஞ்ஜெக்ஷன் தரக்கூடாது. அப்பத்தான் அவன் நம்மைக் கெஞ்சிக் கேட்கிற நிலைக்கு வருவான். நீ உன் வார்த்தைகளால் கன்வின்ஸ் பண்ணினால்... அவன் உன்னை அடையாளம் புரிஞ்சுக்க சான்ஸ் இருக்கு''

அவன் சொன்னதும் உண்மையே என்று பட்டது. கட்டிலை நெருங்கினான்.

''உ...உ......உ...ண''

''மரு...ந்...து... இ...ஞ்...ஜ...க்...ஷன்'' ராஜனின் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது.

பாண்டுரங்கனின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது

''ராஜா''

''...............''

''ராஜா...ஒருதடவை...என்னைப் பாருடா, தம்பி''

''.............''

சிம்மாத்ரி வந்தான்.

அந்த அண்ணன் தம்பிகளின் பரிதாபமான நிலையைக் கண்டு மனம் உருகிவிட்டான் அவன்.

''ராஜா, இதோ சிம்மாத்ரி வந்திருக்கான் பாரு''

ராஜனிடம் சலனமில்லை. நினைவில்லை. ஆனால் அவன் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. உடம்பும் அப்படியே. அவ்வறையை கூர்ந்து பார்த்தான் பாண்டுரங்கன். இரண்டு ஜன்னல்களுக்கும் உறுதியான கம்பிகள் இருந்தன. ராஜா எழுந்து ஓடிப்போக சான்ஸ் இல்லை. ராஜனை அவ்வறையில், வைத்துக் கதவைச் சாத்தினான் பாண்டு ரங்கன்.

''சண்டை நடந்த இடத்திலிருந்த நாகராஜனின் காரைக் கொண்டு வந்திருக்கேன்'' என்றான் சிம்மாத்ரி.

''குட், போகலாம், வாங்க'' என்றான் பாண்டுரங்கன்.

## 34

''ஹௌ ஆர்யூ?'' நாகராஜனுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு கேட்டான் பாண்டுரங்கன்.

நாகராஜனைத் தூணோடு கட்டிப்போட்டிருந்தார்கள்.

''உன்னைச் சும்மா விடுகிறேனா பாருடா'' ஆவேசத்தோடு கத்தினான் நாகராஜ.

பாண்டுரங்கன் நாற்காலியை விட்டு எழுந்திருந்தான். அவனை நெருங்கி கன்னத்தில் 'சுளீர்' என்று அடித்தான்.

''நாகராஜ, உன் பாவம் முதிர்ந்துவிட்டது. ஒரு காலத்தில் என் வாழ்க்கையோடு விளையாடினீங்க நீங்க மூவரும். ஆனால் இன்றைக்கு எனக்கு அவகாசம் கிடைத்திருக்கிறது. நீங்கள் செய்ததற்கு வட்டியும் முதலுமாய்



அனுபவிக்கப் போறீங்க. சாகும் முன்னால் மனமார அழுது தீர்த்துக்கொள். உன் பாவத்தைக் குறைந்தபட்சம் கண்ணீராலாவது கழுவிக்கொள்.''

நாகராஜன் உறுமினான்.

''ஆஃப்டர் ஆல் சோற்றுக்குக் கூட கதியில்லாதவன் நீ. நிற்கக்கூட நிழலில்லாதவன் நீ. எங்களை என்ன செய்து விடுவாய்?''

''உனக்கு இன்னும் அகம்பாவம் போகவில்லை. உன்னை சேர்ந்தவங்க யாராவது வந்து விடுவிப்பாங்கன்னு கனவு காண்கிறாயோ? அது அசம்பவம். நீ சொன்னது போல நான் ஒன்றும் கதியில்லாதவனில்லை. இருபத்தைந்து லட்சங்களுக்கு அதிபதி நான் இப்பொழுது.''

''அந்தப் பணம் என்னோடது.''

''இறந்தாய். உன்னுடையது என்று எதுவும் இல்லை இப்பொழுது.''

தினகரும் சிம்மாத்ரியும் ஒரு அறையிலிருந்து வெளியே வந்தார்கள். நாகராஜ் தினகரைப் பார்த்துவிட்டு—

''தினகர்! நீ இந்த ராஸ்கலோடு சேர்ந்துகொண்டு விட்டாயா?'' என்றான்.

தினகர் உல்லாசமாய் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டே— ''ஆமாம்—சேரக்கூடாதோ?'' என்றான்.

''உங்கப்பாவும் நானும் சிநேகிதர்கள் என்ற விஷயம் உனக்குத் தெரியும்.''

''அதனால் என்ன? எங்கப்பா உனக்கு கிரிமினல் அட்வைசர் என்று தெரியும். உங்க சிநேகம் ஆகாவெட்டிக் காரியங்களைச் செய்றத்துக்கும் பணம் சம்பாதிக்கிறத்துக்கும் மட்டுமே நாகராஜ! ஆனால் நாங்க ஃப்ரெண்ட்ஸ்'' என்று பாண்டுரங்கனின் தோளில் கையை வைத்தான் தினகர். அதே சமயத்தில் பத்மினி புதர்மறைவிலிருந்து

வெளியே வந்த சிறுத்தைப் புலியைப் போல இன்னொரு அறையிலிருந்து வெளியே வந்தாள். அப்பெண்ணைப் பார்த்து அதிர்ச்சியடைந்து விட்டான் நாகராஜன்.

''நீயா?''

''நான்தான். ஆச்சரியமாய் இருக்கா?''

நாகராஜன் மனமொடிந்து போய்விட்டான். தான் எண்ணினாற்போல் பாண்டுரங்கன் தனியன் இல்லை என்று தெரிந்துகொண்டான். நான்கு பக்கங்களிலிருந்தும் பலத்தைக் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்கு சித்தமாகி விட்டான் என்று புரிந்தது.

''கள்ளங்கபடமில்லாத என் தாயைக் கொன்ற உங்களை எப்படி கொன்று போடணும்னு இருக்கு தெரியுமா?'' பத்மினி கேட்டாள்.

''சொல்லும்மா, பாவம் சஸ்பென்ஸில் இருப்பான்'' அப்பு உள்ளேயிருந்து வந்தான். அப்புவை அங்கே பார்த்தவுமே நாகராஜனுக்குக் காலடியில் பூமி அதிர்ந்தது.

''அடேய்... அடே அப்பு... திருடா... எவ்வளவு நம்பிக்கை துரோகிடா நீ... கடைசியில் நீ கூட இந்த ராஸ்கலோடு சேர்ந்துட்டாயா?'' நாகராஜனின் மூளையே குழம்பிவிட்டது.

''அடேய் அயோக்கியா? நான் நம்பிக்கை துரோகி இல்லைடா. அன்றைக்கு என்னை பயமுறுத்தி அடக்கி வைத்தீங்க. என் மனைவி குழந்தைங்க மேலிருந்த அன்பாலும் பாசத்தாலும் நீங்கள் சொன்னபடி கேட்டேனே தவிர, அன்றைக்கு உங்களுக்கு தெரியாமல் அம்மாவை மானபங்கம் செய்தபோது போட்டோக்கள் எடுத்தது நான்தான்டா.''

''திருட்டுக் கழுதை'' நாகராஜ் பற்களை நறநறத்தான்.

''கொஞ்ச நேரத்தில் சாகப்போற நீ என்னைத் திட்டினாலும் வருந்தமாட்டேன் நான். என் குடும்பத்



தாருக்காக சுயநலத்தோடு உங்களோடு கைகலந்து கொண்டு உங்கள் பாவத்தில் கொஞ்ச பாவத்தைப் பகிர்ந்து கொண்டேன் நான். அதைக் கழுவிக் கொள்வதற்காக நிரபராதியான இந்தப் பையனுக்குப் பக்கபலமாய் நிற்கிறேன்.''

''உன் துணிக்கடையை எரித்து சாம்பலாக்கி உன்னைச் சித்திரவதை புரிந்தவனுக்குப் போயா இந்த உதவியைச் செய்கிறாய்?''

''அனுபவித்தவனாதலால் அந்த அளவிற்கு தண்டனையையாவது அவன் எனக்கு விதித்தது நியாயந்தான் என்று தோன்றுகிறது. அதோடு கூட நான் சொன்ன வார்த்தைகளை நம்பி எனக்கு உயிர்ப் பிச்சை போட்டான். நம்பியவனுக்கு உதவி செய்வது இந்த அப்புவின் கடமை.''

நாகராஜ் அதை கேட்டு கொல்லென்று சிரித்தான்.

''உங்களைப் போன்ற ஆளுங்க ஆயிரம் பேர் வந்தாலும் என்னை ஒன்றும் செய்திட முடியாது. நான் இங்கிருந்து வெளியேறிய அடுத்த நிமிஷமே உங்களையெல்லாம் உருத்தெரியாமல் செய்திடுவேன்'' கத்தினான் நாகராஜ்.

''செய்த தப்புக்கு பச்சாத்தாபம் படவில்லை நீ. உன்னை இனி அதிக நேரம் வைத்திருக்கப் போறதில்லை. பேச்சால் காலத்தை வீணாக்க எனக்கு இஷ்டம் இல்லை'' என்று சிம்மாத்ரிக்கு சைகை செய்தான் பாண்டுரங்கன்.

சிம்மாத்ரி அவன் கட்டுக்களை அவிழ்த்துவிட்டான்.

நாகராஜ் வாசலைத் தாண்டி ஓடப்போனான்.

தினகர் காலைக் குறுக்கே வைத்தான். நாகராஜ் கீழே விழுந்தான். குப்புற விழுந்ததால் உதட்டில் பட்டு ரத்தம் வழிந்தது.

மெதுவாய் எழுந்து எல்லோரையும் பார்த்தான். அவர்கள் எல்லோரையும் ஆத்திரமும் வெறுப்புமாய் பார்த்தான்.

"நாகராஜ்! உன்னால் முடிந்தால் இந்த அறையை விட்டு ஓடிப்போ—நீ வாசலைத் தாண்ட முடிந்தால் உன்னை விட்டுவிடுகிறேன்" என்றான் பாண்டுரங்கன்.

நாகராஜுக்குத் தலை சுற்றிற்று. உண்மையில் அவன் தன் அடியாட்கள் தன்னைத் தேடிவந்து காப்பாற்று வார்கள் என்றெண்ணியிருந்தான். ஆனால் அவர்கள் ஜாடையையே காணோம். இவ்வளவு பேரை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி அவனிடம் இல்லை. அதோடு கையில் துப்பாக்கி கூட இல்லை. வாசல் இருபதடி தூரத்தில் இருந்தது. அதைத் தாண்டிவிட்டால் போதும்... அதற்குப் பிறகு எப்படியாவது இவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு விடலாம்.

வாசலுக்கருகில் பத்மினி நின்றுகொண்டிருந்தாள். இடுப்பில் கைவைத்துக் கொண்டு மரணதேவதையைப் போல நின்றுகொண்டிருந்தாள்!

அவள் கண்கள் நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன.

அவள் பார்த்த பார்வை... அப்பார்வையில் இருந்த உணர்ச்சி... உன்னையும் உன் தாயை செய்ததுபோல செய்கிறேன் என்ற அர்த்தத்தை எடுத்து காட்டிக் கொண்டிருந்தது.

பத்மினியைப் பொருட்படுத்தவில்லை அவன். ஒரே பாய்ச்சலாய் வாசலை நோக்கித் தாவினான்.

அவன் அவ்வாறு செய்வான் என்று அவளுக்கு தெரியும்.

"பட்" என்ற சப்தம்! பத்மினியின் உள்ளங்கை அடி கத்தியைப்போல் அவன் முகத்தில் பட்டது. முகம் அதிர்ந்து போயிற்று. திரும்பி மல்லாந்து விழுந்தான் நாகராஜ்! ஒரு



பெண்ணின் கைக்கு இவ்வளவு பலம் இருக்கும் என்று அவன் ஊகித்திருக்கவில்லை."

"வலிக்கிறதோ?" சிம்மாத்ரி அவன் முகத்தில் காலை வைத்தான்.

பாண்டுரங்கன் அவன் கழுத்திற்குக் கீழே பாதத்தை நுழைத்துத் தூக்கினான் மேலே!

"ஐயோ பாவம், பெரிய மனுஷனை இப்படி அடித்தால் எப்படி?" என்று அப்பு அவன் கேசத்தைப் பிடித்துக் கொண்டு சுளீரென்று கன்னத்தில் அடித்தான்.

"எவ்வளவோ நாளாய் இப்படி அடிக்கணும்னு ஆசையாயிருந்தது. அம்மாடா இன்றைக்குதான் நிறை வேறிற்று! ஏண்டா, என் மனைவியை ரேப் செய்து என் குழந்தைங்களைக் கொல்லுவேன்னு சொன்னாயேடா! உன் நாக்கை அறுத்துவிடுகிறேன்" சுளீர் சுளீரென்று கோபத்தால் அறைந்தான் அப்பு.

"அந்த பயத்தால்தானேடா அன்றைக்குத் தங்கமான பொண்ணு சகுந்தலா அம்மாவின் வாழ்க்கையை நாசமாக் கியபோதும் ஒன்றும் செய்யமுடியாமல் போயிட்டேன்! ஆனால் இன்றைக்கு உனக்கு மங்களம் பாடிவிடுகிறேன்."

குரூரமான விழிகளை உருட்டி விழித்தான் நாகராஜ். எத்தனையோ பேர்களைக் கொன்று ஏப்பம் விட்டிருந்த அந்த தந்திரக்காரன் அவர்களிடமிருந்து தப்பித்துப் போக முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

நாகராஜின் சட்டையையும் பேண்ட்டையும் களைந் தான் சிம்மாத்ரி.

அண்டர்வேர், பனியனோடு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவமானம் தாங்காதவனாய் நின்று கொண்டிருந்தான் நாகராஜ்.

"வெட்கமாய் இருக்கோ?" கேட்டாள் பத்மினி.

"இவனுக்காவது வெட்கமாவது! எத்தனையோ பெண்களுக்கு இப்படிப்பட்ட உருவத்தில் காட்சியளித்திருக்கும் கேடுகெட்ட கழுதை. அதனால் இந்த உருவத்திலேயே விட்டு சித்த சுத்தத்தையும் தேக சுத்தத்தையும் செய்யணும்" என்றான் தினகர். அவ்வாறு சொல்லிக்கொண்டே எம்பி ஒரு தள்ளு தள்ளினான்.

"ஐயோ" போய் சுவற்றோடு மோதிக்கொண்டே கீழே விழுந்தான் நாகராஜ்.

"தினகர்! இந்த விஷயம் உங்கப்பாவுக்குத் தெரிந்தால் என்ன செய்வார் தெரியுமா?"

"தப்புன்னு தெரிஞ்சால் பெற்ற தந்தையையே தண்டித்து விடுவான் இந்தத் தினகர்."

அவ்வறையிலிருந்து அண்டர் கிரௌண்டிற்கு அழைத்து சென்றார்கள் நாகராஜனை.

ஐந்தடி உயரத்தில் ஜன்னல் இருக்கவேண்டிய இடத்தில் கம்பிகளோ கதவுகளோ இல்லாமல் வெறும் திண்ணைகள் இருந்தன. நாகராஜனை அத்திண்ணை மேல் ஏற்றினார்கள். அந்தத் திண்ணை குட்டியாய் இருந்ததால் வயிறு பாகம் அதற்குள்ளும் தலை வெளியே ஒரு பக்கமாகவும் வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

வில்லைப்போல வளைக்கப்பட்டது உடம்பு. அவன் கைகளோடும் கால்களோடும் பளுவான கற்களைக் கட்டித் தொங்கவிட்டார்கள்.

"அம்மா" என்று கதறினான் நாகராஜ்.

"ஆஹா, அம்மா ஞாபகமிருக்கா?" கேட்டான் சிம்மாத்ரி.

அந்த கற்களின் பாரத்தால் அவன் நரம்புகள் எல்லாம் நொருங்கிப் போனாற் போலாயிற்று.



அவன் உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் முகத்திற்கு வந்து பொங்கிற்று. நிமிஷத்திற்கு நிமிஷம் கற்களின் பளு அதிகரித்துக் கொண்டேயிருந்தது. தாங்கமுடியாத வலி. தோளிலிருந்து கைகளையும், கால்களிலிருந்து தொடைகளையும் கழற்றிக் கொண்டிருந்தாற்போல வலித்தது.

இரண்டு பக்கங்களிலும் பாரம் அதிகரித்துத் திண்ணையின்மேல் வில்லைப்போல வளைத்து நிறுத்தப்பட்டிருந்த உடம்பின் பளுவிற்கு வயிறு நலிந்துபோய் கொண்டிருந்தது. உள்ளே குடலைப் பிசைந்தெடுத்தாற்போல வலி.

நரகம்—

பிரத்யட்ச நரகம்—

அவன் பட்டுக்கொண்டிருந்த உபாதையைப் பார்த்து அங்கிருந்த யாருக்குமே இரக்கம் ஏற்படவில்லை. அவன் செய்த கொடுமைகளுக்கு இந்த தண்டனை கூட போதாது என்றுதான் அவர்களுக்குத் தோன்றி கொண்டிருந்தது.

"நாகராஜா! தேய்ந்துபோன ஆசைகளுடனும், கரைந்துபோன கனவுகளுடனும், வரண்டுபோன என் இதயத்தில் சூடு போட்டிருந்த என் காயத்தை உன் இதயத்தை கிழித்து அந்த இரத்தத்தால் கழுவிக் கொள்கிறேன்...என் கண் முன்னாடியே மேடத்தை எப்படி இம்சித்துக் கொன்றாயோ அக்காட்சி ஒவ்வொரு நிமிஷமும் என் கண் முன்னாடி நிழலாடிக் கொண்டேயிருக்கிறது. நம்பிவைக தந்துவிட்டு என் வீட்டிற்குப் போய் என் அக்காவின் வாழ்க்கையை நிர்மூலமாக்கிய உங்களை—

சின்னவன் என்ற இரக்கமும் இல்லாமல் என் தம்பியை மிருகமாக்கிய உங்களை—

என் தாய் இதயம் வெடித்துச் சாவதற்குக் காரணமான உங்களை—இந்த பூமியில் தங்கவிட மாட்டேன்."

பாண்டுரங்கன் சுற்றிவந்து அவனுக்குப் பின்னால் நின்று கொண்டான். அவன் சொன்ன ஒவ்வொரு

வார்த்தையும் அவன் எப்படிப்பட்ட முடிவிற்கு வந்துள்ளான் என்பதை சொல்லாமலேயே எடுத்துக் காட்டிற்று.

நாகராஜனின் கண்களில் நீர் ததும்பிற்று. தாங்க முடியாத இந்த வலியைக் காட்டிலும் உயிர் போய்விட்டாலே தேவலைபோலிருந்தது.

"உயிர் போகிறது, என்னை விட்டுவிடு" கெஞ்சினான். ஆனால் பாண்டுரங்கனை அது நெகிழ்த்தி விடவில்லை. "அவ்வளவு வலியா?"

"கொல்றாங்களே, செத்துப் போயிட்டிருக்கேனே இந்த நரகம் எனக்கு வேண்டாம்ப்பா!"

"போகட்டும், சொர்க்கம் வேண்டுமா?"

"........."

"யாராவது பெண் வேண்டுமா?"

"என்னைக் கொல்லாதே" கத்தினான்.

பாண்டுரங்கன் கடகடவென்று சிரித்தான்.

"அனுபவித்துப் பார்த்தபோது மனிதனின் உயிர் எப்படிப்பட்டதுன்னும் உயிர் மேலிருக்கிற ஆசை எப்படிப் பட்டதுன்னும் தெரிகிறதல்லவா?"

நாகராஜ் முனகினான்.

"உன் உயிருக்கும் அடுத்தவங்க உயிருக்கும் வித்தியாசம் தெரியுதா நாகராஜா?"

"இல்லை, எல்லோர் உயிரும் ஒன்றுதான்."

"தெரிந்தே இவ்வளவு குற்றங்களை ஏன் செய்தாய்?" அவன் முதுகில் ஓங்கி அறைந்தான்.

திசைகள் அதிரும்படியாய் கத்தினான் நாகராஜ்.



"தெரிந்தும் தப்பு செய்வது பெரிய குற்றம். அப்படிப்பட்டவங்களை மன்னிக்கக்கூடாது. இல்லையாடா?"

நாகராஜ் வலியால் முனகினான்.

"நாகராஜ், நான் ரொம்பவும் இரக்கமான இதயம் படைத்தவன். ஆனால் உன்னைப் பார்த்தால் எனக்குக் கொஞ்சங்கூட இரக்கமே ஏற்படவில்லை. சரி போகட்டும் ஒன்று செய்வோமா?"

நாகராஜனுக்கு மயிரிழை ஆசை ஏற்பட்டது. அங்கிருந்து தப்பித்துக்கொண்டு விட்டால் போதும்.

"என் சொத்தெல்லாம் வேணுமா?"

"சீ, உன் பாவச் சொத்து யாருக்கு வேணும்? இங்கே இருக்கிறவங்களில் யாராவது ஒருத்தராவது உன்னை மன்னித்து விடும்படி இரக்கப்பட்டுச் சொன்னாங்கன்னால் விட்டுவிடுகிறேன். தனித் தனியாய் கேட்டுப்பார் ஒவ்வொருத்தரையும்."

நாகராஜனுக்குத் தெரியும்—கேட்டுப் பிரயோஜனம் இல்லை என்று. அங்கிருக்கும் ஒருத்தருமே தனக்கு உதவ மாட்டார்கள்.

"என் பணம் அத்தனையையும் தந்துடறேன். என்னை விட்டுவிடு. உனக்கு கோடிக் கும்பிடுகள் போடுகிறேன்."

"பணம் இல்லாமல் எப்படி வாழ்வாய்?"

"என் வாழ்க்கையை நான் எப்படியோ வாழ்ந்துக்கறேன்."

"பிச்சை எடுத்து உண்பாயா?"

தலை விண் விண் என்றது. கைகளும் கால்களும் சுவாதீனத்தை இழந்து கொண்டிருந்தன. ரத்த ஓட்டம் சீரில்லாமல் போய் உடம்பு மரத்துப்போகத் தொடங்கிற்று.

"ப்ளீஸ், என்னைக் கொன்று விடாதே" தீனமாய் கேட்டான்.

பாண்டுரங்கன் வியப்போடு பார்த்தான்.

''உனக்கு என்ன கொடுமை செய்தாள் என்று சகுந்தலாவைக் கொன்றாய்? உனக்கென்ன தீங்கு செய்தாள் என்று என் அக்காவைக் கெடுக்கச் செய்தாய்? என் தம்பி வாழ்க்கையை ஏன் அப்படி நாசமாக்கினாய்? என்னையும் என் எதிர்காலத்தையும் தீயில் போட்டுப் பொசுக்கிவிட்டு ஜெயிலுக்கு ஏன் அனுப்பிவைத்தாய்? என்றைக்காவது ஒரு நிமிஷமாவது நீங்கள் செய்ததெல்லாம் அக்கிரமம்னு யோசித்துப் பார்த்திருக்காயா? நாகராஜா! கடைசியில் மருந்துக் கம்பெனியிலிருந்து மட்டச்சரக்கு மருந்துகளைப் பட்டுவாடா செய்து ஜனங்களின் உயிரோடு விளையாடு இற உங்களை மன்னிக்கவே கூடாது. அரசாங்கத்தை மோசடி செய்து போதைப் பொருட்களைக் கள்ளக்கடத்தல் செய்துட்டிருக்கும் உங்களை விட்டுவிட்டால் நான் தேசத் துரோகியாகி விடுவேன்...ஆனால் நான் உன்னைக் கொல்ல மாட்டேன்'' என்றான்.

வினாடி நேரம் நாகராஜனுக்கு ஆறுதலாயிருந்தது.

''அப்படீன்னால் என்னை விட்டுவிடு.''

''கொல்லமாட்டேன் என்றுதான் சொன்னேனே யொழிய விட்டு விடுவேன்னு சொல்லலை''—என்று அவன் கேசத்தைப் பற்றி பின்னுக்கு இழுத்தான்.

விகாரமாய் கத்தினான் நாகராஜ்.

''உனக்குக் கும்பிடுபோடுகிறேன். இனி திரும்பவும் தப்பு செய்ய மாட்டேன்'' கெஞ்சிக் கேட்டுக்கொண்டான் நாகராஜ்.

''திரும்பவும் 'தப்பு' எதுவும் நடந்துவிடக்கூடாதுன்னு நானே சட்டமும், நீதியுமாகி உனக்குத் தீர்ப்புச் சொல்லப் போறேன்?'' என்றான்.

நாகராஜனுக்கு உள்ளூரத் தெரிந்தது. தான் செய்த கொடுமைகளை இவன் லேசில் மன்னித்துவிட மாட்டான்.



உயிரோடு விட்டுவிடமாட்டான். அவனோ உயிருக்காக எதையும் இழக்கத் தயாராயிருக்கிறான். ஆனால் பாண்டு ரங்கனோ இரங்கி வரவில்லை. என்ன செய்வது? எப்படித் தப்பித்துக் கொள்வது?

சிம்மாத்ரி உருண்டையான பெரிய பாறாங்கல்லைத் தூக்கிக்கொண்டு வந்தான். அதைப் பார்த்ததுமே வீலென்று அலறிவிட்டான் நாகராஜ். அப்பு சிரித்தான்.

''ஏன் நாகராஜா? அன்றைக்கு என்னைக்கொண்டு கல்லை வரவழைத்து அம்மாவின் தலையில் அடித்துக் கொன்றாயே, ஞாபகமிருக்கா?''

பத்மினியின் கண்கள் நெருப்புக் கோளங்களாகி விட்டன. அவள் புலியைப் போல பாய்ந்து முன்னால் வந்து நின்றாள்.

சிம்மாத்ரியின் கையிலிருந்த கல்லை வாங்கிக்கொண் டாள். கல்லை அவன் தலைமேல் வைத்தாள்.

''அடிக்காதே, அடிக்காதே, தலை பிளந்து போறாப் போல இருக்கே'' நாகராஜ் அலறினான்.

''அடேய் நாகராஜா! இந்தக் கல்லால் அடித்து உன் தலையைப் பிளப்பதற்கு ஒரு வினாடி நேரம் போதுண்டா. ஆனால்— உன்னைக் கொன்று விட்டு ஜெயிலுக்குப்போற முட்டாள் இல்லை நான்'' என்றாள் பத்மினி.

ஒரு பக்கத்தில் கொல்லமாட்டோம் என்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் விடவும் மாட்டேன் என்கிறார்கள். இவர்கள் தன்னை என்னதான் செய்ய உத்தேசித்திருக் கிறார்கள் என்று புரியவில்லை அவனுக்கு.

பத்மினி ஓரடி பின்வாங்கினாள். அவன் முதுகின்மேல் அக்கல்லை வைத்து கைகளால் அழுத்தி உருட்டத் தொடங்கினாள்.

வலி—சாதாரண வலிகூட இல்லை—

போலீசாருக்குக் கூட அந்த மாதிரி இம்சிக்கத் தெரிந்திருக்காது என்று தோன்றிற்று! நரகவேதனை இல்லை அது. மகா இம்சை! வாழ்க்கையில் கண்டும் உணர்ந்துமிராத அளவிற்கு இம்சைகளை அனுபவித்துக் கொண்டிருந்தான் அவன். ஓவென்று அழுதுகொண்டிருந்தான் அவன்.

''பத்மினி, போதும் இனி, நிறுத்து'' என்றான் பாண்டுரங்கன்.

அவள் நிறுத்தினாள்.

ஆனால் அவள் முகத்தில் கோபம் இன்னும் அப்படியே இருந்தது. மூக்கு அதிர்ந்து கொண்டிருந்தது.

பாண்டுரங்கன் மெதுவாய் அவன் கைகளோடும் கால்களோடும் பிணைத்திருந்த கட்டுக்களை அவிழ்த்தான்.

ஏதோ ரிலீஃப் ஏற்பட்டாலும் உடம்பு சுவாதீனத்தில் இல்லை நாகராஜனுக்கு. முடவனைப்போல தரையில் கிரையாய் துவண்டு விழுந்தான் அவன்.

''தாகம்... தாகம்.''

''தண்ணீர்... கூல்டிரிங்க்... ஐஸ்க்ரீம்... எது வேணும்?'' கேட்டான் தினகர்.

''தாகம்'' திரும்பவும் கேட்டான் நாகராஜ்.

பாண்டுரங்கன் சிரித்தான்.

''உன்னைப் போன்ற பாவி இல்லைடா நான். அன்றைக்குக் குறைந்தபட்சம் தண்ணீர் கூட கொடுக்கவில்லை எனக்கு. ஆனால் குடி. உனக்கு என்ன வேணுமானாலும் தரேன்'' சிம்மாத்ரிக்கு சைகை காட்டினான் பாண்டுரங்கன்.

தினகர் சிம்மாத்ரிக்கு விஸ்கி பாட்டிலை எடுத்துத் தந்தான்.

விஸ்கி பாட்டிலைப் பார்த்ததுமே நாகராஜனுக்குப் போன உயிர் மீண்டது.



தினகரை ஆசையோடு பார்த்தான்.

அந்தப் பாட்டிலைத் தனக்குக் கொடுப்பார்கள் என்ற ஆசை அவனுக்கு இல்லை. ஆனால் அந்தச் சமயத்தில் ஊனமுற்றிருக்கும் உடம்பு சுவாதீனத்திற்கு வரவேண்டுமானால் விஸ்கி மிக அவசியம்.

சிம்மாத்ரி அந்த பாட்டிலை பாண்டுரங்கனிடம் தந்தான்.

''கொடு— அதை எனக்குக் கொடு.''

பாண்டுரங்கன் முகத்தில் முறுவல்.

பாட்டிலைத் திறந்து நாகராஜனின் வாய்க்கருகில் அதை நீட்டினான்.

அது நீட்—என்ற விஷயத்தைக் கூட மறந்துபோய் விட்டான் நாகராஜ்.

உடம்பில் கொஞ்சம் சூடு பிறக்கவேண்டுமானால்—நரம்புகள் சக்தியைப் பெற வேண்டுமானால் குடிக்க வேண்டும். கடகடவென்று குடித்துவிட்டான்—எங்கே சீசாவைப் பாதியில் பிடுங்கிக் கொண்டுவிடுவார்களோ என்ற பயம்!

தொண்டைக் குழியில் வெதுவெதுப்பாய் இறங்கிக் கொண்டிருந்த விஸ்கி உடம்பில் சூட்டை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

தள்ளாடிக் கொண்டே எழுந்து நின்றான் நாகராஜ்.

அவன் எழுந்து நிற்பதற்கு பாண்டுரங்கன் கைக் கொடுத்து உதவினான்.

சிம்மாத்ரியிடம் நாகராஜனின் உடைகளைக் கொண்டு வரச் சொன்னான் தினகர். சிம்மாத்ரி போய் அவன் உடைகளை எடுத்து வந்தான். நாகராஜ் அவ்வுடைகளை உடுத்திக்கொள்வதற்கு அப்பு உதவி செய்தான்.

''நடந்ததை மனதில் வைத்துக்கொள்ளாதே நாகராஜ். ஏதோ சின்னப் பையன் சேஷ்டை'' என்றான் அப்பு நயந்து சொல்வதுபோல. கையில் துப்பாக்கி மட்டும் இருந்திருந்தால் அப்புவை அப்பொழுதே சுட்டுத் தள்ளியிருப்பான் நாகராஜன் தனக்கு வந்த ஆத்திரத்தில்.

சுட்டெரித்து விடுவதுபோல பார்த்துவிட்டு மௌனமாய் இருந்து கொண்டான்.

''நாகராஜா! உன்னை விட்டுவிடுகிறேன். உன் கார் போர்டிகோவில் ரெடியாய் இருக்கு.''

நாகராஜன் மகிழ்ச்சியால் தத்தளிக்கத் தொடங்கினான்.

''நான் போகலாமா?''

''நிச்சிந்தையாய்—ஆனால் ஒரு கண்டிஷன்.''

''என்ன?'' —இதென்ன, இன்னும் ஏதோ தடங்கல் முளைக்கும் போலிருக்கே என்று பயந்தான் நாகராஜ்.

''உனக்கு ஐந்து நிமிஷம் டயம் கொடுக்கிறேன். சரியாய் ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு உன்னை பத்மினி தன் ஆட்களுடன் பின்தொடர்ந்து வளைத்துக் கொண்டு விடுவாள். நீ பிடிப்பட்டு விடக்கூடாது. தப்பித்துக்கொண்டு விட்டால் திரும்பி உன் ஜோலிக்கு வரமாட்டோம். ஆனால் பிடிப்பட்டாயோ சாவிலிருந்து தப்பமுடியாது'' எச்சரித்து சொன்னான் பாண்டுரங்கன்.

ஐந்து நிமிஷங்கள்.

ஐந்து நிமிஷங்கள் தேவையில்லை. ஒரே நிமிஷம் தந்தாலும் போதும், இவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு தொலை தூரத்திற்குப் போய்விடுவான் அவன்.

உயிர் தப்பிற்றே என்ற தைரியமும், இனி தன்னை அவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டன. சேற்றிலிருந்து வெளியே வந்த நாயைப்போல



உடம்பைச் சிலிர்த்துக்கொண்டான் அவன். உடம்பு இன்னும் சுவாதீனத்திற்கு வரவில்லை.

விஸ்கி அவனிடம் தன் பிரபாவத்தை நன்றாய் காட்டி கொண்டிருந்தது. தள்ளாடிக் கொண்டிருந்தான்.

ஐந்தே நிமிஷத்தில் அவர்களை விட்டு தொலைவிற்குப் போய்விடுவான். பாலாஜியோடும் மதனோடும் தான் சேர்ந்து கொண்டு இந்த கழுதைகளை ஒருகைப் பார்க்க வேண்டும். அங்கிருந்த ஒவ்வொருத்தரையும் ரோஷத்தோடு பார்த்தான்.

''என் பணம்.''

''உன்னோடது என்று எதுவுமில்லை—முன்பே சொல்லி விட்டேன்.''

நாகராஜ் ஒரு வினாடி நின்று பாண்டுரங்கனின் முகத்தைப் பார்த்தான்.

''உனக்குத் தப்பித்துட்டுப் போக அவகாசம் தரேன். முடிந்தால் உன் பணத்தைத் திரும்பி சம்பாதித்துக் கொள்ள முயற்சிச் செய்து கொள்.''

''பெஸ்ட் ஆஃப் லக்'' என்றான் தினகர்.

நாகராஜ் வாசலை நோக்கி விர்ரென்று நகர்ந்தான்.

அவனை தொடர்ந்தே எஞ்சியவர்களும் நடந்தார்கள்.

தள்ளாடி நடந்துகொண்டே போனான்.

போர்டிகோவில் கார் நின்றுகொண்டிருந்தது. சாவிகள் கூட காருக்குள்ளேயே இருந்தன.

காரில் ஏறி உட்கார்ந்துகொண்டு கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். காரை ஸ்டார்ட் செய்தான்.

''சரியாய் ஐந்து நிமிஷத்தில் உனக்குப் பின்னால் காரில் பத்மினி வருவாள்'' நினைப்பூட்டினான் பாண்டுரங்கன்.

கார் ரேஸ் குதிரையைப்போல பறந்தது. ஸ்பீட் மீட்டர் எண்பது கிலோ மீட்டர் வேகத்தைக் காட்டிகொண்டிருந்தது.

கார் வேகமாய்... யாரோ துரத்திக்கொண்டு வந்தாற் போல பறந்து கொண்டிருந்தது. ஒருமுறை திரும்பிப் பின்னால் பார்த்தான் நாகராஜ். —தன்னை பத்மினி பின்தொடருகிறாளோ என்று.

பின்னாடி யாரும் வரவில்லை.

பற்களை நறநறத்தான்.

வலியால் ''ஐயோ'' என்று முனகிக்கொண்டான்.

பாண்டுரங்கன்—

தினகர்—

பத்மினி—

அப்பு—

சிம்மாத்ரி—

இப்பெயர்களை மனதிற்குள்ளேயே உச்சரித்துக் கொண்டான். அத்தனை பேரையும் வரிசையாய் நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளவேண்டும்.

மூன்று நிமிஷங்கள் ஆகிவிட்டன.

ஐந்து கிலோ மீட்டர் தூரம் வந்துவிட்டான்.

இன்னும் இரண்டு நிமிஷங்கழித்து பத்மினி புறப்பட்டு விடுவாள் அதற்குள் அவன் தப்பித்துககொண்டு விடுவான்.

அவர்கள் புத்தியில்லாமல் ஐந்து நிமிஷங்கள் டயம் கொடுத்துவிட்டார்கள்...

ட்ராஃபிக் சிக்னலைக் கூட பொருட்படுத்தாமல் வேகமாய் பறந்து கொண்டிருந்தது கார்.

ஆக்ஸிலேட்டரை பலமாய் அழுத்திக் கொண்டிருந்தான். ஸ்டீயரிங்கைப் பிடித்துக்கொள்ளக் கூட முடியாதபடி



கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. பிடி நழுவிக் கொண்டிருந்தது. கண்கள் சொருகிக்கொண்டே போயின. வீதிகள் மங்கலாய் தென்படத் தொடங்கின.

கார் வீதியில் நெளிந்து நெளிந்து சென்று கொண்டிருந்தது அப்படியும் இப்படியுமாய். ஜனங்கள் பயந்துபோய் ஒதுங்கி ஒடிக் கொண்டிருந்தார்கள்.

ட்ராஃபிக் கான்ஸ்டேபிள்கள் விசிலடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் துரத்திக்கொண்டு வரும் மரணதேவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது.

பஸ் எதிரே வந்துக்கொண்டிருந்தது. அதிக தூரத்தில் இல்லை. தன்னையறியாமல் பிரேக்கின் மீது கால் பட்டது.

ஆனால்... ஆனால்... கார் நிற்கவில்லை. வேகம் குறையவில்லை.

அவ்வளவுதான்!

நடந்த மோசடி அவனுக்குப் புரிந்துபோய் விட்டது. காருக்கு பிரேக் இல்லை. பிரேக்குகளை எடுத்து விட்டிருக்கிறார்கள்.

முடிந்து விட்டது.

முடிந்து போய்க் கொண்டிருக்கிறது. அவன் வாழ்வு விடிந்து போய்க் கொண்டிருக்கிறது.

அப்படிப்பட்ட சிக்கலான சமயத்தில் கூட சரேலென்று பஸ்ஸில் மோதிவிடாமல் காரை ஒரு பக்கமாய் திருப்பித் தப்பித்துக் கொண்டான்.

ஆனால் அளவுக்குமீறிய ஜனநெரிசல். வீதி மங்கலாய்...

கிராஸ் ரோடிலிருந்து லாரி வேகமாய் வந்துக்கொண்டிருந்தது.

எதிரே இன்னொரு கார்.

பின்னாலிருந்து...

குழப்பம்.

கார் கைக்கு அடங்கவில்லை. தப்பிவிட்டது. பிரேக்குகள் இல்லை என்று தெரிந்துவிட்டாலே யாருமே மென்டல் பேலன்ஸ் தவறிவிடுவார்கள். அதோடு கூட அப்பொழுது இருந்த மனநிலை வேறு!

சரேலென்று இடது பக்கமாய் திருப்பினான் காரை. கார் பெருத்த ஓசையுடன் தெருவோரத்தில் இருந்த மரத்தில் மோதிக்கொண்டது! ஒரு மரண ஓலத்தால் அவ்வெல்லை முழுவதும் அதிர்ந்தது.

## 35

பாலாஜி குட்டிபோட்ட பூனையாய் நடைபயின்று கொண்டிருந்தான். மதன் சிகரெட்டிற்குமேல் சிகரெட்டாய் புகைத்துக் கொண்டேயிருந்தான்.

நாகராஜின் மரண செய்தி அவ்விருவரையும் கலங்கடித்துக் கொண்டிருந்தது.

மரணம் தமக்கும் அதிக தூரத்தில் இல்லை என்ற உணர்ச்சி அவர்களை உள்ளூர நடுங்கச் செய்துகொண்டிருந்தது.

நாகராஜன் நன்றாய் குடித்துவிட்டு வேகமாய் காரை ஓட்டியதால்தான் ஆக்ஸிடென்ட் ஏற்பட்டு அவன் உயிரிழந்ததாய் போலீசார் முடிவெடுத்தார்கள்.

மஞ்சரி லேசாய் பாட்டை முணுமுணுத்துக் கொண்டே உள்ளே வந்தாள். தந்தையையும் அவர் சிநேகிதரையும் பார்த்ததுமே சிரிப்பு வந்தது அவளுக்கு.



''டாடீ, பாவம் நாகராஜ் அங்கிள் பரலோகத்துக்குப் போயிட்டாராமில்லே? இந்நேரத்தில் சொர்கத்தில் ரம்பை ஊர்வசிகளோடு நடனமாடிட்டிருப்பார் இல்லையா?''

''பப்பீ, கேலியாய் இருக்கா?'' கடுகடுப்பாய் கேட்டான் பாலாஜி.

''எனக்கெதுக்கப்பா கேலி? நாகராஜ் அங்கிள் நிஜமாகவே ஆக்ஸிடென்ட்டில் போயிட்டாருன்னு சொன்னால் நம்புகிறாயா?'' கேட்டாள்.

''அப்படீன்னால்?'' பாலாஜியின் புருவம் சுருங்கிற்று.

''உனக்கு பாண்டுரங்கனின் சக்தியைப்பற்றி தெரியாது. துஷ்டர்களை தண்டிப்பதற்காக அவதாரமெடுத்திருக்கும் அவதார புருஷன் அவன்'' என்றாள் மஞ்சரி.

''பப்பீ, இது கேலி செய்யக்கூடிய நேரமில்லை. இதென்ன உளறல்? உன்னை இவ்வளவு அவமானப்படுத்திய அவன் உனக்கு அவதார புருஷனாய் தென்படுகிறானோ?'' கேட்டான் மதன்.

மஞ்சரி விழுந்து விழுந்து சிரித்தாள்.

''அவன் என்னை அவமானப்படுத்தியதாய் உங்களுக்கு தோன்றினாலும் அங்கிள் நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?''

''என்ன?''

''அவன் என்னைத் தொட்ட முதல் ஆண்.''

பாலாஜி திடுக்கிட்டான். ''வாட் பப்பீ?''

''கலவரப்படாதே டாடீ, என் கற்பு ஒன்றும் போயிடலை. ஆனால் அவன் என்னை எந்த உத்தேசத்துடன் தொட்டிருந்தாலும் என் உடம்பில் அவன் கைபட்டபோது அந்த ஸ்பரிசத்தில் என்னை நான் மறந்து போய்விட்டேன்

அவன் என்னைத் திரும்பத் திரும்பத் தொட்டால் நன்றாயிருக்கும்னு தோன்றிற்று.''

''ஷட் அப். கொழுப்புப் பிடித்துப் பேசுகிறாயா?''

மஞ்சரி ஒரு மாதிரியாய் பார்த்துவிட்டு சிரித்தாள் இம்முறை.

''உங்க முகத்தில் கலவரமும், மனதில் திகிலும் கண்களில் நன்றாகவே தென்படுகிறது டாடீ. அவனுடைய ஹிட் லிஸ்ட்டில் நீங்கள் இருவரும் கூட இருக்கீங்க. எந்தச் சமயத்தில் நம்மையும் மேலுலகத்திற்கு அனுப்பி வைத்து விடுவானோன்னு தெரியாமல் விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் திணறிக் கொண்டிருக்கீங்க.''

''பப்பீ.''

''கத்தாதே டாடீ. நீ பிழைச்சு உயிரோடிருக்கணும்னால் ஒரே ஒரு வழிதான் இருக்கு.''

பாலாஜியின் ஆவேசம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

''என்ன வழி?'' கேட்டான் மதன்.

''புவர் டாடீ. என் பேச்சைக் கேட்டு அவனைக் கூப்பிட்டு கன்யாதானம் செய். மாமனார் என்ற மரியாதையால் உன்னை விட்டுவைப்பான்.''

''அவனை... அந்தக் கழுதையை என் மருமகனாக்கிக் கொள்வதா?''

''நீ அவனைக் கழுதை என்றும், குரங்கு என்றும் எப்படி வேணுமானாலும் சொல்லிக்கொள். அவன்தான் என் கணவன். உனக்கு ஒரு சல்யூஷன் சொன்னேன். பின்பற்றினால் பிழைத்துப் போவாய்! இல்லாவிட்டால் நாகராஜ் அங்கிள் போன இடத்துக்குப் போய்ச் சேருவாய்.

''பப்பீ! நான் பெற்ற மகள் நீ. நீயா இப்படிப் பேசுகிறாய்? உன் தந்தை என்ற பாசம்கூட இல்லையா உனக்கு?''



''நீ செய்த பாவச்செயல் எப்படிப்பட்டதுன்னு தெரிஞ்சும் கூட நீ பிழைத்திருக்கணும்னு நான் விரும்புகிறேன் என்றால் அதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா டாடீ? நீ என்னைப் பெற்ற தந்தை என்ற பாசம் இன்னும் என் இதயத்தின் மறுமூலையில் ஒட்டிக் கொண்டிருப்பதுதான்.''

பாலாஜி கடகடவென்று சிரித்தான். ஆனால் கம்பீரத்தை வெளிக்காட்டிக் கொள்வதற்கு விஸ்வபிரயத்தனம் செய்துகொண்டிருந்தான். ஆனால் அது புலித்தோல் போர்த்திய பசுவின் கம்பீரமாய்தான் தோன்றிற்று. காரணம் அதற்குள் அவன் மனதிற்குள் பயம் பீடித்துக் கொண்டிருந்தது.

''உன் டாடியை நீ ரொம்பக் குறைவாய் எடை போட்டுவிட்டாய் பப்பீ! அந்த பாண்டுரங்களை உயிரோடு இருக்கும்போதே தோலை உரித்து இதோ இந்த ஆணியில் கட்டிப்போடுகிறேன் பார்.''

''அதற்குள் அவன் உன் மருமகனாகி விட்டால்?''—எதிர்க்கணை தொடுத்தாள் மஞ்சரி.

''எனக்கு அந்த சென்ட்டிமென்ட்ஸ் எல்லாம் இடையாது. எவனோ அனாமத்தை நீ கூட்டிட்டு வந்து டாடீ இவன்தான் உன் மருமகன் என்று சொன்னால் உடனே கட்டிக்கொண்டு விடமாட்டான் இந்த டாடீ. சுட்டுத் தள்ளிவிடுவேன்! எதிரியை நாம ரூபம் இல்லாமல் செய்வதுதான் எனக்குத் திருப்தி.''

மஞ்சரி கோபமாய் பார்த்தாள்.

''உன் மேலிருந்த அன்பால் சொன்னேன் டாடீ. அதற்கு பிறகு உன்னிஷ்டம். உன்னைக் காப்பாற்ற விரும்பி என் அபிப்பிராயத்தைச் சொன்னேன்.''

''அதுசரி, அவன் எங்கே இருக்கிறான், அதைச் சொல்லு'' கேட்டான் பாலாஜி.

''ரொம்ப அழகாய்தான் இருக்கு. அது தெரிந்திருந்தால் எப்பொழுதோ அவனிடம் ஓடிப் போயிருப்பேனே! உனக்கு ஏதாவது தெரிஞ்சால் சொல்லுவாயோன்னு நினைத்தேன்'' என்றாள் மஞ்சரி.

அதே சமயத்தில் அஜய் மெதுவாய் உள்ளே வந்தான்.

''பாஸ்'' என்றான் வினயமாய்.

''என்ன?'' கேட்டான் பாலாஜி.

''நிறைய பேசணும் சார்.''

''சொல்லு.''

''நாகராஜன் சார் உங்களுக்குத் தெரியாமல் வெளி நாட்டிலிருந்து வந்த வைரங்களுக்காக உடன்படிக்கைச் செய்திட்டிருந்தார்.''

''வைரங்களா?''

''ஆமாம் சார். கஸ்டம்ஸ் அதிகாரிங்களின் கண் அதன் மேல் இருந்ததால் பாண்டுரங்கனைக் கொண்டு அதைப் பெற்றுக்கொண்டு வருவதற்கு ஒப்பந்தம் செய்திட்டிருந் தார். இருபத்தைந்து லட்சம் கரென்ஸியைத் தந்தார். அந்தப் பணத்தைப் பார்ட்டியிடம் தந்துவிட்டு வைரங்களை பத்திரமாய் கொண்டுவந்து கொடுத்தால் ராஜனை விட்டு விடுவதாய் அக்ரீமென்ட் செய்திட்டிருந்தார்.''

''அப்புறம்?''

''அந்தப் பணத்தை எடுத்துக்கிட்டு பாண்டுரங்கன் ஓட்டலுக்குப் போனான்—வைரங்களை வாங்கிட்டு வர.

நானும் இன்னும் சிலருமாய் அவனைப் பின்தொடர்ந்து போனோம். ஆனால் கதை தாறுமாறாகி விட்டது.''

''எப்படி?''

''லாயர் கிருஷ்ணமூர்த்தியின் மகன் தினகரின் உதவி யால் பாண்டுரங்கன் அந்தப் பணத்தை எடுத்துக்கிட்டு



என்னையும் செம்மையாய் உதைத்துவிட்டு ஓட்டலிலிருந்து தப்பித்துக்கிட்டான். அங்கிருந்து போய் ராஜாவை விடுவித்துக் கொண்டு நாகராஜ் சாரைக் கட்டிப்பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டான்'' சொன்னான் அஜய்.

''ப்ரூட்ஸ்! நீங்கள்ளாம் என்ன செய்திட்டிருந்தீங்க?'' கத்தினான் மதன்.

''அரபு ஷேக்குகளின் வேஷத்திலிருந்த அவங்களை நம்ம ஆளுங்களால் அடையாளம் கண்டுக்க முடியலை பாஸ்! அவங்களை நான் கண்டு பிடிச்சுட்டேன்! ஆனால் லிஃப்டில் இருந்த என்னை நன்றாய் அடித்துப் போட்டு விட்டு ஓடிப் போயிட்டாங்க. அவங்களோடு ஒரு பெண்கூட இருந்துச்சு'' சொன்னான் அஜய்.

பாலாஜி ஒருமுறை சந்தேகத்தோடு மகளைப் பார்த்தான்.

மதனுக்கு பாலாஜியின் சந்தேகம் என்னவென்று புரிந்து விட்டது. அந்தச் சமயத்தில் அவனுக்குக் கூட மஞ்சரியின் மேல் சந்தேகம் வந்தது. அஜய் மெதுவாய் சொன்னான் அவர்களின் பார்வையை கவனித்துவிட்டு— ''நம்ப பொண்ணு இல்லீங்க!''

''அப்படிச் சொல்லு அஜய்! டாடியின் புத்தியே கலங்கிப் போயிட்டிருக்கு. நான் இவரை எப்படிக்காப்பாற்று வதுன்னு அழுதுட்டிருக்கும்போது என்னையே சந்தேகப் படுகிறார்'' என்றாள் பழித்தாற்போல.

''பாஸ்! இன்னொரு விஷயம்! அந்தப் பணத்தை பாண்டுரங்கனுக்குக் கம்பெனியின் சேஃபிலிருந்து எடுத்துத் தந்தார் நாகராஜ் சார்.''

கம்பெனிப் பணம் என்றதுமே இருவருக்கும் வானமே இடித்துத் தலைமேல் விழுந்தாற்போலாயிற்று!

இருபத்தைந்து லட்சங்கள்!

இப்பொழுது அவர்களுக்கு நாகராஜ் இறந்துவிட்டான் என்ற கவலையைக் காட்டிலும் கம்பெனிப் பணம் போய் விட்டதே என்ற வருத்தந்தான் அதிகமாயிருந்தது! அந்தப் பணத்தால் வைரம் வாங்கித் தமக்குத் தெரியாமல் லாபம் சம்பாதித்துக் கொள்ள எண்ணியிருந்திருக்கிறான் நாகராஜ் எப்படிப்பட்ட சரக்காயிருந்தாலும் மூவரும் கலந்துதான் பேரம் செய்வார்கள். ஆனால்!நாகராஜ் நம்மை மோசம் செய்ய முயற்சி செய்திருக்கிறான். அதன் விளைவை அனுபவித்து விட்டான்.

ஒருக்கால் நாகராஜ் பிழைத்துத் தேறியிருந்தால் அவன் செய்த மோசடிக்கு அவ்விருவரும் சும்மாயிருந்து விட மாட்டார்கள்.

ஆவேசத்தால் கொதித்தெழுந்தான் பாலாஜி.

''கிருஷ்ணமூர்த்தியின் மகன் அங்கே எப்படி வந்தான்?'' கேட்டான்.

''என்னவோ சார்! அன்றைக்கு பாண்டுரங்கனை விடுவித்துக் கொண்டு போனதுகூட அவன்தான் என்று எனக்கு சந்தேகமாய் இருக்கு'' என்றான் அஜய்.

மதன் ஆத்திரமடைந்தான்.

தினகர் அவர்கள் வழியில் ஏன் குறுக்கிடுகிறான் என்று தான் புரியவில்லை அவர்களுக்கு.

அவர்களோடு இருக்கும் அந்தப் பெண் யார்?

லாயர் கிருஷ்ணமூர்த்திக்குப் போன் செய்தான் பாலாஜி. மறுமுனையிலிருந்து ''கிருஷ்ணமூர்த்தி ஹியர்'' என்று கேட்டது.

''பாலாஜி பேசுகிறேன் ஹியர்'' என்றான் கம்பீரமாய். அவன் குரலைக் கேட்டதுமே கிருஷ்ணமூர்த்தி கேட்டார்.

''எனி ப்ராப்ளம் பாலாஜி?''

சாதாரணமாய் ஏதாவது ப்ராப்ளம் இருந்தால்தான் அவர் ஆலோசனைக்காகப் போன் செய்வான் பாலாஜி.



''உனக்குத் தெரியாதா?''

மறுமுனையில் கிருஷ்ணமூர்த்தி சிரித்தார்.

''ஜோக் அடிக்கிறீங்களா?'' என்றார்.

''நாகராஜ் செத்துட்டான். தெரியுமா?''

''ஓஹ், அதா? பேப்பரில் படித்தேன். அவன் மனைவியைப் பார்த்து துக்கம்கூட விசாரித்தேன்.''

''உன் மகன் தினகர் எங்கே இருக்கிறான்?''

''எங்கேயாவது ஆடிண்டு பாடிண்டு இருப்பான். தினகரோடு உங்களுக்கு என்ன வேலை?''

''கேட்டதற்கு பதில் வேணும்.''

''அதான் சொன்னேனே.''

''அதில்லை, எங்கேயிருக்கிறான்?'' தீவிரமாய் கேட்ட அவன் குரலைக் கேட்டதுமே கிருஷ்ணமூர்த்தியால் பதில் பேச முடியவில்லை. ஏதோ தப்பு நடந்திருக்கிறது என்று தோன்றிற்று அவருக்கு.

கிருஷ்ணமூர்த்தி வாழ்க்கையில் எத்தனையோ கிரிமினல்களைப் பார்த்திருக்கிறார். அதிலும் பாலாஜியைப் போன்ற தில்லுமுல்லு ஆளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

''என்னை கிராஸ் செய்யாமல் உண்மை விஷயத்தைச் சொல்லு'' கம்பீரமாய் சொன்னார் கிரிமினல் லாயர் கிருஷ்ணமூர்த்தி.

''தினகர் எங்கள் விரோதி கும்பலோடு சேர்ந்து விட்டதாய் தெரிகிறது. நாகராஜனிடமிருந்து இருபத் தைந்து லட்சங்களோடு தலைமறைவாகிவிட்ட பாண்டு ரங்கனோடு சேர்ந்து கொண்டுவிட்டான் தினகர்.''

''எனக்குத் தெரிந்தவரையிலும் தினகருக்கு எந்த கும்பலும் கிடையாது பாலாஜி. மை சன் சஸ் நாட் எ ஃபூல்.''

''உன்னைக்கூட நான் சந்தேகப்பட வேண்டியிருக்கும்.''

''தட்ஸ் யுவர் பேட் லக் பாலாஜி. நான் உன் நண்பன் நான் இவ்வளவு நாளாய் என் புத்திசாலித்தனத்தால் உனக்கு எவ்வளவு உதவியிருக்கேன்னு உனக்குத் தெரியும். உனக்கு துரோகம் என்றைக்குமே செய்யமாட்டேன்.''

''கடந்ததை விடு. இப்போது தினகரால்... நடந்திருக்கிறது... உனக்குச் சரியாய் இருபத்திநான்கு மணி நேரம் டயம் கொடுக்கிறேன். தினகரிடம் என்ன சொல்வாயோ எனக்குத் தெரியாது. எனக்கு கேஷ் வந்து சேர்ந்துடணும்.''

''இல்லாவிட்டால்?''

''உன் மகனின் சவத்தை உனக்கோ உன் சவத்தை மகனுக்கோ வெகுமதியாய் அனுப்பி வைக்கப்படும்'' கடுமையாய் சொன்னான் பாலாஜி.

கிருஷ்ணமூர்த்திக்கு பாலாஜி கூட்டத்தார் எவ்வளவு பொல்லாதவர்கள் என்று தெரியும். கிருஷ்ணமூர்த்தி சாதாரண லாயர் இல்லை. அவர் வாக்குச் சாதுரியத்தால் கோர்ட் ஹாலே மூக்கின் மேல் விரலை வைக்கும். அப்படிப்பட்டவர் கிருஷ்ணமூர்த்தி. தன்னையே மிரட்டிய பாலாஜியின்பால் ஏற்பட்ட கோபத்தால் அவர் முகம் சிவந்து விட்டது.

அதுவே மற்றவர்களின் கேசாயிருந்தால் பொருட்படுத்தியிருக்க மாட்டார்.

தினகர்—தன் மகன்—மகன்மேல் உயிர் அவருக்கு. மனைவி போனபிறகு அந்த மகனை கண்ணின் இமையாய் பார்த்து வருகிறார். அப்படிப்பட்ட மகனைப் பற்றி பாலாஜி சொன்னதைக் கேட்டு அவர் இதயம் சுருங்கி விட்டது.

''ஸோ எஸ் ஆர் நோ'' மறுமுனையிலிருந்து பாலாஜியின் குரல்.



''மிஸ்டர் பாலாஜி கடந்த காலத்தில் நீங்கள் செய்த குற்றமெல்லாம் எனக்குந் தெரியும். நான் நினைத்தால் உங்கள் எல்லோரையும் தூக்கு மேடைக்கு அனுப்பி விட முடியும்''

''ஆனால் அதற்குள் உன் மகன் உயிரைவிட்டு விடுவான்''

அவ்வளவிற்கும் துணிந்தவன்தான் பாலாஜி. துணிந்து தான் பேசுகிறான்.

அதனால் ஏதோ முடிவிற்கு வந்தவராய் ''ஓ. கே.'' என்றார் கிருஷ்ணமூர்த்தி போனை வைத்து விட்டு.

''என்ன சொன்னான்?'' கேட்டான் மதன்.

''ஒப்புக் கொண்டு விட்டான்'' என்று அஜய்யைப் பார்த்தான் பாலாஜி. ''அஜய், நீ லாயர் கிருஷ்ணமூர்த்தி வீட்டின் மேல் ஒரு கண் வைத்திரு'' என்றான்.

''சரி சார்'' அஜய் வெளியே நடந்தான்.

13037
36 3055915

நிலா வெளிச்சம் பாலாய் காய்ந்து கொண்டிருந்தது.

பாண்டுரங்கன் மெத்தென்ற புல்லின் மேல் மல்லாந்து படுத்திருந்தான். மஞ்சரி பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

''மஞ்சரி''

''உம்''

''என் மேல் உனக்கு ஏன் இவ்வளவு அன்பு? நான் உன் தந்தையின் பரம விரோதி. எந்தச் சமயத்தில் யார் பலி யாவாங்களோ தெரியாது. உன் தந்தையைக் கொல்ல

வேண்டும் என்றெண்ணும் எல்மேல் உனக்கு அருவருப்பு, கோபம் இல்லையா மஞ்சரி?''

மஞ்சரியின் கண்களில் கண்ணீர் முத்துக்களை நிலா வெளிச்சத்தில் தெளிவாய் கண்டான் பாண்டுரங்கன்.

அவள் சொன்னாள்—

''ஒரு துஷ்டனுக்கும் ஒரு நல்லவனுக்குமிடையே நடக்கிற போர் இது. துஷ்டரான என் தந்தையைக் காப்பாற்றுவதற்காக ஒரு நல்லவரை பலியாகச் சொல்வது மிகக் கொடுமை என்று எனக்குத் தெரியும். இன்றைக்கு உங்களிடமிருந்து தப்பித்துக் கொண்டாலும் அவர் செய்த குற்றத்திற்கு சட்டமும் நீதிமன்றமும் என்றாவது ஒருநாள் தண்டிக்காமல் போகாது. கடைசியாய் அவர் அதிர்ஷ்டத்தால் சட்டத்தின் பிடியிலிருந்தும் நீதியின் பிடியிலிருந்தும் தப்பித்துக் கொண்டாலும் அதற்குமேல் தெய்வம் இருக்கிறது. தெய்வத்திடமிருந்து எந்தக் குற்றவாளியும் தப்பித்துக்கொண்டு விட முடியாது. இப்பச் சொல்லுங்கள் —குற்றவாளியான தந்தைக்குப் பரிந்து வருவதா? நிரபராதியான காதலரைக் காப்பாற்றுவதா? என் இதயத்திற்கும், என் மனதிற்கும், என் கண்களுக்கும் உங்களைத் தவிர யாரும் இல்லை. நானே நீங்கள். நீங்களே நான்''—அவள் குரலில் இருந்த உறுதி அவனைத் திகைப்படையச் செய்தது.

''மஞ்சரி.''

''உம்.''

''ஆனால் நான் தோற்றுப்போய் உன்னை மோசம் செய்துவிட்டுப் போய்விட்டால்?'' கேட்டான்.

அவள் கண்களாலேயே சிரித்தாள்.

''அப்படி முடியாது உங்களால்'' என்றாள்.

''என்ன நம்பிக்கை?''



''உங்கள் மூச்சோடு மூச்சாய், இதயத்தோடு இதயமாய் ரத்தத்தோடு ரத்தமாய் நான் என்றோ அணுவணுவாய் ஒன்றறக் கலந்து போய் விட்டேன். இல்லை என்று பிரிக்கும் சக்தி யாருக்குமே இல்லை'' என்றாள்.

''உங்க டாடிக்கு?''

''டாடியிடம் கூட சொல்லிட்டேன்.''

அவன் வியப்போடு பார்த்தான்.

''என்னவென்று?''

''நீங்கள்தான் என் கணவர் என்றும், என்னை உங்களுக்குத் தந்து கன்யாதானம் பண்ணி உயிரைக் காப்பாற்றி கொள்ளும்படி சொன்னேன்.''

''என்ன சொன்னார்?''

''உங்கள் தோலை உரித்துவிடுவேன் என்றார்'' திகிலோடு சொன்னாள்.

''அது உண்மையாகி விட்டால் என்ன செய்வாய்?''

''என் இதயத்தைத் தூள் தூளாக்கியவரைப் பழி வாங்குவேன். பிறகு என் இதயத்தைத் தேடிக் கொண்டு வந்து விடுவேன்'' அதைச் சொன்னபோது அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென்று உதிர்ந்து விழுந்தது.

''மஞ்சரி'' ஹீனஸ்வரத்தில் அழைத்தான் அவன்.

''இன்னும் சந்தேகமா?''

''கைகளை நீட்டி வரவேற்கிறாய் என்னை. உன் இதயத்தைத் திறந்து உன் மனதை என் மனதிற்கு அர்ப்பணிக்கிறாய் ஆனாலும் என்னை ஒரு சந்தேகம் பீடித்துக் கொண்டேயிருக்கிறது.''

''என்ன''

''என்னை அடையமுடியும் என்ற ஆசை உனக்கு இருக்கிறதோ என்னவோ, ஆனால் உன்னை ஏற்றுக் கொள்ள முடியும் என்ற ஆசை என்னிடம் இல்லை.''

அது கேள்வியா? அல்லது அவள் கேட்டதற்கு அவன் சொல்கிற பதிலா?

அவள் கனவிலிருந்து திடுக்கிட்டு எழுந்தாற்போல அவனைப் பார்த்தாள்.

அவனுக்கு எப்படித்தான் பதில் சொல்வது என்று தெரியவில்லை அவளுக்கு. அவன் கண்களை வேதனையோடு பார்த்தாள். அவள் இதயத்தில் முள் குத்தினாற்போலிருந்தது. வானமே இடிந்து விழுந்தாலும் சரி அவள் மனம் மட்டும் செக்குச் சிதறாது என்று எடுத்து சொல்லவேண்டும். அதுதான் காதல். அந்தக் காதல்தான் அவள் வாழ்வு. அதற்கு எதிரடி பட்டுவிட்டால் அவள் வாழ்விற்கே அர்த்தமில்லை. அப்பொழுது அவளுக்கு மரணம் ஒன்று தான் கதி.

தன்னையறியாமல் அவன் கைகளில் சரிந்துவிட்டாள் அவள். அக்குளிர்ந்த கைகளுக்கிடையே அவன் மார்பின் மீது தலையை வைத்துக்கொண்டு ஒரே ஒரு வார்த்தையைச் சொன்னாள் மஞ்சரி—

''வாழ்க்கைத் துணைவியாய் உங்கள் வாழ்க்கையில் நுழைகிறேன். அப்படி நடக்காவிட்டால் தோல்வியடைந்த காதலியாய் இந்த உலகத்தையே விட்டுவிட்டுப் போய் விடுகிறேன்.''

அவள் உதடுகளைக் கையால் பொத்தினான் பாண்டுரங்கன். ''இதென்ன பேச்சு?'' என்றான் கண்டிப்பது போல. ஆனால் அவளைப்போல நம்பிக்கை இல்லை அவனுக்கு. புல்தரையில் நகர்ந்து படுத்துக்கொண்டான்.

''ஆனால் பழியால் கொதித்துக் கொண்டிருக்கும் நான் முள் ஏணியின்மேல் இருக்கிறேன். நான் சிக்கிக் கொண்டிருக்கும் விஷவலையத்திலிருந்து வெளியேற வேண்



டும் நான். நாகராஜ மரணத்தால் உன் தந்தை வெகுண்டு என்னைக் கொல்லப் பெரிய திட்டம் போட்டிருக்கலாம்''

''நாகராஜ் உமக்குத் தந்த இருபத்தைந்து லட்சம் திரும்பிக் கிடைக்கும்வரை உங்களுக்கு உயிர் பயம் ஏற்படாது. அந்தப் பணத்தை தினகர் மூலமாய் சம்பாதித்துக்கொள்வதற்கு பிளான் போட்டிருக்கிறார் தந்தை. அதனால் லாயர் கிருஷ்ணமூர்த்தியை மிரட்டி இருபத்தி நான்குமணி நேரம் டயம் கொடுத்திருக்கிறார் டாடி'' என்றாள் மஞ்சரி. மஞ்சரி இதற்கு முன்பே கிருஷ்ணமூர்த்தியைப் பற்றிய விஷயத்தைச் சொல்லியிருந்தாள். இப்பொழுது திரும்பவும் சொன்னாள்.

பாலாஜி, கிருஷ்ணமூர்த்தியைச் சுற்றி வலையை பலமாய்தான் போட்டுக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தது அவனுக்கு.

''நேரமாகிறது, எழுந்திரு'' என்றான் பாண்டுரங்கன்.

''எனக்குப் போகணும்னு இல்லை.''

அவள் கையைப் பிடித்து கார்வரைக்கும் நடத்தி அழைத்துச் சென்றான்.

''திரும்பவும் எப்பொழுது சந்திப்பது?'' கேட்டான் அவள்.

''அடிக்கடி நாம்ப சந்தித்துக் கொண்டால் உங்கப்பாவுக்கு நான் இருக்குமிடம் தெரிந்துவிடும்.''

''அப்படீன்னால் எப்பொழுது சொல்லுங்கள்.''

''நீ எப்பச் சொல்கிறாயோ அப்பொழுது.''

''அப்படீன்னால் இப்பொழுதே—'' என்று சிரித்தாள்.

''சில்லி... காரைக் கிளப்பு'' அவள் விருப்பமில்லாமலேயே காரில் ஏறி உட்கார்ந்து கிளப்பினாள்.

அவன் போன பிறகு அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

தினகருக்கு ஆபத்து எவ்வளவு கிட்டத்தில் இருக்கிறது என்று புரிந்தது அவனுக்கு. அவர் புத்திசாதுரியத்தில் அபாரமான சாமர்த்தியம் படைத்தவர். உண்மையில் பாலாஜியின் வலைக்குள் கிருஷ்ணமூர்த்தி விழுந்துவிட்டாரானால் அவருடைய சாமர்த்தியத்தைக் குறைவாய்தான் எடை போட வேண்டியிருக்கும்.

தினகர் தகுந்த ஜாக்கிரதைகளை எடுத்துகொள்வான். தந்தையின் மீது யாராவது கொடுமை செய்ய நினைத்தால் தினகர் நெற்றிக் கண்ணைத் திறந்துவிடுவான்.

அதற்குள் ராஜனை டாக்டரிடம் காட்டவேண்டும். ராஜனின் நிலைமை மோசமாய் இருக்கிறது. எப்படியாவது அவனைப் பழையபடி மாற்றிவிட வேண்டும்.

மேடம் ஜுவாலா தேவியைச் சந்திக்கவேண்டும். அவளை இதுவரை பார்க்கவில்லை அவன். அவள் எதற்காக அவனுக்கு உதவி செய்கிறாள்? அவள் யார்? அவளுக்கு பாலாஜி கூட்டத்தாரோடு பகைமை ஏன் வந்தது? கடவுளைக்கூட லட்சியம் செய்யாத தினகர் அவளிடம் இத்தனை பக்தியோடு இருக்கிறானே, அதெப்படி? இக்கேள்விகளுக்கு பதில் தெரியவில்லை அவனுக்கு.

## 37

''தினகர்'' கிருஷ்ணமூர்த்தியின் குரல் கணீரென்று கேட்டது.

தினகர் முறுவலுடன் சொன்னான்— ''மொதல்ல காரில் ஏறிக்குங்க டாடீ!''

''வாட் ஆல் திஸ்? என்னை எதுக்கு இங்கே வரச் சொன்னாய்? திரும்பவும் காரில் ஏறச் சொல்கிறாய்? இதெல்லாம் எதுக்கு?''



''சாரி டாடீ. உங்களிடம் முன்கூட்டியே சொல்ல அவகாசமோ, ஆலோசனை பெறக்கூடிய நேரமோ இல்லாமல் போயிடுத்து. நீங்கள் இங்கே நடமாடிட்டிருப்பது நல்லதில்லை டாடீ. பாலாஜி ஆட்கள் உங்களை ஆயிரம் கண்களோடு கவனிச்சிட்டிருப்பாங்கன்னு தெரியலை உங்களுக்கு.''

''எங்கே கூட்டிட்டுப் போறாய்?''

''உங்களைக் காப்பாற்றுவதற்கு—மகனாய் என் கடமையை நிறைவேற்றுவதற்கு உங்களை என்னோடு கூட்டிட்டுப் போறேன்'' என்றான் தினகர்.

''அப்படீன்னால் எனக்கு அவ்வளவு ஆபத்தை உண்டாக்கக்கூடிய காரியம் எதையோ நீ செய்திருக்கிறாய்னு சொல்லு'' கோபம் தொனித்தது அவர் குரலில்.

''தினகர் தப்புச் செய்வான்னால் நீங்க நம்புவீங்களா டாடீ?''

''பாலாஜிக்குப் பணத்தைத் தந்துவிடு. சச்சரவுக்கே இடமில்லை'' சட்டென்று சொன்னார் கிருஷ்ணமூர்த்தி. தினகர் சிரித்தான்.

''உங்க புத்திசாதுரியத்தின் மேல் எனக்கு ரொம்பவும் நம்பிக்கை இருந்தது டாடீ. ஆனால் அது இந்த நிமிஷமே போய்விட்டது. நீங்கள் பேரும் புகழும் பெற்ற கிரிமினல் லாயர் கிருஷ்ணமூர்த்தின்னு சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்க இப்பொழுது. உங்கள் மூளை அவ்வளவு தூரத்திற்குக் குழம்பிப் போயிருக்கு இப்பொழுது.''

கிருஷ்ணமூர்த்தி தினகரின் தோளில் கைவைத்தார்.

''தினகர்... என் ராஜா... மை சன்... இந்த உலகத்தில் உன்னைத் தவிர எனக்கு யாரும் இல்லைடா சின்னக் கண்ணா! உனக்காகத்தானேடா இந்த டாடி உயிரோடு இருக்கேன்? உனக்கு ஆபத்து வரப்போறதுன்னு கேட்ட

துமே என் மூளை குழம்பித்தான் போயிடுத்து. ரத்த தாகத்திற்குப் பழக்கப்பட்டுப்போன புலி பதுங்கிப் பதுங்கி தான் வீழ்த்தும். உண்மையில் நாம்ப இப்பொழுது பாலாஜிக்குப் பணத்தைத் திருப்பித் தந்துட்டாலும் கூட கை கட்டிக்கிட்டுச் சும்மாயிருந்துட மாட்டான். நம்மேல் பகை தீர்த்துப்பான். அப்படிப்பட்ட அயோக்கியன் அவன். அவன் நாகப்பாம்பைவிட ஆபத்தானவன்டா. தினகர், அந்த அயோக்கியனோடு உனக்கெதுக்குடா பகை?'' கேட்டார் தந்தை.

''டாடீ, அவன் நாகப்பாம்பாயிருந்தாலும் சரி. படமெடுத்தாடும் அதன் தலையை வெட்டிக் கொளுத்திச் சாம்பலாக்கி விடுகிறேன்'' புலியாய் இருந்தால் எந்தப் புதருக்குள் பதுங்கியிருந்தாலும் வேடன் கொன்றுவிடுவான். டாடீ.

இன்னொரு விஷயம். உன்னை சவாலிட்ட அவனை இந்த தினகரால் சகித்துக்கொண்டிருக்க முடியாது. விட்டு விடமாட்டான்.''

உறுதியான உள்ளத்தோடு மகன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட தந்தையின் இதயம் பொங்கிப் போயிற்று. சட்டென்று அவர் தினகரைத் தழுவிக்கொண்டார்.

அந்த சமயத்தில்தான் அங்கே தவறு நேர்ந்துவிட்டது.

தம்மை எதிரிகள் கண்ணில் விளக்கெண்ணை விட்டு கொண்டு கவனித்து வருகிறார்கள் என்ற விஷயத்தை மறந்துவிட்ட அந்த நேரத்தில்... அஜய் துப்பாக்கியை தினகர் முதுகில் பொறுத்தி—

''ஹேண்ட் அப்'' என்றான்.

தந்தையும் மகனும் ஒரு விநாடி வாயடைத்துப்போய் விட்டாலும் சுதாரித்துக்கொண்டு கைகளைத் தூக்கிக் கொண்டு நின்றார்கள். பின்னால் யார் நின்றுகொண்டிருந்தார்கள் என்று தெரியவில்லை.



''பின்னால் திரும்பிப் பார்க்காமல் அப்படியே நடங்கள்'' உத்தரவிட்டான் அஜய்.

''யார் நீ?'' கேட்டான் தினகர்.

''யாரென்று சொன்னால் உனக்குத் தெரிஞ்சுட முட்டாளே! ஸ்டார் ஓட்டலில் லிஃப்டில் என்னை போட்டுவிட்டு ஓடிப்போனாய். ஆனால் இப்ப சிக்கிக்கிட்டாய். என் பெயர் அஜய்! உங்க பிடித்து எங்க பாஸ் பாலாஜியிடம் ஒப் போகிறேன்.''

''அஜய்... நான் இதுவரை யாரையும் கொன்றதில்லை. நீ வயிற்றைக் கழுவிக்கொள்ள பாலாஜியிடம் கூலிக்கு வேலை செய்ற நாய் என்று தெரியும். நாய்களையும் பூனைகளையும் கொல்லமாட்டேன் நான். ஆனால் வேறு வழியில்லாமல் போனால் உன்னைக் கொன்றுபோட்டு விடுவேன்.''

தினகர் வார்த்தைகளைக் கேட்டு அஜய் பெரியதாய் சிரித்தான்.

''உன்னால் தப்பித்துக் கொண்டுவிட முடியுனும் எண்ணிட்டிருக்கிறாயோ?''

''எண்ணுகிறதாவது'' உனக்கு பத்தடி தூரத்தில் மரணம் உன்னை துரத்தி வந்துட்டிருக்கு.''

அந்த வார்த்தைகளைக் கேட்டு திடுக்கிட்டான் அஜய்.

தினகருக்குத் தெரியும்—பயந்துபோய் அவன் பின்னால் திரும்பி பார்ப்பான் என்று. அந்த இடைவெளி போதும் தினகருக்கு. அஜய் திரும்பிப் பார்த்தான். அதே சமயத்தில் தினகர் மின்னலாய் திரும்பி அவன் கழுத்துப் பிளந்து விடும்போல ஒரு அடி அடித்தான். பேச்சு மூச்சில்லாமல் அஜய் தரையில் விழுந்தான். கீழே விழுந்த துப்பாக்கியை எடுத்து ஜேபியில் போட்டுக்கொண்டு— ''வாங்க டாடீ'' என்றான் தினகர்.

# 38

ராஜன் கட்டிலில் ஆயாசத்தோடு படுத்துக் மொண்
ந்தான். ''ஊ...ஊ...ஊ...'' ஆயாசத்தால் மூச்சிரைத்
அவன் மார்பு மேலும் கீழும் அசைந்து கொண்டிருந்

...ண்கள் பாதி திறந்தேயிருந்தன.

...ஜா'' மெதுவாய் கூப்பிட்டான் பாண்டுரங்கன்.

ராஜன் அசையவில்லை.

அவன் கண்கள் சலனமில்லாமல் சூனியத்தைப்பார்த்துக் கொண்டிருந்தன. அவனிடமிருந்த பலத்தையும் சக்தியையும் யாரோ துடைத்தெறிந்து விட்டாற்போல கிழித்த நாராய் படுத்துக் கிடந்தான்.

''ராஜா''

பதில் சொல்ல முடியாத நிலையில் இருந்தான் அவன்.

பாண்டுரங்கன் கண்களில் நீர் சுரந்தது. பாசத்தோடு தம்பியின் தலையை வருடினான்.

''டாக்டர் வந்துட்டார்''— அதைக்கேட்டு திரும்பிப் பார்த்தான்.

பத்மினி, அப்பு, சிம்மாத்ரி மூவரும் அவனுக்குப் பின்னாடியே நின்று கொண்டிருந்தார்கள்.

''டாக்டர் ஸார், நீங்க என்ன கேட்டாலும் அதைத் தருகிறேன். தயவு செய்து என் தம்பியைக் காப்பாற்றுங்கள். அவனை பழையபடி மாற்றி விடுங்கள்'' உணர்ச்சி வசத்தோடு டாக்டரின் கைகளைப் பிடித்துக்கொண்டான். டாக்டர் மௌனமாய் ராஜனின் உடம்பை பரிசோதிக்கத் தொடங்கினார். அவர் முகத்தோற்றத்தைப் பார்த்து நிலைமையைத் தெரிந்துகொள்ள முயன்றுகொண்டிருந்தான் பாண்டுரங்கன்.

ஆனால் டாக்டர் முகத்தில எந்த உணர்ச்சியும் தென்படவில்லை. டாக்டர் அங்கிருந்த எல்லோர் முகத்தையும்



கூர்ந்து பார்த்தார். எல்லோர் முகத்திலும் கலக்கம் தெரிந்தது.

''இவர் உங்க பிரதரா?'' கேட்டார் டாக்டர் பாண்டுரங்கனை.

''ஆமாம் டாக்டர்''

''சாரீ மிஸ்டர். பேஷன்ட்டின் கண்டிஷன் ரொம்ப சீரியஸாய் இருக்கு. லிவர் ஹார்ட் ரெண்டுமே பாதிக்கப் பட்டுள்ளன. அதுமட்டுமில்லை, நரம்பு மண்டலங்கள்கூட சாதாரணமாய் வேலை செய்யக்கூடிய நிலையில் இல்லை''

''டாக்டர்''

''ஆமாம் மிஸ்டர். போதைப் பொருளை அளவுக்கு மீறி பயன்படுத்தியதால் இந்த நிலைமைக்கு வந்துட்டார். இன்னும் கொஞ்சநாள்தான் உயிரோடு இருக்க முடியும்னு சொல்வேன்.''

''வேறு ஒன்றுமே செய்ய முடியாதா டாக்டர்?''

நாற்காலியில் சரிந்துவிட்டான் பாண்டுரங்கன் தலையைக் கைகளால் பிடித்துக்கொண்டே.

''நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவது இனி நம் கையில் இல்லை. அவர் சாகப்போவதை மட்டும் உறுதியாய் சொல்லிட முடியும் என்னால். அதற்குள் சின்ன ஆலோசனை சொல்கிறேன்'' என்றார் டாக்டர்.

''சொல்லுங்கள்'' என்றான் அப்பு.

''மார்ஃபியா, பெதடின் போன்றவைகளுக்குப் பழக்கப் பட்டு விட்ட நோயாளி அந்த மருந்துகளைப் பயன்படுத்தாமல் போனால் நரக வேதனையை அனுபவிப்பான். எப்படியும் அவர் பிழைப்பார் என்ற நம்பிக்கை இல்லையாதலால் சில டோஸ்கள் அந்த இஞ்ஜக்ஷனைத் தருவதே மேல். உண்மையில் டாக்டராய் உங்களுக்கு சொல்லக் கூடாத உண்மையை—உங்கள் ஆசையைத் தூண்டிவிட விரும்பாமல்—இந்த உண்மையைச் சொல்கிறேன்''

இனி கண்ணால் காண முடியாது என்றெண்ணிக் கொண்டிருந்த தம்பியைக் கண் முன்னால் கண்டதும் அவன் தான் எவ்வளவு ஆனந்தமடைந்திருப்பான்! எதிரிகளின் கையிலிருந்து அவனை மீட்டுக் கொண்டு வந்த அன்று இமய மலையின் உச்சியில் ஏறிவிட்டாற்போல சந்தோஷ மடைந்தான்!

ஆனால்... ஆனால் இப்பொழுது!

தன் கண் முன்னாடியே தன் பாதுகாப்பிலிருக்கும் தம்பி இனி அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டான் என்று தெரியவந்தபோது அவனுக்குத் தான் உயிரோடு பாதாளத்தில் புதைந்து போய்க் கொண்டிருந்தாற் போலிருந்தது.

தன்னையறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கன்னங்களில் உருண்டோடிற்று. உத்வேகத்தால் உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் முகத்திற் குப்பென்று பொங்கிற்று. உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன.

பெற்ற தாய்—

அக்கா சாந்தா—

தம்பி ராஜன்—

மேடம் சகுந்தலா—

தான்—

இத்தனை பேர் வாழ்க்கையோடு விளையாடியிருக்கிற அந்தக் கயவர்களை இனி ஒரு நிமிஷங்கூட விட்டு வைக்கக்கூடாது—

"மிஸ்டர் பாண்டுரங்கன், ஆவேசப்படாதீங்க, சாந்தமாய் இருங்கள்."

டாக்டர் அவன் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டார். அவ்வளவுதான். முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு ஓவென்று அழத்தொடங்கினான்.

"கடவுளே! நான் தெரிந்தோ தெரியாமலோ யாருக்கும் தீங்கு பண்ணவில்லையே, என்னை எதற்காக இப்படி அழவைக்கிறாய்?"

"பாண்டுரங்கன்" பத்மினி பரிவோடு அழைத்தாள்— அவன் தோளில் கை வைத்து இதமான அவ்வழைப்பிற்குத் தலைநிமிர்ந்தான் அவன்.

"கடவுள் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு அர்த்தம் இருக்கும் பாண்டுரங்கன்" என்றாள் பத்மினி.

"அப்படீன்னால்?"

தன் வாழ்க்கை இவ்வாறு ஆனதற்குக் காரணமானவங்களை ராஜன் பழிவாங்கிப்பான்" என்றாள் பத்மினி.

அவள் பேசியது அவனுக்குப் புரியவில்லை.

"ராஜன் பழி வாங்கிப்பானா?" வியப்போடு கேட்டான் பாண்டுரங்கன்.

"ஆமாம், ராஜன் பழிவாங்கிக்கிறாப்போல நாம்ப செய்யணும்." அவ்வார்த்தைகளை அழுத்திச் சொன்னாள் பத்மினி.

அங்கிருந்த யாருக்குமே அவள் பேசியது புரியவில்லை.

ராஜனின் நிலைமையோ மனதைப் பிழியும்படியாய் இருந்தது. அப்படியிருக்கும் பொழுது அவன் எப்படிப் பழி வாங்கிக் கொள்வான்?

பத்மினி அவன் கையைப் பற்றி தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள். சிமெண்ட் பெஞ்சியில் உட்கார வைத்துவிட்டு—மென்மையான வார்த்தைகளால் விவரித்துச் சொல்லத் தொடங்கினாள்—

"அன்றைக்கு நீங்கள் குற்றம் செய்யாமலேயே சட்டத்திற்குக் கட்டுப்பட்டு ஜெயிலில் உழன்று வந்தீர்கள். உங்கள் அக்கா சாந்தாவின் கற்பைச் சூறையாடினார்கள் அந்த அரக்கர்கள். அதைப் பார்த்து உங்கள் தாய் இதயம்

மடித்து செத்துவிட்டார். சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்ளாத அவங்களை தண்டித்து பழிவாங்குவதற்காகச் சட்டத்தை உங்கள் கையில் எடுத்துக்கிட்டீங்க. நீங்கள் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியிலும் அபசுருதி ஏற்பட்டு விடக்கூடாது. சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்வது குற்றம். அக்குற்றத்தால் திரும்பவும் நீங்கள் தண்டனைக்கு ஆளாகிவிடக் கூடாது. சாமர்த்தியத்தால் வீழ்த்த வேண்டும். இதுதான் என் உத்தேசம். நாகராஜனின் மரணத்தை விபத்து மூலமாய் நடந்ததாய் எப்படி எண்ணிக் கொண்டார்களோ அதேபோலவே எஞ்சியவர்களைக் கூட எண்ணிக்கொள்ள வேண்டும்... உங்கள் குடும்பத்திலிருக்கும் ஒவ்வொருவருமே அந்தக் கயவர்களின் அக்கிரமத்திற்கு ஆளானவர்கள்தான். அதில் ராஜனும் ஒருத்தன். இப்ப நான் சொல்றதைக் கேட்டுவிட்டு நீங்கள் வருத்தப்படக் கூடாது. அப்படி எனக்கு வாக்களியுங்கள்''— அவள் கையை நீட்டினாள் சத்தியம் போடச் சொல்லி.

அவன் தன்னையறியாமல் அவள் கையில் தன் கையை வைத்தான். அவள் சொன்னாள்—

''பாண்டுரங்கன்! ராஜன் அதிக நாள் உயிரோடிருக்க மாட்டான். டாக்டர் சொல்லிவிட்டார். எப்படியும் அவன் செத்துவிடுவான். அவன் மரணதேவனின் பிடிக்குள் முற்றிலுமாய் சிக்கிக் கொள்வதற்குள்ளாகவே இந்த மகா யாகத்தில் ஒரு சமித்தாக மாறுவதில் தப்பில்லை. பழிவாங்கிக் கொண்டோம் என்ற திருப்தியாவது ராஜனுக்கு மிஞ்சும். ராஜனை அவங்க தயார் செய்திருக்கிற விதத்தைப் பார்த்தால் அவன் நமக்குக் கட்டுப்படமாட்டான் என்று தெரியும் பாலாஜிக்கு. ராஜனை சுதந்திரமாய் விட்டு விட்டோமானால் அவங்க இருப்பிடத்திற்கு எளிதாய் போக முடியும் அவனால். அவங்க நம்பிக்கையைத் தவிடு பொடியாக்குவதற்கு ராஜன் ஒருத்தன்தான் இப்பொழுது நமக்குத் தகுதியான ஆள்—'' என்றாள் பத்மினி.



''ஆனால் ராஜன் நமக்கு ஒத்துழைப்பான் என்ற நம்பிக்கை இல்லை எனக்கு.''

''நீங்கள் சந்தேகப்படுகிறது நிஜந்தான். ஆனால் நம்ப முயற்சியை நாம்ப செய்றது நல்லது.''

''எப்படி?''

''போதைப் பொருட்களுக்குப் பழக்கப்பட்டிருக்கும் ராஜன் அவை கிடைக்காவிட்டால் தத்தளித்துப் போய் விடுவான். மருந்து கொடுத்தாலேயொழிய திரும்பி அவன் நரம்பு மண்டலம் சரியாய் வேலை செய்யாது. அதனால் அவன் கேட்டபோதெல்லாம் கொஞ்சமாய் மருந்தைத் தரணும். நம் பேச்சைக் கேட்டால் அவன் எவ்வளவு மருந்து கேட்டாலும் தருவதாய் சொல்லணும். இந்த சான்ஸைப் பயன்படுத்திக்கணும்'' சொன்னாள் பத்மினி.

அவள் யோசனை சரியானதுதான்.

பாண்டுரங்கன் ஒரு விநாடி கண்களை மூடிக் கொண்டான்.

''கடவுளே! நான் செய்வது பாவமாயிருந்தால் என்னை மன்னித்துவிடு'' மனதிற்குள் கடவுளை வணங்கினான் பாண்டுரங்கன்.

## 39

''தினகர், நான் உடனே ஜ்வாலா தேவியைப் பார்க்கணும்'' என்றான் பாண்டுரங்கன்.

தினகர் வியப்படைந்தான். ''அவ்வளவு அவசரம் எதுக்கு?''

''தலைமறைவாய் இருந்துட்டு, என்னைத் தூண்டி விட்டு உத்தரவிட்டுக் கொண்டிருக்கும் அவள் யாருன்னு பார்த்துடணும்.''

“அது இப்போதைக்கு சாத்தியப்படாது” என்றான் தினகர் சிகரெட்டை ஊதிக்கொண்டே.

“ஏன் அப்படிச் சொல்கிறாய்?”

“அது அவள் எனக்குச் செய்திருக்கிற எச்சரிக்கை”—

பாண்டுரங்கன் அவனை வியப்போடு பார்த்தான்.

“அதுசரி, உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?”

“அந்தச் சம்பந்தம் எப்படிப்பட்டதுன்னு வார்த்தைகளால் சொல்ல முடியாது பாண்டு. நல்லவங்களுக்கு அவள் அமிர்தத்தைப் பொழிவாள். எதிரிகளுக்கு மரணதேவதையாகி விஷத்தைக் கக்கவைப்பாள். அவள் சக்தி... மகாசக்தி” என்றான் தினகர்.

பாண்டுரங்கன் சிரித்தான்.

“தினகர்! உன்னைப் போன்ற ஒரு நெருப்புத் தூள் ஒரு பெண்ணின் கையில் விளையாட்டு பொம்மையாய் எப்படித்தான் ஆகமுடிந்ததோ தெரியவில்லை. எந்த பிரயோஜனத்தை எதிர்பார்த்து இப்படி மாறினாயோ எங்களுக்குக் கொஞ்சமும் புரியவேயில்லை.”

“பாண்டு” கம்பீரமாய் அழைத்தான் தினகர். “எந்த மனிதனுக்குமே எப்பொழுது அன்பு பிறக்கும்னு சொல்ல முடியாது. நீ சொன்னதுபோல நான் நெருப்புத் தூள்தான். ஆனால் அந்த நெருப்புத் தூள் அவள் குளிர்ந்த பார்வையில் அணைந்து குளிர்ந்துப் போய்விடும். நீ சொல்வதுபோல அவள் சாதாரணப் பெண் இல்லை. என் கண்ணோட்டத்தில் தெய்வம். அவள் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் கல்வெட்டுக்கள். அந்த கல்வெட்டை அமுலாக்குவதையே தன் கடமையாய் கொண்டிருக்கிறான் இந்தத் தினகர்.”

“அவ்வளவு அன்பு ஏன் என்று தெரிந்துகொள்ளலாமா?”



“பை ஆல் மீன்ஸ் அன்பு ஒன்று மட்டுமேயில்லை பாண்டு! இஷ்டம், பக்தி, நேசம்—விரும்பிக் கேட்டால் இந்த உயிரையேகூட தந்துவிடக் கூடிய வெறி. புரிந்ததா? நீ எப்படி ஊகித்துக்கொண்டாலும் சரிதான்” என்றான் தினகர்.

“அவள் உன் காதலியா?”

“ஆமாம் என்றும் சொல்லமாட்டேன். இல்லை என்றும் சொல்லமாட்டேன்.”

“அப்படீன்னால்?”

“அவள் என் உயிர் தெய்வம்.”

“உயிர் தெய்வமா அல்லது காதல் தெய்வமா?”

“கேலி செய்யாதே பாண்டு. என்றோ உயிரை இழந்திருக்க வேண்டிய என்னைக் காப்பாற்றித் திரும்பவும் இந்த வாழ்க்கையை அருளியிருக்கும் தெய்வத்தை ஏதாவது சொன்னாலும் என்னால் தாங்கிக்க முடியாது.”

“அப்படீன்னால் உயிர்ப் பிச்சை போட்டாள் என்று சொல்கிறாயா?”

“உயிர்ச்பிச்சை அல்ல. உயிரைக் காப்பாற்றியிருக்கிறாள்.”

“என்னை நம்பச் சொல்கிறாயா?”

தினகரின் வாயிலிருந்து உண்மையை வரவழைப்பதற்காக அவன் அவ்வாறு பேச முற்பட்டானேயன்றி உண்மையில் தினகரை இகழ்வதற்காக அல்ல.

“நிஜந்தான் பாண்டு... அன்றைக்கு மட்டும் அவள் என்னைக் காப்பாற்றாமலிருந்திருந்தால் ஐதராபாத்தில் நடுரோட்டில் திக்கில்லாமல் செத்திருக்க வேண்டியவன் நான். அன்றைக்கு... நான் நன்றாய் குடித்திருந்தேன். தெருவில் குடியில் மயங்கிப்போயிருந்த நிலையில் ஸ்கூட்டரை ஓட்டிக்

கொண்டிருந்தேன். எதிரே வந்துகொண்டிருந்த லாரி யிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியவில்லை என்னால். லாரி ஸ்கூட்டர் மீது மோதிவிட்டது. திரும்பிக் கண்களைத் திறந்தபோது எதிரே தென்பட்டவள் ஜ்வாலாதேவி...''

## 40

தினகர் கண்களைத் திறந்தான் எதிரே தன் முகத்தையே கலவரத்துடன் பார்த்தபடி உட்கார்ந்திருந்த பெண் உருவத்தைப் பார்த்து சோர்வுடன் கேட்டான் தினகர்— ''நீங்க யார்?''

அவன் பேசியதைப் பார்த்து அவள் முகம் மலர்ந்தது.

அவள் முறுவலுடன் சொன்னாள்— ''என் பெயர் ஜ்வாலாதேவி.''

''நீங்கள்?''

''உங்கள் ஸ்கூட்டரை மோதிவிட்டு போய்விட்டது லாரி. அந்தச் சமயத்தில்தான் அந்தப் பக்கமாய் வந்த நான் உங்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்துட்டு வந்தேன்.

தினகர் முகத்தில் நன்றி... ஆயாசத்துடன் ''தாங்க்ஸ்'' என்றான்.

''நீங்கள் அதிர்ஷ்டசாலி மிஸ்டர்! சமயத்திற்கு உங்களை இவங்க ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு வந்திருக்கா விட்டால் உங்க உயிர் போயிருக்கும்'' என்றார் டாக்டர்.

தினகர் அவளுக்கு இரு கைகளையும் ஜோடித்துக் கும்பிட்டான். அவள் சட்டென்று அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு— ''தப்பு! நான் என்ன பெரிசாய் செய்திட்டேன்? சக மனிதருக்குச் செய்யவேண்டியதைத் தானே செய்தேன்?'' என்றாள்.



அவள் கை ஸ்பரிசம் அவனுக்கு ஏதோ அபயமளிப்பது போல குளிர்ச்சியாய் தோன்றிற்று.

அவள் முகத்தை பார்த்தான் தினகர்.

பொன் நிறத்தில் மினுமினுத்துக் கொண்டிருந்தது அவ்வுடல். அழகானவள் என்று வேறு சொல்லத் தேவை யில்லை. வயது முப்பதிற்குள் இருக்கும். கடைந்தெடுத்தாற் போன்ற உடற்கட்டு.

''உங்கள் நன்றியை எப்படித் தீர்ப்பேன்?'' என்றான் அவன். அவள் சிரித்துவிட்டு மௌனமாய் இருந்தாள்.

''நீங்கள் என்ன செய்தாலும் அவங்க நன்றியை உங்களால் தீர்த்துக்கவே முடியாது. உங்களை இங்கே கொண்டுவந்து சேர்த்ததிலிருந்து அவங்க வீட்டுக்குக்கூட போகவில்லை. உங்களுக்கு நினைவு திரும்பும்வரை போக மாட்டேன்னு இங்கேயே தங்கிட்டாங்க. இப்படிப்பட்ட நல்லவங்க கூட இருக்காங்கன்னு சொன்னால் நம்பவே முடியலை'' என்றார் டாக்டர் இஞ்ஜக்ஷன் குத்திக் கொண்டே.

''டாக்டர், இனி ஆபத்து ஒன்றுமில்லையே?'' கேட்டாள் ஜ்வாலாதேவி.

''இல்லைம்மா. ஆனால் நோயாளிக்கு ஓய்வு தேவை. அவ்வளவுதான்.''

''டிஸ்சார்ஜ் செய்ததுமே இவரை நான் எங்கள் வீட்டிற்கு அழைச்சுட்டுப் போறேன்'' என்றாள் ஜ்வாலா தேவி.

தினகர் வியப்போடு அவளைப் பார்த்தான். பதிலுக்கு அவள் லேசாய் முறுவல் பூத்தாள்.

''தினகர், மெட்ராஸ் என்று உங்க பர்சில் இருந்த கார்டைப் பார்த்தேன். உங்களுக்கு ஒருக்கால் இங்கே யாரும் இல்லாமல் இருக்கலாம். அதனால்தான் உங்கள்

உடம்பு தேறும்வரைக்கும் உங்க பொறுப்பு என்னைச் சேர்ந்தது.''

''தாங்க்ஸ்.''

ஜுவாலாதேவி இரண்டு வேளைகளும் கேரியரைத் தானே கொண்டுவந்து அவனுக்குச் சாப்பாடு போடுவாள். அதிக நேரத்தை அவனுக்கருகிலேயே அந்த ஆஸ்பத்திரியிலேயே கழித்துவந்தாள்.

அவள் தன்மீது காட்டிய ஆதரவைப் பார்த்து வியப்படைந்தான் தினகர்.

'இதென்ன நன்றிக்கடன்! இவள் தனக்காக ஏன் இவ்வளவு அவஸ்தைப்படுகிறாள்? இவள் யார்? ஏதோ புரிபடாத அன்பு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேயிருந்தது. அவள் வந்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டாள் என்றால் அவனுக்கு ஏதோ வருத்தம் ஏற்படத் தொடங்கிற்று. திரும்பி அவள் வந்ததுமே அவனிடம் ஏதோ புதிய உற்சாகம் ஏற்படத் தொடங்கிற்று

அவளைப் பற்றிய விவரங்களைக் கேட்டுத் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினான். ஆனால் என்ன நினைத்துக் கொள்வாளோ என்ற தயக்கம். எந்தச் சந்தர்ப்பத்திலாவது அவள் தெரிவிப்பாள் என்றெண்ணினான்.

''நீங்கள் மணிக்கணக்காய் இங்கேயே இருக்கீங்களே. உங்கள் வீட்டார் ஒன்றும் சொல்லமாட்டார்களா?'' கேட்டான்.

அதற்குச் சிரித்துவிட்டு பேசாமலிருந்து விட்டாள்.

திரும்பவும் கேட்டால் என்ன நினைத்துக்கொள்வாளோ?

திரும்பி அவளை அதைப்பற்றிக் கேட்பதைத் தவிர்த்துக் கொண்டான். அவள் காட்டிய அன்பால், தான் அவள்பால்



கவர்ந்திழுக்கப்பட்டு விட்டோம் என்ற விஷயத்தைக்கூட உணர்ந்து கொள்ளவில்லை அவன். பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஆசுபத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்தார்கள் அவனை.

காரில் அவளுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டான் தினகர்.

பஞ்சாரா ஹில்ஸிலுள்ள பெரிய பங்களாவின் காம்பவுண்டு கேட்டிற்குள் நுழைந்தது கார்.

அந்த வீட்டைக் கூர்ந்து பார்த்தான் தினகர்.

நவநாகரீகமாய் கட்டப்பட்டிருந்த பங்களா அது. வீட்டிற்குள்ளேயும் விலையுயர்ந்த ஃபர்னிசர்கள் இருந்தன. மிக சுத்தமாய் நீட்டாய் இருந்தது வீடு.

வீட்டில் யாரும் இருந்ததாய் தெரியவில்லை.

அவ்வளவு பெரிய வீட்டில் அவள் தனியாய் இருந்து வருகிறாள் என்று புரிந்தது அவனுக்கு. சமையல்காரி நிர்மலா என்ற நடுத்தர வயது மாது மட்டும் இருந்தாள்.

''இவ்வளவு பெரிய வீட்டில் நீங்கள் மட்டுந்தானா இருக்கீங்க?''

''ஆமாம்.''

''அப்படீன்னால் உங்கள் குடும்பத்தார்...''

''இருக்காங்களா இல்லையான்னு தெரியாது. ஆனால் தற்சமயம் யாருமே இல்லை'' என்றாள் ஜுவாலாதேவி முற்றுப்புள்ளி வைத்தாற்போல.

அவளுக்கு அதைப்பற்றி சொல்லப் பிடிக்கவில்லை என்று தினகர் புரிந்துகொண்டான்.

அவள் கண்களில் தென்பட்ட கரிய நிழலை பார்த்து விட்டு—

''எல்லாம் இருக்கிற நீங்கள் ஏன் இப்படி...''

அவள் சலனமில்லாமல் பார்த்தாள்.

அவள் கண்களில் நீர்த்திரை...

தினகர் அவளை நெருங்கினான். அவள் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரை ஆள்காட்டி விரலால் துடைத்தான். அவன் தேற்றியது அவள் வருத்தத்தை இன்னும் அதிகமாய் தூண்டிவிட்டது.

''தினகர்; வாழ்க்கையில் நான் பட்டதுபோல எந்தப் பெண்ணுமே செம்மையாய் அடிப்பட்டிருக்க மாட்டாள். நான் தோற்றுப்போய் விட்டேன். களைத்துப்போய் விட்டேன். ஆனால் இப்பொழுது என் களைப்பு நீங்கி விட்டது. வெற்றிபெற வேண்டுமென்ற ஆத்திரத்துடன் இப்பொழுது ஆயுதங்களை சேகரித்துக் கொள்ளப் போகிறேன். அந்த ஆயுதங்கள் நேராய் போய் என் வாழ்க்கையோடு விளையாடிய ராட்சதர்களின் இதயங்களைக் கிழித்துப் பந்தாடவேண்டும். அதுவரை இடைவிடாமல் என் முயற்சியைத் தொடர்ந்து கொண்டேயிருப்பேன்'' ஒரே நிமிஷத்தில் அவளிடம் தோன்றிய மாறுபாட்டை பார்த்து தினகர் திகைப்படைந்து விட்டான்.

பெண்ணொருத்தி நினைத்தால் சாதிக்க முடியாதது இல்லை. தேவையானால் இந்த பூமியையே ஆட்டிப் படைக்கச்கூடிய சக்தியும் சாமர்த்தியமும் பெண்ணொருத்திக்கு மட்டுமே உண்டு.

அவள் குரலில் உறுதி தென்பட்டது.

சக்தி தேவியின் கண்களைப்போல அவள் கண்கள் சிவந்து ரத்தத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. காளியைப் போல இருந்தாள்.

தினகர் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்தான்.

ஜுவாலாதேவி சோபாவில் உட்கார்ந்து கொண்டு கைப்பிடியின் மீது ஊன்றிக் கொண்டிருந்த கைகளை



முகவாயில் வைத்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவ்வறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் ஏற்பட்டது.

''மேடம்''

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''மேடம், இந்த நிமிஷத்திலிருந்து இந்த தினகர் உங்கள் ஆள். நீங்கள் விடும் அம்பிலிருந்து விடுபடும் பாணம், நானே பாணம் ஆகிறேன். உங்கள் இதயத்தில் ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ள அந்த எதிரி கும்பலைக் கிழித்துக் குதறி அந்த ரத்தத்தால் உங்களை அபிஷேகம் செய்கிறேன்'' அவள் கைகளைத் தன் கையில் எடுத்து சத்தியம் செய்தான்.

ஜுவாலாதேவியின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்து கன்னங்களில் உருண்டோடிற்று.

''தினகர், நீங்கள் எனக்கு எதுக்கு உதவி செய்ய விரும்புகிறீர்கள்?'' கேட்டாள் நடுங்கும் குரலில்.

''மேடம்! நீங்கள் என் உயிரைக் காப்பாற்றினீங்க
நீங்கள் மட்டும் காப்பாற்றியிருக்காவிட்டால் இதற்குள் என்
உடல் மண்ணோடு மண்ணாய் கலந்து போயிருக்கும்.
என்னைப் பற்றி சொல்லிக்க வேண்டுமென்றால் என்
வாக்குறுதியைக் காப்பாற்ற எந்த சாகஸத்தை வேண்டு
மானாலும் செய்வேன்... இன்னொரு விஷயம். என்னை
மன்னித்து விடுங்கள். நான் உங்கள் அபார அழகிற்கு
அடிமையாகிப் போய் உங்கள் வாழ்க்கையில் பங்கெடுத்துக்
கொள்ள விரும்புகிற அன்பன்''

''தினகர்'' அவள் கலங்கிப் போய்விட்டாள்.

''ஏன் நிறுத்திட்டீங்க மேடம்? சொல்லுங்கள், நான் உங்களை நேசிக்க அருகதையில்லாதவனா? அல்லது உங்கள் பணத்திற்காக ஆசைப்பட்டு நடிக்கிற வஞ்சகன் என்று எண்ணிட்டீங்களா?''

''அதில்லை. தினகர் அவசரப்பட்டு முடிவெடுக்கா தீங்க'' தினகர் பெரிதாய் சிரித்தான்.

''அவசரப் படுகிறேனோ என்னவோ. ஆனால் என் முடிவு மட்டும் தப்பில்லைங்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு இருக்கிறது மேடம்.''

ஜுவாலாதேவி குளிர் ஜுரம் வந்தவளைப் போல நடுங்கினாள்—''ஐயோ, தினகர் உங்களுக்கு எப்படிச் சொல்வேன்?''

''நீங்கள் என்ன சொன்னாலும் கேட்பதற்குத் தயாராய் இருக்கேன் நான்''

ஜுவாலாதேவியின் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் தொடங்கிற்று.

''வேண்டாம் தினகர். வாழ்க்கையில் தோற்றுப் போய் விட்ட துரதிர்ஷ்டசாலி நான். சுயநலவாதிகளின் காம தாகத்திற்கு பலியாகிவிட்ட அபலை நான். களங்கமான இந்த வாழ்க்கையில் உங்களை என்னால் வரவேற்க முடியாது. உங்கள் அன்பிற்கு நான் அருகதையில்லாதவள்.''

அவள் முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டாள். தினகர் அவள் தலையைப் பரிவோடு கோதினான்.

''மேடம், இந்த தினகருக்கு வேண்டியது நீங்கள்தானே தவிர உங்கள் கடந்தகால வாழ்க்கை அல்ல. அதைப்பற்றிக் கூட நான் விசாரிக்கமாட்டேன். நான் உங்களை நேசிக்கிறேன். என் இதயத்தையே ஒரு காதல் மலராய் உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன். உண்மைதான் மேடம். என்னை நம்புங்கள். இந்தத் தினகருக்கு வாழ்க்கையில் இதுவரை பெண் அன்பு என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் இப்பொழுது உங்களைப் பார்த்த பிறகு தான் அதற்கு அர்த்தத்தைத் தெரிந்து கொண்டேன்'' அவன் ஆவேசமாய் சொல்லிக் கொண்டிருந்தான்.



''தினகர்'' என்றாள் ஜுவாலாதேவி.

''சொல்லுங்கள் மேடம்.''

''பகை தீர்த்துக்கொள்ள பரபரத்துக் கொண்டிருக்கிற நெருப்புக்கோளத்தைப் போன்ற என் இதயத்தை 'காதல்' என்ற மூன்றெழுத்துக்களால் கட்டிப்போட்டு கோழையாய் மாற்றிவிடாதீர்கள். எரிமலையாய் கொதித்துக்கொண்டிருக்கும் இந்த மனதைக் காதல் வார்த்தைகளால் சிறைப்பிடித்து பலமிழந்துவிடச் செய்யாதீர்கள். உங்கள் அன்பை நான் மறுத்துவிட்டதாய் பாவித்து விடாதீர்கள். எனக்கு வாழ்க்கையை அருள முன்வரும் உங்களை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை. தாங்க்ஸ். ஆனால்— ஆனால் நான் தொடங்கப்போகிற இந்த மகா யாகம் முடிகிறவரை இந்த க்'காதல்' என்ற வார்த்தைகளால் என் மனதை சிதறடித்து விடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

தினகரின் கண்கள் மின்னின.

''போதும் மேடம். இவ்வளவே போதும். உங்கள் இதயத்தில் இருப்பிடத்தை சம்பாதித்துக் கொண்டது எந்த ஜென்மத்திலோ நான் செய்த புண்ணியமாய் பாவிக்கிறேன். உங்களுக்காக ஜென்மமெல்லாம் காத்திருப்பேன். உங்கள் முயற்சி வெற்றியடையும் வரை நான் உங்கள் பணியாள்'' என்றான்.

''நாளைக்கே நாம் மெட்ராசுக்குப் போறோம்'' என்றாள் ஜுவாலாதேவி.

''ஓ.கே. மேடம்'' என்றான் தினகர்.

# 41

''அவளுக்கும் பாலாஜி கூட்டத்தாருக்குமிடையே பகைமை ஏற்படக் காரணம் என்ன'' கேட்டான் பாண்டுரங்கன்.

''அவங்க அக்கிரமத்தால் எவ்வளவோ பெண்கள் பலியாகிப் போயிருக்கிறார்கள். இவளும் அப்படிப்பட்ட ஒரு துரதிர்ஷ்டசாலி. அதைத் தவிர வேறு விவரம் எல்லாம் உனக்குத் தேவையில்லாதது'' என்றான் தினகர்.

''அவள் தனக்குத் துணையாய் உன் உதவியை ஏன் நாடினாள்?''

''இங்கே வந்த பிறகு பாலாஜி கும்பலால் பாதிக்கப் பட்டவங்களைத் தேடச்சொன்னாள். அவங்க சதுரங்கஆட் டத்தில் பலியாகிவிட்ட நீ ஜெயிலிலிருந்து விடுதலையான தாய் தெரிந்து கொண்டோம். உனக்கு நேர்ந்த அநியாயத் திற்கு நீ கைகட்டிக் கொண்டு சும்மாயிருந்துவிட மாட்டாய் என்று எனக்குத் தெரியும்.''

''எனக்கு அநியாயம் நடந்தது என்றும் நான் குற்ற மற்றவன் என்றும் உனக்கு எப்படித் தெரியும்?''

''நீ எப்படிப்பட்டவன்னு எனக்கு நன்றாய் தெரியும் பாண்டுரங்கா! அப்படிப்பட்ட குற்றத்தை உன்னால் செய்திருக்க முடியாதுன்னு உறுதியாய் நம்பினேன் நான். அதனால்தான் நாம்ப ஒன்றானால் ஒரு திட்டப்படி அவங்களை ஒழித்துக்கட்ட வசதியாய் இருக்கும்னு மேடம் உன்னைத் தன்னோடு சேர்த்துக்கிட்டாங்க.'

''தினகர்.''

''இன்னும் உன் சந்தேகம் போகலையா?''

''நான் எப்படியாவது அவளை ஒரு தடவை பார்க்கணும்.''



''வேளை வரும். அவசரப்படாதே. அவளுக்குக் கோபத்தை வரவழைக்கக்கூடிய காரியம் எதையும் நான் செய்யமாட்டேன். அவளை நான் சம்மதிக்க வைக்கிறேன். வெகு சீக்கிரத்திலேயே நீ அவளை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் போதுமா?'' என்றான் தினகர்.

பாண்டுரங்கனால் அதற்குமேல் தொந்தரவு செய்ய முடியவில்லை.

''சரி'' என்றான் முடிவில்.

# 42

டெலிபோன் ஒலிக்கவே ரிசிவரைக் கையிலெடுத்தான் பாண்டுரங்கன்.

''ஹலோ நான்தான்'' மறுமுனையிலிருந்து கேட்டது. அது மஞ்சரியின் குரல் என்று புரிந்து கொண்டு விட்டான் பாண்டுரங்கன்.

''என்ன விஷயம் மஞ்சரி?' பரபரப்புடன் கேட்டான் ஏதாவது விஷயம் இல்லாவிட்டால் அவள் போன் செய்திருக்க மாட்டாள்.

''இன்றிரவு பத்துமணிக்கு எங்கப்பாவின் ஃபேக்டரி யிலிருந்து இரண்டு லாரி நிறைய மருந்துகள் போகப் போகின்றன.''

''அதில் என்ன விசேஷம்?''

''உங்களுக்கு மூளையில் மண்தான் இருக்கு! விசேஷம் இல்லாவிட்டால் போன் செய்வேனா? அந்த மருந்துகளோடு கூட இருபது லட்சம் விலைமதிப்பு கொண்ட ஹெராயினும் பயணம் செய்யப் போகிறது.''

''எங்கே?''

"இவங்க சரக்கை பம்பாய் வரைக்கும் கொண்டு போவாங்க. அங்கிருக்கிறவங்க இதைப் பெற்றுக்கொள் வாங்க. நீங்கள் உடனே லாரிகளைப் பிடித்து ஹெராயின் களைக் கைப்பற்றிக் கொள்ளுங்கள்."

பாண்டுரங்கன் சிரித்தான். "ஹெராயினைக் கைப்பற்றி கொள்வதா அல்லது ஹீரோயினையா?"

"உங்க தலை! எல்லாம் போனில்தான் சொல்லுவீங்க. எதிரே வந்துட்டால் ஒன்றுமே கையாலாகாது உங்களுக்கு."

பாண்டுரங்கன் சிரித்தான்.

"லாரிகளோடு யார் போறாங்க?"

"ஜக்கு, அஜய், இன்னும் சிலர்! விரட்டியடித்து விட்டு, சரக்கைக் கைப்பற்றிக் கொண்டு உங்க மாமனாருக்குப் போன் செய்யுங்கள்."

"எங்க மாமனாரா? யார் அந்த மாமனார்?"

"ஒன்றுமே தெரியாத ஜடமாயிட்டிருக்கீங்க நீங்க. உங்க மாமனார் என்றால் எங்க டாடி."

"ஓ... செய்து?"

"உங்கள் சரக்கை உங்களிடம் திருப்பித் தந்து விடுகிறேன். உம் மகளை எனக்குக் கன்யாதானம் செய்து தாரும்னு கேளுங்க."

"அதுக்காகத்தானா இவ்வளவு கஷ்டப்படுகிறாய், பாவம்."

"இல்லாவிட்டால் எனக்கு வேறு வேலைவெட்டி இல்லைன்னு எண்ணிட்டீங்களோ?"

"ஓ.கே! நீ சொன்ன வேலையை செய்து முடித்து விடுகிறேன். அந்த சாலையில் நிறைய லாரிகள் போகுமே. இந்த லாரிங்களை எப்படிக் கண்டுப்பிடிப்பது?"



"உங்க சாமர்த்தியத்தைப் பற்றி எனக்குத்தான் நன்றாய் தெரியுமல்லவா மகானுபாவரே? அதனால் அதைக் கூட தெரிஞ்சு வைச்சுக்கிட்டேன்" என்று லாரி நெம்பரை சொன்னாள் மஞ்சரி.

"தாங்க்ஸ்" என்றான். "போனை வைத்துடட்டுமா?"

"வேலை முடிந்ததும் தாங்க்ஸ் சொல்லி தப்பிப்பது ஆண்களின் வழக்கம் போலும்! எனக்கு ஃபீஸ் தந்துட்டு போனை வையுங்க முதலில்."

"எவ்வளவு?"

"எவ்வளவு இல்லை, எத்தனைன்னு கேளுங்க."

"எத்தனை?"

"தற்சமயம் பத்து முத்தங்கள்."

"சரி, கணக்கிட்டுக்கொள்."

.........

## 43

பம்பாய்க்குச் செல்லும் ஹைவேயில் முப்பது கிலோ மீட்டர்கள் தூரம் தாண்டியதும் அடர்த்தியாய் வளர்ந்திருந்த புதர்களுக்குப் பக்கத்தில் மெடாடோர் வேன் நின்றது. அதற்குப் பக்கத்தில் சிறிய கார் ஒன்றும் நின்றது.

காரிலிருந்து பாண்டுரங்கன் இறங்கினான்.

விசாலமான சாலையின் குறுக்கே வந்து நின்று சாலையின் இருமருங்கிலும் உற்றுப் பார்த்தான்.

சுற்றுப்புறமெல்லாம் ஆளரவமில்லாமல் இருந்தது. சுவற்றுக்கோழிகளின் ரோதனை பேரிரைச்சலாய் இருந்தது.

காற்றிற்கு மரத்திலிருந்த இலைகள் சலசலத்துக் கொண்டிருந்தன. குளிர்ச்சியாய் வந்து மோதிய தென்றல் காற்றால் அவன் கேசங்கள் பறந்தன.

தொலைவில் நகரத்தின் சூழ்நிலையை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்த விளக்குகள் நட்சத்திரங்களைப் போல ஒளிவீசிக் கொண்டிருந்தன. அவன் ஜேபியைத் தடவிப் பார்த்துக்கொண்டான்— ஜில்லென்று கையில் பட்டது துப்பாக்கி.

தினகர் அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

இருவரும் சிகரெட் புகைத்துக்கொண்டே சாலையை நோக்கி கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்!

சுமார் இருபது லட்சம் ரூபாய் விலைமதிப்புக் கொண்ட ஹெராயின் போன்ற போதைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்கள் தகுந்த ஜாக்கிரதைகளை மேற்கொள்ளாமல் இருந்திருக்க மாட்டார்கள்.

அந்த லாரிகளை அடையாளம் கண்டு கொள்வதற்கு வகுவாய் ஃபேக்டரியிலிருந்து அவை புறப்படத் தொடங்கியதுமே அப்புவும் சிம்மாத்ரியும் இன்னொரு காரில் அவற்றைப் பின்தொடர்ந்து வருவார்கள். அதைக்கொண்டு லாரிகளை அடையாளம் தெரிந்து கொண்டு நிறுத்த வேண்டும். பொருட்களை கைப்பற்றிக் கொள்ளவேண்டும். கைப்பற்றி கொள்ள முடியாவிட்டால் அவற்றை துவம்சம் செய்ய வேண்டும் என்று தயாராயிருந்தார்கள் அவர்கள்.

சாலைக்குக் குறுக்கே நின்றபடி இந்தவிதமாய் அவற்றை நிறுத்த முயற்சிப்பது முட்டாள்தனமேயாகும். கள்ளக் கடத்தல் சம்பந்தப்பட்ட பொருட்கள் இருக்கும்போது தம்மிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்குத் தம்மைக் குத்திப் போட்டுவிட்டு லாரியுடன் ஓடிப்போக முயற்சிப்பார்கள் அவர்கள். சாலைக்குக் குறுக்காய் நின்றால் வேறு வாகனங்களுக்குத் தடையாகவும் இருக்கும், சந்தேகத்திற்கும் இடம் ஏற்படும்.



துப்பாக்கிகளைக் கொண்டு டயர்களைச் சுட்டுத் தள்ளிவிட்டால்?

அவற்றை ஏற்றிக்கொண்டு வரும் பாலாஜியின் ஆட்கள் சாமானியமானவர்கள் இல்லை. ஜக்கு, அஜய் இருவரும் கைதேர்ந்த ஆட்கள். கண்டிப்பாய் அவர்களும் வருவார்கள்.

''என்ன யோசிச்சிட்டிருக்கிறாய்?'' கேட்டான் தினகர்.

''லாரிகளை எப்படிப் பிடிக்கிறதுன்னுதான்.''

''கைகளைத் தூக்கி நிறுத்தச் சொல்லி சிக்னல் கொடு' சிரித்தான் தினகர்.

அவன் தன்னை பரிகசிப்பதை உணர்ந்து கோபமாய் பார்த்தான் பாண்டுரங்கன்—''தினகர் பரிகாசம் செய்ய இது நேரமில்லை'' என்றான்.

''வெறுமே ஜோக் அடித்தேன் பாண்டு. நீ எவ்வளவு கெட்டிக்காரன்னு எனக்குத் தெரியாதா? ஆனாலும் அதைப் பற்றி நீ அதிகமாய் யோசித்துக் குழம்பாதே.''

''ஏன்?'' குழம்பினான் பாண்டுரங்கன்.

தினகர் சிரித்தான்.

''நீயும் நானும் ஒரு கருவிகள்தான் பாண்டு! மேடம் நாம்ப என்ன செய்யணுங்கிறதை முன்கூட்டியே முடிவு செய்திட்டாங்க'' என்றான் தினகர் மெல்லிய குரலில்.

''என்ன சொன்னாங்க?''

''நீயே பார்'' என்றான்.

அவனோ என்ன செய்வது எப்படிச் செய்வது என்று புரியாமல் யோசித்து குழம்பிக் கொண்டிருக்கிறான். தினகர் எல்லாம் தெரிந்தும் சொல்லாதது அவனுக்கு மனத் தாங்கலாய் இருந்தது.

அதற்குள் தொலைவில் கார் வந்துக் கொண்டிருந்ததை ஹெட்லைட்டுகள் எடுத்துக் காட்டின. கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். அது சிம்மாத்ரியும் அப்புவும் வந்து கொண்டிருந்த கார் என்பதை ஊகித்துக் கொண்டான்.

தினகர் முறுவலுடன் பார்த்தான் பாண்டுரங்கனை.

ஒரு கார் வேகமாய் வந்து சாலைக்கு நடுவே நின்று விட்டது. அதிலிருந்து அவர்கள் ஊகித்தாற் போலவே அப்புவும் சிம்மாத்ரியும் இறங்கினார்கள்.

"லாரிகள் இன்னும் மூன்று நிமிஷத்தில் வந்துவிடும்" மளமளவென்று சொன்னான் சிம்மாத்ரி.

தினகர் பெரிதாய் கைதட்டினான். வேனிற்குள்ளேயிருந்து இரண்டு புலி பொம்மைகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

பாண்டுரங்கன் அவற்றை வினோதமாய் பார்த்தான்.

சாலைக்கு நடுவே நின்றிருந்த காருக்கு ஒரு பக்கத்தில் ஒரு புலியையும், அடுத்த பக்கத்தில் மற்றொரு புலியையும் நிற்க வைத்தார்கள். ஒன்று படுத்துக் கொண்டிருந்த தோற்றத்திலும் இன்னொன்று எதிரே வந்து கொண்டிருந்தவர்கள் மேல் பாய தயாரார்ய் இருப்பது போலவும் இருந்தது.

அவற்றின் கண்களுக்கு மேல் பேட்டரியைக் குவித்துப் பார்த்தான் தினகர். நெருப்புக் கோளங்களாய் மினுமினுத்தன. இருட்டில் பார்ப்பவர்கள் யாராயிருந்தாலும் சரி அவற்றை நிஜப் புலிகள் என்றே எண்ணிவிடுவார்கள்.

பாண்டுரங்கன் 'பார்த்துட்டேயிரு' என்று தினகர் சொன்னதற்குப் பொருள் இதுதான் போலும் என்றுணர்ந்தான்.

தினகர் ஒரு கையாளைப் பார்த்து 'உம்' என்றான்.



உடனே அவன் படுத்துக்கொண்டிருந்த புலிக்கு முன்னால் மல்லாந்து !படுத்துக்கொண்டான். இன்னொரு ஆள் அவன் உடம்பின் மீது சீசாவிலிருந்த சிவப்பு திரவத்தை ஊற்றினான். அது ரத்தத்தைப்போல இருந்தது. புலி கிழித்துப்போட்ட ஆளைப்போல அந்த பொம்மைக்கு முன்னால் படுத்தான் அவன்.

"இவ்வளவு சடங்குகள் எல்லாம் எதுக்கு?" கேட்டான் பாண்டுரங்கன். தினகர் சிரித்தான்.

"பாண்டு, லாரிகளை நாம்ப நிறுத்த முயற்சித்தாலும் நிற்காது. கள்ளக்கடத்தல்காரர்கள் மிக ஜாக்கிரதையாய் செயலற்றுவார்கள். உயிரை எடுக்கவும் உயிரை இழக்கவும் கூட பின்வாங்க மாட்டார்கள். ஆனால் நாம்... உயிரையும் இழக்கத் தயாரில்லை, உயிரையும் வாங்க மாட்டோம். அதனால்தான் அவங்களை ஏமாற்றி நம் காரியத்தை நாம்ப முடித்துக்கொள்ள வேண்டும்" தினகரின் குரல் கம்பீரமாய் மாறிற்று" —லாரியின் ஹெட் லைட்ஸ்.

வெளிச்சத்தில் அந்தப் புலிகளைப் பார்த்ததுமே டிரைவர்கள் உடனே லாரிகளை நிறுத்திவிடுவார்கள். அவர்கள் அவை நிஜப்புலிகள் அல்ல என்று கண்டுப்பிடித்து விடுவதற்குள் நம்ப வேலையை நாம் முடித்துக் கொண்டு விடவேண்டும்."

தினகர் சொன்னவற்றிற்கு விவரம் தந்தான் அப்பு.

பாண்டுரங்கன் தலை குனிந்தான்.

"லாரிகளில் வந்து கொண்டிருக்கும் மட்டச்சரக்கு மருந்துகளையும் ஹெராயின்களையும் லாரிகளோடு சேர்த்து துவம்ஸம் செய்வதுதான் நம் வேலை. அவற்றை அரசாங்கத்தின் கையில் பிடித்துக் கொடுப்பதன் மூலம் எந்த லாபமும் ஏற்படப்போவதில்லை. பாலாஜியும் மதனும் தப்பித்து வெளியே வந்துவிடுவார்கள். அதனால் லாரிகளை போலீசாரிடம் ஒப்படைக்கக் கூடாது. அப்படிச் செய்தால்

தான் அவர்களைப் பழிவாங்கிக் கொள்ளச் சந்தர்ப்பம் கிட்டும்.

இந்த விதமாய் அவர்களின் காரியத்தைத் தடுத்து நிறுத்தி லட்சக்கணக்கில் நடத்திவரும் அவர்களின் வியாபாரங்களை நாசம் செய்து சாம்பலாக்கிவிட வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் பைத்தியம் பிடித்த நாய்களாய் சுற்றியலையும்படியாய் செய்யவேண்டும்.

தொலைவில் ஹெட்லைட்ஸ் தென்பட்டன.

''உம்... எல்லோரும் சாலைக்கு ஓரமாய் ஒதுங்கிக் கொள்ளுங்கள்'' என்று தினகர் கத்தினான். அவ்வாறு கத்திக்கொண்டே பாண்டுரங்கனின் கையைப் பிடித்து சாலையோரமாய் இழுத்து வந்து ஒரு மரத்தடியில் நிற்க வைத்தான்.

அப்புலிகளைப் பார்த்துவிட்டால் போதும் டிரைவர்கள் ஐம்பதடி தூரத்திலேயே லாரிகளை நிறுத்தி விடுவார்கள். லாரிகள் கிட்டே வருவதற்கு அடையாளமாய் ஹெட்லைட்கள் தென்பட்டுக் கொண்டிருந்தன. அந்த விளக்கு வெளிச்சத்தில் காரில் வந்த ஆளைத் தாக்கிப் புலி கொன்றுவிட்டாற்போல சகஜமாய் தென்படத் தொடங்கும். லாரியின் ஹெட்லைட்கள் இரண்டு முறை அணைந்துவிட்டு திரும்பவும் எரியத் தொடங்கின. சர்ரென்ற சப்தத்துடன் நின்றுபோய் விட்டன.

முன்னால் வந்த லாரியிலிருந்து டிரைவர் தலையை வெளியே நீட்டி பின்னால் வந்த லாரி டிரைவர்களுக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

லாரிகளின் மேல் கவனத்தைச் செலுத்தி கொண்டிருந்த தினகரும் பாண்டுரங்கனும் நூறடிக்குப் பின்னால் லாரிகளை பின்தொடர்ந்தபடி வந்து நின்ற ஜீப்பை கவனிக்கவில்லை. அதுதான் அவர்கள் செய்த தப்பு. தினகர் லேசாய் விசிலடித்தான்.



லாரிகளிலிருந்து டிரைவர்களும் க்ளீனர்களும் கலக்கத்துடன் கீழே இறங்கினார்கள்.

லாரிகளின் ஹெட்லைட்டுகள் இன்னும் எரிந்து கொண்டேதான் இருந்தன.

அதே விளக்கு வெளிச்சத்தில் அவர்களைப் பார்த்தான் பாண்டுரங்கன். அஜய், ஜக்கு போன்றவர்கள் கண்ணில் படவில்லை. அவன் எதிர்பார்த்தாற் போல அவர்கள் இல்லாதது அவனுக்கு மிக ஆச்சரியத்தை ஏற்படுத்திற்று.

பாலாஜி கும்பலில் அவர்களுக்கு எப்படிப்பட்ட இடம் இருந்து வந்தது என்பதை அவன் அறிவான்.

சுமார் இருபது லட்சங்கள் விலைமதிப்புடைய போதை பொருட்களை எடுத்து செல்லுகின்ற லாரிகளுக்கு கார்டுகள் இல்லாமல் சாதாரண ஆட்களை அனுப்பி வைத்திருப்பதன் நோக்கம் என்னவென்று புரிபடவில்லை.

ஆனால் பின்னால் வந்த ஜீப்பில் அஜய்யும், ஜக்குவும் லாரிகளைப் பின்தொடர்ந்தபடி வந்துகொண்டிருந்தார்கள் என்றும் தம்மையே மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் மட்டுமேயில்லை. இன்னும் சொல்லப் போனால் அப்புவும் சிம்மாத்ரியும் கூட அவ்விஷயத்தை கவனிக்கவில்லை. டிரைவர்கள் உயிருக்கு அஞ்சியபடி நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

பாண்டுரங்கன் ஓடி முன்னுக்கு வந்தான். கையிலிருந்த துப்பாக்கியை அவர்களை நோக்கிக் குறிவைத்தான்.

''உங்களைக் கொன்றுபோட்டு விடுவது ஒரு நிமிஷ வேலை. ஆனால் குழந்தை குட்டிகளோடு இருக்கும் உங்களைக் கொல்லமாட்டேன். உயிரைப் பற்றிய பயம் உங்களுக்குத் தேவையில்லை. லாரிகளை விட்டுவிட்டு தொலைவிற்கு ஓடிப்போய் விடுங்கள். இல்லாவிட்டால் இவற்றோடு சேர்த்து உங்களையும் உயிரோடு சமாதியாக்கி விடுவேன்.''

லாரி டிரைவர்கள் பயந்துபோய் பார்த்தார்கள்.

''ஐயா, எங்களை விட்டுவிடுங்கள்'' என்றான் ஒருத்தன் தீனமாய்.

''ஊ'' என்றான் பாண்டுரங்கன்.

அவ்வளவுதான்! அவர்கள் அங்கிருந்து ஓட்டம்பிடிக்கத் தொடங்கினார்கள். வேலை இவ்வளவு எளியதாய் முடிந்து விடும் என்றெண்ணியிருக்கவில்லை பாண்டுரங்கன்.

''பாண்டுரங்கன் தினகரை வெற்றிப் பெருமிதத்தோடு பார்த்தான். தினகர் அவன் தோளில் தட்டினான்.

''லாரிகளை சாலையோரத்திற்குக் கொண்டுவாங்க'' ஒரு அடியாளிடம் சொன்னான் தினகர்.

லாரிகளை சாலையோரத்திற்கு கொண்டுவந்து நிறுத்தியதும், புலி பொம்மைகளை வேனுக்குள் ஏற்றியதும் ஒரே சமயத்தில் நடந்தேறிவிட்டன.

லாரியின் மேலே ஏறி பெட்ரோலைத் தெளித்தான் ஒருத்தன். தொலைவில் போய் நின்றுகொண்டு பாண்டு ரங்கன் கையிலிருந்த துப்பாக்கியால் சுட்டான். துப்பாக்கி 'டுமீல்' என்ற சப்தத்துடன் நெருப்பைக் கக்கிற்று. அவ்வளவுதான்!

லாரிகளிலிருந்து நெருப்பு வானளாவ எழும்பிற்று. லாரிகளும், லாரிகளிலிருந்த மட்டச்சரக்கு மருந்துகளும், ஹெராயின்களும் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தன.

அந்தத் தீ வெளிச்சத்தில் பாண்டுரங்கனின் கண்களில் தென்பட்ட செம்மையைக் கண்டான் தினகர். அதே சமயத்தில்—

நூறடி தூரத்திலிருந்து ஒரு வாகனம் பின்னுக்கு ரிவர்ஸாகி வேகமாய் முன்னுக்கு வந்ததை பாண்டுரங்கனும் தினருகம்கூட பார்த்தார்கள்.



''க்விக்! நாம்ப இங்கிருந்து போயிடணும்'' கத்தினான் தினகர்.

அவன் அடியாட்கள் மளமளவென்று வேனை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

தினகரும் பாண்டுரங்கனும் ஒரு காரிலும், சிம்மாத்ரியும் அப்புவும் இன்னொரு காரிலும் ஏறிக் கொண்டார்கள்.

## 44

''மிஸ்டர் பாலாஜி'' கணீரென்று ஒலித்தது பாண்டு ரங்கனின் குரல் போனில்.

''யார் நீ?'' பாலாஜி கேட்டான்.

''உன் மகளின் காதலன்! உன் மருமகன்!''

''உன் மூஞ்சிக்கு அதுதான் குறைச்சலாயிருக்கோ?''

''இப்ப நீ அழுதுட்டிருக்கிறாய் இல்லையா மாமா? வருத்தமாய் இருக்கா?''

பாலாஜி இல்லாத கம்பீரத்தை வரவழைத்துக் கொண்டான் குரலில். அவன் மட்டும் நேரில் தென்பட்டி ருந்தால் கண்டந்துண்டமாய் வெட்டிப் போட்டிருப்பான்.

''என் அகராதியில் வருத்தம் என்ற வார்த்தைக்கே அர்த்தம் இல்லைடா. நீ இன்னும் உயிரோடிருக்கிறா யேங்கிற வருத்தந்தான் இப்பப் புதிதாய் ஏற்படுகிறது எனக்கு.''

''சீ, இதென்ன பேச்சு மாமா? காலைக்கழுவிக் கன்யாதானம் செய்யவேண்டியவர் நீங்க. அப்படி சொல்ல லாமா?'' பரிகாசமாய் சொன்னான் பாண்டுரங்கன்.

''ஷட் அப் ராஸ்கல். கால்களைக் கழுவிக் கன்யாதான மில்லைடா உனக்கு செய்யவேண்டியது! உன் கால்களை

உடைத்து சமுத்திரத்தில் எறிஞ்சுடறேன். மயிரிழை அதிர்ஷ்டத்தால் என் பிடியிலிருந்து தப்பித்துக்கிட்டாய் றந்துடாதே.''

''கனவு காணாதே! அந்த மயிரிழை அதிர்ஷ்டத்தாலேயே உன்னை நிர்மூலமாக்கித் துரத்தித் துரத்தியடித்து சாகடிக்கிறேன்'' என்றான்.

அதே சமயத்தில் மஞ்சரி அறைக்குள் வந்தாள். தந்தையைப் பார்த்துவிட்டு— ''யாரோடப்பா பேசுகிறாய்? உன் மருமகனோடா?'' என்று கேட்டாள்.

''மூடு வாயை'' கத்தினான் பாலாஜி.

''அந்தப் போனை இப்படி கொடு டாடி'' விருட்டென்று ரிசீவரை அவன் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டாள் மஞ்சரி.

''ஹலோ டார்லிங் ஹௌ ஆர் யூ?''

''உங்களுக்கு ஒரு நல்ல சேதி சொல்லட்டுமா? நீங்க டாடியாகவும் நான் மம்மியாகவும் ஆகப்போறோம். பாவம் டாடிக்கு இன்னும் அவர் கிராண்ட் டாடியாகப் போறார்னு சொல்லலை.''

பாலாஜி திடுக்கிட்டான். சரேலென்று ரிசீவரைப் பிடுங்கி வைத்துவிட்டு—''சீ பாவி! வெட்கமில்லை?'' கத்தினான். மஞ்சரி சிரித்தாள்.

''வெட்கம் எதுக்கு டாடி? நாலுநாள் அவன் என்னை கிட்நாப் செய்து வெச்சிட்டிருந்தபோது உன்னால் ஒன்றுமே செய்ய முடியலை. இந்த நாலு நாள் ஒரு ஆணோடு சேர்ந்திருந்த பெண்ணுக்கு வயிற்றில் சுமை ஏறாமல் இருக்குமாங்கிறேன்? ப்சு! என்ன செய்வேன்? தமிழ்ப் பெண் நான். வயிற்று சுமையைத் தந்துட்ட அவனை விட்டுவிட்டு வேறு யாரை கல்யாணம் செய்துப்பேன் சொல்லு?'' பாலாஜியின் முதுகிற்குப் பின்னால் வந்து நின்றுகொண்டு அவள் அவன் தோளைத் தடவிக்கொண்டே கேட்டாள்.



''என் வயிற்றில், வந்து பிறந்து தொலைஞ்சாய்.''

''என்ன செய்வோம்? நானும் அதையேதான் நினைச்சுட்டிருந்தேன். பரிதாபம் இல்லையா டாடி?'?

''வா'' மகள் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக்கொண்டே வாசலை நோக்கி அழைத்துப் போனான் பாலாஜி.

''எங்கே?'' கையை உதறிக்கொண்டே கேட்டாள் மஞ்சரி.

''டாக்டரிடம். அபார்ஷன் செய்யச் சொல்றேன்''

''டாடீ, முதல் முதலாய் பிறக்கப்போற பேரனையோ அல்லது பேத்தியையே இப்படிக் கொன்று விடுவது தப்பில்லையா?'' தந்தையை ஒரு மாதிரியாய் பார்த்துக்கொண்டே கேட்டாள் மஞ்சரி.

''மூடு வாயை'' கத்தினான் பாலாஜி ஆவேசத்தோடு.

''நான் அபார்ஷன் செய்துக்க மாட்டேன். நான் குழந்தையைப் பெற்றே தீருவேன்''—தன் வார்த்தைகளைத் தந்தை எத்தனை முட்டாள்தனமாய் நம்பிவிட்டார் என்றுணர்ந்து, வந்த சிரிப்பை அடக்க முயன்றுகொண்டிருந்தாள் மஞ்சரி.

''முடியாது. அந்தப் பாவியின் ரத்தம் உன்னுள் உருவெடுக்கக்கூடாது.''

''நீ அபார்ஷன் பண்ணச் செய்தாலும் நான் திரும்பவும் உண்டாகி விடுவேன். என்னிஷ்டம்.''

''பப்பீ'' அவள் கன்னம் அதிரும்படியாய் அடித்தான் பாலாஜி.

''பாவி என்று நீ எளிதாய் எடுத்துச் சொல்லிவிட்ட அவன் பண்பைப் பற்றி உன் மகளுக்கு நன்றாய் தெரியும் டாடி. என் கண்ணோட்டத்தில் அவன் ஒரு உயர்ந்த சிகரத்தைப் போன்றவன். ஆனால் உன் விஷயத்தில்

மட்டும்... உன்னை நடுக்கடலுக்கு இழுத்து சென்று திமிங்கலத்தைப் போல உன்மீது பாய்ந்து சுபளீகரம் செய்து விடுவான். உன் மகள் உன்னைப்போல அல்ல. நீதி தவறாதவள். வழி தவறாதவள். ஞாபகம் வைத்துக் கொள். பை'' —என்று தந்தையின் கையை உதறித் தள்ளி விட்டு அங்கிருந்து வீடுவிடென்று போய்விட்டாள் மஞ்சரி.

பாலாஜியின் கண்கள் செக்கச்செவேல் என்று நெருப்பைக் கக்கத் தயாராயிருந்தன.

## 45

புடவைத் தலைப்பால் முக்காடிட்டுக் கொண்டிருந்த மேடம் ஜுவாலாதேவி மெல்ல அடியெடுத்து வைத்தபடி நடந்து வந்தாள்.

அவள் தன்னைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்த அடியாளான பி. ஜி. யை முக்காட்டிற்குள்ளிருந்தபடியே பார்த்தாள்.

அவன் முன்வந்து கதவைத் திறந்தான்.

அவள் வாசலில் வந்து நின்றபடியே அறைக்குள் பார்த்தாள். கட்டிலில் முனகிக்கொண்டே படுத்திருந்தான் ராஜன்.

அவள் மெதுவாய் கட்டிலை நோக்கி நடந்தாள். அவன் பாதி திறந்த கண்களுடன் அவளைப் பார்த்துக் கொண் டிருந்தான். சோர்ந்து போய் முனகிக் கொண்டிருந்தான் ராஜன்.

அவனைப் பார்த்ததுமே அவளுக்கு இதயத்தைப் பிசைந் தெடுத்தது. மெதுவாய்—மிக மெதுவாய் அவன் தலையில் கைவைத்துத் தடவினாள் ஜுவாலாதேவி.



ராஜன் அவள் இருந்த பக்கமாய் கூட பார்க்கவில்லை.

''பாவம், இரக்கமாய் இருக்கு மேடம். இவ்விளைஞனைப் பார்த்தால். இன்னும் அதிக நாள் பிழைத்திருக்க மாட்டான்னு டாக்டர் சொல்லிட்டார்—''பி. ஜி. மிக மெதுவாய் சொன்னான்.

அவள் அவன் வார்த்தைகளைக் கேட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ''எனக்குத் தெரியும்'' என்ற உணர்ச்சி அவள் முக்காடிட்டு கொண்டிருந்த போதிலும் அவள் திரும்பிப் பார்த்த விதத்திலிருந்தே பி. ஜிக்கும் புரிந்து விட்டது.

''ம...மரு...ந்து'' கிணற்றிற்குள்ளிருந்து வெளிவந்தாற் போல சோர்ந்துபோய் கேட்டது ராஜனின் குரல்.

''என்ன வேணும்?''

''ம...ம...ம...மரு...ந்...து''

''நீ யார்?'' கேட்டாள் அவள்.

''ரரர... ர... ர... ரா ராஜா... ஜ... ஜ... ன்... ன்....''

அவள் கண்களில் நீர் சுழன்றது.

அவனுக்குத் தன் பெயர் தெரிந்திருக்கிறது. பெயரை அரும்பாடுபட்டு சொல்கிறான்.

''பி ஜி'' கூப்பிட்டாள் ஜுவாலாதேவி.

''சொல்லுங்க மேடம்.''

''இவனுக்குச் சின்ன டோஸ் இஞ்ஜெக்ஷன் கொடு.''

அவன் கலக்கத்துடன் பார்த்தான்!

ராஜனுக்கு இஞ்ஜெக்ஷன் தந்தால், அவன் எதிர்க்கத் தொடங்கிவிட்டால் அவனை எதிர்த்து நின்று சமாளித்துக் கொள்வது கஷ்டம் என்பதை அவன் அறிவான். அவனிடம் ஏற்பட்ட பரபரப்பைப் பார்த்துவிட்டு அவள் கம்பீரமாய் சொன்னாள்.

''பரவாயில்லை பி. ஜி. ஒரு மில்லி டோஸ் கொடு'' உத்தரவிட்டாள் ஜுவாலாதேவி.

பி.ஜி. இரண்டே நிமிஷத்தில் மருந்துப் பையுடன் திரும்பி வந்தான்.

''என்னையே கொடுக்கச் சொல்றீங்களா மேடம்?''

''உம்'' என்றாள் அவள்.

பி.ஜி. சிரெஞ்சில் பெதடின் டோஸை எடுத்துக் கொண்டு ராஜனின் தோளில் இஞ்ஜெக்ஷன் போட்டான்.

இரண்டு நிமிஷம் அவனையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் ஜுவாலாதேவி.

''பி.ஜி. நீ போ'' என்றாள்.

''மேடம், இவன் ரொம்ப ஆபத்தான மனுஷன்'' கலவரத்துடன் சொன்னான் பி.ஜி.

அவள் லேசாய் சிரித்தாள்.

''எனக்கு பயம் இல்லை, நீ போ.''

பி.ஜி. போய்விட்டான்.

உண்மையில் அவனுக்குப் போக மனம் வரவில்லை. ஆனால் உத்தரவிற்குக் கட்டுப்பட்டுத் தீரவேண்டியிருந்தது.

அடுத்த இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு ராஜனின் உடம்பில் புதிய சக்தி தோன்றத் தொடங்கினாற்போல கட்டிலில் அசைந்தான.

அவள் முகத்தில் சந்தோஷம் தென்பட்டது.

''ராஜா'' மென்மையாய் அழைத்தாள் அவள்.

''உம்... எனக்கு இன்னும் டோஸ் வேணும்.''

''இன்னொரு டோஸ் உனக்குத் தந்தால்சொல்லும்பேச்சைக்கேட்கமாட்டாய் நீ. இங்கிருந்து ஓடிப் போயிடுவாய்.''

''ஊஹூம், போகமாட்டேன். நீங்க சொன்னபடி செய்கிறேன்.'



''நிஜமாகவா?''

''நிஜமாய்த் தான் சொல்றேன்.''

''ஓ.கே. தரேன். ஆனால் நீ நான் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லணும்.''

''கேளுங்கள்.''

''உனக்கு யாருமே கிடையாதா?''

''யாருமே கிடையாது'' சொன்னான் ராஜன்.

அவள் ஒருவினாடி கண்களை மூடிக்கொண்டாள். அவள் இதயத்தை முள்ளால் கீறினாற்போல ஏதோ உணர்ச்சி ஏற்பட்டது.

''இல்லைன்னு எப்படி சொல்கிறாய்?''

''எங்க அக்கா சாந்தா தற்கொலை செய்துகொண்டு விட்டாள். எங்க அண்ணனை ஜெயிலில் கொன்றுபோட்டுட்டாங்க.''

''ஜெயிலில் உங்கண்ணாவை கொன்றுபோட்டுட்டாங்களா?''

''ஆமாம்.''

''யார் சொன்னாங்க?''

''பாலாஜி.''

''நீ கண்களைத் திற.''

அவன் கண்களைத் திறக்கவில்லை. அப்படியே படுத்துக் கொண்டிருந்தான். உடம்பில் ஏற்பட்டுக் கொண்டிருந்த புது உணர்ச்சி அவனை அவ்வாறு படுத்துக்கொண்டிருக்கும்படி செய்தது.

''திறக்கமுடியாது. எனக்கு இந்த உலகத்தையே பார்க்கப் பிடிக்கவில்லை. எனக்கு செத்துப் போகணும் போலிருக்கு. எங்கண்ணாவைக் கொன்றுட்டாங்க. அக்கா தற்கொலை செய்துக்கிட்டா. நான் திக்கில்லாதவன்'. என்றான் தேம்பிக்கொண்டே.

''ராஜா.''

''............''

''எல்லாம் பொய். உங்கண்ணா சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறான். ஜெயிலிலிருந்து விடுதலையாயிட்டான். உன்னை விரோதிகளின் பிடியிலிருந்து மீட்டுக்கொண்டு வந்தவன் உங்கண்ணன்தான்.''

அவன் மெல்ல கண்களைத் திறந்தான்.

அவள் முக்காட்டை சரிசெய்து கொண்டாள்.

''எங்கண்ணா உயிரோடுதான் இருக்கிறானா?''

''ஆமாம்.''

அவன் எதையோ நினைவுபடுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தான்.

அவர்கள் சொல்லியிருந்தார்கள் அவனிடம்— ''உன் அண்ணன் செத்துவிட்டான். இவன் அயோக்கியன். உன்னை மோசம் செய்யத்தான் உன் அண்ணன் என்று சொல்லிக் கொள்கிறான். நம்பாதே. அவன்தான் உன்னை இப்படி செய்திட்டான்''— என்று.

''அப்படியென்றால் அவன்தானோ... அண்ணன்?'' வலியால் முனகிக்கொண்டே கேட்டான்.

''ஆமாம்.''

''பின்னே... பின்னே... நீங்கள் யார்?'' கேட்டான் ராஜன்.

''உன் அக்காவைப்போல வாழ்க்கையில் அடிபட்டு விட்ட ஒரு பெண்.''

''அக்கா'' அவன் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழத்தொடங்கினான்.

''ராஜா! உன் வாழ்க்கையை இப்படி செய்துவிட்டவங்க எனக்கும் விரோதிங்கதான். அவங்களைத் தோற்கடித்து, வதைத்து. மனநிம்மதியில்லாமல் செய்து ஒவ்வொரு



நிமிஷமும் நரகத்தை அனுபவிக்கும்படியாய் செய்து, அவங்களை நிர்மூலம் செய்வதற்கு ஒரு மகாசக்தியாய் அவதாரம் எடுத்திருக்கிற இந்த அக்காவின் பேச்சை நீ கேட்பாயா?'' கேட்டாள் அவள்.

''கேட்பேன்'' அவன் எழுந்து உட்கார்ந்துகொண்டான்''

ஜுவாலாதேவி மெதுவாய் அவன் தலையை மார்போடழுத்திக் கொண்டு நெற்றியில் முத்தமிட்டாள்.

ராஜனின் கன்னத்தில் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அறைக்கு வெளியே நின்றபடி உள்ளே எட்டிப் பார்த்த பி.ஜி. அவள் நடந்துகொண்ட விதத்தைப் பார்த்து வியப்படைந்தான்.

## 46

இரவு எட்டு மணி.

பாண்டுரங்கன் மோட்டார் சைக்கிளில் ஏறி அப்புவின் கெஸ்ட் ஹவுசிற்கு வந்து சேர்ந்தான்.

சரியாய் எட்டு மணிக்கு மஞ்சரி வருவதாய் சொல்லியிருந்தாள்.

உண்மையில் அவள் தந்த செய்தி மூலமாய்தான் ஹெராயினோடு கூட லாரிகளை எரித்து சாம்பலாக்கினான். அதற்குள் ஐம்பது லட்சம் ரூபாய்கள் நஷ்டமாகும்படி செய்துவிட்டிருந்தான் எதிரிகளை.

இதன்மூலம் பாலாஜியும் மதனும்கூட தன்மேல் எவ்வளவு எரிச்சலடைந்திருப்பார்கள் என்று நன்றாகவே தெரியும் அவனுக்கு.

பொருளாதார ரீதியாய் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அவர்கள் அவ்வளவாய் பாதிக்கப்படமாட்டார்கள். சரியாய் இந்தச் சமயத்தில் செய்யவேண்டியது ஒன்றுதான். மனத்தளவில் நன்றாய் வீழ்த்தவேண்டும். அதன்மூலம் அவர்கள் தத்தளித்துப் போகவேண்டும்.

பாலாஜிக்கு அவன் மகள் தன்னைக் காதலிப்பதாய் தெரிந்த பிறகு ஆத்திரத்தால் கொதித்துக் கொண்டிருப்பான். அதனால் தன்னை எப்படியாவது வளைத்துப் பிடித்து கொன்று போட்டு விடவும் முயன்று கொண்டிருப்பான். என்று தெரியும் பாண்டுரங்கனுக்கு ஆனால் அதற்குள் பாலாஜி தன்னைச் சுற்றிலும் வலை பின்னியிருந்த விஷயத்தை மட்டும் அவன் அறிந்திருக்கவில்லை.

ஊருக்கு ஒதுக்குப்புறமாய் அப்புவின் வீட்டில் தங்கியிருந்த தன் இருப்பிடத்தை பாலாஜி கண்டுபிடித்து விடுவான் என்று ஊகிக்காமல் போனதுதான் அவன் செய்த தப்பு.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு சுற்றிலும் பார்த்தான். எல்லாம் சாதாரணமாய்தான் இருந்தது. சந்தேகம் எதுவும் ஏற்படவில்லை. போர்டிகோவைத் தாண்டி படியேறி பூட்டைத் திறந்தான்.

உள்ளே ஹாலில்—

ரிவால்விங் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பீடாவை வாயிலிட்டுக் குழப்பிக் கொண்டிருந்தான் அஜய்... அவன் கையில் நீண்ட இரும்புத்தடி ஒன்று இருந்தது. பாண்டுரங்கன் விக்கித்துப்போய் விட்டான்— தன் இருப்பிடம் இவர்களுக்கு எப்படி தெரிந்தது என்று. ஒருக்கால் பத்மினி, அப்பு, சிம்மாத்ரி எல்லோரும் கூட இவர்கள் பிடியில் சிக்கிக் கொண்டிருப்பார்கள் என்று தோன்றிற்று பாண்டுரங்கனுக்கு.

அஜய் சிரித்தான். மலையிலிருந்து பாறாங்கல்லை உருட்டினாற் போலிருந்தது அச்சிரிப்பு சப்தம். அவனுக்கு உடம்பு சிலிர்த்தது.

''எனக்குத் தெரியும் பாண்டுரங்கா! நீ இங்கே வருவாய் என்று தெரிந்துதான் விருந்தாளியைப்போல காத்துட்டிருக்கிறேன்'' மூன்றடி நீளமுள்ள இரும்புதடியைச் சுழற்றிக் கொண்டே சொன்னான் அஜய்.

உள்ளேயிருந்த அறைக்குள்ளிருந்து நான்கு பயில் வான்கள் வந்து அஜய்க்குப் பக்கத்தில் நின்றுகொண் டார்கள். அவர்கள் எப்படி உள்ளே வந்தார்கள் என்று புரியாமல் யோசித்துக் கொண்டிருந்தான் பாண்டுரங்கன். அவன் யோசனைகளைப் படித்தறிந்து விட்டாற்போல சொன்னான் அஜய்.

''உனக்கு சந்தேகம் ஏற்படாதபடி பூட்டைத் திறக்கிற ஜோலிக்கெல்லாம் போகாமல் பின்பக்கத்து ஜன்னல் கம்பிகளைக் கத்தரித்துக் கொண்டு உள்ளே வந்தோம்''— பாண்டுரங்கன் கோபத்தோடு வெறித்தான் அவர்களை.

''அஜய்! உன்னை இதுவரைக்கும் இரண்டு தடவை விட்டுவிட்டேன். காரணம் மனித உயிரை எடுப்பது என் தொழில் இல்லை. இப்பொழுது எப்படி வந்தீங்களோ அப்படியே போய்விடுங்கள். இல்லாவிட்டால் உங்களை கொல்லத் தயங்கமாட்டேன் அஜய் கேலியாய் சிரித்தான்.

''நீ தயங்காமலிருக்கலாம். ஆனால் நாங்களும் சும்மா யிருக்க முடியாதல்லவா? ஒருமுறை பின்னால் திரும்பிப் பார். உனக்கே தெரியும்.''

பாண்டுரங்கன் மெதுவாய் கழுத்தைத் திருப்பிப் பார்த்தான். இரும்புச் சங்கிலிகளைப் பிடித்துக்கொண்டு ஐந்தாறு பேர்கள் நின்றுகொண்டிருந்தார்கள் பின்னால்.

தான் மிக முட்டாள்தனமாய் இவர்களிடம் சிக்கிக் கொண்டு விட்டோம் என்று புரிந்தது பாண்டுரங்கனுக்கு. அங்கிருந்து தப்பித்துப் போகக்கூடிய வழியை சுறுசுறுப்பாய் யோசிக்கத் தொடங்கினான்.

அவன் யோசனையைப் படித்தறிந்து விட்டவனாய் சரேலென்று நாற்காலியை விட்டு எழுந்தான் அஜய். ஒரு வினாடி தாமதித்தாலும் நிலைமை கைவிட்டுப் போய்விடும்.

உடனே அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுத் தப்பித்துக்கொண்டு விடவேண்டும். அல்லது போராட்டத்

திற்குத் தயாராக வேண்டும். ஏதோ ஒன்று செய்ய வேண்டும்.

வந்திருப்பவர்கள் லேசுப்பட்டவர்கள் இல்லை. வாடகைக் கொலையாளிகள். ஒருவர் இல்லை இருவர் இல்லை. பத்துப் பேர். அவர்கள் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. தானோ தனியன். ஆயுதம் இல்லாதவன். வேளை கெட்ட வேளையில் படையெடுத்து [illegible] பாண்டுரங்கன் நிமிர்ந்து நின்றான். சுற்றிலும் ஒருமுறை நோட்டமிட்டான்.

அஜய் பீடாவை மென்றுகொண்டே அவனை நோக்கி நெருங்கி வந்துகொண்டிருந்தான்.

ஒரு உதை விழுந்தாலும் போதும். எஞ்சியவர்களும் தனித்துப்போய் விடுவார்கள்.

அவ்வளவுதான்! அதற்குமேல் தாமதிக்கவில்லை அவன்.

''யா... ஹ... ஹா'' —பாண்டுரங்கன் காற்றில் பாயப் போனான். ஆனால் அதற்குள் தாமதமாகி விட்டது. அவன் மட்டும் அந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்திருந்தால் நான்கு பேரை ஒரே சமயத்தில் உதைத்துத் தள்ளியிருப்பான்.

பின்னால் நின்றுகொண்டிருந்த ஜக்கு இரும்புக்கழியால் ஓங்கி அடித்தான். 'பட்'டென்ற சப்தம் கேட்டது.

பாண்டுரங்கனின் தலை கிர்ரென்றது. சிவப்பாய் முகத்தில் வழியத் தொடங்கிற்று. கைகளால் தலையைப் பிடித்துக்கொண்டே தரையில் சரிந்தான் அவன். ஜக்கு ஓங்கி அடித்தான். அந்த உதைக்கு அறையின் மூலையை நோக்கி உருண்டுக்கொண்டே போனான் பாண்டுரங்கன்.

அஜய் ஓடிவந்து கயிற்றால் அவன் கைகளைப் பின்னுக்கு சேர்த்து கட்டிப்போட்டான். அப்படிப்பட்ட நிலைமையிலும்கூட பாண்டுரங்கன் மூடிக்கொண்டே போன தன்



கண்களை அரும்பாடுபட்டுத் திறந்து அஜய்யைக் காலால் உதைக்கப் போனான். ஆனால் அவனுக்கு அந்த அவகாசத்தைத் தரவில்லை அஜய். முழங்காலால் வயிற்றில் உதைத்தான். வலியால் துடித்துடித்தான் பாண்டுரங்கன்!

இனி அவர்களை எதிர்த்து நின்று பிரயோஜனமில்லை என்று உணர்ந்தான்.

தன்னை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுபவர்கள் இல்லை அங்கே. என்ன நடந்தாலும் துணிச்சலோடு தாங்குவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது அவனுக்கு. முடிந்துவிட்டது. பிடிப்பட்டுப் போய்விட்டான் அவன்.

பாலாஜி மதன் இருவரையும் பழிவாங்கிக் கொள்ளாமலேயே செத்துக் கொண்டிருக்கிறான் அவன்.

அவனுக்கு என்றுமில்லாத வேதனை ஏற்பட்டது.

அஜய் அவன் முகத்தில் பூட்ஸ் காலால் உதைத்தான்.

ஏண்டா முட்டாளே, பணத்தை எங்கே ஒளித்து வைத்தாயடா? சொல்லு. இல்லாவிட்டால் செத்தொழிவாய்.''

''நான் சொல்லமுடியாது.''

''என்னது, சொல்லமாட்டாயா?''

''சொல்ல முடியாது. அதுமட்டுமில்லை. உங்கள் பாஸ் இருவரையும் கட்டிப்போட்டு நடு சமுத்திரத்திற்குள் பிடித்து தள்ளாமல் நான் சாகமாட்டேன்.''

அஜய் மூச்சிரைக்கப் பார்த்தான்.

பாண்டுரங்கனின் வயிற்றில் ஓர் உதைவிட்டான். கத்த வாயைத் திறந்தான் பாண்டுரங்கன். ஆனால் வாயைத் திறக்க முடியவில்லை அவனால். அவன் மனம் ஆத்திரமடைந்து கொண்டிருந்தது.

"சொல்லுடா! பணத்தைக் கறந்துக்கிட்டு நாகராஜன் சாரைக் கொன்றது போதாதுன்னு லாரிங்களைக் கூட கொளுத்தி சாம்பலாக்கினாயோ?'' என்று டெலிபோன் ரிசீவரைக் கையிலெடுத்து கொண்டு ஒரு நம்பரைச் சுழற்றினான்.

அவன் பாலாஜிக்குத் தான் போன் செய்கிறான் என்று பாண்டுரங்கனுக்குத் தெரியும்.

"பாஸ், நான் அஜய் பேசுகிறேன். பாண்டுரங்கனைப் பிடிச்சுட்டோம். இப்ப நம்ப கட்டுக்காவலில் தான் இருக்கிறான்.

"..........''

இரண்டு நிமிஷங்கழித்து போனை வைத்துவிட்டு அஜய் திரும்பினான்.

பசியோடிருக்கும் புலியைப்போல பாண்டுரங்கனைப் பார்த்தான் அவன்.

பாலாஜி தன்னைக் கொன்று போட்டுவிட சொல்லி யிருப்பான் என்று ஊகித்துக்கொண்டான் பாண்டுரங்கன். தன் ஆதரவில்லாத நிலைமைக்கு பாரமாய் மூச்சுவிட்டபடி கண்களை மூடிக்கொண்டான் பாண்டுரங்கன்.

அஜய் அவன் தொடைமேல் ஏறி நின்றுகொண்டான். பூட்ஸ் காலால் துவம்ஸம் செய்துகொண்டிருந்தான். வலியைப் பற்களை கடித்துப் பொறுத்துக்கொண்டே கொஞ்சம் ஒரு பக்கமாய் நகர்ந்துகொண்டான் பாண்டு ரங்கன்.

அதனால் அஜய் பாலன்ஸ் தவறிவிட்டது.

அவ்வளவுதான்! அச்சொற்ப அவகாசத்தை நழுவ விடவில்லை பாண்டுரங்கன்.

உடம்பை தன் சுவாதீனத்திற்கு வரவழைத்துக்கொண்டு காலால் ஒரு தள்ளு தள்ளினான் அஜய் இடுப்பின் மீது. அவன் வீலென்று அலறிவிட்டான்.



இடுப்பு முறிந்து உடம்பிலிருந்து சிறுநீரகம் நழுவி விழுந்து விட்டாற்போல தோன்றவே குப்புற விழுந்தான். அதனால் வாயில் அடிப்பட்டு இரண்டு பற்கள் உடைந்து கீழே விழுந்து ரத்தம் வழியத் தொடங்கிற்று.

"உய்'' என்று கீழேயிருந்து எழுந்திருக்க முயன்றான் அஜய்.

"அடேய் அதமர்களே! உங்களுள் எவனாவது ஆம்பிள்ளையாய் இருந்தால் என் கைக் கட்டுக்களை அவிழ்த்து விடுங்கடா. புலியைக் கூண்டில் போட்டுவிட்டு வெளியேயிருந்து அழகு பார்க்கிறது இல்லைடா! ஒவ்வொருத்தனின் எலும்பையும் பதம்பார்த்து பார்ஸல் கட்டித் தந்துடறேன்டா'' கத்தினான். அவன் ஆவேசம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

"அவ்வளவு பெரிய ஆம்பிள்ளையாடா நீ?'' ஜக்கு உள்ளங்கையை மடக்கிக்கொண்டு ஓங்கிக் குத்தினான் அவன் முகத்தில். பாண்டுரங்கனின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.

"எங்க பாஸ் வந்துட்டிருக்கார் உன்னை வெட்டிப் போட்டு விடுவார் இரு'' கத்தினான் ஜக்கு.

"என்னைத்தான் அவன் வெட்டிப் போடுவானோ, அல்லது நான்தான் அவன் குடலைக் குதறி எடுப்பேனோ பார்த்துட்டிருங்க''

அவன் என்ன தைரியத்தில் இவ்வாறு பேசுகிறான் என்று புரியாமல் கொஞ்சம் கலவரமடைந்தார்கள் அவர்கள்.

அவர்களைப் பேச்சில் இழுத்துக் காலத்தை வீணாக்க வேண்டும் என்பதுதான் அவன் எண்ணமே தவிர அவர்க

ளிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை மட்டும் இல்லை அவனுக்கு.

மஞ்சரி வருவாள். இங்கே தான் சிக்குண்ட விஷயத்தைப் பார்த்துவிட்டு ஏதாவது செய்து தன்னை விடுவித்து விடுவாள். அந்த யோசனையுடன் தான் தைரியமாய் பேசிக் கொண்டிருந்தான் அவன்.

அவன் நினைத்தாற் போலவே மஞ்சரி வந்து அங்கிருந்த பால்கனியில் நின்றவாறே நடந்து கொண்டிருந்ததையெல்லாம் கண்ணாரப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அஜய் தன் தந்தைக்குப் போன் செய்தபோது மாடியிலிருந்த எக்ஸ்டென்ஷன் போனில் அப்பேச்சைக் கேட்டாள்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் பாலாஜியும் மதனும் அங்கே வந்துவிடுவார்கள்.

அதனால்தான் அவள் வெளியே வரவில்லை—அவர்கள் தன்னை கவனிக்காமலிருக்க வேண்டும் என்ற உத்தேசம் அவளுக்கு.

முதலில் அவ்விடத்திற்கு அவள் வந்து சேர்ந்தபொழுது அவளுக்கு தன் தந்தையின் கும்பலைச்சேர்ந்த வேன் அங்கே நின்றுகொண்டிருந்தது கண்ணில் பட்டது.

பாண்டுரங்கன் தங்கியிருந்த இடத்தில் அந்த வேனைக் கண்ட அவள் இதயத்தில் பகீரென்றது. நடக்கக் கூடாதது ஏதோ நடந்து கொண்டிருக்கிறது என்று பீதியதை எடை போட்டது அவள் மனம்.

தன் காரை சாலையில் ஒரு மரத்திற்குப் பின்னால் நிறுத்தி வைத்துவிட்டு கால்நடையாய் யாரும் பார்க்காதவாறு சுவரேறிக் குதித்து உள்ளே வந்தாள். போர்டிகோ பக்கமாய் வராமல் காம்பவுண்டுச் சுவர் பக்கமாய் இருந்த செடி மறைவிலிருந்து அந்த பங்களாவின் பின்பாகத்திற்கு வந்து உள்ளே நுழைய வேண்டும்.

ஒரு வினாடி யோசித்து விட்டு வீட்டிற்கு பின்பக்கமாய் இருந்த தண்ணீர்க் குழாயைப் பிடித்துக்கொண்டு மேலே தாவினாள் மஞ்சரி.



சமயத்தில் தான் பேண்ட்டும் ஷர்ட்டும் போட்டுக் கொண்டு வந்திருந்தது எவ்வளவு நல்லதாய் போயிற்று என்றெண்ணிக் கொண்டாள். பின்பக்கத்திலிருந்த பால்கனிக்கு வந்து சேர்ந்தாள்.

ஒரு அறையின் ஜன்னல் கம்பிகள் பெயர்த்தெடுக்கப்பட்டிருந்தது. அதற்குள் நுழைந்து பால்கனியின் முன்பாகத்திற்கு வந்தாள் மஞ்சரி.

அந்த இடத்தைத் தன் தந்தையின் ஆட்கள் எப்படித்தான் கண்டுபிடித்தார்களோ ஆச்சரியமாய் இருந்தது அவளுக்கு. தன் கண்களுக்கு முன்னாடியே அவனை அவர்கள் அவ்வாறு துன்புறுத்தியதைக் காண சகிக்க முடியாமல் போயிற்று.

அவள் இதயம் எரிமலையாய் பற்றி எரியத் தொடங்கிற்று. தன் மனதைக் கவர்ந்தவன்—தன் உயிருக்குயிரானவன் அவன். வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் காதலன். தற்சமயம் மரணத்தின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கிறான். அவனை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாத பரிதாபமான நிலைமை. அவள் தத்தளித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு பகீரென்றது. தன் மூலமாய்தான் அவர்களுக்கு அவன் இருக்குமிடம் தெரிந்து போய்விட்டதோ என்ற சந்தேகம்—என்ன செய்யலாம்? என்ன செய்ய முடியும் அவளால்? பாலாஜியின் மகளாய் எதிரே போய் நின்று அவனை விடுவிக்கும் நிலையில் இல்லை அவள் அவள் பேச்சை அவர்கள் கேட்கமாட்டார்கள். அவளையும் சிறைபிடித்து விடுவார்கள். நிலைமை கையைத் தாண்டி போய்விட்டது. அவள் இதயம் வேகமாய் படபடத்தது. பாண்டுரங்கனை இம்சித்துக் கொண்டிருந்த ஜக்குவையும் அஜய்யையும் சுட்டுத்தள்ளிவிட வேண்டும் போலிருந்தது.

போர்டிகோவிற்கருகில் ஏதோ கார் வந்து நின்ற சப்தம் கேட்டது. சரேலென்று அறைக்குள் நுழைந்து

ஜன்னல் வழியாய் வெளியே எட்டிப் பார்த்தாள். தன் தந்தையும் மதனும்...மரணதேவன் நடந்து வந்து கொண்டிருந்தாற்போல உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன செய்வார்களோ? அவனைக் கொன்று விடுவார்களோ? அப்படி நடந்தால் தானும் அவனோடு சேர்ந்து மரணமடைந்துவிடவேண்டும். அவளுக்கு அழுகை வந்தது. சுயநலத்தால் கண்களை மூடிக்கொண்டு குற்றங்களையும் அக்கிரமங்களையும் செய்துகொண்டே ஒரு நல்ல மனிதனை ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறார்கள்? சட்டம் என்ன செய்து கொண்டிருக்கிறது? நீதிதேவதை கண் திறந்து பார்க்கக்கூடாதா? சாட்சிகளுக்கு மட்டுமே முக்கியத்துவத்தைக் கொடுக்கிற நீதிதேவதைக்கு எப்பொழுது கண் வரும்?

ஒரு வினாடி கண்களை மூடிக் கொண்டாள் மஞ்சரி. குறும்புத்தனத்தோடும், வேகமாய் ஓடும் அருவி நீரைப் போல எப்பொழுதும் சலசலத்துக் கொண்டிருக்கும் மஞ்சரி சலனமில்லாமல் மாறிவிட்டாள். ஏதோ உணர்ச்சி அவள் ரத்த ஓட்டத்தைக் குறைத்துக் கொண்டிருந்தது.

தரையில் புலியைப் போல கட்டிப் போடப்பட்டிருந்த பாண்டுரங்களைப் பார்த்து பாலாஜியும் மதனும் பக்கென்று சிரித்தார்கள்.

"இளம் ரத்தம்! இப்பத் தெரிஞ்சுதா நாங்க யாருன்னு!" கேட்டான் பாலாஜி.

"ஊ" இப்பொழுது இல்லைடா அயோக்கியனே! உங்கள் திருட்டுச் சரித்திரங்களையெல்லாம் பத்து வருஷங்களுக்கு முன்னாடியே தெரிஞ்சுக் கிட்டவன் நான். இப்ப உங்கள் மார்பில் கத்தியைக் குத்தத் தயாராயிருக்கிற பாண்டுரங்கன் நான். என்னைக் கட்டிப் போட்டாலும் கடைசியில் என் உயிரை எடுத்தாலும் சரி. திரும்பத் திரும்ப பிறவியெடுத்து வருவேன். உங்கள் தலைகள் தரையில் உருண்டு விழுகிறவரைக்கும் பிறந்துட்டேயிருப்பேன்."



"அடடா, பாவம்! இப்ப நீ சாகப் போறது உனக்குத் தெரிஞ்சுப் போயிடுத்து போலும். என்ன செய்வோம், சொல்லு. உன்னை உயிரோடு விட்டால் எங்களை உயிரோடு விடமாட்டாய். நாங்கள் இந்த ஊரிலும் இந்த நாட்டிலும் எத்தனையோ பேரைக் காப்பாற்றணுமாதலால் நாங்கள் உயிரோடு வாழவேண்டியது மிக அவசியம். அதற்காக உன்னை கொன்று தீரவேண்டியதுதான். பாவம் திரும்பவும் பிறவி எடுத்து எங்களை பழிதீர்த்துக்கணுமானால் எந்தத் தாயாவது புருஷனோடு குடும்பம் நடத்தி உன்னை வயிற்றில் சுமந்து ஒன்பது மாதங்கள் பாரத்தைத் தாங்கிக்கொண்டிருந்து பெற்றுத் தீரணும். நீ வளரணும். இதெல்லாம் நடந்தேற குறைந்தபட்சம் இருபது வருஷமாவது ஆகும். அதோடு அப்ப உனக்குப் போன ஜென்மத்தைப்பற்றி ஞாபகம் இருக்கணுமே"— ஏளனமாய் சொன்னான் மதன்.

அங்கிருந்தவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

பாண்டுரங்கனிடம் வந்து முழங்காலிட்டு அமர்ந்து கொண்டு அவன் கேசத்தை பற்றி இழுத்தான் பாலாஜி. தலையில் காயம் பட்ட இடத்திலிருந்து விண்விண்ணென்று தெறித்தெடுத்தது வலி. தலையை ஆயிரம் சம்மட்டிகளால் பிளந்தாற்போலிருந்தது.

"ஏண்டா, நாகராஜனை மோசம்செய்து பணத்தை சுருட்டிக்கொண்டாயோ? அந்தப்பணம் எங்கே இருக்கு?"

"உங்கள் கைக்கு அகப்படாத தூரத்தில்."

சிகரெட்டைப் பற்றவைத்து அவன் காலுக்கு கீழே சுட்டான். வலியைப் பற்களைக் கடித்துக்கொண்டே பொறுத்துக் கொண்டான் பாண்டுரங்கன்.

"நல்ல சாகஸக்காரன் தான்! அடேய் பாண்டு.... எவ்வளவோ கஷ்டப்பட்டு சரக்கை இறக்குமதி செய்தோம் நாங்க. அதை மாயம் செய்திட்டாய். வெளிநாட்டுக்காரங்க

முன்னால் எங்க மானம், மரியாதையெல்லாம் போயிடுத்து. ஆனாலும் உன்னை அந்த விஷயத்தில் மன்னித்து விட்டு விடுகிறேன். பணத்தைக் கொடுத்து விடு''

''கை மாறிவிட்டால் லட்சுமிதேவி அக்கைக்குத் திரும்பி வரமாட்டாள்.''

''அப்படீன்னால் உன்னை யாராலும் காப்பாற்ற முடியாது.''

அத்தனை வலியிலும் சிரித்தான் பாண்டுரங்கன்.

''நான் உங்களைப் போல முட்டாள் இல்லைடா. பணத்தைத் தந்துவிட்டால் போதும். அப்புறமாய் என்னை உயிரோடு விடமாட்டீங்கன்னு எனக்கா தெரியாதுன்னு நினைச்சிங்க? இப்படி உதைத்து தோள்வலியை வரவழைத்துக்காதீங்க. கொள்ளிக்கட்டையால் தலையை சொரிந்துக்கிட்டு நெருப்பு என்ன பண்ணிடும் என்னை என்று விவேகமில்லாமல் நடந்துக்காதீங்க. உங்களைக் கப்பரையும் கையுமாய் நடுத்தெருவுக்கு வந்து பைத்தியங்களாய் அலைய வைத்துக் கொல்றேன் பார்த்துட்டிருங்க.''

''இன்னும் கனவு காணாதே.''

''கனவில்லை முட்டாளே, நடக்கப் போவதைப் பற்றிச் சொல்கிறேன். நாராஜ் உங்களை மோசம் பண்ணி வைரங்களைத் தட்டிக் கொள்ள பார்த்து பரலோகத்திற்குப் போய்ச் சேர்ந்தான். பிறகு இந்த நாட்டின் எதிர்காலத்தை உங்கள் கள்ள வியாபாரத்திற்கு அடமானம் வைக்கப் போனதற்கு லாரிகளை எரித்தேன். மட்டச் சரக்கு மருந்துகளைத் தயாரித்து ஜனங்களின் உயிரோடு விளையாடியதற்கு உங்களுக்குப் பாடம் கற்பிக்க விரும்பி உன் ஃபேக்டரியை குண்டு வைத்துத் தகர்த்துவிட்டேன்.''

''வெரி குட்! உன் தேசபக்திக்கு மகிழ்ந்து போய் விட்டேன். என் மகளை வலையில் போட்டுக்கொண்டதற்கு மட்டும் உன்னை என்னால் மன்னிக்க முடியாது.''



''உன்மகளை நான்வலையில் போட்டுக் கொள்ளவில்லை உன்னைப்போன்ற கரையானின் வயிற்றில் பிறந்த விலை மதிப்பிடமுடியாத ரத்தினம்டா மஞ்சரி! அவளுடைய நல்ல குணந்தான் உன்னை இன்னும் இந்தப் பூமியில் வாழ்ந்துட்டிருக்கும்படி செய்கிறது. இத்தனை நாளாய் காலைக்கழுவி கன்யாதானம் செய்யவேண்டியவனாச் சேன்னு உன்னை விட்டுவைத்திருந்தேன்'' —என்று சொல்லிவிட்டு கடைசியாய் ஒரு வார்த்தையை எடுத்து வீசினான் பாண்டுரங்கன்— ''உனக்கு தெரியுமில்லையா உன் மகள் கர்ப்பவதி!''

''ஷட் அப். எனக்கு அந்தமாதிரிய சென்ட்டிமென்டுகள் எதுவும் கிடையாது. எவனோ ரோடோடு போறவன் மூலமாய் கர்ப்பம் தரித்துவிட்டதற்காக ஒன்பது மாதங்கள் அதை வயிற்றில் சுமந்துட்டிருந்து பெற்றெடுக்கச் சொல்லிடுவேன்னு நினைச்சுட்டாயா? அவ்வளவு முட்டாள் இல்லை இந்த பாலாஜி! உன் காலைக் கழுவமாட்டான்டா இவன். உன்னை அப்படியே தூக்கித் தண்ணீரில் மூழ்கடித்து விடுவான்'' —என்று உள்ளங்கைகளை மடக்கிக்கொண்டு பாண்டுரங்கன் முகத்தில் ஓங்கிக் குத்தினான் பாலாஜி.

ஆயாசத்தால் மூச்சிரைத்தது பாண்டுரங்கனுக்கு. அவன் முகம் ரத்தத்தால் முக்கி எடுத்த சிவனின் நெற்றிக் கண்ணைப் போலிருந்தது.

அக்காட்சியைக் கண்ட மஞ்சரியின் இதயத்தில் உத்வேகமும் துடிதுடிப்பும் ஏற்பட்டது. அவள் கண்களில் நீர் நிரம்பிற்று... கையில் துப்பாக்கி இருந்தது. பெற்ற தந்தை என்ற பாசம்கூட இல்லாமல் சுட்டுத் தள்ளிவிடுவாள் அவள். தன் விஷயத்தில் பெற்ற தந்தையான அவருக்கு எந்த விதமான சென்ட்டிமென்ட்டும் கிடையாது என்று அவர் வாயிலிருந்தே கேட்ட பிறகு அவர் தன் தந்தையே இல்லை என்றெண்ணிக் கொண்டுவிட்டாள்.

''பாலாஜி, இவனுக்கு சாகறத்துக்கு முன்னாடி நம் எதிர்கால திட்டங்களைப் பற்றி சொல்லிவிடுவது நம் கடமை இல்லையா?''

மதன், பூட்ஸ் காலை பாண்டுரங்கனின் மார்பில் வைத்து அழுத்தினான்.

"அடேய், உன் உயிர் இன்னும் கொஞ்ச நேரத்தில் காற்றில் கலந்து போய்விடப்போகிறது. அதற்கு பிறகு இவ்வளவு நாளாய் இப்படி கண்ணில் மண்ணை தூவிவிட்டு உனக்கு உளவாளியாய் வேலை செய்திட்டிருந்த இந்த கெஸ்ட் ஹவுசிற்கு சொந்தமான ஆள் அப்புவை மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல நசுக்கிவிடுவோம். உன்னை காதலித்து உன்னை ஒரு ஆயுதமாய் பயன்படுத்திக்கொண்டிருக்கிற சகுந்தலாவின் மகள் பத்மினியை நாங்கள் அனுபவித்துவிட்டு அவளை உன்னிடம் அனுப்புவோம் உனக்கு துணையாய் இருக்கட்டும் என்று. உனக்கு வலது கையான சிம்மாத்ரியை ரயில் பாலத்தில் படுக்கவைத்து அவன் உடல் கண்டந்துண்டமாய் ஆக செய்வோம். அவங்க மூணு பேரும் இப்பொழுது என் விருந்தாளியாய் இருக்காங்க. தெரியுமா?"

பாண்டுரங்கன் ஊகித்தாற்போலவே நடந்துவிட்டது அப்பு, பத்மினி, சிம்மாத்ரி மூவரும் ஆபத்தில் இருக்கிறார்கள். இப்பொழுது அவனுக்கு தன்னை இவர்கள் கொல்லப் போகிறார்களே என்ற வருத்தம், பயம்கூட இல்லை. ஆனால் தனக்காக அவர்கள் மரண வலையில் சிக்கிகொண்டு விட்டார்களே என்ற கவலைதான் அதிகமாகி விட்டது.

சரியாய் அப்பொழுதுதான் அவன் பார்த்தான்—பால்கனியில் தூணுக்கு மறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்த இரு கண்களை. அக்கண்களைப் பார்த்ததுமே அவனுக்கு அடையாளம் தெரிந்துவிட்டது. நூற்றுக் கணக்கான பேர்களுக்கு நடுவே பார்த்தாலும் தன்னை பக்தியோடு பார்க்கும் அக்கண்களை அவனால் அடையாளம் கண்டுபிடித்துவிட முடியும். அவன் இதுவரை யாருக்காகத் தவித்துக் கொண்டிருந்தானோ அவள் வந்துவிட்டாள். மஞ்சரி! அவள் அங்கே நடந்துகொண்டிருந்தவைகளைக் கண்ணாரப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் சும்மாயிருக்க மாட்டாள். ஏதோ ஒரு முயற்சியை செய்து தீருவாள். நடுக்கடலில் புயலில் சிக்கிக்கொண்டவனுக்கு வாழ்க்கை மேல் நம்பிக்கை ஏற்படும்படி செய்துவிடும், பற்றி கொள்வதற்கு ஒரு சின்ன துரும்பு கிடைத்தாலும்—



அந்தவிதமாய் அவளைப் பார்த்ததும் தான் விஷ வலையத்திற்குள் சிக்கிக்கொண்டிருந்ததைக் கூட மறந்து விட்டான்.

அவளுக்கு குறிப்பு தருவதுபோல பாலாஜிக்குத் தெரியாமல் உரக்கச் சொன்னான் அவன்—

"கிழித்தாய். நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் தினகர் கவனிச்சிட்டேயிருப்பான்... அவனுக்குத் தெரிந்துவிட்டால் அடுத்த நிமிஷமே பிரளய கால ருத்திரனாய் வந்து உங்களை நிர்மூலமாக்கி விடுவான்."

"அவன் குஞ்சுப் பறவை. அவனால் என்ன செய்துவிட முடியும்?"

"அவன் தந்தை கிருஷ்ணமூர்த்திக்கு உங்கள், லீலை எல்லாம் தெரியும். அவர் உங்களை விடமாட்டார்."

"ரொம்ப நம்பிட்டிருக்கிறாய் பாவம். மகன் செத்ததும் அழுதுட்டு உட்கார்ந்திருப்பாரே தவிர கோர்ட்டுக்கு வந்து பேச அவருக்கு அவகாசம் கொடுக்க மாட்டோம்."

"இப்படி ஜம்பம் பேசிட்டால் போதாது பாலாஜி. உங்கள் கொட்டத்தை அடக்க ஒரு மகாசக்தி தோன்றியிருக்கிற விஷயம் உங்களுக்குத் தெரியாமல் போனதற்கு வருந்துகிறேன்."

"அதென்ன சக்தி?"

"மேடம் ஜுவாலாதேவி" என்றான் பாண்டுரங்கன்.

அவன் வார்த்தைகளைக் கேட்டு பாலாஜியும் மதனும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டார்கள். "இனி பேச்சுத் தேவையில்லை. இவனைத் தூக்

இட்டுப் போய் ஏரியில் தள்ளிட்டு வாங்க'' பாலாஜி கத்தினான். மஞ்சரியின் இதயம் தடதடத்தது.

பாண்டுரங்கனைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். இனி நேரம் இல்லை. உடனே இந்த விஷயத்தை தினகருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவன்தான் பாண்டுரங்கனைக் காப்பாற்ற வேண்டும். வேறு வழியில்லை. அவள் படபடக்கும் இதயத்துடன் டெலிபோனை நோக்கி ஓட்டமாய் ஓடி ஒரு நம்பரை டயல் செய்தாள்.

வெளியே கார்கள் புறப்பட்ட சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது

''ஹலோ... ஹலோ'' கத்திக் கொண்டேயிருந்தாள் மஞ்சரி.

## 47

மூன்று நிமிஷங்கள் கழிந்தன. மூச்சு விடவும் முடியாதபடி திணறிக்கொண்டே தினகருக்குச் சொல்லவேண்டிய விஷயத்தைச் சொல்லி விட்டாள்.

நான்கு நிமிஷத்தில் அவர்கள் எவ்வளவு தூரம் போயிருப்பார்கள் என்பதை ஊகித்துப் பார்த்துக் கொண்டாள் மஞ்சரி. ஏற்கனவே இரவு நேரம். அதோடு நேஷனல் ஹைவேயாய் இருந்ததால் வாகனங்கள் வேகமாய் போய்க்கொண்டிருந்தன. ஒரு வினாடி தாமதித்தாலும் நிலைமை மோசமாகிவிடும் என்றறிவாள் மஞ்சரி. பால்கனியிலிருந்து கீழே வந்தாள். அவள் மனம் பாம்பு சீறினாற் போல புஸ்புஸ்ஸென்று சீறிக் கொண்டேயிருந்தது.

அவர்களைப் பின் தொடர்ந்து சென்று தன் மனங் கவர்ந்தவனைப் காப்பாற்றிக் கொண்டுவிட வேண்டும் என்பதுதான் அவளுடைய ஒரே லட்சியமாய் இருந்தது.



வேகமாய் வெளியே ஓடிவந்து காரின் கதவை விருட்டென்று திறந்து ஏறிக்கொண்டு ஸ்டார்ட் செய்தாள். திடுக்கிட்டாள். கார் டயர் பஞ்சராகி விட்டிருந்தது.

அவள் மனம் தத்தளித்தது. தனக்கு சகலமும் அவனே என்று பாவித்தாள் அவள். இப்பொழுது அவனைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போனால் தன் வாழ்க்கைக்கே அர்த்தமில்லை என்று தோன்றிற்று. அவளையறியாமல் அழுகை வரத் தொடங்கிற்று. சிறுபெண்ணைப் போல முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள் மஞ்சரி.

அச்சமயத்தில் அவளுக்கு வேறொன்றுமே தோன்றவில்லை. விவரம் தெரிந்த பிறகு அவள் அழுதது இதுதான் முதல் தடவை. இதற்குள் பாண்டுரங்கனை ஏற்றிச் சென்ற வேன் ஆறு அல்லது ஏழு கிலோ மீட்டர் தூரம் போய் விட்டிருக்கும். இரவு பதினோறு மணியைத் தாண்டி விட்டது. அச்சமயத்தில் போக்குவரத்துக்கூட அதிகமாய் இராது.

அந்த ஆளரவமில்லாத பகுதியில் தனியாய் எஞ்சி நின்ற அவளுக்கு ரோடில் இறங்கி நடந்து ஓடிப்போய்விட வேண்டும் போலிருந்தது. அது நடக்காத காரியம் என்றும் அதனால் பாண்டுரங்கனைக் காப்பாற்றிவிட முடியாது என்றும் அவளுக்குத் தெரியும்.

சட்டென்று அவளுக்கு ஞாபகத்திற்கு வரத் தொடங்கிற்று. அவ்வளவுதான். சற்றும் தாமதிக்காமல் கெஸ்ட் ஹவுஸ் காம்பவுண்டு கேட்டைத் திறந்துக்கொண்டு உள்ளே ஓடினாள். அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மேல் தாவி உட்கார்ந்தாள். அடுத்த நிமிஷம் அது ஸ்டார்ட் ஆயிற்று. கேட்டைத் தாண்டி வெளியேறி, இடதுபக்கமாய் திரும்பி, மெயின் ரோடிற்கு வந்து சேர்ந்தாள். டாப் கியருக்கு மாற்றினாள். மோட்டார் சைக்கிள் சாலைக்கு இரண்டங்குலம் உயரத்தில் பிரயாணம் செய்யத் தொடங்கிற்று. அந்த வேகம்கூட போதவில்லை அவளுக்கு.

கத்திரித்து விட்டுக் கொண்டிருந்த பாப் கேசங்கள் காற்றிற்கு விர்ரென்று பறந்தன. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. ஆனாலும் மிக அலட்சியமாய் ஓட்டிக் கொண்டிருந்தாள். எதிரே வந்து கொண்டிருந்த பஸ்ஸுகளையோ லாரிகளையோ பொருட்படுத்தவில்லை. அவள் பார்வையில் வேறெந்த வாகனமும் தென்படவில்லை. ஆக்ஸிலேட்டரை முற்றிலுமாய் திருப்பி விட்டாள். ஒப்ளிங்கால் கைப்பிடி நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனாலும் அதே வேகத்தில் தொடர்ந்து கொண்டிருந்தாள் மஞ்சரி.

சாலை இருட்டாய் இருந்தது. அவ்வளவு வேகமாய் போனதால் ஹெட் லைட்டிலிருந்து வந்துபட்ட வெளிச்சம் கூட போதவில்லை. ஆனாலும் அவள் பயப்படவில்லை.

அவள் லட்சியம் ஒன்றுதான். அந்த லட்சியத்தை நிறைவேற்றி கொள்வதற்காக எப்படிப்பட்ட ஆபத்தையும் எதிர்ந்து நிற்கத் துணிந்துவிட்டாள் அவள். ஏழு நிமிஷங்களில் பத்து கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்துவிட்டாள் அவள்.

அவளுக்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்னால் அவர்கள் புறப்பட்டிருந்தார்கள். இதே வேகத்தில் போனால் இன்னும் நான்கு நிமிஷத்திற்குள் பாண்டுரங்கனை ஏற்றிச் சென்ற வாகனத்தைப் பிடித்து விடுவாள். இன்னும் நகரத்திற்குள் நுழைந்திருக்காது என்று மட்டும் நம்பினாள். அச்சின்ன நம்பிக்கையால் அவள் மனம் கொஞ்சம் இலேசாயிற்று.

அவள் ஓட்டிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் வேகத்தைவிட அவள் யோசனைகள் இன்னும் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தன. நகரத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்துவிட்டாள். குளிர் காற்று உடலை வாட்டிக் கொண்டிருந்தது.

தொலைவில் ஒரு பர்லாங் தூரத்தில் இரண்டு கார்கள் போய்க் கொண்டிருந்தன. பின்னால் சிவப்பு விளக்கு



எரிந்துக் கொண்டிருந்தன. மஞ்சரி பாரமாய் பெருமூச்சு விட்டாள். அவர்கள் தன்னை கவனிப்பது நல்லதில்லை. அதனால் வாகனத்தின் வேகத்தைக் குறைத்தாள்.

ஏரிக்கரையை நோக்கித் திரும்பிற்று மெடாடரும் அம்பாஸிடரும்.

மெடாடரும் அம்பாஸிடரும் வேகமாய் பறந்தன. அவளுக்கு இதயத்துடிப்பு அதிகரித்துக் கொண்டே போயிற்று. வேறு வழியில்லை, அவனைக் கண்டிப்பாய் ஏரியில் வீசி விடுவார்கள்.

அவன் நினைவோடுதான் இருக்கிறானோ இல்லையோ தெரியவில்லை. கைகள் கட்டிப் போடப்பட்டிருந்தன. அவள் முதுகுத்தண்டில் சிலிர்த்தது.

ஏரிக்கரையில் ஆளரவமில்லாமல் இருந்தது. குளிர் காலமாதலால் யாருமே இல்லை. குருட்டு நிலவின் வெளிச்சம் மங்கலாய் வந்து விழுந்துக் கொண்டிருந்தது. கார்கள் நின்றன. மெடாடாரும் அதற்குப் பின்னாடியே அம்பாசிடரும்.

அதிலிருந்து நான்குபேர்கள் இறங்கினார்கள். எவ்வளவு வேகமாய் இறங்கினார்களோ அதே வேகத்தில் காரிலிருந்து வெளியே இழுத்துத் தூக்கி ஏரிக்குள் வீசியெறிந்துவிட்டார்கள். மஞ்சரியின் இதயமே நின்றுபோய் விட்டாற்போலிருந்தது. அவர்கள் காரிலேறிக்கொண்டு திரும்பிப் போய்விட்டார்கள்.

மஞ்சரி ஆக்ஸிலேட்டரை பலமாய் அழுத்தினாள். மோட்டார் சைக்கிள் வேகமாய் எம்பிற்று. அந்த வேகத்தில் வேகமாய் போய் அது ஏரியின் பாலத்தில் மோதிக்கொண்டது. அந்த வேகத்தோடு வண்டியோடுசேர்ந்து நீரில் குதிக்கவேண்டும் என்று அவள் செய்த முயற்சி பலிக்காததோடு எம்பிப்போய் நீரில் விழுந்து விட்டாள் மஞ்சரி.

அதுவே வண்டியை நிறுத்தி விட்டு, நீரில் குதித்திருந்தால் வேறு விதமாய் இருந்திருக்கும். ஆனால் ஆவேசமும் பரபரப்பும் ஆத்திரமடையச் செய்து, புத்தியில்லாமல் செய்துவிட்ட விதி அவள் உயிருக்கே உலை வைத்துவிடும் என்று அந்த நேரத்தில் அவள் ஊகித்திருக்கவில்லை. அவள் தலை ஒரு பாறாங்கல்லில் மோதிக்கொண்டது. நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டது. கண்கள் பஞ்சடைந்தன.

அவள் ஒருமுறை கைகளால் கண்களை மூடிக்கொண்டாள். தலையில் பலத்த அடிபட்டு விட்டது என்றோ ரத்தம் தாரையாய் ஒழுகிக் கொண்டிருக்கிறது என்றோ அவள் உணரும் நிலையில் இல்லை.

ஏதோ களைப்பு— அவளால் நீந்த முடியவில்லை. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. நீச்சலில் சேம்பியனான அவளுக்கு அந்தச் சமயத்தில் ஒரே குழப்பமாய் இருந்தது. தண்ணீருக்கடியில் டைவ் பண்ணினாள். கைகளால் துழாவியபடி அவனைத் தேடினாள். தாமதிக்கக்கூடாது. அவன் கைகளை பிணைத்துக் கட்டியிருந்தார்கள். அவனுக்கு நீச்சல் தெரியும்தான். ஆனாலும் நினைவோடுதான் இருக்கிறானோ அல்லது நினைவு தவறிவிட்டதோ என்ற பயம் அவளுக்கு.

அவளுக்கு உடம்பு ஏதோபோல தோன்றிற்று. ஏன் இவ்வாறு ஆகிறது? தலையில் பட்ட அடியால் மூளை மரத்துப் போய்க்கொண்டிருந்தது மஞ்சரிக்கு.

நடுக்கடலில்—சமுத்திர கர்ப்பத்தில் திமிங்கலத்தோடு சரிசமானமாய் நீந்தக்கூடிய சாமர்த்தியம் படைத்தவள் மஞ்சரி. பொன்னியின் செல்வனில் வரும் பூங்குழலியை போல் திறமையும் பயிற்சியும் கொண்டவள் மஞ்சரி.

ஆனால் இதென்ன, இப்பொழுது அவளால் ஏன் முடியவில்லை? ஆனாலும் ஏதோ விடாப்பிடியாய் போராடிக்கொண்டிருந்தாள். தண்ணீருக்கடியிலிருந்து மேலுக்கு வந்துகொண்டிருந்தாள். இருட்டில் இன்னொரு நபரைப்



பிடித்துக்கொள்வதற்கு— காப்பாற்றுவதற்காக அவள் செய்துக்கொண்டிருந்த முயற்சி உயிரோடு போராட்டம் என்பதை அறிவாள். ஆனாலும் அலட்சியமாய் நீந்திக் கொண்டேயிருந்தாள்.

அதே சமயத்தில் அவளுக்குப் பக்கத்தில் ஏதோ தட்டுப்படவே சட்டென்று பிடித்துக்கொண்டாள். அது மனித உடல்? அவளுக்கு எங்குமில்லாத பலம் வந்து சேர்ந்து விட்டது.

உண்மையில் தன்னையே தான் காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலையில் இருந்தாள் மஞ்சரி. அதோடு அவனையும் எப்படிக் காப்பாற்றுவாள்? மேலும் இரண்டடிகள் கீழே நழுவினாள்.

அப்டாமினல் கிராம்ப்— இதயத்தில் பகீர் என்றது. இனி அவளால் நீந்த முடியாது. மூழ்கிப்போய் விடுவாள். அவளுக்கு திகிலும், துக்கமும் அழுகையும் வந்துவிட்டன.

எந்தப் பாவமும் அறியாத நல்ல மனிதன் பாண்டுரங்கன். அவள் தந்தையின் அக்கிரமத்திற்கு பலியாகி, அவரால் பல இம்சைகளுக்கு ஆளாகி, இறுதியில் இப்படி திக்கில்லாதவனாய் சாகவேண்டியதுதானா? கூடாது. அவன் பிழைத்துத் தீரவேண்டும். அவள் அவனுக்கு வாக்களித்திருக்கிறாள். அவனை காப்பாற்றுவதில் தன் உயிரே போனாலும் பரவாயில்லை. இனி தாமதிக்கக்கூடாது. மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டாள். உடனே அவன் கைகளை கட்டியிருந்த கயிற்றை பிரித்து விட்டாள். அவன் அவளை சட்டென்று இழுத்து அணைத்துக்கொண்டான். அவளுக்குப் புரிந்தது—அவன் நல்ல நினைவோடுதான் இருக்கிறான்.

அவ்வளவு துன்பத்திற்கு நடுவிலும் அவளுக்கு இதயத்தில் பன்னீரைத் தெளித்தாற்போல இருந்தது.

அவன் உயிருக்குப் பயம் இல்லை. சகஜமாய் நீச்சல் தெரிந்தவனாயிருந்ததால் தண்ணீருக்குள் வீசியெறிந்த

போதிலும் நீரைக் குடித்து விடாமல் மூச்சை அடக்கிக் கொண்டே இவ்வளவு நேரமும் இருக்கமுடிந்தது அவனால். அவனுக்கு ஒன்றும் ஆகவில்லை. அதுதான்...அதுதான்... மகிழ்ச்சி.

அவளைப் பிடித்துக்கொண்டு தண்ணீருக்கு மேலே வந்தான் பாண்டுரங்கன். அவள் நீந்த முடியாத நிலையில் இருந்ததையும் ஏதோ க்ராம்ப் அட்டாக் ஆகியிருப்பதையும் உணர்ந்தான் அவன்.

சரியாய் அதே சமயத்தில் இரண்டு கைகள் அவ்விருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டன. அவர்களை ஜாக்கிரதையாய் கரைக்கு அழைத்துக் கொண்டு வந்தான் தினகர். விளக்கு வெளிச்சத்தில் பார்த்தான் பாண்டுரங்கன்.

மஞ்சரியின் தலையிலிருந்த காயத்திலிருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டேயிருந்தது. அவள் தரையில் மல்லாந்து விழுந்து விட்டாள். அவளுக்குப் பட்டிருந்த அடிகளைப் பார்த்த தினகருக்கு அவள் இவ்வளவு நேரமாய் எப்படிப் பிழைத்திருந்தாள் என்றுதான் புரியவில்லை.

அவள் கண்கள் மூடிக்கொள்ளத் தொடங்கின. தன் மனங்கவர்ந்தவனை — காதலனைக் காப்பாற்றுவதற்காக பலவந்தமாய் அவ்வளவு நேரமாய் மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த அவளுக்கு அதற்குமேல் முடியவில்லை.

முடிந்துவிட்டது. அவள் செத்துக் கொண்டிருக்கிறாள். எல்லாம் மங்கிக்கொண்டே வந்தது அவளுக்கு.

''மஞ்சரி, மஞ்சரி, ஐயோ, இதென்ன?'' 'ஓ'வென்று கதறினான் பாண்டுரங்கன்.

மஞ்சரி கனத்த இமைகளைத் திறந்து அவனைப் பார்த்தாள். தலையிலிருந்து ரத்தம் ஆறாய் ஒழுகிக் கொண்டிருந்தது. தினகர் கைக்குட்டையால் அந்த காயத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டான். சலனமில்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குத் தெரிந்துவிட்டது இனி அவள் பிழைக்கமாட்டாள் என்று. காதலித்தவனுக்காகத் தந்தையைக் கூட எதிர்த்து நின்று அவனைக் காப்பாற்றிய அவள் பண்பு தினகர் கண்ணோட்டத்தில் உன்னத சிகரமாய் உயர்ந்து விட்டது. அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.



பாண்டுரங்கன் அவள் கைகளை அழுத்தமாய் பிடித்துக் கொண்டான். அவனுக்கு துக்கம் பெருகிற்று. மரணத்தோடு போராடிக்கொண்டே தன்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த அவள் பார்வை அவன் இதயத்தைப் பிசைந்தெடுத்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அந்த அன்புருவம் நிரந்தரமாய் அஸ்தமித்து போய்விடும்.

முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டான். அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. ஆனால் ஏதோ கேட்க வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருந்தாற்போல தோன்றிற்று.

''ஜென்ம ஜென்மங்களாய் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற பந்தம் நம்முடையது. இந்த ஜென்மத்தில் இப்படியே நடுவில் உங்களை விட்டுவிட்டுப் போய்க் கொண்டிருக்கிறேன். உங்களுக்காகத் திரும்பி கோடி ஜென்மங்கள் எடுப்பேன். ஒவ்வொரு முறையும் உங்களோடேயே ஜோடி சேர்வேன். நான் என்றும் உங்களுடையவள்தான்''— என்பது போலிருந்தது அப்பார்வையின் பொருள்.

''உங்களுக்காக என்ன வேணுமானாலும் செய்வேன். இறுதியில் என் உயிரையே வேண்டுமானாலும் தருவேன்' என்று அவள் சொன்னது நினைவிற்கு வந்தது அவனுக்கு.

அவள் தீனமாய் பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்ல குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான். அவள் முகத்தில் ஏதோ ஆனந்தம். மஞ்சரியின் கண்கள் மூடிக் கொண்டன. தலை தொங்கிவிட்டது.

"உன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாத என் கையாலாகாதத்தனத்திற்கு என்னை மன்னிப்பாயா?" உணர்ச்சி வசப்பட்டு அவர் ஓவென்று கதறிவிட்டான்.

"நான் போய் விட்டேனென்று விசாரப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்காமல் உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள் உங்கள் எதிரியை முற்றுகையிட்டு நிர்மூலம் செய்யுங்கள்" — என்று மஞ்சரி உத்தரவிட்டாற்போல தோன்றிற்று அவனுக்கு.

பாண்டுரங்கனுக்கு வெறிப்பிடித்த ஆவேசம் தோன்றி விட்டது. சீற்றத்துடன் எழுந்து நின்றான்.

## 48

நள்ளிரவு நேரத்தில் காட்டிலிருந்து வேட்டையாடுவதற்காக வெளியுலகத்திற்கு வந்த சிங்கத்தைபோல ஓட்டமாய் ஓடிக்கொண்டிருந்தான் ராஜன். அவன் உடம்பில் ஜீன்ஸ் பேன்டும் அகன்ற பெல்ட்டும் தவிர வேறெதுவும் இல்லை.

உயிரோடிருந்த தன் அண்ணனைச் செத்துவிட்டான் என்று சொல்லித் தன்னை நம்ப வைத்த அந்த நீச்சர்களை வேட்டையாடுவதற்காக ஓடிக்கொண்டிருந்தான் அவன்.

சிலையாய் நின்றுவிட்டிருந்த பி. ஜி.யைஅடித்துப் போட்டுவிட்டு அவன் கையிலிருந்த மெடிக்கல் கிட்டிலிருந்து மருந்தை எடுத்துத் தன் உடம்பிற்குள் இன்ஜெக்ஷன் செய்துகொண்டான் ராஜன். அதனால் அவனுக்கு என்றுமில்லாத பலம் வந்து சேர்ந்துகொண்டது.

ஒரு ஆதரவில்லாதவனாய்— பலமில்லாதவனாய் தன் வாழ்க்கை முடிந்துபோவதை அவன் விரும்பவில்லை, தான் எஞ்சியிருக்கப்போவது இன்னும் கொஞ்ச நாட்கள் தான் என்று தெரியும் அவனுக்கு. அதனால்தான் அதற்குள்



ஏதோ ஒன்றை செய்து தன் அண்ணன் நடத்திக்கொண்டிருந்த போராட்டத்தில் தானும் ஒரு சமித்தாகவேண்டும். அதே நோக்கத்துடன் இருளை பிளந்துகொண்டு போன அம்பைப்போல வேகமாய் போய்கொண்டிருந்த ராஜன், இப்பொழுது தன் அண்ணன் பாண்டுரங்கன்கூட அவர்களிடம் கைதியாய் அடைபட்டிருப்பான் என்ற சந்தேகம் ஏற்பட்டது. அண்ணனை பார்க்கவேண்டும் ஒருமுறை அண்ணனை பார்த்துவிட்டு மனமார அவனைக் கட்டிக்கொள்ளவேண்டும்.

இதற்கு முன்னால் மரத்துப்போயிருந்த அவன் மூளை அண்ணன் பிழைத்திருக்கிறான் என்று தெரிந்ததுமே சுருசுருப்பாய் யோசிக்கத் தொடங்கிவிட்டது. அவன் தன் அண்ணன் இல்லை என்றெண்ணிக்கொண்டு பாண்டுரங்கனிடம் மிகத் துடுக்காய் நடந்துகொண்டுவிட்டான் அவன். பாலாஜியும் மதனும் தன்னை வஞ்சித்து விட்டார்கள். வாழ்க்கையை நாசமாக்கிவிட்டார்கள். தன்னை ஒரு அடிமையாய் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவனுடைய அணுவணுவிலும் புதிய பலம் வந்து கூடிக்கொண்டேயிருந்தது.

ஒரு கெஸ்ட் ஹவுசிற்கு முன்னால் வந்து டார்ஜானைபோல நின்றான் ராஜன். சில ஆண்டுகளாய் அந்த பங்களாவில் ஒரு மிருகத்தைப்போல சங்கிலிகளால் கட்டிப் போடப்பட்டு சிறைப்படுத்தப்பட்டிருந்தான் அவன். கேட் சாத்தியிருந்தது!

அங்கே இரண்டுபேர் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். தன்னை யாரும் கவனிக்காதபடி ஒரு மரத்திற்குப் பின்னால் வந்து நின்று கொண்டான் ராஜன். அந்த இருட்டில் கண்களை வெறித்து சிறுத்தை புலியைப் போல பார்த்தான் ராஜன். அந்த வீட்டிற்குள் எப்படி நுழைய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் அந்த கெஸ்ட் ஹவுஸில் மதனின் ஆட்கள் காவலுக்கு இருப்பார்கள்.

மதன் செய்யும் கள்ள வியாபாரத்திற்கு அப்பொழுது தான் ஒரு உரு தோன்றி காரிய சாதனைக்கு வரும். விர்ரென்று குளிர்ந்த காற்று துளைத்தெடுத்தது. ஆயினும் அவன் அலட்சியமாய் தன் கர்மமே கண்ணாயிருந்தான்.

ராஜன் முன்நோக்கி நடந்தான். அப்படியே கொஞ்ச தூரம்போய் கெஸ்ட் ஹவுஸ் காம்பவுண்டுச் சுவர் பக்க மாய் வந்து சேர்ந்தான். அங்கிருந்து தரையோடு ஊர்ந்து சென்று தன்னை யாரும் கவனிக்காதவாறு கேட்டிற்கு அருகில் வந்தான்.

அங்கே காவலுக்கு இருந்த அடியாட்கள் பீடிகளைப் புகைத்துக் கொண்டிருந்தார்கள். உள்ளங்கைகளைக் கத்தி களைப் போல செய்துகொண்டு அவ்விருவரின் கழுத்துக் களும் பிளந்து விடும்போல ஒரு தடவை அடித்தான், அவர்கள் நடந்தது என்னவென்றுகூட உணர்ந்துக்கொள்ள முடியாதவர்களாய் பேச்சு மூச்சு இல்லாமல் தரையில் சாய்ந்தார்கள். தரையில் விழுந்து கிடந்த துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு மரத்திற்குப் பின்னால் பதுங்கிக் கொண்டே மளமளவென்று நடக்கத் தொடங்கினான். போர்டிகோவைத் தாண்டி கட்டிடத்தின் பின்பாகத்திற்கு வந்துசேர்ந்தான். உள்ளே விளக்குகள் எரிந்துக் கொண் டிருந்தன.

பின் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு ஒருத்தன் வெளியே வந்து கொண்டிருந்தான். சட்டென்று சுவரோடு ஒட்டி நகர்ந்துகொண்டே அவன் கிட்டே வந்ததுமே கையிலிருந்த துப்பாக்கியைப் பின்பக்கமாய் திருப்பிப் பிடித்துக்கொண்டு அவன் தலையில் ஓங்கி அடித்தான்.

கத்தவும் முடியாமல் தரையில் சுருண்டு விழுந்தான் அவன்.

திறந்திருந்த கதவு வழியாய் உள்ளேபோய் பால்கனிக்கு வந்து சேர்ந்தான் ராஜன்.



அவன் கண்கள் சுருசுருப்பாய் இயங்கிக் கொண்டிருந் தன. நான்கு பக்கங்களையும் கூர்ந்து பார்த்துக்கொண்டே அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது—அப்பொழுதுதான் பார்த்தான் அவன்.

இரண்டு ஆண்களையும் ஒரு பெண்ணையும்... அதில் நடுத்தர வயதுடைய ஆணைத் தலைகீழாய் கட்டித் தொங்க விட்டு, அவன் இரு கைகளோடு இன்னொரு ஆணின் இரு கால்களையும் கட்டித் தலைகீழாய் தொங்கவிட்டிருந் தார்கள். பெண்ணின் இடுப்பில் கயிற்றைக் கட்டி அதை நடுவில் தொங்கிக் கொண்டிருந்த ஆளின் கைகளோடு சேர்த்து கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். அவர்கள் எவ்வளவு நேரமாய் இவ்வாறு தொங்கிக் கொண்டிருந் தார்களோ தெரியாது. ஆனால் உயிரே போனாற்போல வலியால் துடித்துக்கொண்டிருந்தார்கள்.

ராஜனின் கண்கள் சிவந்தன. அவர்கள் வேறு யாரோ இல்லை. அவனுக்கு வேண்டியவர்கள் தான். ஒருத்தன் அப்பு. இன்னொருத்தன் சிம்மாத்ரி—தன் சிறுவயது தோழன்—இன்னொருத்தி பெண். அண்ணனுக்கு மிகவும் வேண்டியவளாய் இருக்கலாம். நான்கு நாய்கள் கீழே யிருந்து அவனை கடித்துக் குதறிவிட வேண்டுமென்று குரைத்துக்கொண்டே மேலும் கீழுமாய் தாவிக்கொண்டே யிருந்தன. அந்த ஹாலில் சுற்றிலும் மதனுடைய ஆட்கள் கைகளில் துப்பாக்கிகளோடு நின்றபடி அந்த விநோதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச தூரத்தில் மதன் நாற்காலியில் உட்கார்ந்து ஏளனமாய் சிரித்துக்கொண் டிருந்தான்.

''ஏண்டா அப்பு, புலியோடு ஆடினால் என்ன நடக்கும்னு பார்த்தாயா?''

ஏண்டா சிம்மாத்ரி, எப்படிடா இருக்கு என் விருந்தோம்பல்? இந்தப் பெண்ணை பார்த்தால் நாக்கில் ஜலம் சொட்டுது. இல்லையா ஜக்கு?'' என்றான்.

''ஆமாம் சார்'' என்றான் ஜக்கு.

''அந்தப் பெண்ணை அவிழ்த்து விடு.''

ஜக்கு போய் பத்மினியின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, இடுப்பைச் சுற்றி கைகளை போட்டு அவளைக் கீழே இறக்கி விட்டான். மதன் நாற்காலியை விட்டு எழுந்திருந்தான். பத்மினியை நோக்கி நடந்தான். இப்பொழுது நாய்கள் சிம்மாத்ரியைப் பிடிக்கத் தாவிக்கொண்டிருந்தன.

''ஒரு காலத்தில் உங்கம்மாவின் அழகைப் பார்த்து மெய்மறந்து போயிட்டிருந்தோம். ஆனால் உன் அழகைப் பார்த்த பிறகு உங்கம்மா அழகற்றவள் என்றுதான் சொல்லணும்!''

பத்மினி சற்றும் எதிர்பாராதவாறு அவன் கன்னத்தில் ஓங்கி அடித்தாள். மதன் கன்னத்தை நீவிவிட்டுக் கொண்டான். விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினான்.

''நீ அடித்த அடி செல்லமாய் தட்டினாற்போலத் தான். ஆனால் என் அடியை டேஸ்ட் பார்த்தாலேயொழிய உனக்குத் தெரியாது'' சரேலென்று பத்மினியின் மார்பின் மீது கையை வைத்து அவள் சட்டையைப் பற்றி இழுத்தான். அவள் சட்டையின் கொக்கிகள் அறுந்து விட்டன.

ரோஷத்தோடு எதிர்த்தாள் பத்மினி. அவள் கூந்தலை பற்றிக்கொண்டான் மதன். அங்கிருந்தவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். மதனோடு சேர்ந்து நாய்களும் அவளைச் சூழ்ந்துக்கொண்டன. அவள் உடையைப் பற்றி கிழித்துக் குதறிப்போட ரேஸ் குதிரைகளைப் போல அவள் மீது தாவிக்கொண்டிருந்தன.

பத்மினி கத்திக்கொண்டிருந்தாள். அவள் கைகளைப் பின்னுக்குச் சேர்த்து பிடித்துக்கொண்டு அவள் கன்னத்தில் முத்தமிட முயன்று கொண்டிருந்தான் மதன்.

''தூ'' என்று முகத்தில் காரி உமிழ்ந்தாள் பத்மினி.



மதன் கோபத்தோடு அவள் முகத்தில் ஓங்கிக் குத்தினான்.

''வேண்டாம். அந்தப் பெண்ணை ஒன்றும் செய்யாதே. உன் மகளை போன்றவள்! வேணுமானால் என்னைக் கொன்றுபோடு'' அப்பு கதறிக் கொண்டிருந்தான். மதன் அரக்கனைப்போல சிரித்தான்.

''அடேய் கிழட்டு நரியே! அன்றைக்கு இதன் அம்மாவுக்கு சொர்கத்தைக் காட்டினபோது நீயும் கண்ணால் பார்த்தாய். இப்ப இதையும் உங்கள் எல்லோருக்கும் முன்னாடி அனுபவிக்கிறேன், பாருடா'' தள்ளாடிக் கொண்டிருந்தான் மதன் ஆவேசத்தால்.

பின்னாலிருந்து வந்து சுற்றிக்கொண்டு அவள்மேல் கையை வைக்கப்போனான். சுருக்கென்று கடித்துவிட்டாள் அவன் கைகளை.

''சீ! அயோக்கியனே! நீ மனுஷனேயில்லை. இப்படிப் பட்ட காரியங்களையெல்லாம் நாலுபேருக்கு முன்னால் செய்யறதுக்கு மிருங்கள் கூட வெட்கப்படுண்டா.''

''ஓஹ்! அப்படீன்னால் நாலுபேருக்கு முன்னால் உனக்கு சோபனத்தை செய்துக்க பிடிககலைன்னு சொல்லு. சரி, போகட்டும், அப்படியே உள்ளே போய் செய்துப்போம்'' அவளை இரு கைகளாலும் சுற்றித் தூக்கிக் கொண்டு இரண்டடிகள் எடுத்துவைத்தான். அந்த ராட்சச விநோதத்தைக் கண்ணாரக் கண்ட ராஜன் தாட்சாயனி யாகத்தியில் விழுந்ததைப் பார்த்துவிட்டு நெற்றிக்கண்ணை திறந்த சிவபெருமானைப் போல வெகுண்டெழுந்தான்.

ஒரு இடியோசை கேட்டது. அந்த ஓசைக்கு பூகம்பம் வந்தாற்போல அந்த கட்டிடமே அதிர்ந்தது. கத்திக் கொண்டே பால்கனியிலிருந்து மதன்மேல் பாய்ந்தான்

ராஜன். எதிர்ப்பாராத அச்சூழ்நிலைக்கு அங்கிருந்தவர்கள் எல்லோரும் திடுக்கிட்டுப் போனார்கள். ராஜனை பார்த்ததுமே அவர்களுக்கு நடுக்கம் ஏற்பட்டது. அவன் பலத்தை பற்றி அவர்கள் அறியாததில்லை. அவர்கள் கையிலிருந்த ஆயுதங்களைத் தட்டியெறிந்தான். மதன் இடுப்பு முறியும்படியாய் பலமாய் அடித்தான் அவன்.

''ஐயோ'' என்று தரையில் குப்புற விழுந்தான் மதன்.

உள்ளங்கைகளை மடக்கிக்கொண்டு அடித்தான். முகம் தரையில் மோதி மூக்கிலிருந்து ரத்தம் வழியத்தொடங்கிற்று மதனுக்கு.

''யூ ஸ்கவுன்ட்ரல்'' கத்தினான்.

ராஜன் அவன் முகத்தைக் காலால் அழுத்திப் பிடித்துகொண்டான்.

''எவனாவது ஓரடி முன்நோக்கி எடுத்து வைத்தானானால் இவனை என் காலடியில் நசுக்கிக் கொன்றுபோட்டு விடுவேன்'' கத்தினான் ராஜன். நாய்கள் அவனை கடித்துக் குதறிக்கொண்டிருந்தன. ஆனால் அவன் அவற்றை பொருட்படுத்தவில்லை. அவன் உக்கிரத் தாண்டவத்தைப் பார்த்து பயந்துபோனார்கள் சிலர். காலை எடுத்து வைத்துவிட்டால் எங்கே தம் பாஸை கொன்றுபோட்டு விடுவானோ என்று பயந்து வாய்வார்த்தை கிளம்பாமல் அப்படியே நின்றுவிட்டார்கள் சிலர். பத்மினி துப்பாக்கியை கையிலெடுத்துக் கொண்டு ராஜனின் மீது பாய்ந்துகொண்டிருந்த நாய்களின் தலையில் ஓங்கி அடித்தாள். அந்த அடியின் தாக்குதலால் அவை அங்கிருந்து ஓடிவிட்டன.

''ஜக்கு'' கணீரென்று ஒலித்தது ராஜனின் குரல்.

ஜக்கு ஓரடி முன்நோக்கி வந்தவன் நின்றுவிட்டான்.

''உடனே அவங்க ரெண்டுபேரையும் அவிழ்த்து விடு.''



அவனை எதிர்த்து பேசுவது எவ்வளது ஆபத்தானது என்பது ஜக்கு அஜய் இருவருக்குமே தெரியும். அஜய் சுவற்றிற்கருகில் போய் ஒரு சக்கிரத்தைச் சுழற்றினான். சிம்மாத்ரி, அப்பு இருவரின் உடம்புகளும் கீழே இறங்கின. அவர்கள் கட்டுக்களை அவிழ்த்துவிட்டதுமே பத்மினியை பார்த்து சொன்னான் ராஜா.

''அதே பொஸிஷனில் இந்த ரெண்டு அயோக்கியர்களையும் கட்டிப்போடுங்க.''

அப்புவும் பத்மினியும் அவர்களை கட்டிப்போட்டு விட்டார்கள். பத்மினி சுவற்றை நோக்கி ஓடி சக்கிரத்தைச் சுழற்றினாள். அஜய், ஜக்கு இருவரும் மேலே தொங்கத் தொடங்கினார்கள். இருவரும் திமிறிக் கொண்டிருந்தார்கள்.

முக்கியமான அடியாட்கள் சிறைப்பட்டு போய் விட்டார்கள். மதன் அவன் காலடியில் நலிந்துபோய் கொண்டிருக்கிறான். அதனால் எஞ்சியவர்கள் சிலையாய் நின்றுவிட்டார்கள் அப்படியே.

''டேய், சொல்லுடா அயோக்கியனே, எங்கண்ணா எங்கே?'' கேட்டான் ராஜன்.

''செத்துட்டான்'' மதன் சொன்னான்.

ராஜன் காலால் அவன் தலையே சிதறிப் போகும்படியாய் பட்டென்று அடித்தான்.

''இன்னும் என்னை நம்ப வைக்கணும்னு பார்க்கிறாயோ? உன் உயிரை எடுத்தாவது சரி எங்கண்ணாவைக் காப்பாற்றி விடுகிறேன்.''

''நிஜமாகவே செத்துட்டான். அவனை கொன்று போட்டுட்டு ஏரியில் தள்ளிட்டோம்.''

ராஜனும் எஞ்சிய மூவரும் குண்டு விழுந்தாற்போல அதிர்ந்துவிட்டார்கள்.

அவர்கள் கவனத்தைச் சிதறடிப்பதுதான் மதன் நோக்கம்.

பத்மினிக்கு தன்னையறியாமலேயே கண்களில் இர்ரென்று நீர் சுழன்றது. மதன் அந்த அவகாசத்தை ஒரு ஆயுதமாய் மாற்றிக்கொண்டான். தன் அடியாளுக்கு சைகைக் காட்டினான். அவ்வளவுதான்! அவர்கள் அத்தனை பேரும் ஒரே சமயத்தில் ராஜனின் மேல் பாய்ந்தார்கள். அந்த திடீர் சூழ்நிலையைச் சமாளித்துகொண்டு தாக்க முயலுவதற்குள்ளாகவே அவர்கள் எழுச்சியடைந்து விட்டார்கள். ஆனாலும் ராஜனின் உள்ளங்கை குத்துக்களை வாங்கிக்கொண்டு தரையில் சரிந்துவிழுந்தார்கள். தன் அண்ணனைக் கொன்றுவிட்டார்கள் என்றறிந்து கொண்டதால் அவன் ஆவேசம் தலைக்கேறிவிட்டது. கையிலகப்பட்டவர்களைப் பிடித்து செம்மையாய் உதைத்து தள்ளிக்கொண்டிருந்தான். ஒருவர்கூட மிஞ்சவில்லை. அம்மூவரையும் வெளியே அழைத்துக்கொண்டு வந்தான் ஓட்டமும் நடையுமாய். அவன் மட்டும் சமயத்தில் அங்கு வந்திருக்காவிட்டால் பத்மினியின் வாழ்க்கை நாசமாகிவிட்டிருக்கும். சிம்மாத்ரியையும் அப்புவையும் அவர்கள் கொன்றுபோட்டு விட்டிருப்பார்கள். அங்கே நின்றுகொண்டிருந்த வேனைச் சுட்டிக்காட்டி— "உம்... ஏறிக்குங்க"—கத்தினான் ராஜன். சிம்மாத்ரி ஸ்டீயரிங்கிற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டான். அப்புவும் பத்மினியும் ஏறிக் கொண்டதும் சிம்மாத்ரி வேனைக் கிளப்பினான்.

"ராஜா" கத்தினாள் பத்மினி.

ராஜன் அவளைத் திரும்பி பார்த்தான்.

"க்விக், சீக்கிரமாய் ஏறிக்கொள்" அங்கிருந்து இருபதடி தூரத்தில் கையில் மிஷின் கன்னை வைத்துக்கொண்டு மரணதேவனைப்போல் நின்றுக்கொண்டிருந்த மதனை பார்த்துவிட்டு திரும்பவும் கத்தினாள் பத்மினி.



ராஜன் ஓரடி முன்நோக்கி வைத்தான். வேனுக்குள் காலை வைக்கப் போனான். ஆனால் அதற்குள் நடக்கக்கூடாதது நடந்து முடிந்துவிட்டது. மதன் கையிலிருந்த மிஷின் துப்பாக்கி நெருப்பைக் கக்கிவிட்டது. திசைகள் அதிரும்படியாய் அலறினான் ராஜன். காற்று ஸ்தம்பித்துவிட்டது. ராஜன் திரும்பினான். அவன் உடம்பிலிருந்து ரத்தம் ஆறாய் ஒழுகிக் கொண்டிருந்தது. ஸ்லோ மோஷனில் மதனை நோக்கி நகர்ந்தான் ராஜன். மிஷின் துப்பாக்கி நெருப்பைக் கக்கிக்கொண்டேயிருந்தது. ராஜனின் உடம்பை துளைத்தெடுத்துக் கொண்டேயிருந்தது. ஆனாலும் ராஜன் நிற்கவில்லை. அலட்சியமாய் தன்னை சுட்ட வேடனைக் கடைசி முயற்சியாய் தாக்கியப் புலியைப்போல பாய்ந்தான் ராஜன். அவன் நடந்துகொண்ட விதத்தைப் பார்த்து மரணதேவனே கூட நடுநடுங்கினான். ராஜன் மதன் கையிலிருந்த துப்பாக்கியைக் கலவரத்தோடு பார்த்தான் ஒருமுறை. பிறகு அவன் கழுத்தைப் பிடித்து இறுக்கிக்கொண்டே—

"யா யா யா யா" என்று கத்தத் தொடங்கினான்.

மதனுக்கு மூச்சு திணறிற்று. கையிலிருந்த துப்பாக்கியை கீழே போட்டுவிட்டான். வாயிலிருந்து ரத்தம் வடிந்தது. கண்கள் செருகிக் கொண்டுபோக கீழே சரிந்துகொண்டிருக்கையில் ராஜனும் கூட அவனோடு சேர்ந்து சரிந்து விழுந்தான்.

ஆனாலும் இன்னும் ஆத்திரம் தணியவில்லை அவனுக்கு. உயிர் போய்க்கொண்டிருந்தாற் போன்ற உபாதை எதுவுமில்லை அவனுக்கு. கீழே கிடந்த துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு மதன் முகத்தில் ஓங்கி அடித்தான். இன்னும் அவன் உடம்பை நோக்கி சுட்டுத் தள்ளிக்கொண்டிருந்தான். மதன் உடல் தவிடுப்பொடியாகி உயிர் காற்றில் பறந்துவிட்டது.

சரியாய் அதே சமயத்தில் ஒரு கார் அங்கே வந்து நின்றது. அதிலிருந்து ஓடிவந்த ஆளைப் பார்த்ததும் அவன் மனம் பொங்கிற்று. கண்களிலிருந்து ரத்தத்தோடு கண்ணீரும் சேர்ந்து அவன் கன்னங்களில் தாரையாய் வழிந்துகொண்டிருந்தது. ராஜன் இரு கைகளையும் கூப்பினான்.

''அ...ண்...ணா...'' என்றான்.

பாண்டுரங்கனுக்கு துக்கம் நிற்கவேயில்லை. நடுங்கும் கைகளோடு அவன் தலையை மடியில் எடுத்துக்கொண்டான். ''தம்பீ'' அவன் இதயமே வெடித்துவிட்டது. மாமிச பத்தையைப் போலிருந்த அவனைத் தன் மார்போடு சேர்த்து அழுத்திக்கொண்டான்.

''போதும், இந்த ஜென்மத்திற்கு இது போதும். என் அண்ணன் மடியிலேயே உயிரை விட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால் இப்ப அக்கா மட்டும் இருந்திருந்தால் அவள் வாழ்வை நாசமாக்கிய காமாந்தகனின் சாவைப் பார்த்து சந்தோஷப்பட்டிருப்பாள்'' பாண்டுரங்கன் கண்களை மூடிக் கொண்டான்.

''உன் அக்கா உயிரோடுதான் இருக்கிறாள் ராஜா.''

தினகர் சலனமில்லாமல் பதில் சொன்னான். பாண்டுரங்கன் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

ராஜனின் கண்கள் மின்னின.

''எங்க அக்கா... எங்க அக்கா—உயிரோடுதான் இருக்கிறாளா?''

''ஆமாம். அவளுக்கு எல்லா விஷயமும் தெரியும். அவள் வேறு யாரோ இல்லை. மேடம் ஜ்வாலாதேவி தான் உங்க அக்கா சாந்தா'' தினகர் சொன்னான்.



''போதும்—எங்க அக்கா பிழைத்திருக்கிறாள், அதுவே போதும்.''

ராஜனின் கண்கள் மூடிக்கொண்டன.

## 49

அடிமேலடி பட்டால் அதைத் தாங்கிக்கொள்வது எவ்வளவு கஷ்டம் என்பது அதை அனுபவித்தவர்களுக்குத் தான் புரியும். காதலித்தவள் தனக்காக—தன்னைக் காப்பாற்றும் முயற்சியில் மரணமடைந்து விட்டாள். உடன் பிறந்தவன் தன் மடியில் உயிரை விட்டுவிட்டான். பாண்டுரங்கனுக்கு விரக்தி ஏற்பட்டது. இதெல்லாம் அவனால்தான் நிகழ்ந்தது. மஞ்சரியின் மரணத்திற்கும் ராஜனின் மரணத்திற்கும் மறைமுகமாய் காரணகர்த்தா அவன்தான். மனதை முள்ளால் குத்தினாற் போலிருந்தது.

எதிரியின் கையில் கையாலாகாதவனாய் மரணமடைந்து விடவில்லை ராஜன். எதிரியைக் கொன்றுவிட்டு தன் கடமையை நிறைவேற்றி விட்டான் அவன். இப்படிப்பட்ட சமயத்தில் அக்கா உயிரோடுதான் இருக்கிறாள் என்ற செய்தி அவனுக்கு ஆறுதலளித்தாலும் இவ்வளவு நாளாய் தன்னை வேற்றுமனிதனாய் ஒதுக்கி வைத்திருந்ததற்கு காரணம் என்ன என்றுதான் புரியவில்லை அவனுக்கு. முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு தேம்பித் தேம்பி அழத்தொடங்கினான்.

''வா தம்பீ, போகலாம்'' அப்பு தேற்றினான்.

''இப்படி நடக்கும்னு முன்பே எண்ணிட்டிருந்தது தானே! வருத்தப்படாதே. இங்கே ரொம்ப நேரம் இருப்பது நல்லதில்லை. போய்விடுவோம்.''

சிம்மாத்ரி தேம்பித் தேம்பி அழுதுக்கொண்டிருந்தான் ராஜனின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு.

பத்மினி அலங்கோலமான உடையுடன் தோற்றமளித்தாள்.

''ராஜன் சமயத்தில் வந்து என் வாழ்க்கையை நாசமடைந்து விடாமல் காப்பாற்றிவிட்டான் பாண்டுரங்கன்! அவன் நன்றியை ஆயிரம் ஜென்மமெடுத்தாலும் என்னால் தீர்த்துக் கொள்ளத்தான் முடியுமா?'' என்றாள் பத்மினி.

''அதுமட்டுமில்லை அண்ணா! ராஜன் வராமலிருந்திருந்தால் அண்ணியின் கற்பு மட்டுந்தானா போயிருக்கும்? எங்க மூவர் உயிருமே போயிருக்குமே. எங்களைக் காப்பாற்றிவிட்டுத் தான் போய்விட்டான்'' விசும்பலுக்கிடையே சொன்னான் சிம்மாத்ரி.

தம்பி போய்விட்டான் என்ற வருத்தத்திற்கிடையிலும் அவன் பண்பைப் பற்றி அவர்கள் புகழ்ந்ததைக் கேட்டு ஏதோ மறுமூலையில் கர்வமும் ஏற்பட்டது. 'என் தம்பி' என்றெண்ணிக் கொண்டான் பாசத்தோடு.

## 50

''தினகர்! நீ என் நண்பன் என்று நம்பினேன். ஆனால் நீ எங்கக்கா உயிரோடிருக்கிற விஷயத்தை என்னிடமிருந்து மறைத்து வைத்து துரோகம் செய்துட்டாய் எனக்கு. எங்கக்கா உயிரோடுதான் இருக்கிறாள் என்றும், ஜுவாலா தேவிதான் எங்கக்கா என்றும் ஏன் சொல்லவில்லை?'' அவன் குரலில் தென்பட்ட தீவிரத்திற்கு அங்கிருந்தவர்கள் எல்லோரும் கலவரமடைந்தார்கள்.

தினகர் சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டே மிகச் சாதாரணமாய் சொன்னான்—

''நீ இப்படி எண்ணுவாய் என்று எனக்கு தெரியும். அதுமட்டுமில்லை பாண்டுரங்கா! அவள் உன் அக்கா சாந்தா என்று தெரிய வந்தபோது நான் எவ்வளவு அதிர்ச்சியடைந்து போனேன் தெரியுமா? உண்மையில் இந்த விஷயம் எனக்கு கூட இன்றைக்குதான் தெரிஞ்சுது. ராஜன் விஷயத்தில் அவள் எடுத்துக்கிட்ட சிரத்தையைப் பார்த்து ஆச்சரியமடைந்த பி.ஜி. என்னிடம் சொன்னான். நான் அவளை உலுக்கி எடுத்து விசாரித்தேன். அப்பொழுது அவள் இதயமே வெடித்து விட்டதுபோல அழுதுகொண்டே நீங்களிருவரும் தன் தம்பிகள் என்று சொன்னாள்.''

''உன் வார்த்தைகளை நம்புகிறேன் தினகர். எனக்கு இப்பொழுது அவளை உடனே பார்க்கவேண்டும். ஒரு வினாடி தாமதமானாலும் என்னால் பொறுத்துக்க முடியாது. இவ்வளவு நாளாய் அனுபவித்த வேதனைகளையெல்லாம் ஒரு நிமிஷமாவது அவள் முன்னிலையில் மறந்து போகவேண்டும். ப்ளீஸ், அவளைக் காட்டு.''

''ஆமாம், இனி தாமதிப்பது நல்லதில்லைன்னு நானும் நினைக்கிறேன்'' என்று இண்டர்காம் போனை எடுத்து பட்டனை அழுத்தினான் தினகர்.

மறுமுனையிலிருந்து பதில் இல்லை. தினகர் வியப்படைந்தான்.

''மேடம் என்னவானாள்?'' ஆச்சரியத்தோடு பார்த்தான் பாண்டுரங்கனை.

''தினகர் நாடகமாடுகிறாயா?''

தினகர் கோபமாய் பார்த்தான்.

''கமான், உள்ளே போய் பார்க்கலாம் வாங்க''

தினகரோடு சேர்ந்து எல்லோரும் உள்ளே நடந்தார்கள். அவள் அங்கே கூட இல்லை. டீபாயின் மேல் ஒரு காகிதம் வைக்கப்பட்டிருந்தது—

''தினகர்,

நிலைமை மோசமாகி விட்டது. நான் போய் விடுகிறேன். என்னைப் பின்தொடர்ந்து வர நீங்களோ தம்பியோ முயற்சிக்க வேண்டாம்.''

—ஜுவாலா

அவள் ஏன் அவ்வாறு எழுதினாள் என்று பாண்டுரங்கனுக்கும் புரியவில்லை.

''அக்கா—இந்த தம்பியை ஒரு தடவை பார்க்கணும்னு கூட இல்லையா உனக்கு? இந்த தம்பியின் பால் இவ்வளவு பாராமுகம் எதுக்கு?'' அவனுக்கு அழுகை வந்தது.

அவள் எங்கே போயிருப்பாள்?'' பத்மினி கேட்டாள்.

''நான் போட்ட எடை தவறாமலிருந்தால் அவள் ஒரு எதிரியைத் தேடிக்கொண்டு போயிருப்பாள்''.

எல்லோரும் கலக்கத்துடன் பார்த்தார்கள்.

''பாலாஜியிடம் தனியாகவா போயிருப்பாள்?''

''ஆமாம், அங்கேதான் போனாள்'' என்ற குரல் கேட்டது கதவிற்கருகிலிருந்து. எல்லோரும் அந்த பக்கமாய் திரும்பினார்கள். அங்கே துப்பாக்கியைக் கையில் பிடித்துக் கொண்டே பி. ஜி. நின்று கொண்டிருந்தான்.

''பி. ஜி.''

''எஸ்? இந்த அறையை விட்டு நீங்கள் யாரும் நகரக் கூடாது.''

''பி. ஜி. மேடம் ஆபத்தில் சிக்கிக்கிட்டிருக்காங்க. நாங்கள் போகணும்'' என்றான் தினகர்.

''இது மேடம் உத்தரவு. அவங்க உத்தரவை சிரஸாய் மதிப்பது என் கடமை.''



''உன் கடமையை உடைப்பில் போடு. உனக்கு புத்தியில்லையாடா? அவள் உயிருக்கே ஆபத்தான நிலையில் இருக்கிறாள்'' கத்தினான் அப்பு!

''அவங்க சொன்னதை செய்யத்தான் எனக்குத் தெரியும். நான் குறுக்கிட்டு எதையும் சொல்லமாட்டேன். உங்களைப் போகவிடமாட்டேன்'' என்றான் பி. ஜி. பிடிவாதமாய். பி ஜி.யின் பிடிவாத குணத்தை நன்கு அறிவான் தினகர்.

''அதோ, மேடம் வந்துட்டாங்க'' என்றான் தினகர் பி. ஜி. வியப்போடு திரும்பிப் பார்த்தான்.

அவ்வளவுதான்! அவன் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டிவிட்டான். அது எம்பி அப்பால் போய் விழுந்தது. பி. ஜி. யின் கைகளைப் பின்னுக்கு சேர்த்துக் கட்டிப் போட்டு விட்டான் பாண்டுரங்கன்.

இதற்குள் பாலாஜியின் கையில் சிக்கி விட்டிருப்பாள் என்று பாண்டுரங்கனுக்குத் தெரியும். இனி பாலாஜியுடன் மோதிக் கொள்வதென்றால் இரண்டில் ஒன்று தெரிந்து விடப்போகிறது என்றுதான் அர்த்தம்.

''வா, போவோம்'' கத்தினான் பாண்டுரங்கன் தினகரை நோக்கி.

## 51

மருந்துகள் தயாரிக்கும் ஃபேக்டரிக்கு முன்னால் ஜுவாலாதேவியின் கார் வந்து நின்றது. கேட் மூடியிருந்தது. பலமாய் ஹாரனை அடித்தான். உடனே கேட் திறந்து கொண்டது. கார் ஒரே பாய்ச்சலாய் உள்ளே ஊடுருவிக்கொண்டு போயிற்று. விசாலமான முன் பகுதியில்

முப்பதடி தூரத்திற்கு ஒருத்தராய் பாலாஜியின் ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

காரிலிருந்து இறங்கி ''பாலாஜி சரணம், சரணம்'' என்று கத்தினாள். அவள் கத்தலைக் கேட்டு உள்ளேயிருந்து நால்வர் ஓடி வந்தார்கள். ''சரணம்'' என்று சொன்னதால் அவள் எதிரி இல்லை என்றுணர்ந்து உள்ளே அழைத்துச் சென்றார்கள் அவளை. அதற்குள் மதனின் மரணத்தைப் பற்றி கேள்விப்பட்டு, பாலாஜி தன் ஆட்களுடன் அங்கே வந்து கூடியிருந்தான்.

''யார் நீ?''

''உங்களைச் சரணம் வேண்டுகிற ஒரு பெண்''

''உனக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது?''

''உனக்கு எதிரியான ஒருத்தனே என்னை வேட்டையாடுகிறான்.''

''யாரு?''

''பாண்டுரங்கன்''

''பாண்டுரங்கனா?'' என்று கொல்லெனச் சிரித்துவிட்டு—

''அவன் எப்பொழுதோ செத்துட்டானே''

''இல்லை. அவன் சாகவில்லை. என்னைக் கொல்வதற்குத் துரத்திட்டு வந்துட்டிருக்கான்.''

''பாண்டுரங்கன் சாகலையா?'' ஆச்சரியமாய் பார்த்தான் பாலாஜி.

''இல்லை. அவனைக் காப்பாற்றிவிட்டு மஞ்சரி செத்துப் போயிட்டாள்.''

பாலாஜி குண்டு விழுந்தாற்போல அதிர்ந்துவிட்டான்.



''என் குழந்தை...என் குழந்தை...பப்பீ...நீ என்ன சொல்கிறாய்?''

''நான் நிஜந்தான் சொல்றேன் பாலாஜி. உங்க பெண் மஞ்சரி செத்துவிட்டாள்.''

பாலாஜி நாற்காலியில் சரிந்து விழுந்தான். அவன் இதயம் சில்லிட்டது. ஆனால் அதற்குள் அவன் கண்கள் நெருப்பை உமிழத் தொடங்கின.

''அதுசரி, நீ யார்?''

''என் பெயர் ஜுவாலாதேவி.''

''ஜு...வா...லா...தே...வி?''

அதற்கு முன்பே அப்பெயரை பாண்டுரங்கன் மூலமாய் கேட்டிருக்கிறான் அவன். அவளை அவனுடைய எதிரி என்று குறிப்பிட்டு சொன்னான். ஆனால் இவளோ தன்னை சரணம் வேண்டுகிறாள்.

''பாலாஜி! நான் பாண்டுரங்கனை கொன்று குவித்து விடணும்னு பிளான் போட்டேன். நான் உங்களுக்கு எதிரி என்று சொல்லி அவனை நம்பவைத்தேன். நாகராஜிடமிருந்து பணத்தைத் தட்டிக்கொண்டு, அவனைக் கொடுமையாய் இம்சித்து, கார் பிரேக்கை எடுத்துவிட்டு, கொன்றது கூட அவன்தான். உன் லாரியை நேஷனல் ஹைவேயில் எரித்து சாம்பலாக்கியது கூட அவன்தான். மதனை கொல்லப்போய் ராஜன் செத்துவிட்டதால் அது என்னால்தான் நடந்ததுன்னு என்னை துரத்திட்டிருக்கிறான்.''

அவள் உண்மையைச் சொல்கிறாள். அதில் சந்தேகம் இல்லை. பாலாஜி பற்களை நறநறவென்று கடித்தான். ''வரட்டும், அவனுக்கு அந்திம கிரியைகளை செய்திடறேன்.''

''பாலாஜி.''

''என்ன?''

''அவனை நான் கொல்லணும். இந்த அவகாசத்தை எனக்கு கொடுங்கள். எத்தனையோ ஆண்டுகளாய் எதிர் பார்த்து கொண்டிருக்கிறேன்.''

பாலாஜி ஒருமுறை அவளைப் பார்த்தான்.

''எப்படி கொல்லணும்னு நினைக்கிறீங்க?''

''அவன் நீ எண்ணிட்டிருக்கிறாற்போல சாதாரண மான ஆள் இல்லை. சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்தாற் போல ரெளத்ரம் கொண்டவன். அவன் தன் வலையை அறுத்துக்கொண்டு உள்ளே வருவான். அப்பொழுது அவன் உடம்பில் ஓரங்குலத்திற்கு ஒரு துப்பாக்கி குண்டு வீதமாய் சுட்டுத்தள்ளி கொன்றுவிடுகிறேன்.''

''ஓ.கே.'' பாலாஜி தன் அடியாளுக்கு அறிவிப்பு தந்தான்.

முன் எல்லையில் ஐம்பது பேர்கள் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு வழியில் இரு பக்கங்களிலுமாய் நின்றார்கள்.

இரண்டாவது ரேஞ்ஜில் ஹேண்ட் பாம்களுடன் ஆறு பேர்கள் நின்றார்கள். மூன்றாவது ரேஞ்ஜில் பாலாஜியும், ஜ்வாலாதேவியும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு இரு பக்கங்களிலுமாய் அஜய், ஜக்கு இருவரும் மிஷின் துப்பாக்கிகளோடு நின்றுகொண்டிருந்தார்கள். எப்படிப்பட்ட கிராதகச் செயலுக்கும் அங்கிருந்தவர்கள் சித்தமாய் இருந்தார்கள். தன் பங்காளிகளில் நாகராஜ், மதன் இருவருமே போய்விட்டார்கள். பெற்ற பெண்ணும் போய்விட்டாள். அவனுக்கு ஏறக்குறைய பைத்தியமே பிடித்துவிட்டது. அவன் இப்பொழுது எதற்கும் துணிந்த வனாய் உட்கார்ந்திருந்தான். இதெல்லாம் தான் செய்த கொடுமைகளின் பலன் என்று அவன் நினைக்கவில்லை.



இதெல்லாம் பாண்டுரங்கனால்தான் நடந்தது என்ற ஆத்திரத்தால் கொதித்து கொண்டிருந்தான் அவன்.

கேட்டிற்கருகில் கார் வந்து நின்றது.

கார் உள்ளே வந்ததுமே அங்கிருந்தவர்கள் அவனை தடுத்து நிறுத்தினார்கள்,

''யாரும் அவனை தடுக்காதீங்க. அவனை மட்டுமே வரச்சொல்லுங்கள்'' கத்தினான் பாலாஜி.

ஜ்வாலாதேவி துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டாள். தொலைவில் நடந்து வந்துகொண்டிருந்த பாண்டுரங்கனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அவன் மட்டுமே தனியாய் வந்துகொண்டிருந்தான். சிவந்த கண்களுடன் ஒருமுறை சுற்றிலும் பார்த்தாள் ஜ்வாலாதேவி. அவளுக்கு உணர்ச்சிவசத்தால் உடம்பு படபடத்தது. மார்பு வேகமாய் அடித்துக்கொண்டது. எழுந்து நின்றாள். துப்பாக்கியைக் காற்றை நோக்கிச் சுட்டுவிட்டு ''ஸ்டாப் தேர்'' என்று கத்தினாள்.

பாண்டுரங்கன் விக்கித்துப்போய் அப்படியே நின்று விட்டான். அவள் பாலாஜிக்கு பக்கத்தில் எப்படி வந்து சேர்ந்தாள் என்றுதான் அவனுக்குப் புரியவில்லை. புடவை கொசுவங்களுக்கிடையே மறைத்து வைத்துக்கொண்டிருந்த 'ஹேண்ட் பாம்மை' எடுத்து பாலாஜியை நோக்கி வீசினாள். யாருமே எதிர்பார்த்திராத சூழ்நிலை அது. 'டுமீர்' என்ற சப்தம. ஒரு பயங்கர வெடிப்பு. கூச்சலும் அலறல்களும் புறப்பட்டன. தரையில் விழுந்தவர்கள் போக எஞ்சியவர்கள் ஓட்டம்பிடிக்கத் தொடங்கினார்கள்.

பாலாஜி ரத்த வெள்ளத்தில் துடித்துக்கொண்டிருந் தான். ஒரு தூண் உடைந்து அவன் இடுப்பில் விழுந்தது. ஜ்வாலாதேவி அவனுக்கு கொஞ்சம் தூரத்தில் தரையில்

விழுந்துக் கிடந்தாள். அவள் இடதுக் கை உடைந்து தொலைவில் கிடந்தது. அவள் முகம் ரத்தத்தால் முக்கி எடுத்தாற்போலிருந்தது. பாண்டுரங்கன் ஓடோடி வரப் போனான். ''நில்'' கத்தினாள் ஜுவாலாதேவி. அவள் வலது கையிலிருந்த துப்பாக்கியால் தன் நெற்றிப்பொட்டில் குறிபார்த்துக் கொண்டாள்.

''கிட்டே வராதேடா தம்பீ, ஒரு வினாடி நில்''— என்று பாலாஜியை நோக்கித் திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் திருப்தி.

''ஏண்டா, ஆதரவில்லாத தன்மை என்றால் என்ன வென்று தெரிந்ததாடா? 'உன்னுடையது' என்று எதுவும் மிஞ்சியில்லை இப்பொழுது. இதோ என் முகத்தைப் பார். நான் யாருன்னு அடையாளம் தெரிஞ்சுதா? சாந்தாடா நான்! அன்றைக்கு என்னை ஆதரவில்லாதவளாக்கி, என் கற்பைச் சூறையாடி, என் குடும்பத்தைச் சின்னாபின்ன மாக்கினீர்கள். அதன் விளைவு இவ்வளவு இருக்கும் என்று நீ ஒருக்கால் எண்ணியிருக்க மாட்டாய். பெண் ஒருத்தி பழிதீர்த்துக் கொள்ள எண்ணிவிட்டாளானால் கோடி ஜென்மங்களை எடுத்தாவது சாதித்துக் கொள்வாள். ஆனால் எனக்கு அப்படிப்பட்டத் தேவையே இல்லாமல் போய்விட்டதடா.''

பாலாஜிக்கு அந்தச் சமயத்தில் கூட இதயத்தில் ரயில் இஞ்ஜின்கள் ஓடத்தொடங்கின. மேலும் சில வினாடிகள் துடிதுடித்து கொண்டிருந்துவிட்டு அவன் தலையை சாய்த்து விட்டான்.

''அக்கா'' அவளிடம் வந்தான் பாண்டுரங்கன். அவள் முகத்தில் ஒரு வேதனை சிரிப்பு. பாண்டுரங்கன் இதயமே வெடித்துவிட அவளை கட்டிக்கொண்டு கதறிவிட்டான், கண்ணீரும் ரத்தமும் ஒன்றறக் கலந்து அவள் கன்னங்களில்



வழிந்தோடிக் கொண்டிருக்க, எஞ்சிய ஒற்றைக் கையால் அவனை அணைத்துக் கொண்டாள் சாந்தா.

''தம்பி, சின்ன வயதில் இந்த மார்பின்மேல் எற்றி உட்கார வைத்துக்கொண்டு உனக்கு விளையாட்டு காட்டு வேண்டா கண்ணா! உன்னை இப்ப மனமார மார்போட ணைத்துக் கொள்வதற்கு இந்த அக்காவுக்கு ஒரு கைதா னேடா இருக்கு!''

''அக்கா! அக்கா! ஏன் இப்படிச் செய்தாய்? என் கண்ணில் படாமல் ஏன் இப்படி தொலைவிலேயே இருந்து கொண்டாய்? என்னைப் பார்க்க கூடாதுன்னு இருந்துட் டாயா?''

அவள் உதடுகளில் வேதனையான சிரிப்பொன்று தவழ்ந்தது.

''உன் கண்ணிற்கு முன்னால் வராமலிருந்தாலும் என் உயிரே உன் மீதுதான் இருந்ததுடா கண்ணா! நீ எடுத்து வைத்துக்கொண்டிருந்த ஒவ்வொரு அடியையும் ஆயிரம் கண்களோடு கவனித்துக் கொண்டிருந்தேன்டா. என் வாழ்வு நாசமாகி விட்டது. கற்பழிந்துவிட்ட நான் வாழ்க்கையை முடித்துக்கொண்டு விடணும்னு போனேன். ஆனால் அப்ப ஒரு சினிமா தயாரிப்பாளர் என்னைக் காப்பாற்றி அரவணைத்தார், என்னைப் பற்றியெல்லாம் தெரிந்தும் தன் வாழ்க்கையில் எனக்கு இடம் தந்தார். என்னை ஒரு மனுஷியாக்கினார், ஆனால் துரதிஷ்டம் துரத்திக்கொண்டு வரவே, அவன் மாரடைப்பால் இறந்து போனார். மனிதனுக்கு தைரியத்தையும் பலத்தையும் பணம் கொடுக்கிறது. எந்த பணம் என்ற செருக்கால் நம் குடும்பத்தை நாசம் செய்தார்களோ அதே பணத்தால் அந்த ராட்சதர்களை பழிவாங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆத்திரம் என்னுள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேயிருந்தது. தினகர் உதவியால் இங்கே வந்தேன். நீ ஜெயிலிலிருந்து விடுதலையாகி, போராட்டத்தை

நடத்திக்கொண்டு வருகிறாய் என்று என் ஆட்கள் மூலமாய் தெரிந்துகொண்டேன். நீ குற்றம் பண்ணாமலேயே சின்ன வயதிலேயே சிறைக்குப் போக நேர்ந்து இத்தனை கஷ்டங்களை அனுபவித்து விட்டாய். நீ குற்றம் செய்துட்டுத் திரும்பவும் சிறைக்குப் போவது எனக்குப் பிடிக்கவில்லை. ராஜன் என்னவானான்னு அதுவரை எனக்குத் தெரியாது. என் வாழ்கையோ நாசமாகி விட்டது. நான் இந்தப் போராட்டத்தில் போய்விட்டாலும் பரவாயில்லை.

அதனால்தான் நம் குடும்பத்தில் குறைந்தது நீயாவது சுகமாய் உயிரோடிருக்க வேண்டும் என்று தவித்துப் போனேன். உன்னை தினகரோடு ஒன்றுகூட்டி—உனக்கு நான் உதவி செய்வதுபோல நம்பவைத்தேன். காரணம் குற்றம் செய்யக்கூடாது. அதனால்தான் மிக ஜாக்கிரதையை மேற்கொண்டேன். உனக்கு வஜ்ர கவசமாக இருந்து வந்தேன். எங்கே நீ ஆத்திரமடைந்து இந்த பாலாஜியின் மேல் பாய்ந்து விடுவாயோன்னுதான் நான் உனக்கும் முன்னதாய் வந்து இந்த மகாயாகத்தை முடித்து விட்டேன். இப்பொழுது எனக்கு சந்தோஷமாயிருக்குடா கண்ணா! உன்னை தனியனாய் விட்டுவிட்டுப் போகிறேன், என்னை மன்னித்து விடடா தம்பி!''

பாண்டுரங்கன் வெலவெலத்து போய்விட்டான்.

அவள் தினகரை நோக்கித் திரும்பினாள். அவனை கிட்டே வரச்சொல்லி சைகை காட்டினாள். தினகர் துக்கம் பொங்க அவளிடம் வந்து முழங்காலிட்டு அமர்ந்து கொண்டான். அவனுக்கு கண்ணீர் நிற்கவில்லை.

''தினகர்! இந்த ஜென்மத்திற்கு இதுதான்! திரும்பவும் சந்திப்போம் அடுத்த ஜென்மத்தில்!''— தினகர் கண்களிலிருந்து வழிந்துகொண்டிருந்த கண்ணீர் அவள் கன்னங்களை நனைத்தது. அவள் தலை சாய்ந்துவிட்டது தினகர் மடியில்.



அக்காவைப் பார்த்த பாண்டுரங்கன் இதயத்தைப் பிழியும்படியாய் அழுதான்— ''இனி எனக்கு யார் இருக்கிறார்கள்?''

அச்சமயத்தில் இரண்டு மென்மையான உள்ளங்கைகள் அவன் கன்னங்களை நீவின—அபயம் அளித்தாற்போல. கண்ணீர் மல்க பார்த்தான் பாண்டுரங்கன்.

எதிரே பத்மினி—அவள் உதடுகள் மெதுவாய் பிரிந்தன.

''நான் இருக்கேன்.''

★

13037
3055915